# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - ஏப்ரல் 2023

www.tnpscthervupettagam.com





















SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy in India
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

SHANKAR IAS ACADEMY
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

TNPSC THERVU PETTAGAM
Information is a Blessing
A Shankar IAS Academy Initiative

# உள்ளடக்கம்


TNPSC துளிகள் ..... 12

தமிழ்நாடு செய்திகள் ..... 22

- 11 தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடு ..... 22
- கடல்நீரைக் குடிநீராக்கும் 4வது ஆலை ..... 22
- வைக்கம் சத்தியாகிரகத்தின் நூற்றாண்டு விழா ..... 23
- 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கிற்கான செயல்திட்டம் ..... 23
- அரசுப் பள்ளி மாணவர்களுக்கான புதிய திட்டம் ..... 24
- பிரதமரின் சென்னை வருகை ..... 25
- ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் 125வது ஆண்டு விழா ..... 26
- TN REACH முன்னெடுப்பு ..... 26
- மிக நீளமான உயர்த்தியமைக்கப்பட்ட வழித்தடம் ..... 27
- தெருவோரக் குழந்தைகளுக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி ..... 27
- இயங்கலை சூதாட்டம் மீதான தடை விதிப்பு மசோதா ..... 28
- 2022 ஆம் ஆண்டு புலிகள் வளங்காப்பக மதிப்பீடு ..... 29
- மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சையில் எந்திரப் பயன்பாடு ..... 29
- உள்ளூர் வாழ் புலிகளின் எண்ணிக்கையில் சரிவு ..... 30
- வன்னியகுல சத்திரிய பொது அறக்கட்டளை மற்றும் அறநிலைய வாரியம் ..... 31
- மதுபானக் கடைகள் மூடல் ..... 31
- கம்பம் திராட்சைக்குப் புவிசார் குறியீடு ..... 31
- சைகை மொழியில் சட்டசபை நடவடிக்கைகள் ..... 32
- நகரங்களுக்கான பசுமைக் குறியீட்டுத் தரவரிசை ..... 32
- சமத்துவ நாள் அனுசரிப்பு ..... 33
- கடைகள், நிறுவனங்களில் தண்ணீர், முதலுதவி வசதிகளை வழங்குவதற்கான மசோதா ..... 33
- TANGEDCO நிறுவனத்திற்கான உள்நாட்டு நிலக்கரி வரவு ..... 34
- நீதிபதி கே. சந்துரு குழு ..... 34
- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் நீட்டிப்பு ..... 35
- நீலகிரியில் பண்டையக் காலக் கற்பாறைத் தளம் ..... 36
- கார்பன் நடுநிலை மையங்கள் ..... 36
- ஒரு பண்பாட்டின் பயணம்: சிந்து முதல் வைகை வரை ..... 37
- தனியார் நிறுவனங்களுக்கு எதிராக 50 பொதுத்துறை நிறுவனங்கள் ..... 37
- முத்திரைத்தாள் வரி திருத்தம் ..... 37
- TANGEDCO நிறுவனத்தின் அலகுகள் இணைப்பு ..... 38
- இளையபெருமாள் நினைவு மண்டபம் ..... 38
- தேவாரப் பாடல்கள் அடங்கிய செப்புத் தகடுகள் ..... 39
- தலித் கிறிஸ்தவர்களுக்கான இட ஒதுக்கீடு ..... 40

எண்ணிமப் பணப் பரிவர்த்தனையில் முன்னணி நகரங்கள் 2022 ........ 41
ஆளுமையில் புத்தாக்கத்திற்கான மையம் ........ 41
சட்டசபை உறுப்பினர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் ........ 42
V.P. சிங் உருவச்சிலை ........ 42
தமிழ்நாடு நிதிசார் பொறுப்புகள் சட்ட மசோதா ........ 43
5 சதவீதக் கல்வி வரி ........ 43
வேலை நேர விதிமுறைகள் தளர்வு மசோதா ........ 44
எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட அரிய தங்கத் தகடு ........ 45
தரங்கம்பாடியில் அமைந்த டேனியர் காலக் கோட்டை ........ 45
PMKVY திட்டத்தின் கீழான திறன் சார் மையம் ........ 45
மானாமதுரை மட்பாண்டங்களுக்குப் புவிசார் குறியீடு ........ 46
செல்வமகள் சேமிப்புத் திட்ட தரவரிசை ........ 47
தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் – 2023 ........ 47
தேசியச் செய்திகள் ........ 49
இந்திய வருடாந்திர காசநோய் அறிக்கை 2023 ........ 49
வருடாந்திர தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு 2021-2022 ........ 49
ஸ்மார்ட் - பொது விநியோகம் ........ 50
மருத்துவம் மற்றும் ஆரோக்கியம் சார்ந்த சுற்றுலா மேம்பாட்டிற்கான தேசிய உத்தி மற்றும் செயல்திட்டம் ........ 51
ஓர் உலக காசநோய் உச்சி மாநாடு ........ 52
தேசிய வெறிநாய்க்கடி நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் ........ 52
ஹிம்சக்தி திட்டம் ........ 53
கஜ உத்சவம் 2023 ........ 53
புலிகள் வளங்காப்புத் திட்டத்தின் 50வது ஆண்டு நிறைவு ........ 54
இந்தியாவில் eVTOL வாடகை விமானச் சேவை ........ 55
சாகர் பரிக்ரமா திட்டத்தின் நான்காம் கட்டம் ........ 56
ஓய்வூதியச் சீர்திருத்தங்களுக்கான குழு ........ 56
புதிய இந்தியா கல்வியறிவுத் திட்டம் ........ 57
அரிகொம்பன் நடவடிக்கை ........ 58
3 நட்சத்திரத் தரம் பெற்ற குப்பைகள் இல்லாத நகரங்கள் ........ 58
குடிமை-20 இந்தியா 2023 தொடக்க மாநாடு ........ 59
விண்வெளி அமைப்பு வடிவமைப்பு ஆய்வகம் ........ 59
தொழிலாளர் வளம்-20 ஈடுபாட்டுக் குழுவின் தொடக்கக் கூட்டம் ........ 60
மத்தியப் புலனாய்வுத் துறையின் வைர விழா கொண்டாட்டம் ........ 60
புதிய வந்தே பாரத் விரைவு இரயில் ........ 60
இஸ்ரோ YUVIKA 2023 ........ 61
இந்திய நீதி அறிக்கை ........ 61
இந்தியாவில் காவல்துறை அதிகாரிகள் - மக்கள் தொகை இடையேயான விகிதம் ........ 63
போட்டித்திறன் திருத்த மசோதா, 2023 ........ 63

2026 ஆம் ஆண்டிற்குள் 2வது பெரிய சூரியசக்தி உற்பத்தியாளர் நாடு ..... 64
தேசியக் கட்சி அந்தஸ்து ..... 65
"தேச விரோத அமைப்பு" – சொல்லாக்கம் ..... 65
இந்தியாவின் பாதுகாப்பு ஏற்றுமதி ..... 66
கஜ் உத்சவ் - 2023 ..... 67
'கவாச்' பயிற்சி ..... 67
8வது வந்தே பாரத் விரைவு ரயில் ..... 68
உறையிடப்பட்ட ஆவணச் சமர்ப்பிப்பு குறித்த உச்சநீதிமன்ற கருத்து ..... 68
2023 ஆம் நிதியாண்டில் MPLADS நிதிகளின் பயன்பாடு ..... 69
காசநோய்ப் பாதிப்புகளை மதிப்பிடுவதற்கான இந்திய அளவிலான மாதிரி ..... 70
மேலாண்மைச் செயல்திறன் மதிப்பீடு - 5வது சுற்று ..... 70
33 புதிய புவிசார் குறியீட்டுப் பதிவுகள் ..... 71
சுகோய் 30 MKI ரக விமானத்தில் குடியரசுத் தலைவர் ..... 72
மின்னணுக் கழிவு (மேலாண்மை) விதிகள், 2022 ..... 73
இந்திய அரசியலமைப்பின் டோக்ரி மொழிப் பதிப்பு ..... 74
துடிப்பான கிராமங்கள் திட்டம் ..... 74
உலகின் சிறந்த பொதுப் போக்குவரத்து 2023 ..... 75
தகவல் தொழில்நுட்பத் திருத்த விதிகள் 2023 ..... 75
இந்திய விண்வெளிக் கொள்கை 2023 ..... 76
இந்தியாவின் எண்ணிமத் துறைத் திட்டப் பலன்களின் மூலம் பெற்ற தகவல்களைத் தொகுக்கச் செய்தல் – அறிக்கை ..... 77
இந்தியச் சுற்றுச்சூழல் நிலவரம் குறித்த அறிக்கை ..... 77
சர்வதேசப் பெரும்பூனைகள் பாதுகாப்புக் கூட்டணி ..... 78
மாநில ஆற்றல் திறன் குறியீடு (SEEI) 2021-22 ..... 79
மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் தொழில்முறை சார் பொறுப்புகள் குறித்த வழிகாட்டுதல்கள் . 80
இந்திய அறிவுசார் நிறுவனங்களுக்கான தேசிய அங்கீகாரப் புள்ளிகள் வழங்கீட்டுக் கட்டமைப்பு ..... 80
விலங்குகளில் ஏற்படும் பெருந்தொற்றிற்கான தயார் நிலை முன்னெடுப்பு ..... 81
அம்பேத்கர் சுற்று வட்டாரச் சுற்றுலா ரயில் ..... 81
ஒரே பாலினத்தவரின் திருமணம் தொடர்பான வழக்கிற்கான அரசியலமைப்பு நீதிமன்ற அமர்வு ..... 81
செயற்கை நுண்ணறிவுத் துறையில் அதிகம் முதலீடு செய்யும் 5வது நாடு ..... 82
RAPIDX இரயில் சேவை ..... 83
மத்தியப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் ஒருங்கிணைந்த இணைய தளம் ..... 83
இந்திய தீநிரல் அறிக்கை 2022 ..... 84
விவசாயிகள் துயரக் குறியீடு ..... 84
50K-EV4ECO திட்டம் ..... 85
விபத்து மேலாண்மைச் சேவைகள் ..... 85
நீர்ப்பாசன நவீனமயமாக்கல் திட்டத்திற்கான ஆதரவு ..... 86
இந்தியாவின் மக்கள் தொகை ..... 86
தேசிய குவாண்டம் திட்டம் ..... 87

பழங்குடியினர்களின் தயாரிப்புப் பொருட்களை ஊக்குவிப்பதற்கான திட்டம் ............ 88
விலங்குகளுக்கான கருத்தடை விதிகள் - 2023 ............ 89
இராணுவத் தளபதிகள் மாநாடு ............ 89
இந்தியாவில் உள்ள நீர்நிலைகள் குறித்த கணக்கெடுப்பு ............ 90
சிறுதானிய முன்னெடுப்பு – MAHARISHI ............ 91
UDAN திட்டத்தின் ஐந்தாவது சுற்று ............ 91
தவறான தகவல் வழங்கீட்டினை எதிர்ப்பதற்கான கூட்டணி ............ 92
10,000 கி.மீ. தொலைவிற்கான ஒளியிழை வடங்கள் ............ 93
ஆசியாவின் மிக நீளமான நீரடி ஹைட்ரோகார்பன் குழாய் இணைப்பு ............ 93
ஆளுநர்களுக்கான உச்ச நீதிமன்ற உத்தரவு ............ 94
100 உணவுத் தெருக்கள் ............ 95
2015 முதல் 2022 ஆம் ஆண்டு வரை பதிவான மலேரியா பாதிப்புகள் ............ 95
துடிப்பான கிராமங்கள் திட்டத்துடன் பிரதமரின் கதி சக்தி ஒருங்கிணைப்பு ............ 95
இந்தியா-சீனா எல்லையில் 'முதல் கிராமம்' பலகை ............ 96
இந்தியாவின் முதல் நடமாடும் ஆய்வகம் BSL-3 ............ 97
**சர்வதேசச் செய்திகள் ............ 97**
புருண்டி நாட்டில் போலியோ பாதிப்புகள் ............ 97
இன்டர்ஃப்ளெக்ஸ் நடவடிக்கை ............ 98
BRICS வங்கியில் எகிப்து உறுப்பினராக இணைவு ............ 99
இந்தோனேசியாவின் தலைநகர் மாற்றம் ............ 99
ஜப்பானின் சுதந்திரமான மற்றும் தடையற்ற இந்திய-பசிபிக் கொள்கை ............ 100
சவுதி-ஈரான் போர் நிறுத்தம் ............ 101
தேசிய ஜனநாயகக் கட்சி – மியான்மர் ............ 101
சினியா தீவு ............ 102
அஜர்பைஜான் மற்றும் தஜிகிஸ்தான் - மலேரியா இல்லாத நாடுகள் ............ 102
மார்பர்க் வைரஸ் நோய் – தான்சானியா ............ 103
பசிபிக் பிராந்திய அளவிலான ஒப்பந்தத்தில் பிரிட்டன் இணைவு ............ 104
எண்ணெய் உற்பத்தி குறைப்பு ............ 104
ஆழ்கடல் சுரங்க நடவடிக்கைகள் ............ 105
IPCC குழுவின் தொகுப்பு அறிக்கை ............ 106
நிலக்கரித் திட்டத்திற்கு நிதி ஆதரவு மறுப்பு ............ 107
ரஷ்யாவில் அதிகம் வர்த்தகம் செய்யப்படும் பணமதிப்பு ............ 107
NATO அமைப்பில் பின்லாந்து ............ 108
SCO அமைப்பின் புதியப் பேச்சுவார்த்தை சார்ந்தப் பங்குதாரர் நாடு ............ 108
HIV/AIDS தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் திட்டம் ............ 109
கோப் இந்தியா பயிற்சி ............ 110
உளவு நிரலுக்கு எதிரான முதல் பிரகடனம் ............ 110
உலகின் முதல் ஆளில்லா விமானந்தாங்கிக் கப்பல் ............ 111
கத்தார் மற்றும் பஹ்ரைன் இடையிலான அரசுமுறை உறவு ............ 111

சாபஹார் துறைமுகம் தொடர்பான கூட்டு செயற்குழுக் கூட்டம் ....... 112
சார்லஸ் மன்னரின் முடிசூட்டுதல் சின்னம் ....... 112
H3N8 பறவைக் காய்ச்சலால் ஏற்பட்ட உலகின் முதல் மனித மரணம் ....... 113
ஒல்கிலூட்டோ 3 அணுஉலை ....... 113
ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் வெளிநாட்டு அலுவலகம் ....... 114
கியூபாவின் புதிய அதிபர் ....... 115
ஓரியன் - பலதரப்புப் பயிற்சி ....... 115
ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் மலேரியா தடுப்பூசி ....... 116
புனித வெள்ளி ஒப்பந்தத்தின் 25வது ஆண்டு நிறைவு ....... 117
காவேரி நடவடிக்கை ....... 117
INIOCOS-23 பயிற்சி ....... 118
இணையச் சங்கேதப் பணம் சார்ந்த சொத்துக்களின் சந்தைகள் (MiCA) ....... 118
உலகின் மிகப்பெரிய 'சட்டவிரோதமான போதைப் பொருள் வர்த்தகத்தினைச் சார்ந்திருக்கும் நாடு' ....... 119
மங்கோலியாவின் முதல் சுத்திகரிப்பு நிலையம் ....... 120
வங்க தேசத்தின் புதிய அதிபர் ....... 120
பிராந்திய உறவுகளை ஆழப்படுத்தும் புதிய முத்தரப்பு ஒப்பந்தம் ....... 120
ஆசியாவின் உலகளாவிய சுற்றுச்சூழலுக்கான பாதுகாப்பு ....... 121
பொருளாதாரச் செய்திகள் ....... 122
பெருநிறுவனக் கடன் சந்தை மேம்பாட்டு நிதி ....... 122
இந்திய ஏற்றுமதியில் உயர்வு ....... 122
வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை 2023 ....... 123
பலதரப்பு மேம்பாட்டு வங்கிகளை வலுப்படுத்துவதற்கான குழு ....... 124
இந்தியா மற்றும் மலேசியா இடையே ரூபாய் மதிப்பில் வர்த்தகம் ....... 125
இந்திய ரிசர்வ் வங்கியில் உள்ள உரிமைக் கோரப்படாத வைப்புத் தொகைகள் ....... 125
இந்திய-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பு பேச்சுவார்த்தைச் சுற்று ....... 126
2023 ஆம் நிதியாண்டிற்கான அந்நியத் தொகுப்பு முதலீட்டு இலக்கு நாடுகள் ....... 127
இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்குதாரர் நாடு ....... 127
SECI நிறுவனத்திற்கு மினிரத்னா வகை-I அந்தஸ்து ....... 128
SEBI அமைப்பின் புதிய இலச்சினை ....... 128
இந்தியாவின் முதல் REIT மற்றும் InvIT குறியீடு ....... 129
தகவல் தொழில்நுட்ப இறக்குமதி மீதான சுங்க வரி விதிப்பு குறித்த சர்ச்சை ....... 130
இந்தியாவிற்கு அதிகளவில் எண்ணெய் விநியோகம் செய்யும் நாடு ....... 130
100 பில்லியன் டாலர் அளவினை எட்டிய இந்தியாவின் வருடாந்திர பண வரவு ....... 131
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ....... 132
படியெடுத்தல் முறையில் உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் கிர் ரக பெண் பசுங்கன்று ....... 132
பால் கலப்படத்தைக் கண்டறியும் சாதனம் ....... 132
அதிநுண்ணிய மீ மின்தேக்கிகள் ....... 133
2 ஆண் எலிகளின் செல்களிலிருந்து உருவாக்கப்பட்ட எலிகள் ....... 134

சக்தி வாய்ந்த 'X-வகை' சூரியக் காந்தப் புயல் ........ 134
SNAP-10A ........ 135
அதிவிரைவான ரேடியோ அலைப் பரவலுக்கான மூல ஆதாரம் ........ 135
மறுபயன்பாட்டு ஏவுகல வாகனத்தின் சோதனை ........ 136
மாபெரும் அளவிலான கருந்துளை ........ 137
மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் பாதுகாப்பு செயற்கருவி- கோபைலட் ........ 138
வெள்ளிக் கிரகத்தில் எரிமலை ........ 138
உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்பட்ட நான்கு கால்கள் கொண்ட எந்திரம் ........ 139
MATSYA-6000 ........ 139
இந்தியாவின் முதல் பாக்சைட் சான்றளிக்கப்பட்ட மேற்கோள் பொருள் (CRM) ........ 140
தகைவுமின் விளைவு ........ 141
ஆசியாவின் மிகப்பெரிய 4 மீட்டர் சர்வதேச திரவ ஆடி தொலைநோக்கி ........ 141
மனிதர்களில் தாவரப் பூஞ்சைகளின் தாக்கம் ........ 142
'The hat': 50 ஆண்டுகால வடிவியல் மர்மம் ........ 142
விண்வெளியில் இருந்து எடுக்கப்பட்ட புவியின் படங்கள் ........ 143
அமோகா III - ஏவுகணை ........ 144
தவான் II எஞ்ஜின் ........ 144
புவிக்கு மிக அருகில் உள்ள கருந்துளைகள் ........ 145
அரிய வகை தனிமம் (REEs) படிவு ........ 145
செயற்கை நுண்ணறிவு மாதிரி DAGGER ........ 146
கருப்பை அகப்படலம் ........ 146
உளவுச் சாதனமாக செயல்படும் மருத்துவச் சாதனங்கள் ........ 147
யுரேனியம்-241 ........ 148
வியாழன் கோளின் பனி நிறைந்த துணைக் கோள்களின் ஆய்வுக் கலம் – Juice ........ 148
ஆர்ட்சென்ஸ் சாதனம் ........ 149
CL-Flam ........ 149
சைகை அடிப்படையிலான உயிரியளவியல் பதிவு அமைப்பு ........ 150
மிகை மாறுநிலை கார்பன் டை ஆக்சைடு ........ 150
முழுமையான மனித மரபணுத் தொகுப்பு ........ 151
வியாழன் கோளின் குறுங்கோள்கள் ........ 152
உலகின் முதல் திறன்மிகு துப்பாக்கி ........ 153
நிங்கலூ கிரகணம் ........ 153
எதிரிணை நியூட்ரினோ துகள்கள் கண்டுபிடிப்பு ........ 154
காந்த எதிர்ப்புத் திறன் ........ 155
PSLV-C55/TeLEOS-2 ஆய்வுத் திட்டம் ........ 156
GRX-810 உலோகக் கலவை ........ 156
SuperBIT ஆய்வுக் கருவி ........ 157
மய்லின் நரம்புறை ........ 158
மின்காந்த அயனி சைக்ளோட்ரான் அலைகள் ........ 158

நாகாஸ்திரா-1 ...... 159
கடல் சார் உள்வளிமண்டல இடைமறிப்பு ஏவுகணை ...... 159
விண்வெளியில் விதைகள் ...... 160
சுற்றுச்சூழல் செய்திகள் ...... 161
உலக ஆற்றல் மாற்றக் கண்ணோட்டம் 2023 ...... 161
இறக்குமதி செய்யப்பட்ட CO2 புதைவிடம் ...... 161
உயிரி எரிபொருள் கூட்டணி ...... 162
புலிகள் காப்பகங்களில் பெண் புலிகள் விடுவிப்பு ...... 163
தியானியா இண்டிகா ...... 163
உலகளாவியப் பசுமை இல்ல வாயுக் கண்காணிப்பு உள்கட்டமைப்பு ...... 164
ஸ்பைரந்தெஸ் ஹச்சிஜோன்சிஸ் ...... 165
தேசியப் பூங்காவில் படர்ச்செடியினங்களின் பேணகச் சாலை ...... 165
சிர்டோபோடியன் விந்தியா ...... 166
பந்திப்பூர் புலிகள் காப்பகத்தின் 50 ஆண்டுகள் நிறைவு ...... 166
டிரிக்ரைசிஸ் போசிடோனியா ...... 167
எக்ஸோஸ்டோமா த்ரிதியே ...... 168
நீண்ட வால் கொண்ட மற்றும் மீன் உண்ணும் ஐரோப்பிய வாத்துகள் ...... 168
அகில இந்தியப் புலிகள் கணக்கெடுப்பின் ஐந்தாவது சுற்று – 2022 ...... 169
மிக ஆழமான பகுதியில் தென்பட்ட மீன் ...... 170
அமோலோப்ஸ் சிஜு ...... 170
ஆசிய ராஜாளிக் கழுகு இனப் பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க மையம் ...... 171
கேரளாவில் புதிய வண்ணத்துப் பூச்சி இனம் ...... 172
சுஹெல்வா வனவிலங்குச் சரணாலயத்தில் புலிகள் ...... 172
பருவநிலை சார்ந்த ஒழுங்கற்ற நிலை தொடர்பான நிதி வழங்கீடு பற்றிய அறிக்கை ...... 173
சதுப்புநில வாழ் பிட்டா பறவைகள் கணக்கெடுப்பு ...... 173
கடலோர நகரங்களின் கூட்டணி ...... 174
ஹெலோபெல்டிஸ் தீவோரா ...... 175
சட்கோசியா வனவிலங்குச் சரணாலயத்தில் இந்திய மீன் கொத்திகள் ...... 175
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ...... 176
மும்மைய அச்சுறுத்தல் அறிக்கை ...... 176
ஹுருன் அமைப்பின் உலகளாவியப் பணக்காரர்கள் பட்டியல் ...... 177
உலக வெப்பமயமாதலுக்கான பங்களிப்பில் முன்னணியில் உள்ள 10 நாடுகள் ...... 178
கடவுச்சீட்டுக் குறியீடு 2023 ...... 179
2022 ஆம் ஆண்டு உலக நாடுகளின் பள்ளிகளின் உணவு வழங்கீட்டுத் திட்டங்களின் நிலை ...... 179
உலக வங்கியின் அறிக்கை ...... 180
உலக ஆற்றல் மாற்றங்கள்: கண்ணோட்ட அறிக்கை 2023 ...... 181
உலகளாவிய வர்த்தகக் கண்ணோட்டம் மற்றும் புள்ளிவிவரங்கள் ...... 182
முதல் பத்து பரபரப்பான விமான நிலையம் ...... 183
குழந்தையின்மை நிலவர மதிப்பீடுகள் 1990–2021 அறிக்கை ...... 184

அரசின் போக்குகள் பற்றிய அறிக்கை ........ 184
ஃப்ரீடம் ஹவுஸ் குறியீடு ........ 185
உலகிலேயே 'அதிகக் குற்றங்கள் நிறைந்த நாடுகள்' தரவரிசை ........ 186
உலக யூனிகார்ன் நிறுவனங்கள் குறியீடு 2023 ........ 187
தால்ஸ் தரவு அச்சுறுத்தல் அறிக்கை 2023 ........ 187
உலக உணவுக் கொள்கை அறிக்கை ........ 188
2023 ஆம் ஆண்டில் உலகின் முதல் 10 பணக்கார நகரங்கள் ........ 189
உலக குழந்தைகள் 2023 - அறிக்கை ........ 190
உலகப் பருவநிலை 2022 அறிக்கை ........ 191
வேளாண் உணவு உற்பத்தி முறைகளில் பெண்களின் நிலை ........ 192
தளவாட செயல்திறன் குறியீடு (LPI) 2023 ........ 192
உலக இராணுவச் செலவின அறிக்கை ........ 193
மாநிலச் செய்திகள் ........ 194
AFSPA சட்டத்தின் கீழ் ‘அமைதியற்றப் பகுதிகள்’ நிலை ........ 194
கந்தமர்தன் மலைத்தொடர் பல்லுயிர்ப் பாரம்பரியத் தளம் ........ 195
ஐரோப்பிய ஒன்றியத்தின் புவிசார் குறியீடு ........ 196
100 சதவீத இரயில் தட மின்மயமாக்கம் - ஹரியானா ........ 196
நாக்ரி துப்ராஜ் அரிசி ........ 196
பருவம் சாரா மழைப்பொழிவு - இயற்கைப் பேரிடர் ........ 197
இந்தியாவின் முதல் குளிர்வூட்டல் கூரை அமைப்புக் கொள்கை ........ 197
மின்னணு முறை கொள்முதல் செய்வதில் சிறந்த மாநிலம் ........ 198
இந்தியாவின் விசில் கிராமம் ........ 199
இந்தியாவின் முதல் சூரிய சக்தியில் இயங்கும் சுற்றுலாப் படகு ........ 199
முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட இந்தியாவின் முதல் தபால் நிலையம் ........ 200
மத்தியப் பிரதேசத் தயாரிப்புகளுக்கான புதிய புவிசார் குறியீடு ........ 200
முதலாவது தண்ணீர் வளம் சார்ந்த மதிப்பீட்டு அறிக்கை ........ 201
நகராட்சிச் சட்டம் ரத்து ........ 201
இந்தியாவின் முதல் சுற்றுச்சூழல் சார் பொது வாக்கெடுப்பின் 10 ஆண்டுகள் நிறைவு ........ 202
தொடர்ந்து 4வது ஆண்டாக அதிக மனித உழைப்பு நாட்கள் உருவாக்கம் ........ 203
ஹன்-தாடூ கலாச்சாரத் திருவிழா ........ 204
ஃபசல் பீமா யோஜனா திட்டத்திற்கு தேசிய விருது ........ 204
வடகிழக்கு இந்தியாவின் மிகப்பெரிய பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் ........ 205
அடையாளம் தெரியாத உடல்களுக்கான DNA தரவுத் தளம் ........ 205
மேற்கு வங்காளத்தின் புதிய பல்லுயிர் மையங்கள் ........ 205
இந்தியாவின் முதல் கனரகப் பளுதூக்கும் ஆளில்லா விமானம் ........ 206
அசாம்-அருணாச்சலப் பிரதேச எல்லைப் பிரச்சனை தொடர்பான ஒப்பந்தம் ........ 207
கொச்சி நீர்வழி மெட்ரோ ........ 208
கேரளாவின் முதல் வந்தே பாரத் விரைவு ரயில் ........ 208
நிழலற்ற நாள் ........ 209

இந்தூர் மாதிரி கழிவுச் சுத்திகரிப்பு ....209
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ....210
இரும்பு மனிதர் கிருஷ்ண பிரகாஷ் ....210
கிளாட் லோரியஸ் - பருவநிலை அறிவியலின் முன்னோடி ....210
இன்டெல் நிறுவனத்தின் இணை நிறுவனர் கோர்டன் மூர் ....211
WSIS விருது 2023 ....211
நகர்ப்புறப் பருவநிலைத் திரைப்பட விழா ....212
இரண்டாவது EMPOWER சந்திப்பு ....213
2024 ஆம் ஆண்டு கேங்வான் ஒலிம்பிக் போட்டிகளுக்கான பதக்க வடிவமைப்பு ....213
தண்ணீர் மற்றும் பாரம்பரியக் கேடயம் ....214
MCC வாழ்நாள் கௌரவ உறுப்பினர் அந்தஸ்து ....214
நாசாவின் நான்கு புதிய விண்வெளி வீரர்கள் ....215
நரேஷ் குப்தா ....216
அமெரிக்க நிதித்துறையில் மிகவும் செல்வாக்கு மிக்க 100 பெண்கள் ....216
கேசுப் மஹிந்திரா ....217
இந்தியாவின் செல்வம் மிக்க முதல்வர் ....217
ஃபெமினா மிஸ் இந்தியா அழகிப் பட்டம் 2023 ....218
ராணி ரமாதேவி ....218
தேசியப் பஞ்சாயத்து விருதுகள் 2023 ....219
புள்ளியியல் துறைக்கான சர்வதேசப் பரிசு 2023 ....220
சிறந்த சமூகத் தாக்கத்திற்கான விருது ....220
2023 ஆம் ஆண்டின் மிகவும் செல்வாக்கு மிக்க 100 நபர்கள் ....221
சந்தோக்பா மனிதநேய விருது ....221
சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் கௌரவ நுழைவாயில் ....222
வீரதீர விருது பெற்ற முதல் பெண் விமானப் படை அதிகாரி ....222
கோல்ட்மேன் சுற்றுச்சூழல் பரிசு ....223
மால்கம் ஆதிசேஷய்யா விருது 2023 ....224
விளையாட்டுச் செய்திகள் ....224
உலக மகளிர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி 2023 ....224
4வது ஆசிய கோ-கோ போட்டி ....225
ISSF உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டி ....225
உலக மகளிர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி ....225
FIFA உலகக் கோப்பை நடத்தும் நாடுகள் ....226
ஆசிய மல்யுத்தச் சாம்பியன்ஷிப் போட்டி ....227
ஹீரோ இன்டர்காண்டினென்டல் கோப்பை 2023 ....227
விஸ்டன் அல்மனாக் பதிவேட்டில் இடம் பெற்ற கிரிக்கெட் வீரர்கள் ....228
இலண்டன் மாரத்தான் ....228
முக்கிய தினங்கள் ....229
உலகளாவிய ஏற்புத் தினம் - மார்ச் 28 ....229

ராஜஸ்தான் தினம் - மார்ச் 30 ....229
இந்திய ரிசர்வ் வங்கியின் நிறுவன தினம் - ஏப்ரல் 01 ....230
ஒடிசா மாநில நிறுவன தினம் - ஏப்ரல் 01 ....231
சர்வதேசக் குழந்தைகள் புத்தக தினம் - ஏப்ரல் 02 ....231
உலக மதியிறுக்கக் குறைபாடு குறித்த விழிப்புணர்வு தினம் - ஏப்ரல் 02 ....232
பார்வைத் திறனிழப்புத் தடுப்பு வாரம் 2023 - ஏப்ரல் 01/07 ....232
கண்ணி வெடிகள் குறித்த விழிப்புணர்விற்கான சர்வதேச தினம் - ஏப்ரல் 04 ....233
தேசியக் கடல்சார் தினம் - ஏப்ரல் 05 ....233
சர்வதேச மனசாட்சி தினம் - ஏப்ரல் 05 ....234
மேம்பாடு மற்றும் அமைதிக்கான சர்வதேச விளையாட்டுத் தினம் - ஏப்ரல் 06 ....234
உலக சுகாதார தினம் - ஏப்ரல் 07 ....235
உலக ஹோமியோபதி தினம் - ஏப்ரல் 10 ....235
1994 ஆம் ஆண்டு ருவாண்டா இனப்படுகொலையின் சர்வதேசப் பிரதிபலிப்பு தினம் - ஏப்ரல் 07 ....236
சர்வதேச ரோமானிய தினம் - ஏப்ரல் 08 ....237
மத்திய சேமக் காவல் படை வல்லமை தினம் - ஏப்ரல் 09 ....237
தேசிய பாதுகாப்பான தாய்மை தினம் - ஏப்ரல் 11 ....237
சர்வதேச மனித விண்வெளிப் பயண தினம் - ஏப்ரல் 12 ....238
உலக நடுக்குவாத நோய் தினம் - ஏப்ரல் 11 ....238
தெருக்களில் வசிக்கும் குழந்தைகளுக்கான சர்வதேச தினம் - ஏப்ரல் 12 ....239
உலக சாகாஸ் நோய் தினம் - ஏப்ரல் 14 ....240
தேசியத் தீயணைப்புச் சேவை தினம் - ஏப்ரல் 14 ....241
உலகளாவியக் கலாச்சாரத் தினம் - ஏப்ரல் 15 ....241
திருநங்கையர் தினம் - ஏப்ரல் 15 ....241
இமாச்சலப் பிரதேச மாநிலத்தின் 75வது ஸ்தாபன தினம் - ஏப்ரல் 15 ....242
உலகச் சித்திர தினம் - ஏப்ரல் 15 ....243
யானைகள் பாதுகாப்புத் தினம் - ஏப்ரல் 16 ....244
உலக இரத்த உறையாமை நோய் தினம் – ஏப்ரல் 17 ....244
சர்வதேச நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்கள் தினம் / உலகப் பாரம்பரியத் தினம் – ஏப்ரல் 18 .244
உலக கல்லீரல் தினம் – ஏப்ரல் 19 ....245
ஐக்கிய நாடுகள் சபையின் சீன மொழி தினம் – ஏப்ரல் 20 ....245
தேசியக் குடிமைப் பணிகள் தினம் – ஏப்ரல் 21 ....245
சர்வதேச அன்னைப் பூமி தினம் – ஏப்ரல் 22 ....246
உலகப் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க தினம் - ஏப்ரல் 21 ....246
உலகப் புத்தக தினம் - ஏப்ரல் 23 ....246
ஐக்கிய நாடுகள் சபையின் ஆங்கில மொழி தினம் - ஏப்ரல் 23 ....247
தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினம் – ஏப்ரல் 24 ....247
உலக ஆய்வக விலங்குகள் தினம் – ஏப்ரல் 24 ....248
உலக மலேரியா தினம் – ஏப்ரல் 25 ....248
மணிப்பூரின் கோங்ஜோம் தினம் - ஏப்ரல் 23 ....249

சர்வதேச அமைதிக்கான பன்முகத் தன்மை மற்றும் அரசுமுறை உறவுகள் தினம் - ஏப்ரல் 24 ....249
உலக நோய்த் தடுப்பு வாரம் 2023 - ஏப்ரல் 24 முதல் 30 ஆம் தேதி வரை ....250
உலக அறிவுசார் சொத்து தினம் - ஏப்ரல் 26 ....250
உலக எழுதுபொருட்கள் தினம் - ஏப்ரல் 26 ....250
பணியிடங்களில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கான உலக தினம் - ஏப்ரல் 28 ....251
சர்வதேசப் பிரதிநிதி தினம் – ஏப்ரல் 25 ....251
சர்வதேச வானியல் தினம் – ஏப்ரல் 29 ....252
சர்வதேச சிற்ப தினம் – ஏப்ரல் 29 ....252
தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத் துறையில் ஈடுபடும் பெண்களுக்கான சர்வதேச தினம் 2023 - ஏப்ரல் 27 ....252
சர்வதேச செர்னோபில் பேரிடர் நினைவு தினம் 2023 – ஏப்ரல் 26 ....253
உலக கால்நடை தினம் 2023 – ஏப்ரல் 30 ....253
ஆயுஷ்மான் பாரத் திவாஸ் 2023 – ஏப்ரல் 30 ....254
இதரச் செய்திகள் ....254
வெளிநாட்டு வழக்கறிஞர்கள் இந்தியாவில் பணியாற்றுதல் ....254
அல்-மொஹத்-அல் ஹிந்தி - 23 பயிற்சி ....255
கொங்கன் 2023 பயிற்சி ....255
வாயு பிரஹார் பயிற்சி ....256
பிணை மனு குறித்த ChatGPT மென்பொருளின் முடிவு ....257
சீலாண்டியா கண்டம் - மறுகண்டுபிடிப்பு ....257
வாடகை மின்சார ஸ்கூட்டர்களுக்குத் தடை ....258

# TNPSC துளிகள்

- ஜிண்டால் ஸ்டீல் நிறுவனமானது, தீப்பற்றுதலில் பெரும் எதிர்ப்புத் திறன் கொண்ட எஃகினைத் தயாரிப்பதற்கான இந்தியாவின் முதல் BIS உரிமத்தைப் பெற்றுள்ளது.
- கர்நாடக மாநிலம் பிதாரில் அமைந்துள்ள கோரட்டா மைதானத்தில் அமைக்கப் பட்டு உள்ள கோரட்டா தியாகிகள் நினைவகம் மற்றும் சர்தார் வல்லபாய் படேல் நினைவிடம் ஆகியவற்றினை மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.
- இந்திய இராணுவம் மற்றும் சிங்கப்பூர் இராணுவம் ஆகியவை இடையேயான 'Bold Kurukshetra' என்ற 13வது இருதரப்புப் பயிற்சியானது ராஜஸ்தானில் ஜோத்பூர் இராணுவ மையத்தில் நடைபெற்றது.
- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது, ஏப்ரல் மாத இறுதிக்குள் செயற்கை நுண்ணறிவு சார்ந்த சூழல் அமைப்புகளுக்கான வரைவுச் செயல் திட்டத்தினை உருவாக்குவதற்காக ஒரு செயற்குழுவை அமைத்துள்ளது.
    - இந்த IndiaAI இயங்குதளம் ஆனது இந்தியாவின் புத்தொழில் நிறுவனங்கள், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றினை ஊக்குவிப்பதில் பெரும் கவனம் செலுத்தும்.
- 2023 ஆம் ஆண்டு இந்திய உயர்கல்வி தொடர்பான சந்திப்பு ஆனது வங்காளதேசத்தின் டாக்கா நகரில் நடைபெற்றது.
    - இந்தியாவில் தங்கள் உயர்கல்வியைத் தொடருமாறு உலக நாடுகளின் மாணவர்ச் சமூகத்தினை ஊக்குவித்து அழைப்பு விடுப்பதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 3வது சர்வதேச SME மாநாடு (ISC) ஆனது (2023), சமீபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.
    - இந்த நிகழ்வானது இந்தியாவின் நான்கு முக்கிய எழுச்சி நிலைத் தொழில் துறைகளான தூய்மையான தொழில்நுட்பம் & பசுமை ஆற்றல், உற்பத்தி, சேவைகள் துறை மற்றும் வேளாண் உணவு பதப்படுத்துதல் & வேளாண் சாதனங்கள் துறை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- மார்ச் 30, 2023 அன்று முதல் முறையாக பூஜ்ஜிய கழிவுகளின் சர்வதேச தினம் அனுசரிக்கப் பட்டது.
    - இது பூஜ்ஜிய கழிவு மற்றும் பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி நடைமுறைகள் மற்றும் நகர்ப்புறக் கழிவு மேலாண்மை ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- பணியாளர்கள், பொது மக்கள் குறைகள், சட்டம் மற்றும் நீதி ஆகியவற்றிற்கான துறை சார்ந்த நாடாளுமன்ற நிலைக் குழுவானது, எந்தவொரு ஆட்சேர்ப்பிற்கான தேர்வின் காலமானது, அதாவது அறிவிப்பு முதல் இறுதி முடிவு வெளியாதல் வரையிலான தற்போதைய கால இடைவெளியான 15 மாதங்கள் என்ற கால அளவானது, பொதுவாக ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.
- ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ஆம் தேதியன்று , சர்வதேச போதைப்பொருள் சோதனை தினமானது, போதைப்பொருள் மற்றும் அவற்றின் விளைவுகள் பற்றி மக்களுக்குக் கற்பிக்கவும், போதைப்பொருள் உபயோகிப்பதால் ஏற்படும் அபாயங்களைக் குறைக்கும் தீங்கு குறைப்பு முயற்சிகளை ஊக்குவிக்கவும் அனுசரிக்கப் படுகிறது.
- இந்தியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளின் இராணுவத் தலைவர்களின் முதல் கூட்டு மாநாடானது புனேவில் நடைபெறுகிறது.

- '2023 ஆம் ஆண்டு இளையோர் மாநாடு' எனும் நிகழ்வு புது டெல்லியில் உள்ள தேசிய நகர்ப்புற விவகார நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- உத்தரகாண்ட் மாநிலத்தின் ஹரித்வாரில் உள்ள ஆயுர்வேதப் பல்கலைக்கழகத்தின் ரிஷிகுல் வளாகத்தில் 'கால்நடை மற்றும் ஆயுர்வேதம்' என்ற ஒரு கருத்துருவின் கீழ் சர்வதேச ஆயுர்வேத மாநாடு நடைபெற்றது.
- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகம் மற்றும் உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசிய பிராந்திய அலுவலகம் ஆகியவை இணைந்து எண்ம சுகாதாரம் குறித்த உலகளாவிய மாநாட்டினை புது டெல்லியில் ஏற்பாடு செய்துள்ளன.
    - இந்த நிகழ்வின் கருத்துரு 'உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பினைக் கடைநிலை குடிமகனுக்கும் கிடைக்குமாறுச் செய்தல்' என்பதாகும்.
- வங்காளதேசப் பிரதமர் ஷேக் ஹசீனா அவர்கள், காக்ஸ் பசாரில் உள்ள பெகுவாவில் அமைக்கப்பட்டுள்ள ''BNS ஷேக் ஹசீனா' எனப்படும் அந்த நாட்டின் முதல் நீர்மூழ்கிக் கப்பல் தளத்தினைத் திறந்து வைத்தார்.
- 2023 ஆம் ஆண்டு உலக அரசாங்க உச்சி மாநாடு ஆனது, "எதிர்கால அரசாங்கங்களை வடிவமைத்தல்" என்ற கருத்துருவின் கீழ் ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் நடத்தப் பட்டது.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின், பகிரப்பட்டப் புத்தப் பாரம்பரியம் பற்றிய முதல் மாநாடானது புது டெல்லியில் நடைபெற்றது.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பினர் நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளின் பங்கேற்புடன் 'விளையாட்டு மற்றும் உடல் தகுதி சார்ந்தத் துறையில் ஒத்துழைப்பு' என்ற தலைப்பிலான மூன்று நாட்கள் அளவிலான உச்சி மாநாடானது புது டெல்லியில் நடைபெற்றது.
- அமெரிக்காவின் தெற்கு கரோலினாவின் முன்னாள் ஆளுநரும், ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதருமான நிக்கி ஹேலி, 2024 ஆம் ஆண்டிற்கான அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான வேட்பாளராக தனது முன் மொழிதலைக் குடியரசுக் கட்சியின் சார்பாக அளித்துள்ளார்.
- தொலைதொடர்புத் துறையானது, புது டெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் 'முதல் சர்வதேச குவாண்டம் தகவல்தொடர்பு மாநாட்டினை' ஏற்பாடு செய்தது.
- இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், கேரளாவின் கொச்சியில் உள்ள இந்தியக் கடற்படையின் துப்பாக்கிச் சுடுதல் பயிற்சிப் பள்ளியான ஐஎன்எஸ் துரோணாச்சார்யா என்ற பள்ளிக்கு மதிப்புமிக்க பிரஸிடெண்ட் கலர் என்ற விருதினை வழங்கினார்.
    - இது நாட்டிற்கு ஆற்றிய சிறப்பானச் சேவைக்காக ஓர் இராணுவப் பிரிவுக்கு வழங்கப் படும் ஒரு உயரிய கௌரவ விருது ஆகும்.
- இந்தியத் தொழிலதிபரும், பெரும் புரவலருமான ரத்தன் டாடா, ஆர்டர் ஆஃப் ஆஸ்திரேலியாவின் (AO) பொதுப் பிரிவில் கௌரவ அதிகாரியாக நியமிக்கப் பட்டு உள்ளார்.
- புத்தொழில் 20 எனப்படுகின்ற புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு ஈடுபாட்டுக் குழுவின் இரண்டாவது சந்திப்பானது, சிக்கிம் மாநிலத்தின் காங்டாக் நகரில் நடைபெற்றது.
- G20 அமைப்பின் கீழ் நிலையான நிதிச் செயற்குழுவின் (SFWG) 2வது சந்திப்பானது ராஜஸ்தானின் உதய்ப்பூர் நகரில் நடைபெற்றது.

- ஒரு புதிய பிரபலத் தர மதிப்பீட்டு அறிக்கையின்படி, நடிகர் ரன்வீர் சிங் 2022 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் மிகவும் மதிப்புமிக்கப் பிரபலமாக உருவெடுத்துள்ளார்.
  - அவருக்கு அடுத்தபடியாக விராட் கோலி, அக்ஷய் குமார், ஆலியா பட், மற்றும் தீபிகா படுகோன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.
- தி நியூஸ் மினிட் என்ற எண்ணிம ஊடகத்தின் இணை நிறுவனரும், முதன்மைச் செய்தி ஆசிரியருமான தன்யா ராஜேந்திரன் என்பவர் 2022 ஆம் ஆண்டிற்கான சிறந்தப் பெண் ஊடகவியலாளர்களுக்கான சமேலி தேவி ஜெயின் விருதினை வென்றதாக அறிவிக்கப் பட்டுள்ளார்.
- இந்தியாவின் வர்த்தக தலைநகரான மும்பை நகரானது 2022 ஆம் ஆண்டிற்கான உலக மரங்களின் நகரங்கள் பட்டியலில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக சேர்க்கப் பட்டு உள்ளது.
- உலகின் மூன்றாவதும் மற்றும் இந்தியாவின் இரண்டாவதுமாக ஒரு பெரிய கிரிக்கெட் மைதானமானது ஜெய்ப்பூர் நகரில் கட்டமைக்கப்பட உள்ளது.
- மஹாராஷ்டிராவின் நாக்பூர் மெட்ரோ ரயில் சேவையானது, மூன்று வெவ்வேறு பிரிவுகளுக்காக என்று மதிப்புமிக்க ஆசியா சாதனைப் புத்தகத்தின் சான்றிதழைப் பெற்றுள்ளது.
- இரண்டு நாட்கள் அளவிலான G20 ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க முன்னெடுப்பு கூட்ட (RIIG) மாநாடானது, அசாமின் திப்ருகர் நகரில் நடைபெற்றது.
  - ஒரு நிலையான மற்றும் சுழல்முறை உயிரிப் பொருளாதாரத்தினை உருவாக்கச் செய்வதற்கான வழிகளைப் பற்றி இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.
- G20 அமைப்பின் முதலாவது தலைமை அறிவியல் ஆலோசகர்கள் வட்டமேசை (G20-CSAR) மாநாடானது உத்தரகாண்ட் மாநிலத்தின் ராம்நகரில் நடைபெற்றது.
  - பல்வேறு நாடுகளின் தலைமை அறிவியல் ஆலோசகர்கள், G20 அமைப்பின் தளத்தில் வட்டமேசை மாநாட்டிற்காக ஒன்று கூடுவது இதுவே முதல் முறையாகும்.
- ஒரு முக்கியச் சமூகவியலாளரான அலியா மிர் என்பவருக்கு, வளங்காப்பில் அவர் ஆற்றிய மகத்தான முயற்சிகளுக்காக வேண்டி ஜம்மு மற்றும் காஷ்மீர் ஒன்றியப் பிரதேச நிர்வாகமானது வனவிலங்கு வளங்காப்பு விருதினை வழங்கியுள்ளது.
  - வைல்டுலைஃப் SOS என்ற அமைப்பிற்காகப் பணி புரியும் ஜம்மு மற்றும் காஷ்மீரினைச் சேர்ந்த முதல் பெண்மணியும், அந்தப் பகுதியிலிருந்து இந்த விருதினைப் பெற்ற முதல் பெண்மணியும் இவரே ஆவார்.
- சார்க் நாடுகளின் எழுத்தாளர்கள் மற்றும் இலக்கிய அறக்கட்டளை (FOSWAL) ஆனது, பங்கபந்து ஷேக் முஜிபுர் ரஹ்மானுக்கு சிறப்பு இலக்கிய விருதினை வழங்கியுள்ளது.
  - அவரது The Unfinished Memoirs, The Prison Diaries and the New China 1952 ஆகிய மூன்று நாடகத் தொகுப்புகளுக்காக இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- G20 அமைப்பின் வர்த்தகம் மற்றும் முதலீட்டுப் பணிக் கட்டுப்பாட்டுக் குழுவின் (TIWG) முதலாவது கூட்டமானது மும்பை நகரில் நடைபெற்றது.
- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழான பேரிடர் குறைப்புப் பணிக் கட்டுப்பாட்டுக் குழுவின் (DRRWG) முதல் கூட்டமானது குஜராத்தின் காந்தி நகரில் நடைபெற்றது.

- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழான G20 அரசப் பிரதிநிதிகளின் இரண்டாவது கூட்டமானது, G20 அமைப்பிற்கான இந்தியாவின் அரசப் பிரதிநிதி அமிதாப் காந்த் தலைமையில் கேரளாவின் குமரகோம் நகரில் நடைபெற்றது.
- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழான இரண்டு நாட்கள் அளவிலான அறிவியல்-20 மாநாடானது திரிபுராவின் அகர்தலா நகரில் உள்ள ஹபானியா சர்வதேசக் கண்காட்சி மைதானத்தில் நடைபெற்றது.
- சுவிட்சர்லாந்தின் பாசல் நகரில் நடைபெற்ற சுவிஸ் ஓபன் சூப்பர் 300 பேட்மிண்டன் இரட்டையர் பிரிவு போட்டியில், இந்திய நாட்டினைச் சேர்ந்த முன்னணி ஆடவர் இரட்டையர் பிரிவு இணையான சாத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ஆகியோர் பட்டத்தினை வென்றனர்.
- இந்தியப் பளுதூக்கும் வீரர்களான தனுஷ் லோகநாதன் மற்றும் ஜியோஷ்னா சபர் ஆகியோர் அல்பேனியாவில் நடந்த IWF உலக இளையோர் சாம்பியன்ஷிப் போட்டியில் அவரவர் போட்டிப் பிரிவுகளில் வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாக இயக்குநராக நீரஜ் நிகாம் என்பவர் நியமிக்கப் பட்டுள்ளார்.
- அஞ்சலி ஷர்மா இந்தியப் பாரம்பரிய காதி ஆடையை (லுவான்சாடி) அணிந்தவாறு, தென்னாப்பிரிக்காவில் உள்ள கிளிமஞ்சாரோ மலைச் சிகரத்தின் மீது ஏறி சாதனைப் படைத்துள்ளார்.
- கான்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, இந்தியாவின் தலைமையின் கீழ் G20 அமைப்பிற்கான இளையோர்-20 ஆலோசனை மன்றத்தினை நடத்தியது.
- இரவலரும் கலைப் பொருட்கள் சேகரிப்பாளருமான கிரண் நாடார், சமீபத்தில் பிரான்சு நாட்டின் "செவாலியர் டி லா லெஜன் டி'ஹானர்" (நைட் ஆஃப் தி லெஜன் ஆஃப் ஹானர்) என்ற விருதினைப் பெற்றுள்ளார்.
- தமிழக முதல்வர் அவர்கள் கீழடி மிகைப்படுத்தப்பட்ட மெய்நிகர் தோற்றச் செயலியினை வெளியிட்டார்.
    - இதன் மூலம் உலகெங்கிலும் உள்ள நபர்கள் கீழடி அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப் பெற்ற 200 கலைப் பொருட்களை மிகைப்படுத்தப்பட்ட மெய்நிகர் தோற்றம் மற்றும் முப்பரிமாண முறையில் காண இயலும்.
- புது டெல்லியில், சஞ்சார் பவனுக்கும் தேசியத் தகவல் மையத்திற்கும் இடையே அமைக்கப்பட்ட இந்தியாவின் முதல் குவாண்டம் கணினி அடிப்படையிலான தொலைத்தொடர்பு வலையமைப்புச் சேவை இணைப்பானது தற்போது செயல்படத் தொடங்கியது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழுவானது, 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வெளியிட்ட இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும் கொள்கை மதிப்பாய்வில், ரெப்போ வட்டி விகிதத்தினை மாற்றாமல் 6.5% என்பதாகவே வைத்து இருக்க முடிவு செய்துள்ளது.
- OpenAI எனப்படும் அமெரிக்கப் புத்தொழில் நிறுவனத்தின் ChatGPT எனப்படும் பிரபல செயற்கை நுண்ணறிவு உரையாடு மென்பொருளினைத் தடை செய்த முதல் மேற்கத்திய நாடாக இத்தாலி மாறியுள்ளது.
- அமெரிக்க மாகாணமான ஜார்ஜியா மாகாணம், இந்து சமயத்திற்கு எதிரான விரோதப் போக்கினைக் கண்டித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

- மேலும் இத்தகையத் தீர்மானத்தினை இயற்றிய முதல் அமெரிக்க மாகாணமாக இது மாறியது.

❖ கிம் காட்டன், சர்வதேச கிரிக்கெட் கழகத்தின் முழு அளவிலான இரண்டு உறுப்பினர் நாடுகளின் அணிகளுக்கு இடையிலான சர்வதேச ஆடவர் போட்டியில் கள நடுவராகப் பணியாற்றிய முதல் பெண்மணி என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.

- இதற்கு முன்னதாக, கிம் 54 மகளிர் டி20 மற்றும் 24 மகளிர் ஒருநாள் போட்டிகளில் கள அளவிலான மற்றும் தொலைக்காட்சி நடுவராகப் பணியாற்றியுள்ளார்.

❖ மனித - வனவிலங்கு மோதல் மற்றும் சகவாழ்வு குறித்த சர்வதேச மாநாடு ஆனது, ஐக்கியப் பேரரசின் ஆக்ஸ்போர்டு நகரில் நடைபெற்றது.

❖ ஸ்காட்லாந்து நாடாளுமன்றம் ஆனது, ஹம்சா யூசுப்பை தனது முதல் அமைச்சராக நியமித்தது.

- அவர் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஓர் அரசாங்கத்தில் இடம் பெறுகின்ற இளம் மற்றும் முதலாவது முஸ்லீம் தலைவர் ஆவார்.

❖ சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிப்பதற்குக் குடியரசுத் தலைவர் உரிய வழிமுறைகளை பிறப்பிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தும் இது குறித்து மத்திய அரசை வலியுறுத்தும் வகையிலான ஒரு தீர்மானமும் தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது.

❖ வேலூரில் அமைக்கப்பட்டுள்ள புதிய விமான ஓடுதளத்தில் நவம்பர் மாதம் முதல் சிறிய விமானங்களை இயக்க இந்திய விமான நிலைய ஆணையம் முடிவு செய்து உள்ளது.

❖ 2023 ஆம் ஆண்டின் 5வது சர்வதேச மீள்தன்மை கொண்ட பேரிடர் உள்கட்டமைப்பு குறித்த மாநாடு புது தில்லியில் நடத்தப் பட்டது.

❖ வண்டலூரில் உள்ள தமிழ்நாடு காவல்துறைப் பயிற்சிக் கழகமானது, இந்தியாவின் சிறந்த காவல்துறை உதவி ஆய்வாளர் பயிற்சி நிறுவனம் என்ற பிரிவில் மத்திய உள்துறை அமைச்சகத்தின் கோப்பையை வென்றுள்ளது.

❖ இடஞ்சார்ந்த பேரிடர் எச்சரிக்கைகள், இடி, மின்னல், மழை மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர் இருப்பு பற்றியத் தகவல்களைப் பொதுமக்களுக்கு வழங்கும் வகையிலான TN-Alert என்ற கைபேசிச் செயலியினைத் தமிழக அரசு அறிமுகப்படுத்த உள்ளது.

❖ MF ஹைட்ரா எனப்படும் மின்கலங்கள் மற்றும் திரவ ஹைட்ரஜன் எரிபொருள் கலங்களைப் பயன்படுத்துகின்ற கலப்பினத் தொழில்நுட்பம் அடிப்படையிலான ஒரு கப்பலானது, சமீபத்தில் நார்வேயில் தனது இரண்டு வார அளவிலான கடல் பயணச் சோதனைகளை நிறைவு செய்தது.

❖ இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் உகாண்டாவின் கம்பாலாவிற்கு மேற்கொண்ட பயணத்தின் போது 'துளசி கணவாய் பகுதி மறுசீரமைப்பு' எனும் ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

❖ ரக்கூன் ஸ்டீலர் எனப்படும் மின்னஞ்சல் மூலமாக தகவலைத் திருடும் ஒரு தீம் பொருளானது எட்டு மத்திய அரசு நிறுவனங்களைத் தாக்கச் செய்வதை இலக்காக கொண்டது.

- இது பாதிக்கப்பட்ட கணினிகளிலிருந்து முக்கியமான பல தகவல் தரவுகளைத் திருடும் ஒரு தீம்பொருள் ஆகும்.

- சென்னையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு 'கலைஞர் நூற்றாண்டுப் பேருந்து நிலையம்' என்று பெயர் சூட்டப்பட உள்ளது.
- அசாமில் கௌகாத்திக்கு அருகிலுள்ள சாங்சாரி என்னுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள, வடகிழக்கு இந்தியாவின் முதல் அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனம் (எய்ம்ஸ்) ஆனது சமீபத்தில் திறக்கப்பட்டது.
- இந்திய செஸ் கிராண்ட்மாஸ்டர் D. குகேஷ், உலக சதுரங்க ஆர்மகெடான் ஆசியா & ஓஷானியா போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.
- அஜ்மீர் மற்றும் டெல்லி கன்டோன்மென்ட் இடையே இயக்கப்படும் ராஜஸ்தானின் முதல் வந்தே பாரத் விரைவு இரயில் சேவையானது சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- ஐதராபாத்தில் அமைக்கப் பட்டுள்ள B. R. அம்பேத்கர் அவர்களின் 125 அடி உயரம் கொண்ட வெண்கலச் சிலையைத் தெலுங்கானா முதல்வர் திறந்து வைத்தார்.
  - இது இந்தியாவில் அம்பேத்கரின் மிகவும் உயரமான சிலையாகும்.
- பாரத் பயோடெக் நிறுவனமானது, அமெரிக்காவின் வாசிங்டன்னில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டு உலகத் தடுப்பூசி மாநாட்டில் சிறந்தத் தடுப்பூசி தொழில்துறை (ViE) விருதுகளின் ஒரு பகுதியாக `சிறந்த உற்பத்தி / செயல்முறை மேம்பாடு' என்ற பிரிவில் விருதினை வென்றுள்ளது.
- உச்ச நீதிமன்றத்தில் கண்ணியமிகுப் பணிச்சூழல் நிலவுவதை உறுதி செய்வதற்காக, அந்த வளாகத்திற்குள் உள்ள LGBTQIA+ சமூகத்திற்கு ஏற்ற வகையிலான உள்ளார்ந்த உள்கட்டமைப்பு மற்றும் பாலின உணர்வுகள் சார்ந்த விழிப்புணர்வினை ஏற்படுத்தச் செய்வதற்கான நடவடிக்கைகளை உச்ச நீதிமன்றம் தொடங்கியுள்ளது.
  - மூத்த வழக்கறிஞர் மேனகா குருசாமி பாலின உணர்வுகள் சார்ந்த விழிப்புணர்வு மற்றும் உள்ளரங்கப் புகார்க் குழுவின் ஒரு உறுப்பினராகச் சேர்க்கப் பட்டுள்ளார்.
- மத்திய ஆயுதக் காவல் படையின் (CAPF) காவலர் பணிக்கான தேர்வுகள் 13 பிராந்திய மொழிகளில் நடத்தப்படும் என மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
  - இந்தத் தேர்விற்கான வினாத்தாள் ஆனது அசாமி, வங்காளம், குஜராத்தி, மராத்தி, மலையாளம், கன்னடம், தமிழ், தெலுங்கு, ஒடியா, உருது, பஞ்சாபி, மணிப்பூரி மற்றும் கொங்கணி ஆகிய மொழிகளில் அமைக்கப்படும்.
- G20 நாடுகளின் தலைமை வேளாண் அறிவியலாளர்களின் (MACS) ஒரு கூட்டமானது, வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறையினால் வாரணாசியில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- உலக குரல் தினம் என்பது நமது அன்றாட வாழ்வில் குரலின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக என்று ஆண்டுதோறும் ஏப்ரல் 16 ஆம் தேதி அன்று அனுசரிக்கப் படும் ஒரு நிகழ்வாகும்.
- தைவானின் பௌ சேன் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் ஒரு துணை நிறுவனமான ஹை க்ளோரி ஃபூட்வேர் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனமானது உளுந்தூர் பேட்டையில் அமைந்துள்ள சிப்காட் தொழிற்பேட்டையில் தோல் பொருள் சாராத ஒரு காலணி உற்பத்திப் பிரிவை அமைக்கச் செய்வதற்காக வேண்டி தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்து திட்டுள்ளது.
- இந்தியாவுடன் இணைந்து நேபாளமும் சர்வதேச பெரும் பூனை இனப் பாதுகாப்புக் கூட்டணியின் நிறுவன உறுப்பினராக மாறியுள்ளது.

- பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் ஆனது, ஏப்ரல் 17 முதல் 21 ஆம் தேதி வரை தேசியப் பஞ்சாயத்து விருதுகள் வாரத்தினைக் கொண்டாடுகிறது.
- அசாம் மாநிலமானது, ஒரே இடத்தில் 11000க்கும் மேற்பட்ட நடனக் கலைஞர்கள் 'பிஹு' நடனம் ஆடியும் மற்றும் முரசுக் கலைஞர்கள் 'தோல்' எனப்படும் முரசினை வாசித்ததன் மூலமும் வரலாறு ஒன்றைப் படைத்து, கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றது.
- MRF லிமிடெட் நிறுவனமானது, மிச்சிலின் பிரெஞ்சு டயர் நிறுவனத்திற்கு அடுத்த படியாக உலகின் இரண்டாவது வலுவான உருளிப்பட்டை (டயர்) தயாரிப்பு நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
    - முதல் 10 இடங்களில் இடம் பெற்றுள்ள ஒரே இந்திய டயர் உற்பத்தி நிறுவனம் இது ஆகும்.
- அமெரிக்கக் கூட்டாட்சி வான்வழிப் போக்குவரத்து நிர்வாக அமைப்பின் சர்வதேச விமானப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், பிரிவு I என்ற தகுதியினை இந்தியா தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- உலகளாவிய நிதிக் கட்டமைப்பின் சீர்திருத்தம் தொடர்பான காமன்வெல்த் மாநாட்டிற்கான நிதி அமைச்சர்கள் பணிக் கட்டுப்பாட்டுக் குழுவின் தலைமைப் பொறுப்பினை இந்தியாவும், துணைத் தலைமைப் பொறுப்பினை நைஜீரியாவும் ஏற்க உள்ளன.
- 2023 ஆம் ஆண்டு புத்தாக்க மற்றும் தொழில்முனைவோர் விழா (FINE) 2023 அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் (DST) கீழ் உள்ள தன்னாட்சி நிறுவனமான தேசியப் புத்தாக்க அறக்கட்டளையினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- FedEx என்ற நிறுவனத்தின் இந்திய-அமெரிக்கத் தலைமை நிர்வாக அதிகாரியான ராஜ் சுப்ரமணியத்திற்கு மதிப்பு மிக்க பிரவாசி பாரதிய சம்மான் என்ற விருது வழங்கப் பட்டு உள்ளது.
    - இந்திய வம்சாவளி மற்றும் புலம்பெயர்ந்த இந்தியர்களுக்கு இந்திய அரசு வழங்கும் மிக உயரியக் குடிமை விருது இதுவாகும்.
- சமீபத்தியத் தரவுகளின்படி, ஐக்கிய அரபு அமீரகமானது, அமெரிக்காவிற்கு அடுத்த படியாக இந்தியாவின் இரண்டாவது பெரிய ஏற்றுமதி இடமாகவும், சீனா மற்றும் ரஷ்யாவிற்கு அடுத்தபடியாக மூன்றாவது பெரிய இறக்குமதி மூலமாகவும் உள்ளது.
- மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகம் மற்றும் சர்வதேசப் பௌத்தக் கூட்டமைப்பு ஆகியவை புத்தமதம் குறித்த முதலாவது சர்வதேச உச்சி மாநாட்டைப் புது தில்லியில் ஏற்பாடு செய்தன.
- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர், நாடு முழுவதும் உள்ள இளம் தொழில் முனைவோரின் புத்தொழில் நிறுவனங்களை ஒன்றிணைத்து அடையாளம் காண உதவும் நோக்கிலான 'யுவா' என்ற ஒரு இணையத் தளத்தினைத் தொடங்கி வைத்தார்.
- மகாராஷ்டிரா அரசானது, V.D. சாவர்க்கரின் பிறந்த நாளான மே 28 ஆம் தேதியினை ‘சுதந்திரிய வீர் கௌரவ் தினமாக’ கொண்டாட உள்ளது.
- OpenAI மற்றும் கூகுள் நிறுவனத்தின் டீப் மைண்ட் ஆகியவற்றிற்கு இணையான ஒரு போட்டியாக "TruthGPT" செயற்கை நுண்ணறிவு முன்னெடுப்பினைத் தொடங்குவதற்கு எலோன் மஸ்க் திட்டமிட்டுள்ளார்.

- மொசாம்பிக்கில் அமைக்கப்பட்டுள்ள புஷி என்ற ஒரு பாலத்தினை இந்திய வெளியுறவு விவகாரங்கள் அமைச்சர் காணொளி வாயிலாகத் திறந்து வைத்தார்.
  - இது 132 கி.மீ. நீள டிகா-புஷி-நோவா-சோஃபாலா சாலை திட்டத்தின் ஒரு பகுதியாக இந்திய அரசினால் கட்டமைக்கப்பட்டது.
- கொல்கத்தா மெட்ரோ இரயில் நிர்வாகமானது, ஹூக்ளி ஆற்றின் கீழே நீருக்கடியில் அமைக்கப் பட்டுள்ள சுரங்கப்பாதை வழியாக இரயில் பயணம் மேற்கொண்டதன் மூலம், நதிக்கு அடியில் பயணம் செய்த இந்தியாவின் முதல் மெட்ரோ இரயில் என்றப் பெருமையினை இது பெற்றது.
  - இந்த இரயில் சேவை அமைப்பானது, ஹூக்ளி ஆற்றின் மேற்குக் கரையில் உள்ள ஹவுரா இரயில் நிலையத்தைக் கிழக்குக் கரையில் உள்ள ஆர்மீனிய காட் என்ற பகுதியுடன் இணைக்கிறது.
- புகழ்பெற்ற பழம்பெரும் பாடகி ஆஷா போஸ்லே அவர்கள் லதா தீனாநாத் மங்கேஷ்கர் விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளார்.
- சிட்டி யூனியன் வங்கியானது (CUB), தனது கைபேசி அடிப்படையிலான வங்கிச் சேவைச் செயலிக்காக இந்தியாவில் முதல் முறையாக பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக என்று குரல் சார்ந்த உயிரியல் அளவியல் அங்கீகரிப்பு வங்கிச் சேவைச் செயலியினை அறிமுகப் படுத்தி யுள்ளது.
- 20 வயதிற்குட்பட்டோருக்கான FIFA உலகக் கோப்பைப் போட்டியினை நடத்துவதற்காக இந்தோனேசியாவிற்கு வழங்கிய உரிமையினை FIFA அமைப்பு திரும்பப் பெற்றதை அடுத்து, இப்போட்டியினை அர்ஜென்டினா நடத்த உள்ளது.
- இந்தியப் பசுமை ஆற்றல் கூட்டமைப்பு - அழுத்தப்பட்ட உயிரி எரிவாயு உற்பத்தியாளர் மன்றமானது, அழுத்தப்பட்ட உயிரி எரிவாயு தொடர்பான இரண்டு நாட்கள் அளவிலான உலக மாநாட்டினைப் புது டெல்லியில் ஏற்பாடு செய்துள்ளது.
  - இந்த நிகழ்விற்கான கருத்துரு, "ஒரு வலுவான அழுத்தப்பட்ட உயிரி எரிவாயு உற்பத்திக்கான அடித்தளம் மற்றும் மேம்பாடு ஆகியவற்றிற்கான முற்போக்கான கொள்கைக் கட்டமைப்பினை நோக்கி" என்பதாகும்.
- இந்தியக் குத்துச்சண்டை வீராங்கனையான நிகாத் ஷரீன் 50 கிலோ எடைப் பிரிவுப் போட்டியில் வியட்நாம் நாட்டினைச் சேர்ந்த குயென் தி டாம் என்பவரை வீழ்த்தி தனது இரண்டாவது உலக சாம்பியன்ஷிப் பட்டத்தினை வென்றார்.
  - மேரி கோமிற்கு அடுத்தபடியாக இந்தப் பட்டத்தினை இரண்டு முறை வென்ற இரண்டாவது இந்தியர் இவரே ஆவார்.
- ஜெர்மனியின் முன்னாள் தலைவர் ஏஞ்சலா மெர்க்கல், 16 ஆண்டுகள் ஜெர்மனியின் தலைமைப் பொறுப்பினை வகித்ததனை அங்கீகரிக்கும் விதமாக, ஜெர்மனியின் மிக உயரிய கௌரவ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- தமிழக அரசானது, இந்த ஆண்டில் ஆளுநருக்கான விருப்புரிமை நிதி ஒதுக்கீட்டினை 5 கோடி ரூபாயில் இருந்து 3 கோடி ரூபாயாக குறைக்கவுள்ளது.
- தமிழ்நாடு அரசானது, 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகங்கள் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 21/2012) திருத்தியமைப்பதற்கான மசோதாவினை சட்ட சபையில் தாக்கல் செய்துள்ளது.
  - இது துணைவேந்தரை நியமிப்பதற்கான அதிகாரத்தினை மாநில ஆளுநருக்குப் பதிலாக மாநில அரசிடம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- தமிழகத்தின் உச்ச கட்ட மின் தேவையானது, ஏப்ரல் 19 ஆம் தேதியன்று 19,087 மெகா வாட் என்ற அளவினை எட்டி முதன்முறையாக 19,000 மெகாவாட் என்ற அளவினைத் தாண்டியது.
- இந்தியத் தேர்தல் ஆணையமானது, எடப்பாடி கே.பழனிசாமி அவர்களை அ.தி.மு.க. கட்சியின் பொதுச் செயலாளராக அங்கீகரித்துள்ளது.
- ஆப்பிள் நிறுவனத்தின் தலைமை நிர்வாகியான டிம் குக், இந்தியாவின் முதல் ஆப்பிள் தயாரிப்புகளின் சில்லறை விற்பனைக் கடையை மும்பையில் தொடங்கி வைத்தார்.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, தான்சானியாவின் சான்சிபார் என்னுமிடத்தில் தனது முதல் சர்வதேச வளாகத்தினை அமைக்கவுள்ளது.
- விலங்குகள் பரிமாற்றத் திட்டத்தின் ஒரு பகுதியாக பெங்களூருவின் பனேர்கட்டா உயிரியல் பூங்காவில் இருந்து சிங்கம் ஒன்று சென்னை வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு (AAZP) கொண்டு வரப் பட்டுள்ளது.
- ராண்டோர் கை என்ற புனைப் பெயரால் பிரபலமாக அறியப்பட்ட மூத்தத் திரைப்பட வரலாற்றாசிரியர், கட்டுரையாளர் மற்றும் எழுத்தாளர் மதபூஷி ரங்கதுரை சமீபத்தில் சென்னையில் காலமானார்.
- ஸ்பானிய எழுத்துக்களின் மாபெரும் மேதையான மிகுவல் டி செர்வாண்டஸ் அவர்களின் நினைவு நாளைக் குறிக்கும் வகையில் ஏப்ரல் 23 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபையின் ஸ்பானிய மொழி தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- முன்னதாக, விலிங்டன் சீமாட்டி கல்வியியல் கல்லூரி என்றறியப்பட்ட சென்னையில் திருவல்லிக் கேணியில் அமைந்துள்ள வெல்லிங்டன் சீமாட்டி மேம்பாட்டுக் கல்வியியல் நிறுவனம், அதன் நூற்றாண்டு விழாவினை சமீபத்தில் கொண்டாடியது.
  - 1922 ஆம் ஆண்டு நவம்பர் 04 ஆம் தேதியன்று நிறுவப்பட்ட இந்தக் கல்லூரியின் முதல் கல்வியாண்டு மாணவர்கள் 1923 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பட்டம் பெற்றனர்.
- "இந்தியா ஸ்டீல் 2023" எனப்படும் சர்வதேசக் கண்காட்சி மற்றும் மாநாடானது மும்பை நகரில் நடைபெற்றது.
- டாடா எஃகு உற்பத்தி நிறுவனமானது, 2023 ஆம் ஆண்டு எஃகு நிலைத்தன்மையில் முதன்மையான நிறுவனங்களின் ஒரு பட்டியலில் தொடர்ந்து 6வது ஆண்டாக தனது பெயரைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- கேரளாவில் எருமேலி என்னுமிடத்தில், சபரிமலை பசுந்தட விமான நிலையம் அமைப்பதற்கான திட்டத்திற்கு மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது.
- நான்கு நாட்கள் அளவிலான பறவைகள் கணக்கெடுப்பில் 10,000க்கும் மேற்பட்ட பட்டியல்கள் பதிவேற்றப்பட்டதன் மூலம், 2023 ஆம் ஆண்டு கிரேட் பேக்யார்டு (Great Backyard) என்ற பறவைகள் கணக்கெடுப்பில் சேலம் மாவட்டம் ஒரு முன்னணிப் பங்கேற்பாளராக திகழ்கிறது.
- 1963 ஆம் ஆண்டில் மாநில அந்தஸ்து பெற்ற நாகாலாந்து, முதல்முறையாக மருத்துவக் கல்லூரியை அமைப்பதற்கான அனுமதியினைப் பெற்றுள்ளது.
- இந்தியன் வங்கிகள் சங்கத்தினால் வெளியிடப்பட்ட 2022-23 ஆம் நிதியாண்டின் மூன்றாவது காலாண்டிற்கான EASE சீர்திருத்தக் குறியீட்டு அறிக்கையின்படி, யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா முதன்முறையாக இதில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

- கேரள மாநிலத்தின் திருவனந்தபுரத்தில் முக்கிய உள்கட்டமைப்பு மேம்பாட்டின் ஒரு பகுதியாக கேரளாவில் 1,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள இந்தியாவின் முதல் எண்ணிம அறிவியல் பூங்காவிற்குப் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.
- நாட்டில் நிர்ணயிக்கப்பட்ட ஓய்வூதிய வயதினை 62 வயதிலிருந்து 64 ஆக உயர்த்தும் முக்கிய ஓய்வூதியச் சீர்திருத்தச் சட்டத்தில் பிரெஞ்சு அதிபர் இம்மானுவேல் மக்ரோன் கையெழுத்திட்டுள்ளார்.
- ஐக்கிய நாடுகள் சபையின் பெரும் பயன்மிக்க பன்முகத்தன்மை குறித்த உயர்மட்ட ஆலோசனைக் குழு சமீபத்தில் "மக்கள் மற்றும் கிரகத்திற்கான ஒரு திருப்புமுனை : இன்று மற்றும் எதிர்காலத்திற்கானப் பயன்மிக்க மற்றும் உள்ளார்ந்த உலகளாவிய ஆளுமை" என்ற தலைப்பிலான ஒரு புதிய அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ‘பிரதான் மந்திரி கதிசக்தி தேசிய முதன்மைத் திட்டத்தினை’ வெற்றிகரமாகச் செயல் படுத்தியதற்காக தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறைக்கு 2022 ஆம் ஆண்டிற்கான சிறந்தப் பொது நிர்வாகத்திற்கான பிரதம மந்திரியின் விருது என்பது வழங்கப்பட்டுள்ளது.
- அமர ராஜா குழுமத்தின் ஆதரவு பெற்ற Log9 மெட்டீரியல்ஸ் என்ற ஒரு நிறுவனமானது, பெங்களூருவில் இந்தியாவின் முதல் லித்தியம்-அயன் மீதான ஒரு மின்கல உற்பத்தி நிலையத்தினை தொடங்கியுள்ளது.
- இந்தியா மற்றும் ஜமைக்கா நாட்டின் மத்திய வெளியுறவு விவகாரங்கள் அமைச்சர்கள் இணைந்து கயானாவின் ஜார்ஜ் டவுனில் நடைபெற்ற 4வது இந்தியா-CARICOM அமைச்சர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர்.
    - கரீபியன் சமூகம் (CARICOM) என்பது 15 உறுப்பினர் நாடுகளின் அரசியல் மற்றும் பொருளாதார ஒன்றியம் ஆகும்.
- 1727 ஆம் ஆண்டில் பிறந்த பிரபல பிரெஞ்சு நாட்டு நடனக் கலைஞரான ஜீன் ஜார்ஜஸ் நோவர்ரேவின் பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 29 ஆம் தேதியன்று சர்வதேச நடன தினம் அனுசரிக்கப்படுகிறது.
- தமிழக அரசு சமையல் எரிவாயு உருளைகளை அரசு நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்ய முடிவு செய்துள்ளது.
    - 5 கிலோ மற்றும் 10 கிலோ வர்த்தகச் சிலிண்டர்களை தமிழ்நாடு குடிமைப்பொருள் வழங்கல் துறையானது ஏற்கனவே விற்பனை செய்து வருகிறது.
- சென்னை ஐஐடி வளாகத்தில் துறைமுகங்கள், நீர்வழிகள் மற்றும் கடற்கரைகளுக்கான ஒரு தேசியத் தொழில்நுட்ப மையத்தை (NTCPWC) மத்தியத் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்துறை அமைச்சர் சர்பானாந்தா சோனோவால் திறந்து வைத்தார்.
- பாதுகாப்பு நிதி மற்றும் பொருளாதாரம் தொடர்பான மூன்று நாள் சர்வதேச மாநாடு (ICDFE-2023) புது தில்லியில் நடைபெற்றது.
- கடந்த 22 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு இந்தியாவின் எண்ணெய் இறக்குமதியில் பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பு (OPEC) நாடுகளின் பங்கு 2022-23 ஆண்டில் மிக வேகமாகக் குறைந்து கொண்டு வருகிறது.
- சர்வதேச ஜாஸ் தினமானது, ஜாஸ் இசை மூலம் உலகின் அனைத்து மூலைகளிலும் உள்ள மக்களை ஒன்றிணைக்கும் அதன் அரசுமுறை சார்ந்தப் பங்கினை முன்னிலைப் படுத்தும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 30 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.


# தமிழ்நாடு செய்திகள்

## 11 தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடு

- முதன்முறையாக, தமிழ்நாட்டில் தயாரிக்கப் படும் 11 தயாரிப்புகளுக்கு ஒரே நேரத்தில் புவிசார் குறியீடு வழங்கப் பட்டுள்ளது.
- இதன் மூலம், 56 தயாரிப்புகளுடன், அதிகப் புவிசார் குறியீடுகள் கொண்ட மாநிலமாக தமிழகம் கர்நாடகாவை விஞ்சுகிறது.
- சமீபத்தில் ராமநாதபுரத்தின் குண்டு மிளகாய் மற்றும் வேலூரின் எலவம்பாடி முள்ளுக் கத்தரிக்காய் ஆகியவை புவிசார் குறியீடு பெற்றன.

| Product | Location |
|---|---|
| **Murukku** | Manapparai |
| **Thaikkal Rattan craft** | Mayiladuthurai |
| **Auhtoor Vetrilai (betel leaf)** | Thoothukudi |
| **Vetrilai** | Sholavandan |
| **Cumbum Panner Grapes** | Theni |
| **Negamam cotton sarees** | Coimbatore |
| **Varkey** | Ooty |
| **Myladi stone carvings** | Kanniyakumari |
| **Sago (Javvarisi)** | Salem |
| **honey** | Marthandam |
| **Pottery - Ghatam** | Manamadurai |

## கடல்நீரைக் குடிநீராக்கும் 4வது ஆலை




- சென்னைப் பெருநகர நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியமானது (CMWSSB) சென்னையில் கடல்நீரைக் குடிநீராக்கும் 4வது ஆலையினைக் கட்டமைப்பதற்கானப் பணியினை VA டெக் வபாக் லிமிடெட் என்ற நிறுவனத்திடம் வழங்கியுள்ளது.

- இந்த ஆலை கட்டி முடிக்கப்பட்டால், சென்னை மாநகராட்சி ஒரு நாளைக்கு சுமார் 750 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட (உப்பு நீக்கப்பட்ட) நீரை உற்பத்தி செய்ய முடியும்.
- குடிநீரை வழங்குவதற்கும் தண்ணீர்ப் பாதுகாப்பு என்ற இலக்கினை அடைவதற்கும் உப்பு நீக்கத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாக திகழ்கிறது.
- தமிழக மாநிலமானது, ஏற்கனவே சென்னைக்கு அருகில் மீஞ்சூர் மற்றும் நெம்மேலி (2013) ஆகிய இடங்களில் செயல்படுகின்ற இரண்டு உப்புநீக்க ஆலைகளைக் கொண்டு உள்ளது.
- இந்தியாவின் முதல் உப்புநீக்க ஆலையான மீஞ்சூர் 2010 ஆம் ஆண்டில் திறக்கப் பட்டது.

## வைக்கம் சத்தியாகிரகத்தின் நூற்றாண்டு விழா

- மிகப் பெரும் ஒரு சாதிய எதிர்ப்புப் போராட்டமான வைக்கம் சத்தியாகிரகத்தின் நூற்றாண்டு விழாவினை, கேரள மற்றும் தமிழக மாநில முதல்வர்கள் இணைந்துத் தொடங்கி வைத்தனர்.
- ஈழவர்கள் மற்றும் புலையர்கள் போன்ற தாழ்த்தப்பட்டச் சாதியினர் தூய்மை அற்றவர்களாகக் கருதப்பட்ட நிலையில் உயர் சாதியினரிடமிருந்து அவர்களை விலக்கி வைப்பதற்காக பல்வேறு விதிகள் முன்னொரு காலத்தில் நடைமுறையில் இருந்தன.
- கோவில் நுழைவு மட்டுமின்றி, கோவில்களைச் சுற்றியுள்ள சாலைகளில் நடக்கவும் அவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டது.
- 1924 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் தேதியன்று, திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் உள்ள வைக்கம் என்ற கோயில் நகரத்தில், அகிம்சை முறையிலான ஒரு போராட்டம் தொடங்கியது.
- இது நாடு முழுவதும் "கோயில் நுழைவுப் போராட்ட இயக்கங்களின்" மாபெரும் தொடக்கத்திற்குக் காரணமாக இருந்தது.
- ஸ்ரீ நாராயண குரு, சட்டாம்பி சுவாமி, T.K. மாதவன், அய்யன்காளி ஆகியோர் இந்தப் போராட்டத்தின் முக்கியப் பிரமுகர்கள் ஆவர்.
- 1936 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், சத்தியாகிரகம் முடிந்து ஏறக்குறையப் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில் நுழைவுப் பிரகடனத்தில் திருவிதாங்கூர் மகாராஜா கையெழுத்திட்டார்.

## 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கிற்கான செயல்திட்டம்

- 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற ஒரு தொலைநோக்குக் குறிக்கோளினை நடைமுறையாக்குவதற்காக, தமிழகத்திற்காக ஒரு முழு உத்தி மற்றும் செயல்பாட்டுத் திட்டத்தினை உருவாக்கச் செய்வதற்காக என்று, பாஸ்டன் ஆலோசனை வழங்கீட்டுக் குழுமத்தினைத் தமிழக மாநில அரசு தேர்ந்தெடுத்துள்ளது.
- தமிழ்நாடு மாநிலமானது, இந்தியாவின் மாநிலங்களில் இரண்டாவது பெரிய பொருளாதாரமாகத் திகழ்வதோடு, அது தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூன்றாவது இடத்திலும் உள்ளது.
- இது உற்பத்தி சார்ந்தத் தொழில்துறையின் வலுவான அடித்தளம் மற்றும் மாபெரும் சேவைத் தொழில்துறை ஆகியவற்றுடன் மிகவும் வெகுவாக நகரமயமாக்கப்பட்ட மற்றும் தொழில்துறை மயமாக்கப்பட்ட ஒரு மாநிலமாகத் திகழ்கிறது.

- இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் 9 சதவீதத்திற்கும் அதிகமானப் பங்களிப்பைக் கொண்டு தமிழ்நாடு மூன்றாவது பெரிய ஏற்றுமதி செய்யும் மாநிலமாகவும் உள்ளது.
- கணினி, மின்னணு மற்றும் ஒளியிழை சார்ந்தப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தியில், இந்தியாவின் தேசிய உற்பத்தியில் 18 சதவீதப் பங்கினைக் கொண்டு தமிழ்நாடு இந்திய அளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில், 2.2 பில்லியன் டாலர் மதிப்பிலான மின்னணு ஏற்றுமதியுடன் தமிழ்நாடு இந்தியாவில் நான்காவது இடத்தில் உள்ளது.

| Deliverables | Timeline |
|---|---|
| Inception report | 4 weeks |
| Report 1<br>▪ Economic baseline for T.N. | 8 weeks |
| Report 2<br>▪ Macro-economic SGVA model<br>▪ Summary of stakeholder discussions<br>▪ Benchmarks of economic growth of countries, regions | 14 weeks |
| Report 3<br>▪ Economic development strategy<br>▪ Quantification of climate impact and sustainable strategy | 20 weeks |
| Report 4<br>▪ Key requirements/enablers to realise the target<br>▪ Overall strategy outline | 24 weeks |

## அரசுப் பள்ளி மாணவர்களுக்கான புதிய திட்டம்

- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திறனறித் தேர்வுத் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- பத்தாம் வகுப்பில் பயிலும் 1,000 மாணவர்கள் (500 மாணவர்கள் மற்றும் 500 மாணவிகள்) இந்தத் திட்டத்திற்காகத் தேர்வு செய்யப்படுவார்கள்.
- 12 ஆம் வகுப்பு முடிக்கும் வரை ஒவ்வொரு மாதமும் ரூ.1,000 உதவித் தொகை அவர்களுக்கு வழங்கப் படும்.
- இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள், இளங்கலை மற்றும் முதுகலை பட்டப் படிப்பின் போது ஆண்டுதோறும் ரூ.12,000 உதவித் தொகையாகப் பெறுவார்கள்.
- இந்த முன்னெடுப்பின் கீழ், சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது மாநிலத்தின் கிராமப்புறங்களில் பயிலும் ஒரு லட்சம் மாணவர்களை ஒன்றிணைக்கும்.
- 'அனைவருக்கும் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழக கல்வி' முன்னெடுப்பின் ஒரு பகுதியான, அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் குறித்த இந்த விரிவாக்கத் திட்டமானது மாணவர்களை குறைகடத்தி போன்ற தொழில்நுட்பங்களில் தங்களது தொழில்முறை கல்வியினை மேற்கொள்ளச் செய்வதை ஊக்குவிப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.




## பிரதமரின் சென்னை வருகை


- தமிழ்நாட்டில் உள்ள சென்னை விமான நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன ஒருங்கிணைந்த விமான நிலைய முனையக் கட்டிடத்தினைப் பிரதமர் திறந்து வைத்தார்.
- இது 100 பயண ஆயத்த முகப்புகள், 108 புலம்பெயர்வு முகப்புகள் ஆகியவற்றினை கொண்டுள்ளதோடு, இது ஆண்டிற்கு 35 மில்லியன் பயணிகளை கையாளக் கூடியது.
- சென்னை முதல் கோவை வரையிலான வந்தே பாரத் விரைவு இரயில் சேவையினை சென்னையின் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் மத்திய இரயில் நிலையத்திலிருந்து கொடியசைத்துப் பிரதமர் துவக்கி வைத்தார்.



- இது மாநிலத்தின் இரண்டாவது வந்தே பாரத் இரயில் என்பதோடு மேலும் இது தமிழக மாநிலத்திற்குள்ளேயே இயக்கப்படும் முதல் வந்தே பாரத் இரயிலாகும்.
- முதலாவது வந்தே பாரத் விரைவு இரயில் சேவையானது, சென்னை முதல் மைசூரு வரையில் பெங்களூரு வழியாக இயக்கப் படுகிறது.
- தாம்பரம் மற்றும் செங்கோட்டை இடையிலான வாரத்திற்கு மும்முறை இயங்கும் ஒரு புதிய விரைவு இரயில் சேவையினையும் பிரதமர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.
- சென்னையில் இருந்து திருவாரூர்-காரைக்குடி ஆகியவற்றுக்கு இடையேயான முதல் இரயில் சேவையும் இதுவே ஆகும்.

## ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் 125வது ஆண்டு விழா

- ஸ்ரீஇராமகிருஷ்ண மடத்தின் 125வது ஆண்டு விழாவானது, சென்னையில் அமைந்த விவேகானந்தர் இல்லத்தில் நடைபெற்றது.
- இது இராமகிருஷ்ணரின் நேரடிச் சீடர்களில் ஒருவரான சுவாமி ராமகிருஷ்ணானந்தா அவர்களால் 1897 ஆம் ஆண்டில் சென்னையில் தொடங்கப் பட்டது.
- இந்நிகழ்ச்சியில் 'Book on Holy Trio' என்ற புத்தகமும் வெளியிடப் பட்டது.




## TN REACH முன்னெடுப்பு

- TN REACH என்ற முன்னெடுப்பு, நகரங்கள் மற்றும் சிறு நகரங்களுக்கு இடையேயான பயணத்திற்கு ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்துவதற்கான ஒரு நிறுவனம் சார்ந்த வழிமுறையானது உருவாக்கப்பட உள்ளது.
- TN REACH என்பது ஹெலிகாப்டர்கள் மூலம் தமிழ்நாடு மாநிலத்தின் பிராந்திய வான் வழிப் போக்குவரத்து இணைப்பு என்பதன் சுருக்கமாகும்.
- தமிழகம் முழுவதும் பயன்படுத்தப்படாமல் உள்ள 80க்கும் மேற்பட்ட ஹெலிகாப்டர் ஏற்ற இறக்கத் தளங்களானது, தமிழக மாநில அரசு திட்டமிட்டுள்ள ஹெலிகாப்டர் சேவைகளுக்காக விரைவில் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வரப்படும்.

- தமிழ்நாடு தொழில்துறை கழகம் (Tidco) ஆனது இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்தச் செய்வதற்கான முகமையாக இருக்கும்.
- இதற்கான ஒரு செயல்முறையானது பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு அமையும்.
  - ஹெலி திஷா - ஹெலிகாப்டர் சார்ந்த நடவடிக்கைகளுக்கான ஒரு நிர்வாக வழி காட்டுதல் கையேடு,
  - ஹெலி சேவா - ஹெலிகாப்டர் சார்ந்த நடவடிக்கைகளுக்கான தரையிறங்கும் அனுமதி வழங்குவதற்கான ஒரு இணைய தளம் ஆகியவை குறித்து தயாரிக்கப்பட உள்ளது.

## மிக நீளமான உயர்த்தியமைக்கப்பட்ட வழித்தடம்

- நத்தம் வழியாக மதுரை மாநகரனைத் திருச்சியின் துவரங்குறிச்சியுடன் இணைக்கும் நான்கு வழிச்சாலையின் ஒரு பகுதியான மதுரை மாவட்டத்தின் முதலாவது உயர்த்தப் பட்ட வழித் தடத்தினைப் பிரதமர் மோடி திறந்து வைத்தார்.
- இது தேசிய நெடுஞ்சாலை-785 என்பதின் ஒரு பகுதியாக பாரத்மாலா பரியோஜனா என்ற திட்டத்தின் கீழ் கட்டமைக்கப்பட்டது.
- 7.3 கி.மீ. நீளமுள்ள இந்த உயரமான வழித்தடமானது தமிழ்நாட்டிலேயே மிக நீளமான வழித் தடமாகும்.




## தெருவோரக் குழந்தைகளுக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி

- 2023 ஆம் ஆண்டு தெருவோரக் குழந்தைகளுக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியானது சென்னையில் நடைபெறவுள்ளது.
- ஸ்ரீ தயா அறக்கட்டளையுடன் இணைந்து ஸ்ட்ரீட் சைல்ட் யுனைடெட் அமைப்பானது இதை ஏற்பாடு செய்ய உள்ளது.
- இது தெருவோரக் குழந்தைகளுக்கான இரண்டாவது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியாகும்.
- இது ஆற்காடு நவாப்பின் அலுவல் முறை இல்லமான சென்னை அமீர் மஹாலில் நடைபெற உள்ளது.

- இதன் முதல் போட்டியானது 2019 ஆம் ஆண்டில் இலண்டன் / கேம்பிரிட்ஜ் நகரில் நடைபெற்றது.




## இயங்கலை சூதாட்டம் மீதான தடை விதிப்பு மசோதா

- மார்ச் மாதத்தில் மாநில சட்டசபையில் இரண்டாவது முறையாக ஏற்றுக் கொள்ளப் பட்ட இயங்கலை சூதாட்ட விளையாட்டுகளைத் தடை செய்யும் ஒரு மசோதாவுக்குத் தமிழக ஆளுநர் தனது ஒப்புதலினை அளித்துள்ளார்.
- இந்த மசோதாவானது, இயங்கலை ரம்மி மற்றும் போக்கர் உள்ளிட்ட இயங்கலை சூதாட்ட விளையாட்டுகளைத் தடை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது புதிய ஆனால் மிக வேகமாக வளர்ந்து வரும் இந்தத் திறன் சார்ந்த விளையாட்டுத் துறைக்கு ஒரு பலத்த அடியாகும்.



- சமீபத்தில், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது ஏப்ரல் 06 ஆம் தேதியன்று, 2021 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தில் இயங்கலை விளையாட்டுத் தொடர்பான புதிய திருத்தங்களை அறிவித்தது.
- பணப் பரிமாற்றம் சம்பந்தப்பட்ட, பணத்தினைப் பணயம் வைக்கும் வகையிலான விளையாட்டுகள் இந்தியாவில் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளதா இல்லையா

என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பினைப் பல்வேறு சுயாதீன-ஒழுங்குமுறை அமைப்புகளிடம் (SROs) இது வழங்கியது.

- முன்னதாக, இந்த விளையாட்டுகளின் எதிர்மறையான விளைவுகள் குறித்து ஆய்வு செய்வதற்காகவும், "இயங்கலை சார்ந்த சூதாட்ட விளையாட்டுகளை" தடை செய்யும் புதிய சட்டத்திற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காகவும் ஓய்வு பெற்ற நீதிபதி K. சந்துரு அவர்களின் தலைமையில் ஐந்து பேர் கொண்ட குழு ஒன்றினைத் தமிழ்நாடு அரசு அமைத்தது.

## 2022 ஆம் ஆண்டு புலிகள் வளங்காப்பக மதிப்பீடு

- தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையமானது, 2022 ஆம் ஆண்டிற்கான ஐந்தாம் சுற்று மேலாண்மை செயல்திறன் மதிப்பீட்டினை மேற்கொண்டது.
- ஆனைமலை புலிகள் வளங்காப்பகம் (ATR) மற்றும் முதுமலை புலிகள் வளங்காப்பகம் (MTR) ஆகியவை நாட்டிலுள்ள 51 புலிகள் காப்பகங்களின் மத்தியில் ஐந்தாவது மற்றும் எட்டாவது இடங்களைப் பெற்றுள்ளன.
- அவை தங்களது தரவரிசையினை 'சிறந்தவை' என்ற ஒரு நிலையில் இருந்து 'மிகச் சிறந்தவை' என்ற நிலைக்கு மேம்படுத்தியுள்ளன.
- இவை இரண்டும் 'மிகச் சிறந்தவை' என்ற பிரிவில் உள்ள 12 புலிகள் காப்பகங்களுள் ஒன்றாக இடம் பெற்றுள்ளன.
- சத்தியமங்கலம் புலிகள் வளங்காப்பகம் மற்றும் களக்காடு & முண்டந்துறை புலிகள் வளங்காப்பகம் ஆகியவை தொடர்ந்து 'சிறந்தவை' என்ற பிரிவில் உள்ளன.
- புதிதாக அறிவிக்கப்பட்ட ஸ்ரீவில்லிபுத்தூர்-மேகமலை புலிகள் வளங்காப்பகம் ஆனது 'நன்று' என்ற பிரிவில் இடம் பெற்றுள்ளன.




## மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சையில் எந்திரப் பயன்பாடு


- சென்னையில் அமைந்துள்ள பிரசாந்த் மருத்துவமனை நிறுவனமானது, மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சையினை மேற்கொள்வதற்காக என்று மேம்படுத்தப் பட்ட நான்காம் தலைமுறை தொழில்நுட்பம் சார்ந்த எந்திரத்தினைப் பணியமர்த்தியுள்ளது.
- இந்தக் கருவியானது, சென்னையில் முதன்முறையாக பயன்படுத்தப் படுகிறது.

- இதுவரை நான்கு நாடுகளில் மட்டுமே இது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- இதனை அறிமுகப் படுத்திய நான்காவது நாடு இந்தியா ஆகும்.
- இந்த எந்திரங்கள் சிகிச்சையின் போதான வலி மற்றும் இரத்த இழப்பைக் குறைத்தது.
- இதன் விளைவாக நோயாளிகள் தங்கள் கால்களில் ஏற்பட்டுள்ள ஒரு குறைபாட்டில் இருந்து வேகமாக குணமடைய முடியும்.




## உள்ளூர் வாழ் புலிகளின் எண்ணிக்கையில் சரிவு

- தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையம் (NTCA) மற்றும் இந்திய வனவிலங்கு நிறுவனம் ஆகியவை இணைந்து புலிகள் கணக்கெடுப்பு தொகுப்பு அறிக்கையினைச் சமீபத்தில் தயாரித்துள்ளன.
- கன்னியாகுமரி மற்றும் ஸ்ரீவில்லிப்புத்தூரில் புலிகளே இல்லை என இந்த அறிக்கை கூறுகிறது.
- ஸ்ரீவில்லிப்புத்தூர் காப்பகம் என்பது, தமிழக மாநிலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட ஸ்ரீவில்லிப்புத்தூர்-மேகமலை புலிகள் வளங்காப்பகத்தின் (SMTR) ஒரு பகுதியாகும்.
- இங்கு 2020 ஆம் ஆண்டில், ஒளிப்படக் கருவியில் நான்கு புலிகள் பதிவு செய்யப்பட்டன.
- 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலும், இங்கு ராஜபாளையம் எல்லையில் புலிகள் இருந்ததற்கான நேரடி ஆதாரங்கள் கிடைத்தன.




## வன்னியகுல சத்திரிய பொது அறக்கட்டளை மற்றும் அறநிலைய வாரியம்

- ❖ தமிழ்நாடு அரசானது, தமிழ்நாடு வன்னியகுல சத்திரிய பொது அறக்கட்டளை மற்றும் அறநிலைய வாரியத்தினை மறுசீரமைத்துள்ளது.
- ❖ இதன் தலைவராக ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரி M.ஜெயராமன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ❖ இந்த வாரியத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலமானது, அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் வரை ஆகும்.

## மதுபானக் கடைகள் மூடல்

- ❖ தமிழ்நாடு அரசானது, இந்த ஆண்டில் தமிழ்நாடு மாநில அரசுச் சந்தைப்படுத்துதல் கழகம் (டாஸ்மாக்) நடத்தும் 500 சில்லறை விற்பனைக் கடைகளை மூட உத்தரவிட்டு உள்ளது.
- ❖ அடையாளம் காணப்பட்டு மூடப்பட உள்ள இந்த 500 கடைகள், டாஸ்மாக் நடத்தும் 5,329 சில்லறை விற்பனைக் கடைகளில் 10 சதவீதம் ஆகும்.
- ❖ இவ்வளவு அதிக எண்ணிக்கையில் டாஸ்மாக் கடைகள் மூடப்படுவது இது மூன்றாவது முறையாகும்.
- ❖ மறைந்த முதல்வர் ஜெயலலிதா அவர்கள், 2016 ஆம் ஆண்டில் மீண்டும் ஆட்சிக்கு வந்த போது 500 கடைகளை மூடுவதாக அறிவித்தார்.
- ❖ எடப்பாடி K.பழனிசாமி அவர்கள், 2017 ஆம் ஆண்டில் முதல்வராக பதவியேற்ற போது மேலும் 500 கடைகளை மூடுவதாக அறிவித்தார்.

## கம்பம் திராட்சைக்குப் புவிசார் குறியீடு



- கம்பம் திராட்சையானது (கம்பம் பன்னீர் திராட்சை) சமீபத்தில் புவிசார் குறியீடைப் பெற்றுள்ளது.
- தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள கம்பம் பள்ளத்தாக்கு 'தென்னிந்தியாவின் திராட்சை நகரம்' என்று அழைக்கப்படுகிறது.
- தமிழ்நாட்டில் முதன்முதலில் பன்னீர் திராட்சையானது 1832 ஆம் ஆண்டில் ஒரு பிரெஞ்சு பாதிரியாரால் அறிமுகம் செய்யப் பட்டது.
- இந்தத் திராட்சையில் வைட்டமின்கள், டார்டாரிக் அமிலம் மற்றும் எதிர் ஆக்ஸிஜனேற்றங்கள் நிறைந்துள்ளதோடு, சில நாள்பட்ட நோய்களின் அபாயத்தைக் குறைக்கும் திறனையும் இது உடையதாகும்.

## சைகை மொழியில் சட்டசபை நடவடிக்கைகள்

- இம்முயற்சி செவித்திறன் குறைபாடு உள்ளவர்களுக்குப் பயனளிக்கும்.
- வலையொளி (யூடியூப்) மூலம் சட்டசபை நிகழ்ச்சிகளை சைகை மொழியில் பதிவு செய்து ஒளிபரப்பு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இது 2016 ஆம் ஆண்டின் மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் சட்டத்திற்கு இணங்கச் செய்வதற்கான ஒரு முன்முயற்சியாகும்.




## நகரங்களுக்கான பசுமைக் குறியீட்டுத் தரவரிசை

- பசுமைக் குறியீடு மற்றும் பிற சுற்றுச்சூழல் அளவீடுகளின் அடிப்படையில் நகரங்களைத் தமிழக அரசு தரவரிசைப்படுத்த உள்ளது.
- இதன் முக்கிய நோக்கம் அதிகரித்து வரும் நகர்ப்புற மக்கள்தொகையால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் கையாள்வது ஆகும்.
- இது நகரங்களின் காலநிலை மாற்றத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு ஆதரவும், அதற்கு பயனுள்ளக் கொள்கைகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் பற்றிய நுண்ணறிவுகளையும் வழங்குகிறது.

- இந்தத் தரவரிசையானது சிறந்த அளவு மற்றும் தரமான குறிகாட்டிகளின் அடிப்படையில் இருக்கும்.
- இது ஒரு நகரத்தின் தற்போதையச் சுற்றுச்சூழல் செயல்திறனையும் எதிர்காலத்தில் அதனை மேம்படுத்துவதற்கான நோக்கங்களையும் குறிக்கிறது.
- இந்தத் தரவரிசையில் அதிக மதிப்பெண் பெறும் ஒரு நகரம், அந்த ஆண்டிற்கான கால நிலைத் தூதராக அங்கீகரிக்கப் படுகிறது.
- நகர்ப்புற மக்கள் தொகையானது 2001 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 30.6% அதிகரித்து உள்ளது.

## சமத்துவ நாள் அனுசரிப்பு


- டாக்டர் அம்பேத்கரின் பிறந்தநாள் (ஏப்ரல் 14) சமத்துவ நாளாகக் கொண்டாடப் படும் என்று தமிழக முதல்வர் அறிவித்தார்.
- சட்டசபையில் விதி 110 என்பதின் கீழ் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.
- அன்றைய தினம் மாநிலம் முழுவதும் சமத்துவ தின உறுதிமொழி எடுக்கப்படும்.
- சமூகச் சமத்துவத்தை நிலை நிறுத்துவதும், சாதியின் பெயரால் நடக்கும் சமூக ஒடுக்குமுறைக்கு எதிராகவும், ஒடுக்கப் பட்டவர்களின் உரிமைக்காகவும், சமத்துவத்திற்காகவும் வேண்டி அவர்களுடன் நின்று சமத்துவச் சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதும் இந்த உறுதிமொழியின் ஒரு முக்கிய அம்சமாகும்.

## கடைகள், நிறுவனங்களில் தண்ணீர், முதலுதவி வசதிகளை வழங்குவதற்கான மசோதா

- தமிழக மாநில அரசின் இந்தப் புதிய மசோதாவின் நோக்கமானது கடைகள் மற்றும் நிறுவனங்களில் குடிநீர், ஓய்வு அறை மற்றும் முதலுதவி வசதிகளை வழங்குவது என்பதாகும்.
- இந்த மசோதாவானது தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் 1947 என்ற சட்டத்தினைத் திருத்துகிறது.
- கடையில் அல்லது நிறுவனத்தில் உள்ள ஊழியர்களுக்குச் சுகாதாரமானக் குடிநீரை வழங்குவதற்கான ஒரு பயனுள்ள ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.
- கடைகள் வேலை நேரம் முழுவதிலும் பணியாளர்களுக்கு அணுகக் கூடிய வகையில் கழிவறை வசதிகளை வழங்க வேண்டும்.
- இதன்படி ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியான கழிப்பறைகளை அமைக்க வேண்டும்.
- இவை ஊழியர்களுக்குப் போதுமான மற்றும் பொருத்தமான ஓய்வு அறை மற்றும் குடிநீர் வசதியுடன் கூடிய மதிய உணவு உண்ணும் அறை ஆகியவற்றை வழங்க வேண்டும்.
- இதில் ஒவ்வொரு முதலாளியும் பரிந்துரைக்கப்படும் முதலுதவி வசதிகளை வழங்க வேண்டும்.

## TANGEDCO நிறுவனத்திற்கான உள்நாட்டு நிலக்கரி வரவு

- தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோகக் கழகம் லிமிடெட் (TANGEDCO) என்ற நிறுவனமானது, 2022-23 ஆம் ஆண்டில் 192.67 லட்சம் டன் என்ற அளவில் உள் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் நிலக்கரியைப் பெற்றுள்ளது.
- கடந்த 10 ஆண்டுகளில் பெற்ற நிலக்கரி வரவில் இதுவே அதிகபட்ச அளவாகும்.
- 2022-23 ஆம் ஆண்டில், மகாநதி கோல்ஃபீல்ட்ஸ் லிமிடெட் சுரங்கங்களில் இருந்து 178.64 லட்சம் டன் அளவிலான நிலக்கரி பெறப்பட்டது.
- சிங்கரேணி கோலீரீஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திடமிருந்துச் சுமார் 14.03 லட்சம் டன்கள் பெறப்பட்டன.




## நீதிபதி கே. சந்துரு குழு




- தமிழக அரசு ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கே.சந்துரு தலைமையில் ஒரு தனி நபர் குழுவை அமைத்துள்ளது.

- சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) 2015 என்றச் சட்டத்தின் கீழ் செயல்படும் இல்லங்களைத் திறம்பட நிர்வகிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை பரிந்துரை செய்வது இதற்கானப் பணியாகும்.
- இவர் உள்கட்டமைப்பு, சுகாதாரம், ஊட்டச்சத்து, பணியாளர்கள் தேவை, பராமரிப்புச் சிக்கல்கள் மற்றும் பங்குதாரர்களின் பங்கேற்பு போன்றவை குறித்து ஆய்வு செய்து அதற்கேற்ப பரிந்துரைகளை வழங்குவார்.

## தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் நீட்டிப்பு

- வன்னியர் சமூகத்தினருக்கான 10.5% இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பான ஒரு அறிக்கையைத் தாக்கல் செய்வதற்கு நீதியரசர் வி பாரதிதாசன் தலைமையிலான மாநிலப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் மேலும் ஆறு மாத கால அவகாசம் கோரி உள்ளது.
- தற்போது, அந்த ஆணையத்தின் ஒரு கோரிக்கையின் அடிப்படையில் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் நீட்டிக்கப் பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் இந்த 10.5% உள் இடஒதுக்கீடு 26 பிப்ரவரி 2021 அன்று அதிமுக அரசால் அறிமுகப் படுத்தப்பட்டது.
- பொதுக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 10.5% இந்த உள் ஒதுக்கீடு பொருந்தும்.
- சென்னை உயர்நீதிமன்றம் வன்னியர்களுக்கான ஒதுக்கீட்டை அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்று 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கூறிய பின்னர் அதையே உச்ச நீதிமன்றமும் உறுதி செய்தது.



## நீலகிரியில் பண்டையக் காலக் கற்பாறைத் தளம்

- சமீபத்தில் கோத்தகிரி வட்டாரத்தில் உள்ள ஜக்கனரை என்றக் கிராமத்திற்கு அருகில் பழமையான கற்பாறைத் தளம் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டது.
- இதில் தோராயமாக 40க்கும் மேற்பட்ட பாறை ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.
- இது சிவப்புக் காவி ஓவியங்கள், சுருக்க வடிவியல் படங்கள், பெரும்பாலும் கோடுகள், மானுட உருவங்கள் மற்றும் ஆயுதங்களின் சித்தரிப்புகளை உள்ளடக்கியதாகும்.
- இது இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 16வது தளமாகும்.
- இது உள்ளூரில் உள்ள குரும்பா பழங்குடியினருடன் ஒரு கலாச்சாரத் தொடர்பைக் கொண்டு இருக்கலாம்.



## கார்பன் நடுநிலை மையங்கள்

- தமிழக அரசானது ராஜபாளையம் மற்றும் ராமேஸ்வரத்தைக் கார்பன் நடுநிலை மையங்களாக மாற்றுவதற்காக தேர்வு செய்துள்ளது.
- இராஜபாளையம் என்பது மூலோபாய ரீதியாக மேற்குத் தொடர்ச்சி மலையின் அடி வாரத்திலும் பாதுகாக்கப்பட்ட காடுகளுடனும் அமைந்துள்ளது.
- இது மேல் வைப்பார் ஆற்றுப் படுகையின் முக்கியமான நீர்ப்பிடிப்புப் பகுதியாகும்.
- ஆன்மிகத் தலமான ராமேஸ்வரத்திற்கு தினமும் ஆயிரக்கணக்கானச் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.
- கார்பன்-நடுநிலையை அடைய, அரசாங்கம் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க திட்டமிட்டுள்ளது.
    - ஈரமான கழிவுகளைப் பதப்படுத்த உயிரி-சிஎன்ஜி ஆலைகளை நிறுவுதல்,
    - நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல் மூலம் குறைந்த உமிழ்வு வாழ்க்கை முறையை ஊக்குவித்தல்,
    - உயிரிச் சுரங்கம் மூலம் திரட்டப்பட்டக் கழிவுகளை அகற்றுதல், மற்றும்
    - குறைந்த உமிழ்வு கொண்டப் போக்குவரத்து அமைப்புகளை அதிகரித்தல்.
- காடு வளர்ப்பு மூலம் கார்பன் மடுவை அதிகரிக்க இது பணி புரிகிறது.
- இது கடலுக்குள் செல்லும் நெகிழிகளின் அளவைக் குறைக்கும் பல்வேறு வசதிகளை ஏற்படுத்தச் செய்கிறது.




## ஒரு பண்பாட்டின் பயணம்: சிந்து முதல் வைகை வரை

- ❖ “ஒரு பண்பாட்டின் பயணம் : சிந்து முதல் வைகை வரை” என்ற ஒரு புத்தகத்தினைச் சமீபத்தில் தமிழக முதல்வர் அவர்கள் வெளியிட்டார்.
- ❖ இப்புத்தகமானது, சிந்து சமவெளி நாகரிகத்திற்கும் திராவிட வரலாற்றிற்கும் இடையே உள்ள தொடர்புகளை எடுத்துரைக்கிறது.
- ❖ இப்புத்தகமானது, முன்னாள் இந்திய ஆட்சிப் பணி அதிகாரி R. பாலகிருஷ்ணன் எழுதிய 'Journey of a Civilisation: From Indus to Vaigai' என்ற புத்தகத்தின் தமிழாக்கம் ஆகும்.
- ❖ பாலகிருஷ்ணன் எழுதிய இந்தப் புத்தகம் சிந்து சமவெளி நாகரிகத்தின் வரலாற்றைக் கண்டறிய முயற்சிப்பதோடு, இந்த நாகரிகத்தில் வாழ்ந்த மனிதர்களை திராவிடர்கள் என்றும் கூறச் செய்கிறது.

## தனியார் நிறுவனங்களுக்கு எதிராக 50 பொதுத்துறை நிறுவனங்கள்

- ❖ தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 50 பொதுத்துறை நிறுவனங்களின் (PSUs) நிதி மற்றும் செயல்பாட்டுப் பகுப்பாய்விற்கான ஒரு ஆலோசனை வழங்கீட்டு நிறுவனமாக எர்ன்ஸ்ட் & யங்க் எனப்படும் பன்னாட்டு ஆலோசனை வழங்கீட்டு நிறுவனத்தினைத் தமிழ்நாடு அரசு தேர்வு செய்துள்ளது.
- ❖ இந்த ஆலோசனை வழங்கீட்டு நிறுவனமானது நிதித் துறையில் திட்ட மேலாண்மைப் பிரிவாகவும் செயல்படும்.
- ❖ நிதி (பொதுத் துறை நிறுவனங்கள் வாரியம்) துறையானது 1982 ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்டது.
- ❖ இது பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சட்டப்பூர்வ வாரியங்களின் நிர்வாகத்தில் கொள்கை சார்ந்த சீர்மை விளங்குவதனை உறுதி செய்வதை நோக்கமாக கொண்டது.

## முத்திரைத்தாள் வரி திருத்தம்

- ❖ 22 ஆண்டுகளுக்குப் பிறகு முத்திரைத்தாள் கட்டணத்தைத் தமிழக அரசு திருத்தி அமைத்துள்ளது.
- ❖ "இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டம், 2023 என பெயரிடப்பட்ட திருத்த மசோதா இதற்காக நிறைவேற்றப்பட்டது.

- 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள விகிதத்தின் படி ஆவணங்களுக்கான முத்திரைத்தாள் கட்டணம் வசூலிக்கப் படுகிறது.
- 2001 ஆம் ஆண்டிலிருந்து, நேரடியாக நீதித்துறை சாராத ரீதியில் முத்திரைத் தாள்களை அச்சிடுவதற்கான செலவு பல மடங்கு அதிகரித்துள்ளது.
- 100 ரூபாய்க்கு குறைவான முத்திரைத்தாள் கட்டணம் செலுத்துவதற்கான வசதியானது, தொடர்ந்து இணைய வழி முத்திரைத்தாள் வசதி மூலம் கிடைக்கப் பெறும்.

## TANGEDCO நிறுவனத்தின் அலகுகள் இணைப்பு

- 2023-24 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எரிசக்தித் துறைக் கொள்கை அறிக்கை ஆனது சமீபத்தில் மாநில சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோகக் கழகம் லிமிடெட் நிறுவனத்தின் (TANGEDCO) சுரங்கப் பிரிவினை அதன் நிலக்கரிப் பிரிவுடன் இணைப்பதற்கு முன் மொழியப் பட்டுள்ளது.
- இது செலவினங்களைக் குறைப்பதோடு, தற்போதுள்ள மற்றும் இனி நிறுவப்பட உள்ள அனல் மின் நிலையங்களுக்கான நிலக்கரி வழங்கீட்டினைச் சிறப்பான முறையில் கட்டுப்படுத்த உதவும்.
- TANGEDCO தற்போது 4,320 மெகாவாட் திறனுடைய அனல் மின் உற்பத்தி அலகுகளைக் கொண்டுள்ளது.
- அடுத்த இரண்டு ஆண்டுகளில் மேலும் 4,100 மெகாவாட் உற்பத்தித் திட்டங்கள் மாநிலத்தின் மின் தொகுப்பில் சேர்க்கப்படும்.

## இளையபெருமாள் நினைவு மண்டபம்

- தலித் இனத் தலைவரும் தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் முன்னாள் தலைவருமான L. இளைய பெருமாளின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அவரது சொந்த ஊரான சிதம்பரத்தில் தமிழக அரசு நினைவு மண்டபத்தினை அமைக்க உள்ளது.
- இவர் பட்டியலினச் சமூகத்தின் உரிமைகளுக்காகப் பாடுபட்டதோடு, தனது பள்ளிப் பருவத்தில் கூட 'இரண்டு பிரிவினருக்காக தனித்தனியாக தண்ணீர் பானை வைக்கும் ஒரு முறைக்கு' எதிராக கிளர்ந்தெழுந்து அதற்கு எதிராகப் போராடினார்.
- 1940 மற்றும் 1970 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், பழைய தென் ஆற்காடு மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் நிலவிய பல்வேறு சமூகப் பிரச்சனைகள் தொடர்பாக பல போராட்டங்களை இளைய பெருமாள் முன்னெடுத்து நடத்தினார்.

- காங்கிரஸில் சேர்ந்த இவர் தனது 27வது வயதில் கடலூர் நாடாளுமன்றத் தொகுதியில் இருந்து மக்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இவர் மூன்று முறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்ததோடு, எழும்பூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார்.
- 1965 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பட்டியல் சாதியினர் தொடர்பான தீண்டாமை ஒழிப்பு, பொருளாதாரம் மற்றும் கல்வி மேம்பாடு தொடர்பான குழுவின் தலைவராகவும் இவர் இருந்தார்.
- முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி அவர்கள், 1998 ஆம் ஆண்டில் இளையபெருமாளுக்கு முதலாவது ‘அண்ணல் அம்பேத்கர் விருதினை’ வழங்கினார்.




## தேவாரப் பாடல்கள் அடங்கிய செப்புத் தகடுகள்

- மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் உள்ள சட்டநாதர் கோயிலுக்கு அருகில், ‘தேவாரம்’ பாடலின் விளக்கங்களைக் கொண்ட நூற்றுக்கும் மேற்பட்ட அரிய செப்புத் தகடு வடிவிலான கையெழுத்துப் பிரதிகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.
- ‘தேவாரம்’ திருஞானசம்பந்தரால் எழுதப்பட்டது.
- 'தேவார' கையெழுத்துப் பிரதிகள் செப்புத் தகடு வடிவில் கண்டுபிடிக்கப் படுவது என்பது இதுவே முதல் முறையாகும்.
- மொத்தம் 413 தகடுகள் நல்ல நிலையில் உள்ள நிலையில் 80 முதல் 90 தகடுகள் உடைந்து கிடைத்துள்ளன.



## தலித் கிறிஸ்தவர்களுக்கான இட ஒதுக்கீடு

- பட்டியலிடப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டின் கீழ், தலித் கிறிஸ்தவர்களையும் கொண்டு வரக் கோரி தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டது.
- பௌத்தர்கள், சீக்கியர்கள் போன்று தலித் கிறிஸ்தவர்களும் இட ஒதுக்கீட்டில் பயன் பெற வேண்டும் என்று இந்தத் தீர்மானம் கோருகிறது.
- 1950 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்டச் சாதிகள்) ஆணையின்படி, இந்து, சீக்கியம் அல்லது பௌத்தம் தவிர வேறு எந்த மதத்தைச் சேர்ந்தவர்களும் பட்டியலிடப் பட்ட சாதியினராகக் கருதப்பட முடியாது என்பதால் அவர்கள் இட ஒதுக்கீட்டைப் பெற முடியாது.
- மு. கருணாநிதி அவர்கள் 1996, 2006, 2011 ஆகிய ஆண்டுகளில் இதே கோரிக்கையை முன் வைத்துள்ளார்.
- மத்திய அரசானது 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நீதிபதி K.G. பாலகிருஷ்ணன் தலைமையில் ஓர் ஆணையத்தினை அமைத்தது.
- இடஒதுக்கீட்டில் தலித் கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்களைச் சேர்க்க வேண்டும் என்று முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளை பரிசீலிப்பதே இதன் பணியாகும்.
- சச்சார் குழு (2005) தலித் கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க பரிந்துரை செய்தது.
- நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா ஆணையமானது (2007) 1950 ஆம் ஆண்டின் குடியரசுத் தலைவர் ஆணையின் 3வது பத்தியினை நீக்கவும் பரிந்துரைத்தது.
- அந்த ஆணையின் 3வது பத்தியானது இந்து அல்லாத எவரும் பட்டியல் சாதியினராக கருத முடியாது எனக் கூறுகிறது.
- இந்த ஆணையானது 1956 ஆம் ஆண்டில் சீக்கியர்களையும், 1990 ஆம் ஆண்டில் புத்த மதத்தினரையும் பட்டியல் சாதியில் சேர்த்திட வேண்டி திருத்தப் பட்டது.
- தற்போது இந்து, சீக்கியர் மற்றும் பௌத்தர் அல்லாத எவரும் பட்டியல் சாதியினராகக் கருத முடியாது.



## எண்ணிமப் பணப் பரிவர்த்தனையில் முன்னணி நகரங்கள் 2022

- 2022 ஆம் ஆண்டில் எண்ணிமப் பணப் பரிவர்த்தனையில் நாட்டிலேயே 5வது முன்னணி நகரமாக சென்னை மாறியுள்ளது.
- பண வழங்கீட்டுச் சேவை நிறுவனமான வேர்ல்ட் லைன் இந்தியா இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- சென்னையில், 35.5 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என்ற மொத்த மதிப்புடன் 14.3 மில்லியன் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 65 பில்லியன் டாலர் மதிப்புள்ள 29 மில்லியன் பரிவர்த்தனைகளுடன் இதில் பெங்களூரு முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து புது டெல்லி, மும்பை மற்றும் புனே ஆகிய நகரங்கள் இடம் பெற்று உள்ளன.
- 2022 ஆம் ஆண்டில், நாடு முழுவதும், அடிக்கடி வருகை தந்த நேரடி வணிகப் பிரிவுகளின் மொத்த அளவின் அடிப்படையில் 43 சதவீதத்திற்கு அதிகமாகவும், மொத்த மதிப்பின் அடிப்படையில் 40 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தன.
- இணைய வர்த்தகம், விளையாட்டு, பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் நிதிச் சேவைகள் 85 சதவீதத்திற்கும் மேலானப் பரிவர்த்தனைகளுடன், மொத்த மதிப்பின் அடிப்படையில் 25 சதவீதத்திற்கும் மேலாகப் பங்களித்தன.
- கல்வி, பயணம் மற்றும் விருந்தோம்பல் துறையானது மொத்த அளவில் 15 சதவீதமும் மற்றும் மதிப்பின் அடிப்படையில் 75 சதவீதமும் பங்களித்துள்ளன.

**Indian**
**cities in terms of highest digital transactions in the year 2022:**

| City: | No. of transactions: | Worth: |
|---|---|---|
| 1. Bengaluru | 29 Million transactions | ₹6500 crore |
| 2. Delhi | 19.6 million transactions | ₹5000 crore |
| 3. Mumbai | 18.7 million transactions | ₹4950 crore |
| 4. Pune | 15 million transactions | ₹3280 crore |
| 5. Chennai | 14.3 million transactions | ₹3,550 crore |

## ஆளுமையில் புத்தாக்கத்திற்கான மையம்

- சமீபத்தில் தமிழக நிதியமைச்சர் ஆளுமையில் புத்தாக்கத்திற்கான ஒரு மையத்தினை நிறுவ உள்ளதாக அறிவித்தார்.
- இது தமிழ்நாடு புத்தாக்க முன்னெடுப்புகளின் (TANII) கீழ் மாநில திட்டக் குழுவினால் உருவாக்கப் படும்.
- இது ஆளுமையில் புத்தாக்கத்திற்கான பல்வேறு மேம்பட்ட அரசு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும்.

- புத்தாக்கங்களைச் செயல்படுத்துவதற்காக நவீனத் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்துச் செயல்படுவதற்கு தமிழக மாநில அரசின் துறைகள் மற்றும் மாவட்ட நிர்வாகங்களுக்கு இது உதவுகிறது.
- இது எந்தத் தடையும் இல்லாமல் பொதுச் சேவைகளை வழங்குகிறது.
- பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறையானது, அதன் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக கூடுதல் தகவல் தொழில்நுட்ப வசதிகள் வழங்கப்பட்டு நவீன மயமாக்கப் படும்.
- அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் கணினிகள், அருகலை (வை-பை) மற்றும் இதர வசதிகளை வழங்குவதன் மூலம் இது மேலும் பலப்படுத்தப்படும்.




## சட்டசபை உறுப்பினர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம்

- முன்னாள் தமிழகச் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்றக் கீழவை (சட்டசபை) உறுப்பினர்களுக்கு மாதம் 25,000 ரூபாயாக வழங்கப்படும் ஓய்வூதியம் ஆனது ஜூன் மாதம் முதல் 30,000 ரூபாயாக உயர்த்தப்படும்.
- இந்த ஆண்டு ஜூன் மாதம் ஆனது, மறைந்த முதல்வர் மு. கருணாநிதி அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு தொடங்குவதைக் குறிக்கிறது.
- இந்த ஓய்வூதியதாரர்களுக்கு ஆண்டிற்கு 50,000 ரூபாயாக வழங்கப்படுகின்ற மருத்துவ உதவித் தொகையானது 75,000 ரூபாயாக உயர்த்தப்படும்.
- அவர்களுக்கு மாதத்திற்கு 12,500 ரூபாயாக வழங்கப்படுகின்ற குடும்ப ஓய்வூதியமானது 15,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

## V.P. சிங் உருவச்சிலை

- தமிழக அரசு முன்னாள் பிரதமர் V.P. சிங் அவர்களுக்குச் சென்னையில் சிலை நிறுவ உள்ளது.
- சமூக நீதி மற்றும் பிற விவகாரங்களில் முன்னாள் பிரதமர் ஆற்றியப் பங்களிப்புக்காக "தமிழ் சமுதாயத்தின் நன்றியை" வெளிப்படுத்தும் வகையில் இந்தச் சிலை நிறுவப்பட உள்ளது.

- சட்டசபையின் 110வது விதியின் கீழ் தமிழக முதல்வர் அவர்கள் இந்த அறிவிப்பினை வெளியிடார்.
- V.P.சிங் அவர்கள் B.P. மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகளின் படி மத்திய அரசுப் பணி வேலைகளில் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக (OBC) 27% இடஒதுக்கீட்டினை அமல்படுத்தினார்.
- 1989 ஆம் ஆண்டு டிசம்பர் 02 முதல் 1990 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் தேதி வரை வெறும் 11 மாதங்கள் மற்றும் 8 நாட்கள் மட்டுமே இவர் பிரதமராக இருந்தார்.

## தமிழ்நாடு நிதிசார் பொறுப்புகள் சட்ட மசோதா

- 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிசார் பொறுப்புகள் சட்டத்தினைத் திருத்துவதற்கான மசோதாவினை மாநில அரசு சட்டசபையில் தாக்கல் செய்துள்ளது.
- இது 2025-26 ஆம் ஆண்டிற்கு வருவாய்ப் பற்றாக்குறையை நீக்கச் செய்வதற்கான காலக் கெடுவை நீட்டிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மசோதாவானது, 2025 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதிக்குள் நிதிப் பற்றாக் குறை அளவினை மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 3% ஆகக் குறைக்கவும், நிதி வழங்கீட்டுப் பிரிவுகளை அதிகபட்ச அளவில் பயன்படுத்தச் செய்யவும் முயல்கிறது.
- 15வது நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழக மாநில அரசின் இந்த முடிவானது மேற்கொள்ளப்பட்டது.





## 5 சதவீதக் கல்வி வரி

- 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தில் திருத்தம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.
- இது மாநிலத்தில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சொத்துகளின் வருடாந்திர மதிப்பீட்டில் 5% கல்வி வரியினை விதித்து வசூலிப்பதற்கு வழி வகை செய்கிறது.
- இதன் மூலம், அதன் பகுதிக்குள் இருக்கும் அனைத்துக் கட்டிடங்களின் வருடாந்திர மதிப்பில் 5 சதவீதத்திற்கு மிகாமல் கல்வி வரியினை விதிக்க இயலும்.

- 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமானது 2000 ஆம் ஆண்டில் இடைநிறுத்தப்பட்டது.
- ஆனால் அது 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டமாக மறுசீரமைக்கப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் உருவாக்கப்பட்டு ஏப்ரல் 13 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தது.

## வேலை நேர விதிமுறைகள் தளர்வு மசோதா

- தமிழ்நாடு சட்டசபையானது, 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தில் ஒரு திருத்தத்தினை நிறைவேற்றியது.
- அந்தச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள அதிகபட்ச வேலை நேரம், விடுமுறை நாட்கள் மற்றும் கூடுதல் பணி நேரத்திற்கான ஊதியம் ஆகியவற்றுடன் தொடர்புடைய தற்போதைய விதிமுறைகளிலிருந்துத் தொழிற்சாலைகளுக்கு விலக்கு அளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தொழிலாளர்கள் தற்போது 12 மணி நேர தினசரி வேலை நேர மாற்றத்தில் வேலை செய்வதற்கான விருப்பத் தேர்வினை தேர்வு செய்யலாம் என்பதோடு, மேலும் அவர்களுக்கு வாரத்திற்கு மூன்று நாட்கள் விடுமுறையுடன் கூடிய நான்கு நாட்கள் அளவிலான வேலை நாட்களும் வழங்கப்படும்.
- இந்த மசோதாவானது, வேலை நேர வரம்புகள் தொடர்பான விதிகளை உள்ளடக்கிய 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் ஏதேனும் அல்லது அனைத்து விதிகளிலிருந்தும் எந்தவொருத் தொழிற்சாலை அல்லது குழு அல்லது தொழிற்சாலை குழுவிற்கு விலக்கு அளிப்பதற்கான அதிகாரத்தினை மாநில அரசுக்கு அளிக்கிறது.
- இதில் சில சட்டப் பிரிவுகள்: 51 (வாராந்திர வேலை நேரம்), 52 (வாராந்திர விடுமுறைகள்), 54 (தினசரி வேலை நேரம்), 55 (ஓய்வெடுப்பதற்கான இடைவெளிகள்), 56 (நேர ஏற்பமைவு) அல்லது 59 (ஒன்றுடன் ஒன்று இணையும் வகையிலான வேலை நேர பரிமாற்றத்திற்குத் தடை).



## எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட அரிய தங்கத் தகடு

- மதுரையில் திருவேடகத்தில் உள்ள அருள்மிகு ஏடகநாதேஸ்வரர் கோயிலில் திருஞான சம்பந்தரின் பாடல் பொரிக்கப்பட்ட பக்தி இலக்கியத்தின் தங்கத் தகடு கண்டெடுக்கப் பட்டுள்ளது.
- இந்தக் கோவிலானது, மதுரை மாவட்டத்தில் வைகை ஆற்றின் கரையில் அமைந்து உள்ளது.
- தங்கத் தகட்டில் பொறிக்கப்பட்ட பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள் கண்டெடுக்கப் படுவது இதுவே முதல்முறையாகும்.



## தரங்கம்பாடியில் அமைந்த டேனியர் காலக் கோட்டை

- தரங்கம்பாடியில் உள்ள டேனியர் (டென்மார்க் வணிகர்கள்) காலக் கோட்டையில் பல்வேறு உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக சுற்றுலாத் துறை 3 கோடி ரூபாயினை ஒதுக்கீடு செய்துள்ளது.
- டான்ஸ்போர்க் கோட்டை என்றும் குறிப்பிடப் படுகிற டேனியர் காலக் கோட்டையானது, 1620 ஆம் ஆண்டில் கிழக்குக் கடற்கரையில் அமைந்த தரங்கம்பாடி என்ற கிராமத்தில் கட்டமைக்கப் பட்டது.
- இந்தப் பகுதியில் இருந்த டேனியர்கள் குடியேற்றத்திற்கான ஒரு அடித்தளமாக இது செயல்பட்டதோடு, பின்பு இது ஆங்கிலேயர்களிடம் விற்கப்பட்டது.



## PMKVY திட்டத்தின் கீழான திறன் சார் மையம்

- பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY) திட்டத்தின் கீழான 'திறன் சார் மையங்களில்' ஒன்றாக திருச்சியில் உள்ள தேசியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

- திருச்சி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மற்றும் இடை நின்ற மாணவர்கள் உள்ளிட்ட இளைஞர்களுக்குத் திறன் சார் பயிற்சி அளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் பயிற்சித் திட்டமானது வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கும் பயனளிக்கும் வகையில் விரிவுபடுத்தப்படும் என்பதோடு, இதற்கான திறன்சார் பயிற்சி மையமும் விரைவில் தொடங்கப்படும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் இலக்காக நிர்ணயிக்கப்பட்ட பிரிவினருக்கு, மேம்பாட்டு மற்றும் தொழில்சார் பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதற்காக திருச்சியில் உள்ள தேசியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் முதன்மை திறன்சார் மையமாக விளங்கும்.




## மானாமதுரை மட்பாண்டங்களுக்குப் புவிசார் குறியீடு

- சமீபத்தில் மானாமதுரை மட்பாண்டங்களுக்குப் புவிசார் குறியீடு கிடைத்துள்ளது.
- மண்பாண்டத் தொழிலுக்கு சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மானாமதுரை நகரம் மிகப் பெயர் பெற்றது.
- மானாமதுரை மண்பாண்டங்களுக்குப் பயன்படுத்தப்படும் களிமண்ணானது வைகை ஆறு மூலம் வளப்படுத்தப் படுகிறது.
- இந்தப் பானையின் மூலப்பொருட்கள் மண், நீர், மணல், ஈயம், கிராஃபைட், கால்சியம் சுண்ணாம்பு, சாம்பல், சிவப்பு ஈயம், சோடியம் சிலிக்கேட், மாங்கனீசு, இரும்பு மற்றும் நெகிழியாக்கும் செயல்முறை ஆகியவை ஆகும்.
- இந்தப் பானைகள் மீது வெவ்வேறு நிறங்களில் வர்ணம் பூசப்படும்.



## செல்வமகள் சேமிப்புத் திட்ட தரவரிசை

- செல்வமகள் சேமிப்புத் திட்டத்தின் கீழ் அதிக சேமிப்புக் கணக்குகள் தொடங்கப்பட்ட மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.
- இந்தப் பட்டியலில் உத்தரப் பிரதேச மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- செல்வமகள் சேமிப்புத் திட்டம் என்பது 10 வயது வரையிலான பெண் குழந்தைகளுக்காக தொடங்கப் பட்ட சிறப்பு சேமிப்புத் திட்டமாகும்.
- தமிழகத்தில், இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 38.38 லட்சம் கணக்குகள் தொடங்கப் பட்டுள்ளன.

## தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் – 2023

- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான புதிய விதிகளைத் தமிழக அரசு வெளியிட்டு உள்ளது.
- தமிழ்நாட்டில் நகர அமைப்புகள் மாநகராட்சிக் கழகங்கள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் ஆகியவை 4 வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
    - 10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட மாநகராட்சிகள் சிறப்பு நிலை மாநகராட்சியாகவும்,
    - 5 முதல் 10 லட்சம் வரை மக்கள்தொகை கொண்ட மாநகராட்சிகள் தேர்வு நிலை மாநகராட்சியாகவும்,
    - 3 முதல் 5 லட்சம் வரை மக்கள்தொகை கொண்ட மாநகராட்சிகள் முதல் நிலை மாநகராட்சியாகவும்,
    - 3 லட்சம் வரை மக்கள் தொகை கொண்ட மாநகராட்சிகள் இரண்டாம் நிலை மாநகராட்சியாகவும் வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- வருமானத்தின் அடிப்படையிலான பிரிவுகள்:
    - 15 கோடிக்கு மேல் வருமானம் கொண்டவை சிறப்பு நிலை நகராட்சிகளாக வகைப் படுத்தப் பட்டுள்ளன.

- 9 கோடி முதல் 15 கோடி வரை வருமானம் கொண்டவை ஆய்வு (கண்காணிப்பு) நிலை நகராட்சிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- 9 கோடி முதல் 6 கோடி வரையிலான வருமானம் கொண்டவை முதலாம் நிலை நகராட்சிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- 6 கோடிக்கும் குறைவான வருமானம் கொண்டவை இரண்டாம் நிலை நகராட்சிகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.

❖ மேலும், மாநகராட்சிக் கழகங்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் மக்கள் தொகை அடிப்படையிலும் கவுன்சிலர்களின் (மன்ற உறுப்பினர்களின்) எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட உள்ளது.

❖ மக்கள்தொகை அடிப்படையில் கவுன்சிலர்களின் எண்ணிக்கை:

- 80 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட மாநகராட்சிகளில் 230 கவுன்சிலர்கள் இருக்கலாம்.
- 60 முதல் 80 லட்சம் மக்கள்தொகை கொண்ட மாநகராட்சிகளில் 200 கவுன்சிலர்கள் இருக்கலாம்.
- 2.25 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகராட்சிகளில் 52 கவுன்சிலர்கள் இருக்கலாம்.
- 30,000க்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட நகராட்சிகளில் 22 கவுன்சிலர்கள் இருக்கலாம்.
- 25,000க்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட பேரூராட்சிகளில் 21 கவுன்சிலர்கள் இருக்கலாம்.
- 10,000 முதல் 15,000 மக்கள்தொகை கொண்ட பேரூராட்சிகளில் 12 கவுன்சிலர்கள் வரை இருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.



# தேசியச் செய்திகள்

## இந்திய வருடாந்திர காசநோய் அறிக்கை 2023

- 2014 ஆம் ஆண்டில் 15.5 லட்சமாக இருந்த காசநோயாளிகள் பதிவானது, 2022 ஆம் ஆண்டில் 56 சதவீதம் உயர்ந்து 24.22 லட்சமாக உள்ளது.
- 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இன்று வரையில், இந்தியாவில் காசநோய் சிகிச்சை பெறும் 79 லட்சத்துக்கும் அதிகமான நபர்களுக்கு நேரடிப் பயன் பரிமாற்றம் மூலம் சுமார் 2,102 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் 2015 ஆம் ஆண்டில் 1.49 லட்சமாக இருந்த மருந்து எதிர்ப்புத் திறன் கொண்ட காசநோய் பாதிப்பின் எண்ணிக்கையானது 2021 ஆம் ஆண்டில் 1.19 லட்சம் என்ற அளவிற்குக் குறைந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டு உலக காசநோய் அறிக்கையின் படி, இந்தியாவில் 2015 ஆம் ஆண்டில் லட்சத்திற்கு 256 ஆக இருந்த காசநோய்ப் பாதிப்பு ஆனது 2021 ஆம் ஆண்டில் 18% குறைந்து லட்சத்திற்கு 210 பாதிப்புகளாகக் குறைந்துள்ளது.
- இது உலகளாவிய சராசரியான 11% குறைப்பை விட 7 சதவீதம் சிறப்பாகும்.




Figure 5.4: Age-sex distribution in TB case notifications (2022)

## வருடாந்திர தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு 2021-2022

- இது தொழிலாளர் பங்கேற்பு விகிதம் (LFPR), தொழிலாளர் மற்றும் மக்கள் தொகை இடையிலான விகிதம் (WPR), வேலையின்மை விகிதம் (UR) போன்ற வேலை வாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை குறித்த முக்கிய சில குறிகாட்டிகளின் மதிப்பீடுகளை வழங்கச் செய்கிறது.
- வேளாண் துறையானது பெண் தொழிலாளர்களின் அதிகளவு ஈடுபாட்டுச் சதவீதத்தினைக் கொண்டுள்ள நிலையில் அதனைத் தொடர்ந்து உற்பத்தித் துறை உள்ளது.
- இந்திய அளவில் வேளாண் துறையில் உள்ள சுமார் 63% தொழிலாளர்கள் பெண்கள் ஆவர்.
- உற்பத்தித் துறையில் பெண் தொழிலாளர்களின் ஈடுபாட்டு விகிதம் 11.2% என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

❖ ஹரியானா மாநிலத்தில், 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினைச் சேர்ந்த பெண் தொழிலாளர்களின் பங்கேற்பு விகிதம் (LFPR) 19.1% ஆகும்.

| Broad industry division | Male (%) | Female (%) | Person (%) |
|---|---|---|---|
| Agriculture | 38.1 | 62.9 | 45.5 |
| Mining & Quarrying | 0.4 | 0.1 | 0.3 |
| Manufacturing | 11.8 | 11.2 | 11.6 |
| Electricity, water, etc | 0.7 | 0.2 | 0.6 |
| Construction | 15.6 | 5 | 12.4 |
| Trade, hotel & restaurant | 14.7 | 5.9 | 12.1 |
| Transport, storage & communications | 7.5 | 1.2 | 5.6 |
| Other services | 11.2 | 13.6 | 11.9 |
| **All** | **100** | **100** | **100** |

## ஸ்மார்ட் - பொது விநியோகம்

❖ உணவு மற்றும் பொது விநியோகத் துறையானது, பொது விநியோக அமைப்பில் தொழில் நுட்பத்தின் மூலம் நவீனமயமாக்கல் மற்றும் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கான திட்டத்தினை (SMART-PDS) முன்மொழிந்துள்ளது.

❖ பொது விநியோகத் திட்டத்தின் சீரான செயல்பாட்டை உறுதி செய்யும் வகையில், அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேச அரசுகளை SMART-PDS திட்டத்தினைச் செயல்படுத்துமாறு மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

❖ செயல்பாடு மற்றும் அமலாக்கம் ஆகியவற்றினைத் தரநிலையாக்குவதற்காக பொது விநியோகத் திட்டத்தின் தகவல் தொழில்நுட்பத்தினை மாற்றியமைப்பதனை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ SMART-PDS திட்டம் என்பது மத்திய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு நடவடிக்கை ஆகும்.

❖ இருப்பினும், மின்னணு அட்டைகளை வழங்குவது மாநில அரசுகளின் பொறுப்பாகும்.



## மருத்துவம் மற்றும் ஆரோக்கியம் சார்ந்த சுற்றுலா மேம்பாட்டிற்கான தேசிய உத்தி மற்றும் செயல்திட்டம்

- சுற்றுலாத் துறை அமைச்சகம் இந்தியாவில் மருத்துவச் சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் இந்த ஆவணத்தை உருவாக்கியுள்ளது.
- இந்தக் கொள்கையானது இந்தியாவில் மருத்துவ மதிப்பு சார்ந்தச் சுற்றுலா உருவாக்கத்திற்கான முக்கியத் தூண்களாகப் பின்வரும் சில பிரிவுகளை அடையாளம் கண்டுள்ளது.
  - இந்தியாவினை ஆரோக்கியம் சார்ந்த சேவைகளுக்கான ஒரு தளமாக உருவாக்கச் செய்தல்.
  - மருத்துவம் மற்றும் ஆரோக்கியம் சார்ந்த சுற்றுலாவிற்கான சூழல் அமைப்பினை வலுப்படுத்துதல்.
  - இயங்கலை மருத்துவ மதிப்பு சார் சுற்றுலா (MVT) இணைய தளத்தினை அமைப்பதன் மூலம் எண்மமயமாக்கலைச் செயல்படுத்துதல்.
  - மருத்துவ மதிப்பு சார் சுற்றுலாவிற்கான அணுகலை மேம்படுத்துதல்.
  - ஆரோக்கியம் சார்ந்த சேவைகளுக்கான சுற்றுலாவினை ஊக்குவித்தல்.
  - நிர்வாகம் மற்றும் நிறுவனம் சார்ந்த கட்டமைப்பு.
- 156 நாடுகளுக்காக 'மின்னணு-மருத்துவ நுழைவு இசைவுச் சீட்டு' மற்றும் 'மின்னணு-நோயாளியின் துணையாளர் நுழைவு இசைவுச் சீட்டு' ஆகியவையும் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளன.
- 2020 ஆம் ஆண்டில் 1.83 லட்சமாக இருந்த மருத்துவ நோக்கத்திற்காக இந்தியா வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையானது 2021 ஆம் ஆண்டில் 3.04 லட்சமாக அதிகரித்துள்ளது.




## ஓர் உலக காசநோய் உச்சி மாநாடு

- 2023 ஆம் ஆண்டிற்கான ஓர் உலக காசநோய் உச்சி மாநாடானது, உத்தரப் பிரதேச மாநிலத்தின் வாரணாசியில் உள்ள ருத்ராக்சா மாநாட்டு மையத்தில் தொடங்கப் பட்டது.
- இந்த நிகழ்வில் 'வருடாந்திர இந்திய காசநோய் அறிக்கை 2023' வெளியிடப்பட்டது.
- இது 2025 ஆம் ஆண்டிற்குள் இந்திய நாட்டினைக் காசநோய் இல்லாத ஒரு நாடாக மாற்றச் செய்வதற்காக அரசு மேற்கொள்ளும் முயற்சிகளின் ஒரு தொகுப்பாகும்.




## தேசிய வெறிநாய்க்கடி நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்

- மத்திய அரசானது, வெறிநாய்க்கடி நோயினைத் தடுப்பதற்காகவும் கட்டுப்படுத்தச் செய்வதற்காகவும் தேசிய வெறிநாய்க்கடி நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- தேசிய வெறிநாய்க்கடி நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் உத்திகள் பின்வருமாறு:
  - தேசிய இலவச மருந்து வழங்கீட்டு முன்னெடுப்புகள் மூலமாக வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பு மருந்து மற்றும் வெறிநாய்க் கடி நோய் எதிர்ப்புப் புரதம் (இம்யூனோகுளோபுலின்) ஆகியவற்றினை வழங்குதல்
  - பொருத்தமான விலங்கு கடி பாதிப்புகளின் மேலாண்மை, வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு, கண்காணிப்பு மற்றும் துறைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு பற்றிய பயிற்சி வழங்குதல்
  - விலங்கு கடி பாதிப்புகள் மற்றும் வெறிநாய்க்கடி நோய்களால் ஏற்படும் இறப்புப் பதிவுகளின் கண்காணிப்பினை வலுப்படுத்துதல்
  - வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- 2030 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவில் இருந்து 'நாய்கள் மூலம் பரவும் வெறிநாய்க்கடி நோயின் ஒழிப்பதற்கான தேசிய செயல் திட்டம் (NAPRE)' ஆனது சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- தெருநாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதும் தெரு நாய்கள் தொடர்பான விவகாரங்களை நிர்வகிப்பதும் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பாகும்.




## ஹிம்சக்தி திட்டம்

- பாதுகாப்புத் துறை அமைச்சகம், ஹிம்சக்தி திட்டத்தின் கீழ் பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) என்ற நிறுவனத்திடமிருந்து இரண்டு ஒருங்கிணைந்த மின்னணு போர் ஆயுதங்களை வாங்குவதற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உள்ளது.
- இந்தத் திட்டமானது, சமகால மற்றும் முக்கியத் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய, இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்ட, உருவாக்கப்பட்ட மற்றும் தயாரிக்கப்பட்ட பிரிவின் கீழ் இடம் பெற்றுள்ளது.
- ஹிம்சக்தி திட்டமானது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்கள் உட்பட, இந்திய மின்னணுவியல் மற்றும் அது தொடர்புடைய தொழில்துறைகளின் பங்கேற்பினை ஊக்குவிக்கும்.



## கஜ உத்சவம் 2023


- அசாமில் உள்ள காசிரங்கா தேசியப் பூங்காவில் 2023 ஆம் ஆண்டு கஜ உத்சவ் என்ற நிகழ்வினைக் கொண்டாடச் செய்வதற்கு மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

- யானைகள் வளங்காப்புத் திட்டப்பணியின் 30 ஆண்டுகால வெற்றிகரமான நிறைவினை நினைவு கூருவதனையும், அவற்றின் வளங்காப்பு முயற்சிகளுக்கு மேலும் உத்வேகம் அளிப்பதனையும் இது நோக்கமாக உள்ளது.
- யானைகள் வளங்காப்புத் திட்டம் என்பது மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டம் ஆகும்.
- இந்தத் திட்டமானது யானைகள், அவற்றின் வாழ்விடங்கள் மற்றும் வழித்தடங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக 1992 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தொடங்கப் பட்டது.




## புலிகள் வளங்காப்புத் திட்டத்தின் 50வது ஆண்டு நிறைவு

- புலிகள் வளங்காப்புத் திட்டத்தின் 50வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் வகையில் கர்நாடக மாநிலத்தின் மைசூரு நகரில் 3 நாட்கள் அளவிலான மாபெரும் நிகழ்ச்சி நிகழ்த்தப்படவுள்ளது.
- இந்திய அரசானது, 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று கார்பெட் தேசியப் பூங்காவில் புலிகளின் வளங்காப்பினை ஊக்குவிக்கும் வகையில் புலிகள் வளங் காப்புத் திட்டத்தினைத் தொடங்கியது.
- இது அப்போதையப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் ஆட்சிக் காலத்தில் தொடங்கப் பட்டது.
- 1973 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடங்கப்பட்ட நேரத்தில், 18,278 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட ஒன்பது புலிகள் காப்பகங்களை இத்திட்டம் உள்ளடக்கியிருந்தது.
- இன்று, சுமார் 3000 புலிகளுடன் 75,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட 53 புலிகள் காப்பகங்கள் இத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன.
- உலக வனப் புலிகளின் எண்ணிக்கையில் 70%க்கும் அதிகமானவை இந்தியாவில் உள்ள நிலையில், இது ஆண்டிற்கு 6% என்ற வீதத்தில் அதிகரித்து வருகிறது.




## இந்தியாவில் eVTOL வாடகை விமானச் சேவை

- இந்திய நாடானது, 2025 ஆம் ஆண்டிற்குள் eVTOL (மின்சாரத்தில் இயங்கக் கூடிய செங்குத்துக் கோணங்களில் மேலெழும்பும் மற்றும் தரையிறங்கும் வகையிலான) வாடகை விமானப் போக்குவரத்துத் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டு உள்ளது.
- சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம், பிரான்சு, ஜெர்மனி, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் 2025 ஆம் ஆண்டிற்குள் இந்த வாடகை விமானச் சேவைகளை அறிமுகப் படுத்தும் திட்டத்தை ஏற்கனவே அறிவித்துள்ளன.
- அமெரிக்க விண்வெளி நிறுவனம் ஜான்ட் ஏர் மொபிலிட்டி தனது வாடகை விமானத் தொகுப்பு அலகினை இந்தியாவில் நிறுவ முடிவு செய்துள்ளது.




## சாகர் பரிக்ரமா திட்டத்தின் நான்காம் கட்டம்

- சாகர் பரிக்ரமா திட்டத்தின் நான்காவது கட்டம் ஆனது, கர்நாடகா மாநிலத்தின் உத்தர கன்னடா, உடுப்பி மற்றும் தட்சிண கன்னடா ஆகிய மூன்று கடலோர மாவட்டங்களை உள்ளடக்கி உள்ளது.
- சாகர் பரிக்ரமா என்பது மீனவர்கள், மீன் வளர்ப்பு நிறுவனங்கள் மற்றும் இதர பிறப் பங்குதாரர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் அனைத்துக் கடலோர மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் கடல் சார் பயணத்தை ஏற்பாடு செய்வதற்கான ஒரு முன்னெடுப்பாகும்.
- பல்வேறு மீன்பிடி சார் திட்டங்களைச் செயல்படுத்தச் செய்வதன் மூலம் அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்து அவர்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதல் கட்டமானது 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 3 இடங்களை உள்ளடக்கிய இந்தப் பயணமானது குஜராத்தின் மாண்ட்வியிலிருந்து ஒகா-துவாரகா வரை மேற் கொள்ளப்பட்டு போர்பந்தரில் நிறைவடைந்தது.
- ஏழு இடங்களை உள்ளடக்கிய இரண்டாம் கட்டமானது 2022 ஆம் ஆண்டு மாதத்தில் செப்டம்பர் நடைபெற்றது.
- குஜராத் மற்றும் மகாராஷ்டிராவின் கடலோர மாவட்டங்களை உள்ளடக்கிய மூன்றாவது கட்டமானது 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடைபெற்றது.



## ஒய்வூதியச் சீர்திருத்தங்களுக்கான குழு

- இந்திய அரசு ஊழியர்களுக்கான ஒய்வூதிய முறையை மேம்படுத்துவது குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக ஒரு குழுவினை அமைக்க உள்ளதாக மத்திய அரசு அறிவித்து உள்ளது.
- இந்த குழுவானது, நிதி ரீதியாக குறைவான செயல்திறன் கொண்ட பழைய ஓய்வூதிய முறைக்கும் சீர்திருத்தம் சார்ந்த புதிய தேசிய ஓய்வூதிய முறைக்கும் இடையில் ஒரு நடுநிலையைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குறைந்தபட்சம் ஐந்து எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களானது பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்தத் தொடங்கியதனையடுத்து இந்த ஒரு நடவடிக்கையானது எடுக்கப் பட்டுள்ளது.
- இந்தக் குழுவிற்கு நிதித்துறை செயலாளர் T .V. சோமநாதன் தலைமை தாங்க உள்ளார்.




## புதிய இந்தியா கல்வியறிவுத் திட்டம்




- 2022-23 ஆம் நிதியாண்டு முதல் 2026-27 ஆம் நிதியாண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு “புதிய இந்தியா கல்வியறிவுத் திட்டத்தினை” (NILP) இந்திய அரசாங்கம் தொடங்கியுள்ளது.

- இது ஒரு மத்திய அரசின் நிதியுதவி பெறும் ஒரு திட்டமாகும்.
- இந்தத் திட்டம் ஆனது 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய 5.00 கோடி கல்வி அறிவு இல்லாதவர்களை இத்திட்டத்தினுள் கொண்டு வருவதை இலக்காகக் கொண்டு உள்ளது.
- இத்திட்டமானது ஐந்து கூறுகளைக் கொண்டுள்ளது:
    - அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணியல் அறிவு,
    - முக்கிய வாழ்வியல் திறன்கள்,
    - தொழில் திறன் மேம்பாடு,
    - அடிப்படைக் கல்வி மற்றும்
    - தொடர் கல்வி.
- இந்தத் திட்டமானது தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டதோடு மட்டும் அல்லாமல் இது முக்கியமாக ஆன்லைன் முறையில் செயல்படுத்தப் படுகிறது.
- கற்பித்தல் சார்ந்த கற்றல் குறிப்பேடுகள் மற்றும் வளங்கள் ஆகியவை NCERT அமைப்பின் DIKSHA இணைய தளத்தில் கிடைக்கப் பெற்றுள்ளதோடு இவற்றினைக் கைபேசிச் செயலிகள் மூலமும் அணுகலாம்.

## அரிகொம்பன் நடவடிக்கை

- கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் உள்ள மலைப்பகுதிகளில் அரிக்கொம்பன் என்ற ஒரு காட்டு யானை அட்டகாசம் செய்து வருகிறது.
- கடந்த சில ஆண்டுகளாக அரிக்கொம்பன் யானையானது 10 பேரை மிதித்துக் கொன்றதுடன் 60 வீடுகளையும் கடைகளையும் அழித்துள்ளது.
- இந்தக் காட்டு யானையைப் பிடிப்பதற்காக வேண்டி அம்மாநில வனத்துறையினர் 'அரிக்கொம்பன் நடவடிக்கை' என்ற ஒரு நடவடிக்கையைத் தொடங்கியுள்ளனர்.



## 3 நட்சத்திரத் தரம் பெற்ற குப்பைகள் இல்லாத நகரங்கள்

- 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள், இந்தியாவின் 1000 நகரங்கள் 3 நட்சத்திரத் தரம் பெற்ற குப்பைகள் இல்லாத நகரங்களாக மாற வேண்டும் என்ற ஒரு இலக்கினை நிர்ணயித்துள்ளன.

- குப்பைகள் இல்லாத நகரங்கள் (GFC) நட்சத்திர மதிப்பீட்டு நெறிமுறையானது 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தொடங்கப் பட்டது.
- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடையே போட்டி மனப்பான்மையை ஊக்குவிக்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அதிகபட்சத் தர மதிப்பீடு என்பது 7-நட்சத்திரத் தரம் பெற்ற குப்பைகள் இல்லாத ஒரு நகரம் என்ற நிலையில் இந்தூர் நகரம் இந்தத் தரத்தைப் பெற்றுள்ளது.
- இந்தியாவில் 2014 ஆம் ஆண்டில் 17% ஆக இருந்த கழிவு மறுசுழற்சி அளவானது இன்று நான்கு மடங்கு அதிகரித்து 75% ஆக அதிகரித்துள்ளது.

## குடிமை-20 இந்தியா 2023 தொடக்க மாநாடு

- குடிமை-20 இந்தியா 2023 என்பதன் தொடக்க மாநாட்டின் முதலாவது முழு அளவிலான கூட்டமானது, மகாராஷ்டிராவின் நாக்பூர் நகரில் நடைபெற்றது.
- இந்த நிகழ்விற்கான கருத்துரு, "சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாடு இரண்டையும் சம நிலையில் பேணுதல்" என்பதாகும்.
- இந்த அமர்வுக்கு முன்னாள் தலைமை தகவல் ஆணையர் சத்யானந்த மிஸ்ரா தலைமை தாங்கினார்.




## விண்வெளி அமைப்பு வடிவமைப்பு ஆய்வகம்

- அகமதாபாத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்திய தேசிய விண்வெளி மேம்பாட்டு மற்றும் அங்கீகார மையத்தின் (IN-S PACe) விண்வெளி அமைப்புகள் வடிவமைப்பு என்ற ஒரு ஆய்வகமானது சமீபத்தில் திறக்கப்பட்டது.
- விண்வெளித் தொழில்துறைச் சார்ந்தப் புத்தொழில் நிறுவனங்கள் தங்களது புதுமை மிக்கக் கருத்தாக்கங்களை விரைவாக செயல்படுத்தக்கூடிய செயல் மாதிரிகளாக மாற்றச் செய்வதற்கும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கான பெரும் செலவினங்களைக் குறைப்பதற்கும் இது உதவும்.
- இது செயல்விளக்கம், மாதிரி வடிவமைப்பு, காட்சிப்படுத்துதல், விண் பொருள் மற்றும் விண்கலம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான உயர்நிலைப் பகுப்பாய்வு மற்றும் ஒரு செயல் விளக்க மென்பொருளைக் கொண்டுள்ளது.

## தொழிலாளர் வளம்-20 ஈடுபாட்டுக் குழுவின் தொடக்கக் கூட்டம்

- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைப் பதவியின் ஒரு பகுதியாக இரண்டு நாட்கள் அளவிலான தொழிலாளர் வளம்-20 ஈடுபாட்டுக் குழுவின் ஒரு தொடக்கக் கூட்டமானது, பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் நகரில் நடைபெற்றது.
- இரண்டு நாட்கள் அளவிலான இந்தக் கூட்டத்தின் இறுதி முடிவாக, இரண்டுக் கூட்டு அறிக்கைகளை அது ஏற்றுக் கொண்டது.
- முதலாவது அறிக்கையானது, சமூகப் பாதுகாப்பை உலகமயமாக்குவதற்கான முதல் படியாக G20 அமைப்பின் நாடுகளிடையேச் சமூகப் பாதுகாப்பினைக் கையாளுதல் பற்றி காணப்படும் சந்தேகங்களைத் தீர்ப்பதற்கான அழைப்பினை விடுக்கிறது.
- இரண்டாவது அறிக்கையானது, உலகத் தொழிலாளர் வளத்தில் நிலவும் பாலின இடைவெளியை நிவர்த்திச் செய்வதனை வலியுறுத்துகிறது.

## மத்தியப் புலனாய்வுத் துறையின் வைர விழா கொண்டாட்டம்

- மத்தியப் புலனாய்வுத் துறையானது, ஏப்ரல் 01 ஆம் தேதியன்று தனது 60வது ஆண்டு விழாவினைக் கொண்டாடுகிறது.
- மத்தியப் புலனாய்வுத் துறையின் வைர விழாக் கொண்டாட்ட ஆண்டினை நினைவு கூரும் வகையில், அஞ்சல் தலை மற்றும் நினைவு நாணயம் ஆகியவை வெளியிடப் பட்டது.
- மத்தியப் புலனாய்வுத் துறையானது, 1963 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று மத்திய உள்துறை அமைச்சகத்தின் தீர்மானத்தின் மூலம் நிறுவப்பட்டது.
- மத்தியப் புலனாய்வுத் துறையானது ஒரு சட்டப்பூர்வ அமைப்பு அல்ல.
- 1946 ஆம் ஆண்டு டெல்லி சிறப்புக் காவல் நிறுவனச் சட்டத்திலிருந்து அது விசாரணை அதிகாரத்தைப் பெறுகிறது.
- மத்தியப் புலனாய்வுத் துறையினை அமைப்பது குறித்து ஊழல் தடுப்பு தொடர்பாக அமைக்கப் பட்ட சந்தானம் குழு (1962-1964) பரிந்துரைத்து செய்து இருந்தது.




## புதிய வந்தே பாரத் விரைவு இரயில்

- இந்திய இரயில்வே நிர்வாகத்தின் 11வது வந்தே பாரத் விரைவு இரயிலானது சமீபத்தில் தொடங்கப் பட்டது.
- இது போபாலில் உள்ள இராணி கமலாவதி நிலையம் முதல் தேசிய தலைநகரில் உள்ள ஹஸ்ரத் நிஜாமுதீன் நிலையம் வரை இயக்கப்படும்.
- இதுவே மத்தியப் பிரதேச மாநிலத்தின் முதல் வந்தே பாரத் விரைவு இரயிலாகும்.

- இது புது டெல்லி-வாரணாசி வந்தே பாரத் விரைவு இரயிலினை அடுத்து, இரண்டாவது அதிவேக வந்தே பாரத் விரைவு இரயிலாகத் திகழ்கிறது.



## இஸ்ரோ YUVIKA 2023

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது, குழந்தைகளுக்கான ஒரு கல்வி முன்னெடுப்பினை வடிவமைத்துள்ளது.
- YUVIKA என்பது ''யுவ விக்யானி கார்யக்ரம்'' என்பதனைக் குறிக்கிறது.
- இது "இளம் அறிவியலாளர் திட்டம்" என்றும் அழைக்கப்படுகிறது.
- இது குறிப்பாக, விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் புதுபுதுக் கண்டு பிடிப்புகளில் ஆர்வமுள்ளப் பள்ளிப்பருவ வயது குழந்தைகளுக்காக வடிவமைக்கப் பட்டுள்ளது.




## இந்திய நீதி அறிக்கை

- இந்திய நீதி அறிக்கையானது (IJR) 2019 ஆம் ஆண்டில் டாடா அறக்கட்டளை என்ற நிறுவனத்தினால் வெளியிடத் தொடங்கப்பட்டது.
- இவ்வகையில் இது மூன்றாவது அறிக்கையாகும்.
- இந்த அறிக்கையானது நீதி வழங்கீட்டின் முக்கிய 4 தூண்களாக விளங்கும் காவல் துறை, நீதித்துறை, சிறைச்சாலைகள் மற்றும் சட்ட உதவி ஆகியவற்றின் ஒட்டு மொத்த தரவுகளின் அடிப்படையில் தயாரிக்கப் பட்டுள்ளது.

- 2022 ஆம் ஆண்டு இந்திய நீதி அறிக்கையில் (IJR), ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட 18 பெரிய மற்றும் நடுத்தர மாநிலங்களில் கர்நாடகா மாநிலம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- இதில் தமிழகம் 2வது இடத்திலும், தெலுங்கானா 3வது இடத்திலும் உள்ளன.
- குஜராத் மாநிலம் நான்காவது இடத்திலும், ஆந்திரா 5வது இடத்திலும் உள்ளன
- உத்தரப் பிரதேசம் மாநிலம் ஆனது இப்பிரிவில் கடைசி இடமான 18வது இடத்தில் உள்ளது.
- இதில் தலா ஒரு கோடிக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட ஏழு சிறிய மாநிலங்களின் பட்டியலில் சிக்கிம் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து அருணாச்சலப் பிரதேசம், திரிபுரா ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- கோவா மாநிலம் ஆனது இப்பிரிவின் கடைசி இடமான ஏழாவது இடத்தில் உள்ளது.
- இதில் தமிழக மாநிலத்தின் சிறைத்துறை முதலிடம் பெற்றுள்ளது.
- அதைத் தொடர்ந்து கர்நாடகா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் இதில் இடம் பெற்றுள்ளன.
- இதில் உத்தரகாண்ட் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் கடைசி இடத்தில் உள்ளன.

**Overall Ranking**
Performance across police, prisons, judiciary and legal aid

| RANK | STATE | SCORE (OUT OF 10) |
|---|---|---|
| 1 | Karnataka | 6.38 |
| 2 | Tamil Nadu | 6.11 |
| 3 | Telangana | 6.11 |
| 4 | Gujarat | 5.60 |
| 5 | Andhra Pradesh | 5.41 |
| 6 | Kerala | 5.36 |
| 7 | Jharkhand | 5.29 |
| 8 | Madhya Pradesh | 5.25 |
| 9 | Chhattisgarh | 5.20 |
| 10 | Odisha | 5.16 |
| 11 | Maharashtra | 5.16 |
| 12 | Punjab | 5.10 |
| 13 | Haryana | 4.79 |
| 14 | Uttarakhand | 4.46 |
| 15 | Rajasthan | 4.36 |
| 16 | Bihar | 4.32 |
| 17 | West Bengal | 3.93 |
| 18 | Uttar Pradesh | 3.78 |

**Judiciary Ranking**
Measures performance on capacity metrics in judiciary

| RANK | STATE | SCORE (OUT OF 10) |
|---|---|---|
| 1 | Tamil Nadu | 6.96 |
| 2 | Karnataka | 6.79 |
| 3 | Punjab | 6.55 |
| 4 | Kerala | 6.38 |
| 5 | Telangana | 6.34 |
| 6 | Chhattisgarh | 6.16 |
| 7 | Jharkhand | 6.14 |
| 8 | Uttarakhand | 5.83 |
| 9 | Gujarat | 5.54 |
| 10 | Madhya Pradesh | 5.40 |
| 11 | Andhra Pradesh | 5.21 |
| 12 | Maharashtra | 5.14 |
| 13 | Odisha | 5.06 |
| 14 | Haryana | 4.72 |
| 15 | Uttar Pradesh | 4.05 |
| 16 | Bihar | 4.03 |
| 17 | Rajasthan | 4.01 |
| 18 | West Bengal | 3.46 |

**Prisons Ranking**
Measures performance on capacity metrics in prisons

| RANK | STATE | SCORE (OUT OF 10) |
|---|---|---|
| 1 | Tamil Nadu | 6.24 |
| 2 | Karnataka | 6.01 |
| 3 | Telangana | 5.85 |
| 4 | Kerala | 5.23 |
| 5 | Andhra Pradesh | 5.12 |
| 6 | Gujarat | 4.93 |
| 7 | Madhya Pradesh | 4.76 |
| 8 | Rajasthan | 4.72 |
| 9 | Bihar | 4.58 |
| 10 | Maharashtra | 4.52 |
| 11 | Odisha | 4.32 |
| 12 | Chhattisgarh | 3.93 |
| 13 | West Bengal | 3.76 |
| 14 | Jharkhand | 3.69 |
| 15 | Punjab | 3.61 |
| 16 | Haryana | 3.57 |
| 17 | Uttar Pradesh | 3.55 |
| 18 | Uttarakhand | 2.05 |


## இந்தியாவில் காவல்துறை அதிகாரிகள் - மக்கள் தொகை இடையேயான விகிதம்

- பீகார் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் முறையே, இந்தியாவில் ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு 75.16 மற்றும் 97.66 என்ற விகிதத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான காவல்துறை அதிகாரிகள் உள்ளனர்.
- பீகாரின் காவல்துறை அதிகாரிகள் - மக்கள் தொகை விகிதம் 115.08 ஆகவும், மேற்கு வங்காளத்தில் அது 160.76 ஆகவும் உள்ளது.
- 2022 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்றைய நிலவரப்படி, ஒட்டு மொத்த நாட்டிற்கான காவல்துறை அதிகாரிகள் - மக்கள் தொகை விகிதமானது தற்போதைய மொத்த எண்ணிக்கையின் படி ஒரு லட்சம் நபர்களுக்கு 152.80 ஆகும்.
- ஆனால் இந்தியாவில் அனுமதிக்கப்பட்ட காவல்துறை அதிகாரிகள் எண்ணிக்கை 196.23 ஆகும்.
- தமிழகத்தின் அனுமதிக்கப்பட்ட காவல்துறை அதிகாரிகள் எண்ணிக்கை என்பது 171.95 ஆக உள்ள நிலையில் தற்போதைய காவலர்களின் எண்ணிக்கை 154.25 ஆகும்.


| State | UR | Overall | Police | Prisons | Judiciary | Legal Aid |
|---|---|---|---|---|---|---|
| Telangana | 3 | 3 | 1 | 3 | 5 | 5 |
| Tamil Nadu | 1 | 3 | 1 | 10 | 1 | 12 |
| Karnataka | 2 | 14 | 1 | 14 | 12 | 16 |
| Uttarakhand | 1 | 15 | 2 | 17 | 15 | 17 |
| Karnataka | 3 | 1 | 2 | 2 | 2 | 2 |
| Chhattisgarh | 2 | 7 | 2 | 11 | 4 | 15 |
| Punjab | 1 | 4 | 3 | 16 | 2 | 3 |
| Odisha | 2 | 11 | 3 | 9 | 15 | 8 |
| Andhra Pradesh | 3 | 5 | 3 | 5 | 11 | 13 |
| Odisha | 3 | 10 | 4 | 11 | 13 | 10 |

## போட்டித்திறன் திருத்த மசோதா, 2023

- இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையானது (ராஜ்யசபா) சமீபத்தில் 2023 ஆம் ஆண்டு போட்டித் திறன் (திருத்தம்) மசோதாவினை நிறைவேற்றியது.
- இந்த மசோதாவானது 2002 ஆம் ஆண்டிற்கான போட்டித்திறன் சட்டத்தினைத் திருத்தி அமைக்க உள்ளது.
- போட்டித் திறன் மற்றும் நுகர்வோரின் நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கச் செய்யும் நடைமுறைகளை தடுப்பதற்கான பல்வேறு அதிகாரங்களை இந்தியப் போட்டித்திறன் ஆணையத்திற்கு (CCI) இது வழங்குகிறது.
- இந்தத் திருத்தமானது, குறிப்பாக எண்ணிமச் சந்தைகளில் தற்போது வணிகங்கள் செயல்படும் விதத்தில் ஏற்படும் பல்வேறு மாற்றங்களுக்கு இணையாக போட்டித் திறன் மேலாண்மையினை விரைவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## 2026 ஆம் ஆண்டிற்குள் 2வது பெரிய சூரியசக்தி உற்பத்தியாளர் நாடு




- இந்தியா, சூரிய சக்தி உற்பத்தியில் தன்னிறைவுப் பெற உள்ளதோடு, மேலும், 2026 ஆம் ஆண்டில் ஒளி மின்னழுத்தக் கலங்களின் உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய நாடாக விளங்கும்.
- 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 18GW ஆக இருந்த, இந்தியாவின் ஒட்டுமொத்த அதிக பட்சத் தொகுதி உற்பத்தித் திறனானது 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 3 8GW ஆக உயர்ந்து இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.
- இனிமேல் நிறுவப்பட உள்ள ஒளி மின்னழுத்தக் கலங்களின் உற்பத்தி நிறுவல்களின் அடிப்படையில், குஜராத் இந்தியாவின் முன்னணி மாநிலமாக உள்ளது.
- இது இனிமேல் நிறுவப்பட உள்ள அனைத்து ஒளி மின்னழுத்தக் கலங்களின் உற்பத்தித் திறனில் கிட்டத்தட்ட 57% ஆகும்.

## தேசியக் கட்சி அந்தஸ்து

- ❖ அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி கட்சிக்கு, இந்தியத் தேர்தல் ஆணையம் தேசியக் கட்சி என்ற அந்தஸ்தினை வழங்கியுள்ளது.
- ❖ மேலும் திரிணாமுல் காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் தேசியவாத காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் தேசியக் கட்சி என்ற ஒரு அந்தஸ்தினையும் திரும்பப் பெற்றது.
- ❖ திரிணாமுல் காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்ட் மற்றும் தேசியவாத காங்கிரஸ் ஆகிய கட்சிகள் நீக்கப் பட்டதால், நாட்டில் தற்போது 6 தேசியக் கட்சிகள் மட்டுமே உள்ளன.
- ❖ பாஜக, காங்கிரஸ், தேசிய மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி மற்றும் சமீபத்தில் சேர்க்கப்பட்ட ஆம் ஆத்மி ஆகியவையே தற்போது தேசியக் கட்சிகளாக உள்ளன.
- ❖ தேர்தல் ஆணையத்தின் விதிகளின்படி நான்கு மாநிலங்களில் ஒரு மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப் பட்டால் ஒரு கட்சிக்குத் தேசியக் கட்சி என்ற அந்தஸ்து கிடைக்கும்.
- ❖ மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட வேண்டுமானால், மொத்தம் செல்லுபடியாகும் வாக்குகளில் குறைந்தது ஆறு சதவீத வாக்குகளையும், சட்டமன்றத் தேர்தல் அல்லது மக்களவைத் தேர்தலில் தலா இரண்டு இடங்களையும் பெற வேண்டும்.




## "தேச விரோத அமைப்பு" – சொல்லாக்கம்

- ❖ அரசாங்க கொள்கையை விமர்சிப்பதை "தேச விரோத அமைப்பு" என்று கூற முடியாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- ❖ மேலும், மலையாளச் செய்தி ஊடகமான மீடியாஒன் நிறுவனம் மீதான மத்திய அரசின் தடையையும் ரத்து செய்தது.
- ❖ ஒரு ஆளும் வர்க்கத்தின் (ஒரு தேசத்தின்) சமூக, பொருளாதார மற்றும் அரசியல் கொள்கைகளை எதிர்க்கின்ற அல்லது விரோதமாக விளங்கும் தனிநபர் அல்லது அமைப்பு ஆனது, தேச விரோத அமைப்பு என்று குறிப்பிடப்படுகிறது.

- 19(2)வது சட்டப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு அடிப்படையிலும், அரசாங்கக் கொள்கையின் மீதான ஒரு விமர்சனத்தினை ஒரு கற்பனை அடிப்படையில் அதன் எல்லைக்குள் கொண்டு வர முடியாது.
- 19(2)வது சட்டப் பிரிவானது, இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மையின் நலன்களுக்காக சில நியாயமானக் கட்டுப்பாடுகளை விதிக்கிறது.




## இந்தியாவின் பாதுகாப்பு ஏற்றுமதி

- இந்தியாவின் பாதுகாப்புத் துறை சார் ஏற்றுமதி 2022-23 ஆம் ஆண்டில் 15,920 கோடி ரூபாயை எட்டியுள்ளது.
- இது 2016-17 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை இல்லாத அதிகபட்ச மற்றும் குறிப்பிடத் தக்க வகையில் பத்து மடங்கு அளவு அதிகரித்துள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் நாட்டின் பாதுகாப்புத் துறை சார் ஏற்றுமதி ரூ.12,814 கோடி ஆகவும், 2020-21 ஆம் ஆண்டில் ரூ.8,434 கோடியாகவும் இருந்தது.



## கஜ் உத்சவ் - 2023

- அசாமின் காசிரங்கா தேசியப் பூங்காவில் இந்தியக் குடியரசுத் தலைவர் கஜ் உத்சவ் -2023 எனும் நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார் .
- இந்தியாவில் யானைகளுக்கு ஏற்படும் சவால்களைத் தணித்து யானைகளுக்கு சிறந்த ஒரு எதிர்காலத்தை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த குறிப்பிடத்தக்க நிகழ்வானது இந்தியாவில் யானைகள் பாதுகாப்புத் திட்டத்தின் 30வது ஆண்டு நிறைவை நினைவு கூறும் வகையில் கொண்டாடப் படுகிறது .
- யானைகள் பாதுகாப்புத் திட்டம் என்பது 1992 ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கத்தால் தொடங்கப் பட்ட ஒரு முதன்மையான பாதுகாப்புத் திட்டம் ஆகும்.
- ஆசிய யானைகளின் அதிக எண்ணிக்கைக்குப் பெயர் பெற்ற காசிரங்கா தேசியப் பூங்கா 1905 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.




## ‘கவாச்’ பயிற்சி

- ‘கவாச்’ என்ற பெரிய அளவிலான கூட்டு ராணுவப் பயிற்சியை அந்தமான் நிக்கோபார் இராணுவப் பிரிவு (ANC)’ நடத்தியது.
- இது தரைப் படை, கடற்படை, விமானப் படை மற்றும் கடலோரக் காவல்படை ஆகியவற்றின் சொத்துக்களை உள்ளடக்கியது.
- இந்தியாவின் கடல்சார் நலன்களைப் பாதுகாக்கச் செய்வதற்கும், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் பாதுகாப்பை உறுதி செய்திடுவதற்கும் வேண்டி ஆயுதப் படைகளின் செயல்திறன்களைத் தயார்நிலையில் வைப்பதற்கான நடவடிக்கைகளை இது வெளிப்படுத்தியது.



## 8வது வந்தே பாரத் விரைவு ரயில்

- இரண்டு தெலுங்கு பேசும் மாநிலங்களுக்கு இடையேயான இரண்டாவது வந்தே பாரத் விரைவு ரயிலைப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- இது தெலுங்கானாவில் உள்ள செகந்திராபாத் நிலையம் முதல் ஆந்திராவின் திருப்பதி நிலையம் வரை இயக்கப்படும்
- இந்த இரயிலானது இந்திய இரயில்வே நிர்வாகம் அறிமுகப்படுத்திய எட்டாவது வந்தே பாரத் விரைவு ரயில் ஆகும் .
- இரண்டு தெலுங்கு பேசும் மாநிலங்களை இணைக்கும் முதல் ரயில் சேவை இதுவாகும்.




## உறையிடப்பட்ட ஆவணச் சமர்ப்பிப்பு குறித்த உச்சநீதிமன்ற கருத்து


- இந்தியத் தலைமை நீதிபதி (CJI) தலைமையிலான ஒரு அமர்வானது, மத்திய அரசின் "இரகசியமான" ஆவணச் சமர்ப்பிப்பினை ஏற்க முடியாது என்று கூறியது.
- ஒரே பதவி நிலை ஒரே ஓய்வூதியம் என்ற திட்டத்தின் கீழ், ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை தொடர்பான கருத்து வழங்கலின் போது இது கூறப்பட்டது.
- நீதிமன்றத்தின் செயல்பாட்டில் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டியதன் ஒரு அவசியத்தினைத் தலைமை நீதிபதி அவர்கள் பலமுறை குறிப்பிட்டுள்ளார்.
- உறையிடப்பட்ட ஆவணச் சமர்ப்பிப்பு என்பது நீதிபதிகளால் மட்டுமே ஆய்வு செய்யப் படக்கூடிய வகையில், அரசாங்க அமைப்புகளிடமிருந்துத் தகவல்களை உறையிடப் பட்ட வகையில் கோருகின்ற மற்றும் அதைப் பெறுகின்ற ஒரு நடைமுறை ஆகும்.

- முந்தையக் காலங்களில் உச்ச நீதிமன்றம் மற்றும் சில சமயங்களில் கீழ்நிலை நீதிமன்றங்களும் இந்த நடைமுறையினைப் பின்பற்றியுள்ளன.
- இரண்டு வகையான நிகழ்வுகளில் இந்த நடைமுறையினைப் பயன்படுத்தலாம்:
  - தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணையுடன் தொடர்புடைய தகவலைப் பெறுவதற்கும்,
  - அந்தத் தகவல் தனிப்பட்டதாகவோ அல்லது இரகசியமானதாகவோ இருக்கும் பட்சத்தில்.




## 2023 ஆம் நிதியாண்டில் MPLADS நிதிகளின் பயன்பாடு

- 2022-23 ஆம் நிதியாண்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட (MPLADS) நிதியின் கீழ் வழங்கப்பட்ட நிதியில், குஜராத் மாநிலம் அதிக அளவில் அந்த நிதியினைப் பயன்படுத்தியுள்ளது.




- குஜராத் மாநிலத்திற்கு 66 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது, ஆனால் அது ரூ. 95.77 கோடி அல்லது 145.11% என்ற அளவில் நிதியினைப் பயன்படுத்தியுள்ளது.
- வழங்கப்பட்ட நிதி விகிதங்களில் அதிக நிதிப் பயன்பாட்டினைக் கொண்டுள்ள பிற முக்கிய மாநிலங்கள் ஜார்க்கண்ட் (128.45%), கர்நாடகா (127.76%), கேரளா (122.33%), மேற்கு வங்காளம் (113.54%), மற்றும் தமிழ்நாடு (112.86%) ஆகியவை ஆகும்.

- முழுமையாக இந்திய அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுகிற MPLAD திட்டம் என்பது ஒரு மத்திய அரசினால் நிதியளிக்கப்படும் ஒரு திட்டமாகும்.
- இந்தத் திட்டமானது 1993 ஆம் ஆண்டு டிசம்பர் 23 ஆம் தேதியன்று அறிவிக்கப்பட்டது.


## காசநோய்ப் பாதிப்புகளை மதிப்பிடுவதற்கான இந்திய அளவிலான மாதிரி

- காசநோய்ப் பாதிப்புகளின் பரவலைக் கண்டறிவதற்காக அதிநவீனக் கணிதமுறை மாதிரியை உருவாக்கிய உலகின் முதல் நாடாக இந்தியா மாறியுள்ளது.
- இது நோயின் இயல்பு சார்ந்த வரலாறு, தனிப்பட்ட நோய்த் தொற்றுப் பாதிப்புகள், உடல்நலம் பேணும் நடத்தை, தவறிய அல்லது முறையான நோயறிதல், சிகிச்சை வழங்கீடு மற்றும் விளைவு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் மதிப்பீட்டின் படி, 2021 ஆம் ஆண்டில் இந்தியாவில் காச நோய்ப் பாதிப்பு விகிதம் (10,000 நபர்களுக்கு) ஆனது 210 ஆக இருந்தது.
- இந்தியக் கணிதமுறை மாதிரியைப் பயன்படுத்தி, இது 2022 ஆம் ஆண்டில் 196 ஆக உள்ளதாக மதிப்பிடப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டில் காசநோய்ப் பாதிப்புகளின் முழு எண்ணிக்கை 29.50 லட்சமாக இருக்கும் என்று உலக சுகாதார அமைப்பு மதிப்பிட்டுள்ளது.
- இந்திய மாதிரியானது, இது 2022 ஆம் ஆண்டில் 27.70 இலட்சம் என்று குறிப்பிட்டது.
- உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, 2021 ஆம் ஆண்டில் காசநோய் இறப்பு விகிதம் (10,000 நபர்களுக்கு) 35 என மதிப்பிடப்பட்ட நிலையில் இது இந்திய மாதிரியின் படி 2022 ஆம் ஆண்டில் 23 ஆகக் குறைந்துள்ளது.
- உலக சுகாதார அமைப்பானது, 2021 ஆம் ஆண்டில் காசநோய் இறப்புகளின் முழு எண்ணிக்கை 4.94 லட்சமாக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- இந்திய மாதிரியானது, 2022 ஆம் ஆண்டில் இது 3.20 லட்சம் என குறிப்பிட்டது.
- 2022 ஆம் ஆண்டில், மொத்தம் 23,58,664 நோயாளிகள் மருந்து எதிர்ப்புத் திறன் கொண்ட காச நோயினால் (DSTB) பாதிக்கப் பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டனர்.
- 2022 ஆம் ஆண்டில், பதிவு செய்யப்பட்டப் பாதிப்புகளில், சிகிச்சைத் தொடக்க விகிதம் 95.5 சதவீதமாக இருந்தது.
- இந்திய மாநிலங்களிலேயே அதிகப் பாதிப்புப் பதிவு விகிதம் டெல்லியில் பதிவாகி உள்ளது (ஒரு லட்சம் பேருக்கு 546).
- இந்திய மாநிலங்களிலேயே மிகக் குறைவான பாதிப்பு கேரளா மாநிலத்தில் பதிவாகி உள்ளது (ஒரு லட்சம் பேருக்கு 67).

## மேலாண்மைச் செயல்திறன் மதிப்பீடு - 5வது சுற்று

- 2006 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது முதல் நாடு முழுவதும் உள்ள புலிகள் வளங் காப்பகங்களை மதிப்பிடச் செய்வதற்கு அரசாங்கம் மேலாண்மைச் செயல்திறன் மதிப்பீட்டினைப் பயன்படுத்துகிறது.
- கேரளாவில் உள்ள பெரியார் புலிகள் வளங்காப்பகம் (PTR) ஆனது நாட்டிலேயே சிறந்த முறையில் நிர்வகிக்கப்படும் புலிகள் வளங்காப்பகமாக மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டது.

- 2022 ஆம் ஆண்டு 5வது சுழற்சி மதிப்பீட்டில், சாத்புரா (மத்தியப் பிரதேசம்) மற்றும் பந்திப்பூர் (கர்நாடகா) ஆகியவை இரண்டாவது இடத்தையும், நகர்ஹோலே (கர்நாடகா) மூன்றாவது இடத்தையும் பெற்றன.
- இது வரை 53 புலிகள் வளங்காப்பகங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- இந்த 53 புலிகள் வளங்காப்பகங்களில் 51 மட்டுமே மதிப்பீடு செய்யப்பட்டன.
- இதில் புதிதாக அறிவிக்கப்பட்ட இரண்டு புலிகள் வளங்காப்பகங்களான ராம்கர் விதாரி மற்றும் இராணிப்பூர் ஆகியவை இந்த மேலாண்மைச் செயல்திறன் மதிப்பீட்டின் தற்போதைய சுற்றில் சேர்க்கப் படவில்லை.




## 33 புதிய புவிசார் குறியீட்டுப் பதிவுகள்

- மார்ச் 31 ஆம் தேதியன்றைய நிலவரப்படி, 33 புதிய புவிசார் குறியீட்டுப் பதிவுகளை நிறைவு செய்ததன் மூலம் 2022-23 ஆம் ஆண்டில், இந்தியா இதுவரையில் இல்லாத அளவிற்கு அதிகபட்சப் புவிசார் குறியீட்டுப் பதிவுகளை எட்டியுள்ளது.
- அவற்றுள் வாரணாசியைச் சேர்ந்த இரண்டு உட்பட 10 குறியீடுகள் உத்தரப் பிரதேச மாநிலத்திற்கானவையாகும்.
- புதிதாக 10 பொருட்கள் சேர்க்கப் பட்டதன் மூலம், உத்தரப் பிரதேச மாநிலம் தற்போது 45 புவிசார் குறியீடுகளைக் கொண்டுள்ளது.
- இவற்றுள் 20 பொருட்கள் வாரணாசி பகுதியைச் சேர்ந்தவையாகும்.
- தற்போது புவிசார் குறியீட்டுப் பதிவகமானது, 441 இந்தியத் தயாரிப்புகள் மற்றும் 34 வெளிநாட்டுத் தயாரிப்புப் பொருட்களுக்குப் புவிசார் குறியீடுகளை வழங்கியுள்ளது.
- புவிசார் குறியீட்டுப் பதிவகமானது சென்னையில் அமைந்துள்ளது

| SL No | State | Products | Products |
|---|---|---|---|
| 1 | Madhya Pradesh | Agriculture | Rewa Sunderja Mango |
| 2 | Ladakh | Handicraft | Ladakh Shingskos (Wood Carving) |
| 3 | Chhattisgarh | Agriculture | Nagri Dubraj (rice) |
| 4 | Bihar | Agriculture | Marcha Rice (Mircha Rice) |
| 5 | Tamil Nadu | Food Stuffs | Manapparai murukku |
| 6 | | Agriculture | Cumbum panneer thratchai (grapes) |
| 7 | | Natural Goods | Marthandam honey |
| 8 | | Food Stuffs | Ooty varkey |
| 9 | | Handicraft | Manamadurai pottery |
| 10 | | Food Stuffs | Salem sago (javvarisi) |
| 11 | | Agriculture | Authoor vetrilai |
| 12 | | Textiles | Negamam cotton saree |
| 13 | | Handicraft | Myladi stone carvings |
| 14 | | Handicraft | Thaikkal Rattan craft |
| 15 | | Agriculture | Sholavandan Vetrilai |
| 16 | Uttar Pradesh | Agriculture | Banaras Pan (Betel Leaf) |
| 17 | | Agriculture | Banaras Langda Aam (Mango) |
| 18 | | Agriculture | Ramnagar Bhanta (Brinjal) |
| 19 | | Agriculture | Adamchini Chawal (Rice) |
| 20 | | Handicraft | Aligarh Tala |
| 21 | | Handicraft | Bakhira Brassware |
| 22 | | Handicraft | Banda Shazar Patthar Craft |
| 23 | | Handicraft | Nagina Wood Craft |
| 24 | | Food Stuffs | Hathras Hing |
| 25 | | Agriculture | Pratapgarh Aonla |
| 26 | Jammu &Kashmir | Handicraft | Basohli painting |
| 27 | | Textiles | Basohli Pashmina Woolen Products |
| 28 | | Handicraft | Rajouri Chikri wood craft |
| 29 | | Agriculture | Bhaderwah rajmash |
| 30 | | Agriculture | Mushqbudji Rice |
| 31 | | Food Stuffs | Udhampur Kaladi (Dairy Product) |
| 32 | | Agriculture | Ramban Sulai Honey |
| 33 | | Agriculture | Ramban Anardana |

## சுகோய் 30 MKI ரக விமானத்தில் குடியரசுத் தலைவர்

- அசாமில் உள்ள தேஜ்பூர் விமானப்படைத் தளத்தில் இருந்து சுகோய் 30 MKI ரக போர் விமானத்தில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் ஒரு சிறு பயணத்தினை மேற்கொண்டார்.
- முர்மு அவர்கள் இந்தப் போர் விமானத்தில் பயணித்த மூன்றாவது குடியரசுத் தலைவர் மற்றும் இரண்டாவது பெண் குடியரசுத் தலைவர் ஆவார்.
- முன்னாள் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் அவர்கள், 2009 ஆம் ஆண்டில் புனே விமானப் படை தளத்தில் இருந்து சுகோய்-30 30 MKI ரக போர் விமானத்தில் பயணம் செய்தார்.



## மின்னணுக் கழிவு (மேலாண்மை) விதிகள், 2022




- 2022 ஆம் ஆண்டு மின்னணுக் கழிவு (மேலாண்மை) விதிகளானது, 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் அமலாக்கப்பட்டது.
- முதலாவது மின்னணுக் கழிவு விதிகள் 2011 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- சமீபத்திய விதிகளானது, புதிய விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு (EPR) நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ள நிலையில், இது ஒவ்வொரு மின்னணுத்

தயாரிப்புகளின் உற்பத்தியாளர், தயாரிப்பாளர், புதுப்பிப்பாளர், உடைத்தல் மற்றும் மறு சுழற்சி நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

- மின்சார மற்றும் மின்னணு உபகரணங்களின் (EEE) தயாரிப்புச் செயல்முறையில் அபாயகரமான பொருட்களின் பயன்பாட்டிற்காக இது வரம்பினை விதித்தது.
- மின்னணு உபகரணங்களின் உற்பத்தியில் ஈயம், பாதரசம், காட்மியம் போன்றவற்றைப் பயன்படுத்துவதைக் குறைக்க வேண்டும் என்ற விதிமுறையினை இது விதித்தது.
- உற்பத்தியின் போது உருவாக்கப்படும், மின்னணுக் கழிவுகளைச் சேகரிப்பது மற்றும் அதன் மறுசுழற்சி அல்லது அகற்றலை உறுதி செய்வது உற்பத்தியாளரின் பொறுப்பு ஆகும்.
- இருப்பினும், சட்டத்தின் விதிகளின் கீழ், பயன்படாத மின்கலங்கள், பொதிகளுக்குப் பயன்படுத்தப் படும் நெகிழிகள், குறு நிறுவனங்கள் மற்றும் ரேடியோ கதிரியக்கம் உள்ள கழிவுகளுக்கு இந்த விதி பொருந்தாது.

## இந்திய அரசியலமைப்பின் டோக்ரி மொழிப் பதிப்பு

- இந்திய அரசியலமைப்பின் டோக்ரி மொழியில் எழுதப்பட்ட முதல் பதிப்பை ஜம்மு பல்கலைக் கழகத்தில் மத்திய சட்ட அமைச்சர் வெளியிட்டார்.
- இது மொழியியல் பன்முகத் தன்மையை ஊக்குவிப்பதற்கும், நாட்டின் கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பாதுகாக்கச் செய்வதற்குமான ஒரு குறிப்பிடத்தக்கப் படியாகும்.
- டோக்ரி என்பது வட இந்திய மாநிலமான ஜம்மு மற்றும் காஷ்மீரில் பேசப்படும் ஒரு மொழியாகும்.
- இது இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட 22 அதிகாரப் பூர்வ மொழிகளில் ஒன்றாகும்.
- 2003 ஆம் ஆண்டு 92வது திருத்தச் சட்டத்தின் மூலம் எட்டாவது அட்டவணையில் போடோ, டோக்ரி, மைதிலி மற்றும் சந்தாலி ஆகிய மொழிகள் சேர்க்கப் பட்டன.

## துடிப்பான கிராமங்கள் திட்டம்

- அருணாச்சலப் பிரதேசத்தின் ஒரு எல்லைக் கிராமமான கிபித்தூவில் 'துடிப்பான கிராமங்கள்' எனும் ஒரு திட்டம் துவக்கப்பட்டு உள்ளது.
- இது எல்லையோரக் கிராமங்கள் மீதான மக்களின் வாழ்க்கை அணுகுமுறையை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டது.
- இந்தத் திட்டம் எல்லையோரக் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், அவர்கள் அதே இடங்களில் தங்குவதனை ஊக்குவிக்கவும் வேண்டி உதவுகிறது.
- இது இந்த கிராமங்களில் இருந்து மக்கள் இடம் பெயர்வதைத் தடுக்கவும் மற்றும் எல்லையில் பாதுகாப்பைப் பலப்படுத்தவும் உதவும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் விரிவான ஒரு வளர்ச்சிக்காக 19 மாவட்டங்களில் உள்ள 46 தொகுதிகளில் 2967 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.
- இவை அனைத்தும் அருணாச்சலப் பிரதேசம், சிக்கிம், உத்தரகாண்ட், இமாச்சலப் பிரதேசம் மற்றும் லடாக் யூனியன் பிரதேசத்தின் வடக்கு எல்லையில் அமைந்துள்ளன.




## உலகின் சிறந்த பொதுப் போக்குவரத்து 2023

- ❖ இந்தத் தரவானது 'டைம் அவுட்' நிறுவனம் மூலம் உலகெங்கிலும் உள்ள 50க்கும் மேற்பட்ட நகரங்களிருந்துப் பெறப்பட்டது.
- ❖ பொதுப் போக்குவரத்துக்கான 'உலகின் சிறந்த' நகரங்களின் பட்டியலில் மும்பை 19வது இடத்தில் உள்ளது.
- ❖ சிறந்தப் பொதுப் போக்குவரத்து அமைப்பைக் கொண்ட முதல் 5 நகரங்கள் பெர்லின், ப்ராக், டோக்கியோ, கோபன்ஹேகன், ஸ்டாக்ஹோம் ஆகியனவாகும்.
- ❖ இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரே இந்திய நகரம் மும்பை ஆகும்.

## தகவல் தொழில்நுட்பத் திருத்த விதிகள் 2023




- ❖ மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் (MeitY) ஆனது 2023 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப (இடைநிலை வழிகாட்டுதல்கள் மற்றும் எண்ணிம ஊடக நெறிமுறைகள் குறியீடு) திருத்த விதிகளை வெளியிட்டுள்ளது.

- இந்தப் புதிய விதிகளின்படி, மத்திய அரசின் எந்தவொரு நடவடிக்கை தொடர்பான போலிச் செய்திகளைக் கண்டறியும் மெய்த் தகவல் சரிபார்ப்புப் பிரிவினை மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் அமைக்கலாம்.
- செய்தித் தகவல் பணியகத்தின் (PIB) மெய்த் தகவல் சரிபார்ப்புப் பிரிவானது இந்தப் பணிக்கான "விருப்பத் தேர்வு நிறுவனம்" ஆகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- மெய்த் தகவல் சரிபார்ப்புப் பிரிவினால் "போலி" எனக் கருதப்படும் எந்தவொருச் செய்தியும் சமூக ஊடகத் தளங்கள் உள்ளிட்ட அனைத்துத் தளங்களிலிருந்தும் அகற்றப் பட வேண்டும்.

## இந்திய விண்வெளிக் கொள்கை 2023

- பாதுகாப்பு மீதான அமைச்சரவைக் குழுவானது, 2023 ஆம் ஆண்டு இந்திய விண்வெளிக் கொள்கைக்குச் சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தக் கொள்கையானது, இந்திய விண்வெளித் தொழில்நுட்பப் பிரிவின் பொருளாதாரத்தில் ஒரு குறிப்பிடத்தக்கத் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இது உலகளாவிய விண்வெளித் தொழில்நுட்பப் பிரிவின் பொருளாதாரத்தில் 2 சதவீதத்திற்கும் குறைவாக உள்ள இந்தியாவின் பங்கினை 10% ஆக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இஸ்ரோ, NSIL மற்றும் IN-SPACe ஆகியவற்றின் பணிகள் மற்றும் பொறுப்புகளை இந்தக் கொள்கை குறிப்பிடுகின்றது.
- இஸ்ரோ தனது செயல்திறன்களைப் புதியத் தொழில்நுட்பங்கள், அமைப்புகள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்தச் செய்வதில் கவனம் செலுத்தும்.





- நியூஸ்பேஸ் இந்தியா லிமிடெட் (NSIL) நிறுவனமானது, விண்வெளித் துறை தொடர்பான உத்திசார் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும்.
- விண்வெளிப் பொருளாதாரத்தில் தனியார் தொழில்துறையின் பங்களிப்பை மிகவும் அதிகரிக்கச் செய்வதும், இந்தியாவில் தன்னிறைவு மிக்க விண்வெளித் துறையை உருவாக்கச் செய்வதும் NSIL நிறுவனத்தின் ஒரு நோக்கமாகும்.

- இந்தியத் தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (IN-SPAce) ஆனது, இஸ்ரோ மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்கு இடையேயான ஓர் இடைமுகமாகச் செயல்படும்.

## இந்தியாவின் எண்ணிமத் துறைத் திட்டப் பலன்களின் மூலம் பெற்ற தகவல்களைத் தொகுக்கச் செய்தல் – அறிக்கை

- சர்வதேச நாணய நிதியமானது, ‘இந்தியாவின் எண்ணிமத் துறைத் திட்டப் பலன்களின் மூலம் பெற்ற தகவல்களைத் தொகுக்கச் செய்தல்’ என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை வெளியிட்டுள்ளது.
- இதன் படி உலகத் தரத்திலான ஒரு எண்ணிமப் பொது உள்கட்டமைப்பினை இந்தியா உருவாக்கி உள்ளது.
- இது வாழ்க்கை நிலை மற்றும் பொருளாதாரத்தினை மாற்றியமைக்கச் செய்வதோடு, பல நாடுகளுக்கு இது ஒரு படிப்பினையாக விளங்கும்.
- இந்தியத் தொகுப்பு என்பது இந்தியாவில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் எண்ணிமப் பொது உள்கட்டமைப்புகளுக்கான (DPIs) ஒரு தொகுப்புப் பெயராகும்.
- இது மூன்று வெவ்வேறு அடுக்குகளைக் கொண்டுள்ளது.
    - தனிப்பட்ட அடையாளம் (ஆதார்),
    - சிறப்பானப் பண வழங்கீட்டு முறைகள் (ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடை முகம், ஆதார் பண வழங்கீட்டு இணைப்பு, ஆதார் இணைக்கப்பட்ட பண வழங்கீட்டுச் சேவை), மற்றும்
    - தரவுப் பரிமாற்றம் (டிஜிலாக்கர் மற்றும் கணக்குத் திரட்டுச் செயலிகள்).

Figure 2: Direct Benefit Transfer Workflow for Aadhaar Linked Accounts




Source: Ministry of Finance Government of India

## இந்தியச் சுற்றுச்சூழல் நிலவரம் குறித்த அறிக்கை

- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் மற்றும் டவுன் டு எர்த் ஆகியவை, சமீபத்தில் 2023 ஆம் ஆண்டிற்கான இந்தியச் சுற்றுச்சூழல் நிலவரம் குறித்த ஒரு அறிக்கையினை வெளியிட்டது.
- இதன்படி நாட்டில் உள்ள 30,000க்கும் மேற்பட்ட நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளன.

- இந்தியாவில் ஒவ்வொரு நாளும் 1,50,000 டன் அளவில் நகராட்சிப் பகுதி சார்ந்த திடக் கழிவுகள் உருவாக்கப் படுகிறது.
- இதில் பாதிக்கும் மேற்பட்டவை குப்பைக் கிடங்குகளில் கொட்டப் படுகின்றன அல்லது எந்தவொருச் செயல்முறைக்கும் உட்படுத்தப்படாமல் (கவனிப்பாரற்று) கிடக்கின்றன.
- இந்தியாவில் காற்று மாசுபாட்டினால் இழக்கப்படும் சராசரி ஆயுட்கால இழப்பு நான்கு ஆண்டுகள் மற்றும் 11 மாதங்கள் ஆகும்.
- ஹரியானாவில் நிலவும் சராசரி ஆயுட்கால இழப்பு ஏழு ஆண்டுகள் மற்றும் ஐந்து மாதங்கள் ஆகும்.
- நான்கு மாதங்கள் என்ற அளவில் மிகக் குறைந்த அளவிலான ஒரு ஆயுட்கால வீழ்ச்சி லடாக்கில் பதிவாகியுள்ளது.
- காற்று மாசுபாடு தொடர்பான சுகாதாரப் பிரச்சினைகளால், நகர்ப்புறங்களை விட கிராமப்புறப் பகுதிகளில் தான் அதிக ஆயுட்கால இழப்புப் பதிவாகியுள்ளன.
- இந்தியாவில் மேலும் 35 சதவீதப் பொது சுகாதார மையங்கள் தேவைப் படுகின்றன.
- 2022 ஆம் ஆண்டின் ஜனவரி மற்றும் அக்டோபர் ஆகிய மாதங்களுக்கு இடையே (304 நாட்கள்), இந்தியா 271 நாட்களில் தீவிர வானிலை நிகழ்வுகளை எதிர்கொண்டது.
- இந்தத் தீவிர வானிலை நிகழ்வுகளால் 2,900க்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டன.
- ஐக்கிய நாடுகள் சபையினால் வலியுறுத்தப்பட்ட கட்டாய நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDGs) பூர்த்தி செய்வதற்கான ஒரு ஒட்டு மொத்த உலகளாவியத் தர வரிசையில் இந்தியா ஒன்பது இடங்கள் சரிந்துள்ளது.
- இந்தியாவில் சுற்றுச்சூழல் சார்ந்த குற்றங்கள் கட்டுப்பாடின்றி தொடர்ந்து வருகின்றன என்பதோடு, மேலும் கிடப்பில் உள்ள வழக்குகளை முடிக்க, நீதிமன்றங்கள் ஒவ்வொரு நாளும் 245 வழக்குகளுக்குத் தீர்ப்பளிக்க வேண்டிய நிலையில் உள்ளது.


## சர்வதேசப் பெரும்பூனைகள் பாதுகாப்புக் கூட்டணி



- ❖ புலிகள் பாதுகாப்புத் திட்டத்தின் 50 ஆண்டுகள் நிறைவு விழாவின் போது இந்தியப் பிரதமர் அவர்கள் சர்வதேசப் பெரும்பூனைகள் பாதுகாப்புக் கூட்டணியைத் தொடங்கி வைத்தார்.
- ❖ இதன் முக்கிய நோக்கம் புலி, சிங்கம், சிறுத்தை, பனிச் சிறுத்தை, சிறுத்தை, ஜாகுவார் மற்றும் பூமா போன்ற ஏழு பெரிய பூனை இனங்களைப் பாதுகாப்பது என்பதாகும்.
- ❖ இது காட்டு வனவிலங்குகள், அதிலும் குறிப்பாகப் பெரும்பூனைகளைப் பாதுகாக்கச் செய்வதற்கான முயற்சியில் உலகளாவிய ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த உதவும்.

## மாநில ஆற்றல் திறன் குறியீடு (SEEI) 2021-22

- ❖ 2021-22 ஆம் ஆண்டிற்கான மாநில ஆற்றல் திறன் குறியீட்டு (SEEI) அறிக்கையை மத்திய மின்சாரம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் வெளியிட்டு உள்ளது.
- ❖ இது 2020-21 மற்றும் 2021-22 நிதியாண்டுக்கான ஆற்றல் திறன் செயல்படுத்தல் மீதான மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் வருடாந்திர முன்னேற்றம் பற்றிய ஒரு அறிக்கை ஆகும்.
- ❖ இந்த அறிக்கையானது மிகை ஆற்றல் திறன் பொருளாதாரக் கூட்டணி (AEEE) உடன் இணைந்து ஆற்றல் திறன் பணியகத்தால் (BEE) உருவாக்கப்பட்டது.
- ❖ இது மேம்படுத்தப்பட்ட ஒரு கட்டமைப்புடன் சீரமைக்கப்பட்ட 50 குறிகாட்டிகளைக் கொண்டுள்ளது.
- ❖ ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா, ராஜஸ்தான் மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் முன்னணிப் பிரிவில் (>60 புள்ளிகள்) உள்ளது.
- ❖ அசாம், ஹரியானா, மகாராஷ்டிரா, பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் சாதனையாளர் பிரிவில் (50-60 புள்ளிகள்) உள்ளது.
- ❖ கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், அசாம் மற்றும் சண்டிகர் ஆகியவை அந்தந்த மாநிலக் குழுக்களில் சிறந்து விளங்கும் மாநிலங்களாக திகழ்கிறது.
- ❖ தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசம் கடந்த வருட நிலையை விட அதிக அளவில் முன்னேற்றம் அடைந்து உள்ளது.




## மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் தொழில்முறை சார் பொறுப்புகள் குறித்த வழிகாட்டுதல்கள்

- தேசிய மருத்துவச் சபையானது, முதன்முறையாக மருத்துவக் கல்வி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிறுவனங்களின் பல்வேறு தொழில்முறைசார் பொறுப்புகளைக் குறிப்பிடும் வழிகாட்டுதல்களின் தொகுப்பினை வெளியிட்டுள்ளது.
- கல்வி பயிலும் போது/ பணிபுரியும் போது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய நடத்தை விதிகள், ஆசிரியர் மற்றும் மாணவர் இடையேயான உறவு, இரு பிரிவினர் மத்தியில் நிலவும் எதிர்பார்ப்புகள் மற்றும் சமூகத்தின் மீதுள்ள அவர்களின் கூட்டுப் பொறுப்பு ஆகியவற்றை இது விளக்கிக் கூறிகிறது.
- பாலியல் சார்ந்த நோக்குநிலை, பாலினம் மற்றும் சமூக-பொருளாதார வர்க்கம் ஆகியவை எந்தவிதப் பாகுபாட்டிற்கும் அடிப்படையாக இருக்கக் கூடாது என இது குறிப்பிடுகிறது.

## இந்திய அறிவுசார் நிறுவனங்களுக்கான தேசிய அங்கீகாரப் புள்ளிகள் வழங்கீட்டுக் கட்டமைப்பு

- அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் (HEI) தேசிய அங்கீகாரப் புள்ளிகள் வழங்கீட்டுக் கட்டமைப்பு (NCrF) செயல்படுத்தப்பட வேண்டும் என்று பல்கலைக்கழக மானியக் குழு (UGC) உத்தரவிட்டுள்ளது.
- தேசிய அங்கீகாரப் புள்ளிகள் வழங்கீட்டுக் கட்டமைப்பு என்பது கல்வி, தொழில்சார் மற்றும் அனுபவக் கற்றல் உள்ளிட்ட பல பரிமாணங்களில் கல்விக்கான அங்கீகாரப் புள்ளிகள் பெறுதலின் அடிப்படைக் கொள்கைகளை வகுத்து அதனைச் செயல் படுத்தும் ஒரு கட்டமைப்பாகும்.
- இதன் மூலம், மாணவர்கள் (அனைத்து நிலைகளிலும்) அனைத்து பாடப் பிரிவுகளிலும், இயங்கலை, எண்ணிம மற்றும் கலப்பு கற்றல் போன்ற அனைத்து வழியான கல்வி மற்றும் கற்றலுக்கான அங்கீகாரப் புள்ளிகளைப் பெறுவர்.
- இந்திய மாணவர்கள் புராணங்கள், வேதங்கள் மற்றும் பிற கூறுகள் உட்பட இந்திய அறிவுசார் அமைப்புகளின் பல்வேறு அம்சங்களில் தங்கள் நிபுணத்துவத்தினைப் பெறுவதற்கான அங்கீகாரப் புள்ளிகளைப் பெறுவார்கள்.



## விலங்குகளில் ஏற்படும் பெருந்தொற்றிற்கான தயார் நிலை முன்னெடுப்பு

- மத்திய மீன்வளத்துறை, கால்நடை வளர்ப்புத் துறை அமைச்சர், விலங்குகளில் ஏற்படும் பெருந்தொற்றிற்கான தயார் நிலை முன்னெடுப்பினைத் தொடங்கி வைத்தார்.
- இதனுடன் உலக வங்கியின் நிதியுதவியுடன் கூடிய, ஒரு சுகாதாரத் திட்டத்திற்கான விலங்குகளின் ஆரோக்கிய அமைப்பு ஆதரவு (AHSSOH) திட்டமும் தொடங்கப்பட்டது.
- இவை விலங்குகளில் ஏற்படும் பெருந்தொற்றிற்கு எதிரான இந்தியாவின் தயார்நிலை மற்றும் சாத்தியமான விலங்குகளின் தொற்றுநோய்களுக்கான பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றினை மேம்படுத்தும்.

## அம்பேத்கர் சுற்று வட்டாரச் சுற்றுலா ரயில்

- IRCTC ஆனது முதல் அம்பேத்கர் சுற்று வட்டாரச் சுற்றுலா இரயில் சேவையினை தொடங்கியுள்ளது.
- எட்டு நாட்கள் அளவிலான இந்த சிறப்புப் பயணத்தில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் வாழ்க்கையுடன் தொடர்புடைய முக்கிய இடங்களுக்கான பயணம் அடங்கும்.
- இராமாயணச் சுற்று, பௌத்தச் சுற்று மற்றும் வடகிழக்குச் சுற்று ஆகிய சிறப்புச் சுற்றுலாச் சுற்றுகளின் பட்டியலில் அம்பேத்கர் சுற்று நான்காவதாக சேர்க்கப் பட்டு உள்ளது.
- 'தேக்கோ அப்னா தேஷ்' திட்டத்தின் கீழ் 'பாரத் கௌரவ் சுற்றுலா இரயில்' இயக்கப் படுகிறது.
- இது உள்நாட்டுச் சுற்றுலாவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட வகையில், இது சுற்றுலாத் துறை அமைச்சகம் மற்றும் இரயில்துறை அமைச்சகம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள ஒரு கூட்டு ஒத்துழைப்பு முயற்சியாகும்.




## ஒரே பாலினத்தவரின் திருமணம் தொடர்பான வழக்கிற்கான அரசியலமைப்பு நீதிமன்ற அமர்வு

- ஒரே பாலினத்தவரின் திருமணங்களுக்குச் சட்டப்பூர்வ அங்கீகாரம் கோரி தொடரப் பட்ட தொடர் மனுக்களை விசாரிக்க இந்தியத் தலைமை நீதிபதி D.Y.சந்திரசூட் அவர்களின் தலைமையிலான புதிய அரசியலமைப்பு அமர்வினை உச்ச நீதிமன்றம் அமைத்துள்ளது.

- இந்த அமர்வில் இடம் பெற்றுள்ள மற்ற நான்கு இணை நீதிபதிகள் நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கௌல், S. ரவீந்திர பட், ஹிமா கோஹ்லி மற்றும் P.S. நரசிம்மா ஆகியோர் ஆவர்.
- விவாதத்திற்குரிய விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு தொடர்பான சிக்கல்களை தீர்ப்பதற்கான வழிமுறைகள் ஆகியவை சம்பந்தப்பட்ட வழக்குகளை குறைந்தபட்சம் ஐந்து நீதிபதிகள் கொண்ட ஒரு நீதிமன்ற அமர்வு விசாரிக்க வேண்டும் என்று அரசியல் அமைப்பின் 145(3)வது சரத்து குறிப்பிடுகிறது.




## செயற்கை நுண்ணறிவுத் துறையில் அதிகம் முதலீடு செய்யும் 5வது நாடு




- கடந்த ஆண்டில் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்கச் செய்யும் புத்தொழில் நிறுவனங்கள் பெற்ற முதலீடுகளின் அடிப்படையில் இந்தியா இப்பட்டியலில் ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில், இந்தியாவில் செயற்கை நுண்ணறிவு சார்ந்த புத்தொழில் நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் மொத்த முதலீடுகள் 3.24 பில்லியன் டாலர்களாக இருந்தது.

- இதன் மூலம், தென் கொரியா, ஜெர்மனி, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளை விட இந்தியா முன்னணியில் உள்ளது.
- இப்பட்டியலில் இந்தியாவை விட முன்னணியில் உள்ள நாடுகள் அமெரிக்கா, சீனா, ஐக்கியப் பேரரசு மற்றும் இஸ்ரேல் ஆகியவையாகும்.

## RAPIDX இரயில் சேவை

- இந்தியாவின் முதல் மித-அதிவேக பிராந்திய ரயில் சேவைகளுக்கு தேசியத் தலைநகர் மண்டலப் போக்குவரத்து கழகமானது, 'RAPIDX' என்று பெயரிட்டுள்ளது.
- இந்த ரயில்கள் பிராந்திய விரைவுப் போக்குவரத்து அமைப்பு வழித் தடங்களில் இயக்கப் படும்.
- தேசியத் தலைநகர் மண்டலம் முழுவதும் உள்ள பல முக்கிய நகர்ப்புறப் பகுதிகளை இணைப்பதற்காக இது செயல்படுத்தப்படும்.
- தேசியத் தலைநகர் மண்டலப் போக்குவரத்துக் கழகம் (NCRTC) என்பது மத்திய அரசு மற்றும் டெல்லி, ஹரியானா, ராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய பல மாநிலங்கள் இடையிலான ஒரு கூட்டு நிறுவனமாகும்.





## மத்தியப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் ஒருங்கிணைந்த இணைய தளம்

- மத்தியப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் (CBN) ஒரு ஒருங்கிணைந்த இணைய தளத்தினை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது செயல்திறன் மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதோடு, மருந்துத் தொழில் துறையின் வர்த்தக உரிமம் பெறுவதற்கு ஆகும் நேரத்தைக் குறைக்கும்.
- இது செயலாக்க நேரத்தை மிகவும் கடுமையாக குறைத்துப் பிற பயனுள்ள வணிக நடவடிக்கைகளுக்கான வர்த்தக வளங்களைப் பாதுகாக்கும்.
- மத்தியப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவானது, ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு உடன்படிக்கைகள் மற்றும் 1985 ஆம் ஆண்டு போதைப் பொருள் மற்றும் மன நோய் சார்ந்த மருந்துகள் சட்ட விதிகளின் கீழ் போதை மருந்துகள், மன நோய் சார்ந்த மருந்துகள் மற்றும் முதன்மை நிலைப் பயன்பாட்டு இரசாயனங்கள் ஆகியவற்றின் சர்வதேச வர்த்தகத்தைக் கையாள்கிறது.


## இந்திய தீநிரல் அறிக்கை 2022

- 2022 ஆம் ஆண்டில் இந்தியாவில் பதிவான தீநிரல் தாக்குதல் சம்பவங்களில் 53 சதவீதம் அதிகரித்துள்ளது.
- இந்தியா 2022 ஆம் ஆண்டில் சுமார் 700,000 தீம்பொருள் தாக்குதல்களை எதிர் கொண்ட நிலையில் இது 2021 ஆம் ஆண்டில் 650,000 ஆக இருந்தது.
- ஆசிய பசிபிக் மற்றும் ஜப்பான் பிராந்தியத்தில், தீநிரல் தாக்குதல்களுக்கு அதிகம் குறி வைக்கப்படும் இரண்டாவது நாடாக இந்தியா இருந்தது.
- 2021 ஆம் ஆண்டில் அதிகத் தாக்குதலுக்கு உள்ளான மூன்றாவது நாடு இந்தியாவாகும்.
- 2022 ஆம் ஆண்டில் உலகளவில் மொத்தம் 14,983,271 தீநிரல் அச்சுறுத்தல்கள் பதிவாகி உள்ளன.
- ஆசியாவைக் குறி வைத்து நடத்தப்பட்ட 38.06% தாக்குதல்களில், இந்தியாவில் 10.51% தாக்குதல்கள் கண்டறியப் பட்டுள்ளன.




## விவசாயிகள் துயரக் குறியீடு

- மத்திய வறண்ட நில வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தின் (CRIDA) ஆராய்ச்சி நிபுணர்கள் ‘விவசாயிகளின் துயரக் குறியீடு’ என்ற முன்னெச்சரிக்கை அமைப்பினை உருவாக்கியுள்ளனர்.
- CRIDA என்பது இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் (ICAR) ஒரு அங்கமாகும்.
- 21 எளிய வினாக்களில் இந்தக் குறியீடு உருவாக்கப்பட்டுள்ள நிலையில் ஒவ்வொன்றும் மூன்று கேள்விகள் கொண்ட ஏழு தொகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது.
- இந்தக் கேள்விகளுக்கான பதில்களைப் பெறுவதன் மூலம், அவர்கள் பெரும் துயரத்தை அனுபவிக்கிறார்களா இல்லையா என்பதனை அறிய இயலும்.
- இந்தக் குறியீடானது, NABARD வங்கியின் நிதியுதவி பெறும் 'விவசாயிகளின் துயரம் தொடர்பான' திட்டம் மற்றும் பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜ்னா (PMFBY)' திட்டம் ஆகியவற்றின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டது.




## 50K-EV4ECO திட்டம்

- இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI) ஆனது 50K-EV4ECO திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இது மின்சார வாகனச் சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்துவதற்கான ஒரு சோதனை அடிப்படையிலான திட்டமாகும்.
- இது நேரடி மற்றும் மறைமுகக் கடன் வழங்கீடு மூலம் 2-சக்கர வாகனங்கள், 3-சக்கர வாகனங்கள் மற்றும் 4-சக்கர வாகனங்களை அதிகரிப்பதற்கான ஒரு திட்டமாகும்.
- இந்த திட்டமானது இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி-உலக வங்கியின் EVOLVE திட்டத்திற்கு ஒரு மாதிரியாகச் செயல்படுகிறது.




## விபத்து மேலாண்மைச் சேவைகள்

- சாலை விபத்துக்களைக் குறைப்பதற்காகவும் சாலைப் பயனாளர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காகவும் தனது மார்க்யூ விபத்து மேலாண்மைச் சேவைகளை (IMS) அனைத்துத் தேசிய நெடுஞ்சாலைகளுக்கும் விரிவுபடுத்துவதற்கு இந்திய அரசு திட்டம் ஒன்றைத் தீட்டியுள்ளது.

- இந்த முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, நெடுஞ்சாலைகளில் மருத்துவ அவசர ஊர்திகள், பளு தூக்கும் இயந்திரங்கள், பகல் இரவு என நாள் முழுவதுமான ரோந்து வாகனங்கள் நெடுஞ்சாலைகளில் நிலை நிறுத்தப்படும்.
- விபத்துக்குள்ளானவர்களின் உயிர்களைக் காப்பாற்றுவதில் ஒரு முக்கியச் சேவையான, விபத்துக்குப் பிந்தைய விரைவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திறன் கொண்ட திறமையான தொழிலாளர்களையும் இது கொண்டிருக்கும்.
- இந்தியாவில் 2021 ஆம் ஆண்டில் சாலை விபத்துக்கள் காரணமாக 156,000 உயிர் இழப்புகள் அல்லது ஒரு நாளைக்கு 457 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.
- இந்திய சாலைகளில் ஒவ்வொரு நிமிடத்திற்கும் ஒரு விபத்து மற்றும் ஒவ்வொரு நான்கு நிமிடங்களுக்கும் ஒரு உயிரிழப்பு என்ற அளவு பதிவாகின்றது.


## நீர்ப்பாசன நவீனமயமாக்கல் திட்டத்திற்கான ஆதரவு

- நீர்ப்பாசன நவீனமயமாக்கல் திட்டத்திற்கான ஆதரவு (SIMP) என்பது நீர்வளம், நதி மேம்பாடு மற்றும் கங்கைப் புத்துயிராக்கத் துறையினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு புதிய முன்னெடுப்பாகும்.
- ஆசிய மேம்பாட்டு வங்கியானது இதற்கான தொழில்நுட்ப உதவியினை வழங்குகிறது.
- இது நாட்டில் உள்ள பெரிய / நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களை (MMI) நவீன மயம் ஆக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நீர்ப்பாசன நவீனமயமாக்கல் திட்டத்திற்கான ஆதரவு முன்னெடுப்பானது 4 கட்டங்களாகச் செயல்படுத்தப்பட உள்ளது.
- இத்திட்டத்தின் நோக்கம்
    - நீர்ப் பயன்பாட்டுச் செயல் திறனை மேம்படுத்துதல்,
    - நீர்ப் பாசனத்தின் மூலமாக விளையும் பயிர் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும்
    - திட்டத்தின் முதன்மைப் பகுதியில் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல்.

## இந்தியாவின் மக்கள் தொகை

- இந்த ஆண்டின் மத்தியில், இந்தியாவின் மக்கள்தொகையானது சீனாவை விட அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள்தொகை நிதியத்தின் (UNFPA) வருடாந்திர உலக மக்கள் தொகை அறிக்கையின்படி, 2023 ஆம் ஆண்டின் மத்தியில் இந்தியாவின் மக்கள் தொகை 1,428 மில்லியனாக இருக்கும் என கூறப்படுகிறது.
- இது சீனாவின் 1,425 மில்லியன் என்ற அளவு மக்கள் தொகையை விட சற்று அதிகமாக இருக்கும்.
- 34 கோடி மக்கள் தொகையுடன் அமெரிக்கா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- மக்கள் தொகையில் 25 வயதிற்குட்பட்டவர்களின் எண்ணிக்கையானது, கிட்டத்தட்ட 50% சதவீதத்திற்கு அருகில் இருப்பதால், மக்கள்தொகை ஈவிலிருந்துப் பயனடைவதற்கான குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட வாய்ப்பினை இந்தியா கொண்டுள்ளது.

- 2050 ஆம் ஆண்டில், கணிக்கப்பட்ட உலக மக்கள்தொகையில் பாதி அளவு வளர்ச்சி என்பது எட்டு நாடுகளில் மட்டுமே பதிவாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- அவை: காங்கோ ஜனநாயகக் குடியரசு, எகிப்து, எத்தியோப்பியா, இந்தியா, நைஜீரியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் மற்றும் தான்சானியா ஐக்கியக் குடியரசு ஆகியனவாகும்.
- மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தற்போது, வாழ்நாள் கருவுறுதல் வீதத்தில் எவ்வித அதிகரிப்பும் இல்லாத நாடுகளில் வாழ்கின்றனர்.




## தேசிய குவாண்டம் திட்டம்



- 6,003 கோடி ரூபாய் மதிப்பிலான எட்டு ஆண்டு கால அளவிலான தேசிய குவாண்டம் (துளிமம்) திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது குவாண்டம் தொழில்நுட்பத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணியில் ஈடுபட்டுள்ள ஆறு முன்னணி நாடுகளின் பட்டியலில் இந்திய நாட்டினை இடம் பெறச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அமெரிக்கா, சீனா, பிரான்சு, ஆஸ்திரியா மற்றும் பின்லாந்து ஆகிய 5 நாடுகள் குவாண்டம் தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையில் மட்டுமே உள்ளன, என்றாலும், இந்தத் தொழில்நுட்பத்தின் பெரும் பயன்பாட்டு நிலைக்கு அவை இன்னும் முன்னேறவில்லை.
- குவாண்டம் தொழில்நுட்பம் என்பது புதிய தொழில்நுட்பங்களின் உருவாக்கத்திற்கு குவாண்டம் இயக்கவியலின் கொள்கைகளை ஆய்வு செய்து பயன்படுத்தச் செய்கின்ற இயற்பியல் மற்றும் பொறியியலின் ஒரு துறையாகும்.
- இயற்பியலின் வழக்கமான விதிகள் பொருந்தாத பருப்பொருள் மற்றும் அதன் ஆற்றல் ஆகியவற்றின் செயல்பாடுகளை மிகத் துல்லியமாக நன்கு விவரிக்கச் செய்கிற குவாண்டம் இயக்கவியல் என்பது இயற்பியலின் ஒரு உட்பிரிவாகும்.
- குவாண்டம் தொழில்நுட்பமானது குவாண்டம் கணினி முறை, குவாண்டம் மறை குறியாக்கம் மற்றும் குவாண்டம் உணர்வியல் போன்ற பல்வேறு வகையான தொழில் நுட்பங்களை உள்ளடக்கியது.

## பழங்குடியினர்களின் தயாரிப்புப் பொருட்களை ஊக்குவிப்பதற்கான திட்டம்




- மத்தியப் பழங்குடியினர் விவகார அமைச்சகமானது, 'வடகிழக்குப் பிராந்தியத்தினைச் சேர்ந்த பழங்குடியினரின் தயாரிப்புப் பொருட்களை ஊக்குவிப்பதற்கான சந்தைப் படுத்துதல் மற்றும் தளவாட மேம்பாடு' (PTP-NER) என்ற ஒரு திட்டத்தினைத் தொடங்கி உள்ளது.
- மத்திய அரசின் நிதியுதவியினைப் பெறும் இந்தத் திட்டமானது தனிநபர்களைச் சுய தொழில் கொண்ட மற்றும் சுயசார்புடைய நபர்களாக மாற்றுவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வடகிழக்குப் பிராந்தியத்தைச் சேர்ந்த பழங்குடியினர்களின் தயாரிப்பு பொருட்களின் மதிப்பு கூட்டல் மற்றும் சந்தைப்படுத்துதலை இது மேம்படுத்தும்.

## விலங்குகளுக்கான கருத்தடை விதிகள் - 2023

- ❖ 1960 ஆம் ஆண்டு விலங்குகள் வதை தடுப்புச் சட்டத்தின் கீழ், 2023 ஆம் ஆண்டு விலங்குகளுக்கான கருத்தடை விதிகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- ❖ இது 2001 ஆம் ஆண்டு விலங்குகளுக்கான கருத்தடை (நாய்களுக்கான) விதிகளுக்கு மாற்றாக முன் வைக்கப் படுகிறது.
- ❖ இந்த விதிகளின்படி, தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசி போடுதல் ஆகியவற்றினை உள்ளடக்கிய விலங்குகளுக்கான கருத்தடைத் திட்டமானது, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் / நகராட்சிகள் / மாநகராட்சிக் கழகங்கள் மற்றும் ஊராட்சிகள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- ❖ மாநகராட்சிக் கழகங்கள் விலங்குகளுக்கான கருத்தடைத் திட்டம் மற்றும் ரேபிஸ் தடுப்பு திட்டம் ஆகியவற்றினை ஒருங்கே செயல்படுத்த வேண்டும்.
- ❖ ஒரு பகுதியிலிருந்து மற்றொருப் பகுதிக்கு நாய்களை இடமாற்றம் செய்யாமல், மனிதர்கள் மற்றும் தெருநாய்கள் ஆகியோருக்கு மத்தியிலான சிக்கல்களை எவ்வாறு கையாள்வது என்பதற்கான வழிகாட்டுதல்களையும் இந்த விதிகள் வழங்குகிறது.





## இராணுவத் தளபதிகள் மாநாடு

- ❖ ஆண்டிற்கு இரண்டு முறை நடைபெறக் கூடிய இராணுவத் தளபதிகள் மாநாட்டின் (ACC) 2023 ஆம் ஆண்டிற்கான முதல் மாநாடானது சமீபத்தில் நடைபெற்றது.
- ❖ இந்த மாநாடானது முதன்முறையாக கலப்பு (நேரடி + காணொளி) வடிவில் நடத்தப் பட்டது.

- இது படையின் செயல்பாடு சார்ந்தத் தயார்நிலையை மறுமதிப்பீடு செய்ததோடு, தற்போதைய மற்றும் அதிகரித்து வரும் பாதுகாப்புச் சூழ்நிலைகள் குறித்த ஒரு கருத்தரங்கத்தினையும் மேற்கொண்டது.

## இந்தியாவில் உள்ள நீர்நிலைகள் குறித்த கணக்கெடுப்பு

- ஜல் சக்தித் துறை அமைச்சகமானது, தனது முதலாவது நீர்நிலைகள் கணக்கெடுப்பு அறிக்கையினைச் சமீபத்தில் வெளியிட்டது.
- இந்தக் கணக்கெடுப்பானது 2018-19 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டதோடு, இந்தியாவில் இது போன்ற ஒரு கணக்கெடுப்பு நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- இது இந்தியாவில் உள்ள குளங்கள், கண்மாய்கள், ஏரிகள் மற்றும் நீர்த் தேக்கங்கள் பற்றியத் தகவல்களை வழங்குகின்ற நீர்நிலைகளின் தரவுத்தளமாகும்.




- இந்தியாவில் குளங்கள், கண்மாய்கள், ஏரிகள் போன்ற 24.24 லட்சம் நீர்நிலைகள் உள்ளன.
- இவற்றுள் 97.1% (23,55,055) நீர்நிலைகள் கிராமப்புறங்களிலும், வெறும் 2.9% (69,485) நீர் நிலைகள் நகர்ப்புறங்களிலும் உள்ளன.
- மேற்கு வங்காள மாநிலத்தில் அதிக (7.47 லட்சம்) எண்ணிக்கையிலும், சிக்கிம் (134) மாநிலத்தில் குறைவான எண்ணிக்கையிலும் நீர்நிலைகள் உள்ளன.
- மொத்த நீர்நிலைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் முதல் ஐந்து இடங்களில் உள்ள மாநிலங்கள் மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், ஒடிசா மற்றும் அசாம் ஆகியனவாகும்.
- நாட்டின் மொத்த நீர்நிலைகளில் அவை 63 சதவீதத்தைக் கொண்டுள்ளன.
- நகர்ப்புறங்களில் உள்ள நீர்நிலைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் முதல் ஐந்து இடங்களிலுள்ள மாநிலங்கள் மேற்கு வங்காளம், தமிழ்நாடு, கேரளா, உத்தரப் பிரதேசம் மற்றும் திரிபுரா ஆகியனவாகும்.
- கிராமப் புறங்களில் உள்ள நீர்நிலைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் முதல் ஐந்து இடங்களிலுள்ள மாநிலங்கள் மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், ஒடிசா மற்றும் அசாம் ஆகியனவாகும்.
- இதன் படி மொத்த நீர்நிலைகளில் 59.5 சதவீதம் குளங்களாகவும், அதைத் தொடர்ந்து கண்மாய்கள் (15.7 சதவீதம்), நீர்த்தேக்கங்கள் (12.1 சதவீதம்), நீர்ப் பாதுகாப்புக் கட்டமைப்புகள் /உட்கசிவு நீர்த்தேக்க அமைப்புகள்/தடுப்பணைகள் (9.3 சதவீதம்), ஏரிகள் (0.9 சதவீதம்) மற்றும் பிற ( 2.5 சதவீதம்) நீர்நிலைகளாகவும் உள்ளன.

- இதில் 55.2 சதவீத நீர்நிலைகள் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமானவை என்றும், 44.8 சதவீத நீர்நிலைகள் பொது உடைமையின் கீழ் (அரசுக் கட்டுப்பாட்டின் கீழ்) இருப்பதும் கண்டறியப்பட்டது.

## சிறுதானிய முன்னெடுப்பு – MAHARISHI





- மூன்று நாட்கள் அளவிலான 12வது வேளாண் தலைமை அறிவியலாளர்களின் (MACS) சந்திப்பானது வாரணாசியில் நடைபெற்றது.
- 2023 ஆம் ஆண்டு வேளாண் தலைமை அறிவியலாளர்களின் (MACS) சந்திப்பின் மீதான கருத்துரு, ஆரோக்கியமான மக்கள் மற்றும் வளமான கிரகத்திற்கான நிலைத்தன்மை மிக்க வேளாண்மை மற்றும் உணவு முறைகள் என்பதாகும்.
- இந்த நிகழ்வின் போது, இந்தியா "சிறு தானிய மற்றும் பிற பழங்கால தானியங்கள் பற்றிய சர்வதேச ஆராய்ச்சி முன்னெடுப்பு (MAHARISHI)" என்ற ஒரு முன்மொழிதலைத் தாக்கல் செய்தது.
- சர்வதேச சிறு தானியங்கள் ஆண்டான 2023 ஆம் ஆண்டின் போதும் அதற்குப் பிறகும், சிறு தானியங்கள் தொடர்பான ஆராய்ச்சி ஒத்துழைப்பை மேம்படுத்துவது மற்றும் சிறு தானியங்கள் மற்றும் பிற பழங்கால தானியங்கள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## UDAN திட்டத்தின் ஐந்தாவது சுற்று

- UDAN எனப்படும் பிராந்திய விமானச் சேவை வழங்கீட்டுத் திட்டத்தின் ஐந்தாவது சுற்றினை அரசாங்கம் தொடங்கியுள்ளது.
- இது நாட்டின் தொலைதூர மற்றும் பிராந்திய பகுதிகளுக்கான விமானச் சேவை வழங்கீட்டினை மேலும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தச் சுற்றில் வகை-2 (20-80 இருக்கைகள் கொண்ட விமானங்கள்) மற்றும் வகை-3 (80க்கும் அதிகமான இருக்கைகள் கொண்ட விமானங்கள்) ஆகியவற்றின் விமானச் செயல்பாடுகள் மட்டுமே உள்ளடங்கும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், சேவை தூரமானது 600 கி.மீ. வரை மட்டுமே என்று விதிக்கப்பட்டு இருந்த வரம்பானது விலக்கப்பட்டதோடு, இதில் விமானத்தின் தொடக்க இடம் மற்றும் சென்றடையும் இடங்களுக்கு இடையேயான தூரத்திற்கு எந்த வரம்பும் இல்லை.




## தவறான தகவல் வழங்கீட்டினை எதிர்ப்பதற்கான கூட்டணி

- தவறான தகவல் வழங்கீட்டினை எதிர்ப்பதற்கான கூட்டணி என்பது 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அமைக்கப்பட்ட ஊடக நிறுவனங்களின் ஒரு கூட்டணியாகும்.
- இது தவறான தகவல் வழங்கீடுகளை எதிர்த்துப் போராடுவதையும் உண்மைத் தகவல் குறித்தச் சரிபார்ப்புச் செயல்முறைக்கு உதவும் கருவிகளை உருவாக்கச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.




- சமீபத்தில், 2021 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப விதிகளுக்கு இணங்கிட வேண்டி இயங் கலையில் வெளியாகும் போலிச் செய்திகளைக் கண்டறிந்துக் கட்டுப்படுத்தச்

செய்வதற்கான ஒரு சுயக் கட்டுப்பாட்டு அமைப்பாகச் செயல்படுவதற்கு ஒரு அனுமதி கோரி அரசாங்கத்தினை இது அணுகியுள்ளது.

- இது தற்போது பூம் லைவ், ஃபேக்ட்லி, தி லாஜிக்கல் இந்தியன், விஸ்வாஸ் நியூஸ் மற்றும் தி குயின்ட் போன்ற செய்தி வெளியீட்டு ஊடகங்கள் போன்ற 14 எண்ணிமச் செய்தி வெளியீட்டு நிறுவனங்களின் கூட்டமைப்பாக உள்ளது.
- தவறான தகவல் வழங்கீட்டினை எதிர்ப்பதற்கான கூட்டணியில், உறுப்பினராவதற்கு விண்ணப்பிக்க எந்தவொரு நிறுவனத்திற்கும் வாய்ப்பு உண்டு.

## 10,000 கி.மீ. தொலைவிற்கான ஒளியிழை வடங்கள்

National Highways Authority of India

- இந்தியத் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையமானது, 2025 ஆம் நிதியாண்டிற்குள் இந்தியா முழுவதும் 10,000 கி.மீ. தொலைவிற்கு ஒளியிழை வடங்களை நிறுவ உள்ளது.
- இந்த நடவடிக்கையானது, தொலைதூர இடங்களுக்கு இணையச் சேவை இணைப்பை வழங்கச் செய்வதையும், 5G மற்றும் 6G போன்ற புதுயுகத் தொலைத்தொடர்பு தொழில் நுட்பங்களின் செயலாக்கத்தினைத் துரிதப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- தேசிய நெடுஞ்சாலைகள் தளவாடங்கள் மேலாண்மை லிமிடெட் (NHLML) என்ற நிறுவனமானது, எண்ணிமச் சேவை சார்ந்த நெடுஞ்சாலைகளின் வலையமைப்பைச் செயல்படுத்த உள்ளது.
- டெல்லி-மும்பை விரைவு வழித் தடச் சாலையில் சுமார் 1,367 கிமீ தூரத்தினையும், ஹைதராபாத்-பெங்களூரு வழித்தடத்தில் 512 கி.மீ. தூரத்தினையும் சோதனைமுறை அமலாக்கத்திற்கான சில பாதைகளாக இந்தியத் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் அடையாளம் கண்டுள்ளது.


## ஆசியாவின் மிக நீளமான நீரடி ஹைட்ரோகார்பன் குழாய் இணைப்பு

- ஆசியாவின் மிக நீளமான நீரடி ஹைட்ரோகார்பன் குழாய் இணைப்பு ஆனது பிரம்மபுத்திரா ஆற்றிற்கு அடியில் அமைக்கப் பட்டுள்ளது.
- உலகின் இரண்டாவது நீளமான இந்தக் குழாய் இணைப்பானது, மஜூலி என்ற நதிக் கரைத் தீவினை மேல் அசாமில் உள்ள ஜோர்ஹாட் என்ற பகுதியுடன் இணைக்கிறது.
- 24 அங்குல விட்டம் மற்றும் 5780 மீட்டர் நீளமுள்ள இந்தக் குழாய் பதிக்கும் பணியினை இந்திர தனுஷ் வாயு விநியோகக் கட்டமைப்பு லிமிடெட் (IGGL) நிறுவனமானது நிறைவு செய்தது.




## ஆளுநர்களுக்கான உச்ச நீதிமன்ற உத்தரவு

- இந்திய உச்ச நீதிமன்றம் அரசியலமைப்புச் சட்டத்தின் 200வது பிரிவைக் கவனத்தில் கொள்ளுமாறு ஆளுநர்களுக்கு நினைவூட்டியுள்ளது.
- இந்தச்சரத்து மசோதாகளுக்கு அவர்கள் "முடிந்தவரை விரைவில்" ஒப்புதல் அளிக்க வேண்டும் அல்லது மசோதாக்களைத் திருப்பி அனுப்ப வேண்டும் என கட்டளை இடுகிறது.
- இங்கு 'முடிந்த வரை விரைவில்' என்ற சொற்றொடர் குறிப்பிடத்தக்க உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது எனவும் இதை அனைத்து அரசியலமைப்புசார் அதிகாரிகளும் மனதில் வைத்து கொள்ள வேண்டும் எனவும் கூறியுள்ளது.
- தெலுங்கானா மாநிலம் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இருந்து அம்மாநில ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப் பட்ட பல முக்கியமான மசோதாக்களை தனது நிலுவையில் வைத்து இருப்பதாக புகார் தெரிவித்து தாக்கல் செய்த மனுவின் மீதான, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் ஒரு பகுதியாக இது உள்ளது.



**GOVTS CAN'T BE AT GUV'S MERCY: T'GANA**

➤ Telangana government **seeks timeline for governors to respond on bills sent to them,** complaining that governor Tamilisai Soundarajan (pic) was sitting for long on 10 bills passed by the assembly

➤ SC refers to Article 200 of the Constitution that says "provided that the governor may, **as soon as possible** after the presentation to him of the bill for assent, return the bill if it is not a money bill together with a message requesting that the House or Houses will reconsider the bill..."

➤ Solicitor general Tushar Mehta protests, saying governor's office had informed SC that **no bills are pending**

➤ **Telangana counsel presses for "general ruling"** on delays by governors, saying, "The elected governments in states cannot be put at the governor's mercy"

## 100 உணவுத் தெருக்கள்

- மத்திய சுகாதார அமைச்சகம் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்துடன் இணைந்து நாடு முழுவதும் 100 மாவட்டங்களில் 100 உணவுத் தெருக்களை உருவாக்கச் செய்யுமாறு மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.
- நாடு முழுவதும் சுகாதாரமான மற்றும் பாதுகாப்பான உணவு நடைமுறைகளை உறுதி செய்வதற்காக இது போன்று பல தெருக்களை உருவாக்கச் செய்வதற்கு இது ஒரு முன் மாதிரியாக இருக்கும்.
- இந்தத் திட்டத்தின் நோக்கம் உணவு வணிகங்கள் மற்றும் சமூக உறுப்பினர்களிடையே பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களை ஊக்குவிப்பதாகும்.
- தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் இதற்கு 60:40 அல்லது 90:10 என்ற விகிதத்தில் நிதி உதவி வழங்கப் படும்.

## 2015 முதல் 2022 ஆம் ஆண்டு வரை பதிவான மலேரியா பாதிப்புகள்




- இந்தியாவில் 2015 முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தின் போது, மலேரியா பாதிப்புகளில் 85.1 சதவீதம் சரிவும் மற்றும் மலேரியா நோயால் ஏற்படும் இறப்புகளில் 83.36 சதவீதம் சரிவும் ஏற்பட்டுள்ளது.
- தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் அதிக நோய்ப் பாதிப்பு சுமை, அதிகளவு பாதிக்கப் பட்ட ஒரே நாடாக இந்தியா இருந்தது.
- 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு ஆசிய உச்சி மாநாட்டில் ஆசிய-பசிபிக் பிராந்திய தலைவர்கள் கூட்டணியின் மலேரியா ஒழிப்பிற்கான ஒரு செயல் திட்டத்திற்கு இந்தியா ஒப்புதல் அளித்தது.
- இது 2030 ஆம் ஆண்டிற்குள் மலேரியா அற்ற நாடாக மாறும் ஒரு முயற்சியினை மேற் கொள்வதற்கான ஊக்கத்தினை இந்தியாவிற்கு அளித்தது.

## துடிப்பான கிராமங்கள் திட்டத்துடன் பிரதமரின் கதி சக்தி ஒருங்கிணைப்பு

- சீன எல்லைப் பகுதியின் துடிப்பான கிராமங்கள் திட்டத்துடன் பிரதமரின் கதிசக்தி என்ற மெகா திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது.
- உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் கிராமங்களை நோக்கி சுற்றுலாப் பயணிகளை வருகையை ஊக்குவித்தல் ஆகியவற்றை இந்தத் துடிப்பான கிராமங்கள் திட்டம் (VVP) நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தத் திட்டமானது (VVP) எல்லையோர மக்களின் குடிவெளியேற்றத்தைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது
- கதி சக்தி மெகா திட்டத் தளத்தின் ஒரு பகுதியாக VVP இருக்கும்.
- ஒருங்கிணைந்தத் திட்டமிடல் மற்றும் உள்கட்டமைப்பு இணைப்புத் திட்டங்களை ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதற்காக ரயில்வே மற்றும் சாலைகள் உட்பட 16 அமைச்சகங்களை கதி சக்தியின் டிஜிட்டல் தளமானது ஒன்றிணைக்கிறது.
- பாரத்மாலா, சாகர்மாலா, உள்நாட்டு நீர்வழிகள், உலர்/நிலத் துறைமுகங்கள், உடான் போன்ற பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசுகளின் உள்கட்டமைப்புத் திட்டங்களை இது ஒருங்கிணைக்கிறது.




## இந்தியா-சீனா எல்லையில் 'முதல் கிராமம்' பலகை

- மானா கிராமத்தில் 'இந்தியாவின் முதல் கிராமம்' என்ற பலகையை இந்திய எல்லைச் சாலை அமைப்பு (BRO) வைத்துள்ளது.
- இது சீனாவை ஒட்டிய வட இந்திய மாநிலமான உத்தரகாண்டில் அமைந்துள்ளது.
- இந்த கிராமமானது இந்தியா-சீனா எல்லையில் உள்ள சாமோலி மாவட்டத்தில் உள்ளது.



## இந்தியாவின் முதல் நடமாடும் ஆய்வகம் BSL-3

- கோவாவில் நடைபெற்ற ஜி20 சுகாதாரப் பணிக்குழுக் கூட்டத்தில் RAMBAAN என்ற இந்தியாவின் முதல் நடமாடும் ஆய்வகம் BSL-3 காட்சிப்படுத்தப்பட்டது.
- இந்த நடமாடும் ஆய்வகமானது BSL-3 விரைவான நடவடிக்கை மற்றும் மேம்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட வலையமைப்புடன் இந்தியாவிலே தயாரிக்கப் பட்டது.
- இது தொற்றுநோய்த் தயார்நிலைக்கான இந்தியாவின் முதல் அதிநவீன சுகாதார உள் கட்டமைப்பாக உள்ளது.
- இதன்படி தொலைதூரப் பகுதிகளுக்குச் சென்று சோதனையை மேற்கொள்ள இதைப் பயன்படுத்தலாம்.
- இந்தப் பேருந்தில் உள்ள ஜிபிஎஸ் தொழில்நுட்பம் சோதனை அறிக்கையை உடனடியாக அனுப்புவதற்கு அனுமதிக்கிறது.



# சர்வதேசச் செய்திகள்

## புருண்டி நாட்டில் போலியோ பாதிப்புகள்

- கிழக்கு-ஆப்பிரிக்காவின் நிலங்களால் சூழப்பட்ட புருண்டி நாட்டில் 30 ஆண்டுகளில் முதல் முறையாக போலியோ தொற்று ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டின் சுகாதாரத் துறை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.
- இப்பகுதியில் இருந்து வரும் கழிவுநீரில் சுற்றுச்சூழல் கண்காணிப்பில் இருந்து பெறப் பட்ட ஐந்து மாதிரிகளில் 2 ஆம் வகை போலியோ வைரஸ் இருப்பது உறுதி செய்யப் பட்டது.
- வாய்வழி போலியோ தடுப்பு மருந்துகளில் உள்ள வைரஸின் பலவீனமான திரிபு (மாற்றுருவானது) ஆனது, நீண்ட காலமாக நோய்த்தடுப்புத் திறன் பெறாத மக்களிடையே பரவும் போது 2 ஆம் வகை போலியோ வைரஸ் தொற்று ஏற்படலாம்.
- ஐந்து வயதிற்குட்பட்டக் குழந்தைகளை அதிகம் பாதிக்கும் இந்த நோய்க்கு எந்த விதமான சிகிச்சையும் தற்போது வரையில் இல்லை.




## இன்டர்ஃப்ளெக்ஸ் நடவடிக்கை

- பிரிட்டன் மற்றும் அதன் ஒன்பது பங்குதார நாடுகள் இன்டர்ஃப்ளெக்ஸ் என்ற ஒரு நடவடிக்கையின் கீழ் உக்ரேனிய இராணுவத்தில் சேர்க்கப்பட்ட வீரர்களுக்குப் பயிற்சி அளித்து வருகின்றன.
- இது உக்ரைனின் ஆயுதப் படைகளுக்குப் பயிற்சி அளித்து ஆதரவளிக்கும் பிரிட்டன் தலைமையிலான பன்னாட்டு இராணுவ நடவடிக்கையாகும்.
- இது ஆயுதங்களைக் கையாளுதல், பல்வேறு இராணுவச் செயல்பாடு, துப்பாக்கிச் சுடுதல் திறன், இராணுவக் கள ஆய்வுத் தொழில்நுட்பங்கள், களம் சார்ந்த உத்திகள், போர்க்கள விபத்து சார்ந்தப் பயிற்சிகள், வெடிமருந்து எதிர்ப்பு அமைப்புகள், ஆயுத மோதல் சட்டங்கள், முதலுதவி மற்றும் இணையப் பாதுகாப்பு விழிப்புணர்வு ஆகிய கருத்துக்கள் குறித்து கற்பிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முன்னதாக 2015 ஆம் ஆண்டில், ஆர்பிட்டல் நடவடிக்கையின் கீழ், பிரிட்டன் இராணுவம் ஆனது உக்ரைனின் ஆயுதப் படைகளுக்கு பயிற்சி அளித்து ஆதரவு அளித்தது.
- ஆனால் இதன் முந்தைய வடிவங்களைப் போலல்லாமல், இந்த இன்டர்ஃப்ளெக்ஸ் நடவடிக்கையானது ஐக்கியப் பேரரசு நாட்டினைச் சுற்றி மட்டுமே நடக்கிறது.



## BRICS வங்கியில் எகிப்து உறுப்பினராக இணைவு

- BRICS அமைப்பின் புதிய மேம்பாட்டு வங்கியில் (NDB) எகிப்து உறுப்பினராக இணைந்து உள்ளது.
- புதிய மேம்பாட்டு வங்கி என்பது 2014 ஆம் ஆண்டில் BRICS அமைப்பின் உறுப்பினர் நாடுகளால் இணைந்து நிறுவப்பட்ட பலதரப்பு மேம்பாட்டு வங்கி ஆகும்.
- BRICS நாடுகள் மற்றும் பிற பின்தங்கிய, வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள உள் கட்டமைப்பு மற்றும் நிலையான மேம்பாடு சார்ந்த பல முன்னெடுப்புகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் இது உருவாக்கப்பட்டது.
- வங்காளதேசம், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் உருகுவே ஆகிய நாடுகள் 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இந்தப் புதிய மேம்பாட்டு வங்கியில் உறுப்பினராக இணைந்தன.





## இந்தோனேசியாவின் தலைநகர் மாற்றம்

- ஜகார்த்தா நகரமானது நெரிசல் மிக்கதாகவும், மாசுபாடு நிறைந்ததாகவும், அவ்வப் போது நிலநடுக்கத்தினால் பாதிக்கப்படுகின்றதாகவும் மற்றும் விரைவாக ஜாவா கடலில் மூழ்கும் அபாயம் கொண்டதாகவும் உள்ளது.
- இது உலகிலேயே மிகவும் விரைவாகக் கடலில் மூழ்கி வரும் நகரம் என்று குறிப்பிடப் படுகிறது.
- தற்போதைய நிலவரப்படி, 2050 ஆம் ஆண்டில் இந்த நகரின் மூன்றில் ஒரு பகுதி நீரில் மூழ்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இதனால், தற்போது அந்நாட்டு அரசாங்கமானது, இந்தோனேசியாவின் தலைநகரைப் போர்னியோ தீவுக்கு மாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது.
- இந்தோனேசியாவின் சுதந்திரத் தினத்துடன் ஒன்றும் வகையில் அடுத்த ஆண்டு ஆகஸ்ட் 17 ஆம் தேதியன்று இந்த நகரம் தலைநகரமாகச் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.





## ஜப்பானின் சுதந்திரமான மற்றும் தடையற்ற இந்திய-பசிபிக் கொள்கை

- ஜப்பானின் பிரதமர் கிஷிடா அவர்கள் சுதந்திரமான மற்றும் தடையற்ற இந்திய-பசிபிக் கொள்கைக்கான ஜப்பானியத் திட்டத்தை வெளியிட்டார்.
- முதல் அம்சமானது அமைதிக்கான கொள்கைகள் மற்றும் செழுமைக்கான விதி முறைகள் பற்றியதாகும்.
- இரண்டாவது, இந்திய-பசிபிக் பகுதியில் உள்ள சவால்களை எதிர்கொள்வது குறித்து வலியுறுத்துகிறது.
- மூன்றாவது அம்சமானது பல்லடுக்கு இணைப்பில் கவனம் செலுத்துகிறது.
- கடைசி அம்சமானது "கடல் பரப்பு" மற்றும் "வான்வெளி" ஆகியவற்றின் பாதுகாப்பான பயன்பாட்டிற்கான முயற்சிகளை விரிவுபடுத்துகிறது.
- இந்தக் கொள்கையின் ஒரு பகுதியாக வங்காளதேசத்தில் உள்ள மாதர்பாரி என்ற ஒரு துறைமுகத்தினை ஜப்பான் அரசு மேம்படுத்த உள்ளது.



## சவுதி-ஈரான் போர் நிறுத்தம்

- ஈரான் மற்றும் சவூதி அரேபியா இடையில் ஒரு போர் நிறுத்தத்தை ஏற்படுத்தும் ஒரு முயற்சியில் சீனா வெற்றி பெற்றுள்ளது.
- அந்த இரு நாடுகளும் பெய்ஜிங் நகரில் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதோடு அரசு முறை உறவுகளை மீண்டும் நிறுவச் செய்வதற்கும் ஒப்புக் கொண்டன.
- கடந்த தசாப்தத்தில், அரேபிய வசந்தத்தினை அடுத்து ஈரான் மற்றும் சவூதி அரேபியா ஆகிய இரு நாடுகளும் பல்வேறு அதிகார மோதல்களில் ஈடுபட்டுள்ளன.



## தேசிய ஜனநாயகக் கட்சி – மியான்மர்




- மியன்மாரின் இராணுவ அரசாங்கமானது, அதன் அரசியல் எதிரிகளை முடக்கச் செய்வதற்கான அதன் தொடர் பிரச்சாரத்தில் மற்றொரு முக்கிய அடியை எடுத்து வைத்துள்ளது.
- அடுத்து வரப்போகும் தேர்தலையொட்டிப் பதிவு செய்வதற்கு அளிக்கப்பட்ட காலக் கெடுவினைத் தாண்டியதால் முன்னதாகப் பதவி நீக்கப்பட்ட தலைவர் ஆங் சான் சூகியின் தேசிய ஜனநாயகக் கட்சி உட்பட 40 எதிர்க்கட்சிகளை அது கலைத்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கட்சி மகத்தான வெற்றியைப் பெற்றது.

- ஆனால் 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களையும் பாராளுமன்றத்தில் அவர்களதுப் பொறுப்பினை ஏற்கவிடாமல் தடுத்து, இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது.
- தேசிய ஜனநாயகக் கட்சியானது, இராணுவ ஆட்சிக்கு எதிராக எழுந்த கிளர்ச்சி தோல்வியடைந்ததையடுத்து 1988 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

## சினியா தீவு


- ஐக்கிய அரபு அமீரகத்தின் சினியா தீவில் உள்ள பழமையான முத்து நகரத்தை தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இது இந்தப் பகுதியின் பழமையான முத்து நகரமாக இருக்கும் என்று நம்பப் படுகிறது.
- ஆறாம் நூற்றாண்டின் இறுதிக் காலக்கட்டத்திலும், கி.பி. எட்டாம் நூற்றாண்டின் நடுப் பகுதிக்கு இடைப்பட்ட காலத்திலும் இந்த நகரம் செழித்துக் காணப்பட்டது.
- இந்த தீவானது பாரசீக வளைகுடாவில் உள்ள உம்முல் குவைன் அமீரகத்தில் அமைந்து உள்ளது.




## அஜர்பைஜான் மற்றும் தஜிகிஸ்தான் - மலேரியா இல்லாத நாடுகள்

- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது, அஜர்பைஜான் மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளை மலேரியா இல்லாத நாடுகள் என்று அறிவித்துச் சான்றளித்துள்ளது.
- இந்தச் சான்றிதழானது, இந்த இரு நாடுகளிலிருந்து மலேரியா நோயினை முற்றிலுமாக அழிப்பதற்காக அந்நாடுகள் மேற்கொண்ட நூற்றாண்டு காலத் தொடர் முயற்சியைத் தொடர்ந்து கிடைக்கப் பெற்றுள்ளது.
- மலேரியா ஒழிப்புச் சான்றிதழானது, ஒரு நாட்டில் மலேரியா நோய் இல்லாத நிலையை உலக சுகாதார அமைப்பானது அதிகாரப்பூர்வமாக அங்கீகரிப்பதாகும்.
- இந்த நிலையினை எய்துவதற்காக, அனோபிலிஸ் வகை கொசுக்களால் பரவும் மலேரியாவின் தொற்றுச் சங்கிலியானது, குறைந்தது மூன்று ஆண்டுகளாக நாடு முழுவதும் தடுக்கப்பட்டது.

- உள்நாட்டில் பரவும் பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் (பி.வைவாக்ஸ்) மலேரியாவின் கடைசிப் பாதிப்பானது அஜர்பைஜான் நாட்டில் 2012 ஆம் ஆண்டிலும், தஜிகிஸ்தான் நாட்டில் 2014 ஆம் ஆண்டிலும் பதிவானது.
- இந்த அறிவிப்பின் மூலம், மொத்தம் 41 நாடுகளும் 1 பிரதேசமும் மலேரியா இல்லாத நாடுகள் என்ற உலக சுகாதார அமைப்பின் சான்றிதழினைப் பெற்றுள்ளன.
- இதில் இடம் பெற்றுள்ள 21 நாடுகள் ஐரோப்பியப் பிராந்தியத்தைச் சேர்ந்தவை ஆகும்.




## மார்பர்க் வைரஸ் நோய் – தான்சானியா

- தனது நாட்டில், கொடிய மார்பர்க் வைரஸ் நோயின் முதலாவது பாதிப்பு பதிவு செய்யப் பட்டுள்ளதாக தான்சானியா அரசு அறிவித்துள்ளது.
- மார்பர்க் வைரஸ் நோயானது முதன்முதலில் 1967 ஆம் ஆண்டில் ஜெர்மனியின் மார்பர்க் மற்றும் பிராங்பர்ட் மற்றும் செர்பியாவின் பெல்கிரேடு ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப் பட்டது.




- இது எபோலாவினை ஏற்படுத்தும் வைரசினுடைய அதே "வைரஸ் குடும்பத்தினை" சேர்ந்தது ஆகும்.
- இது கடுமையான தீநுண்மக் குருதிப் போக்குக் காய்ச்சலினை ஏற்படுத்துவதோடு, இந்நோயின் இறப்பு விகிதம் ஆனது 24% முதல் 88% வரை என மாறுபடுகிறது.

- இது கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து பல பெருந்தொற்றுகள் ஏற்பட்டுள்ள நிலையில், அவற்றுள் 2004-2005 ஆம் ஆண்டில் அங்கோலாவில் ஏற்பட்ட பெருந்தொற்றில் 227 பேர் உயிரிழந்தனர்.
- இந்த வைரஸ் ஆனது ஆரம்பத்தில் பழம் உண்ணும் வௌவால்களிலிருந்து மக்கள் மத்தியில் பரவுகிற நிலையில், அதற்குப் பிறகு உடல் திரவங்கள் அல்லது மாசுபட்டப் பொருட்களின் மூலம் ஒருவரிடமிருந்து மற்றொரு நபருக்குப் பரவுகிறது.

## பசிபிக் பிராந்திய அளவிலான ஒப்பந்தத்தில் பிரிட்டன் இணைவு


- 11 நாடுகள் அடங்கிய பசிபிக் பிராந்திய அளவிலான கூட்டாண்மைக்கான விரிவான மற்றும் முற்போக்கு ஒப்பந்தத்தில் (CPTPP) இணைவதற்கு ஐக்கியப் பேரரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறிய பிறகு, அந்தப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடனான உறவுகளை அதிகரிக்கச் செய்யவும், அதன் உலகளாவிய வர்த்தக இணைப்புகளை மேம்படுத்தவும் ஐக்கிய இராட்சியம் முயல்கிறது.
- CPTPP என்பது முந்தைய பசிபிக் பிராந்திய அளவிலான வர்த்தக ஒப்பந்தத்தின் வழியே அடுத்ததாக உருவாக்கப்பட்ட ஒரு ஒப்பந்தம் ஆகும்.
- இதன் உறுப்பினர்களில் G7 அமைப்பின் சக உறுப்பினர்களான கனடா மற்றும் ஜப்பான், மற்றும் ஐக்கிய இராட்சியத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க நட்பு நாடுகளான ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகியவை அடங்கும்.
- இதர உறுப்பினர்கள் பட்டியலில் மலேசியா, சிங்கப்பூர், வியட்நாம் மற்றும் புருனே ஆகிய நாடுகளுடன் சேர்த்து மெக்சிகோ, சிலி மற்றும் பெரு ஆகியவையும் அடங்கும்.





## எண்ணெய் உற்பத்தி குறைப்பு

- சவூதி அரேபியா மற்றும் OPEC+ அமைப்பின் பிற உறுப்பினர் நாடுகள், தங்களது எண்ணெய் உற்பத்தியை ஒரு நாளைக்கு சுமார் 1.16 மில்லியன் பீப்பாய்களாகக் குறைக்கப் போவதாக அறிவித்துள்ளன.
- இந்த நடவடிக்கையானது சந்தையின் உறுதித் தன்மையை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அந்நாடுகள் கூறுகின்றன.

- இந்த குழுவில் 23 எண்ணெய் உற்பத்தி நாடுகள் உள்ளன.
- முந்தைய ஆண்டில், அவற்றின் உற்பத்தியை ஒரு நாளைக்கு இரண்டு மில்லியன் பீப்பாய்கள் என்ற அளவில் அந்நாடுகள் குறைத்தன.





## ஆழ்கடல் சுரங்க நடவடிக்கைகள்




- சர்வதேசக் கடல்சார் நிலப்பரப்பு ஆணையம் (ISA) ஆனது, கடல் நிலப்பரப்பில் சுரங்க நடவடிக்கையினை மேற்கொள்ள விரும்பும் நிறுவனங்கள் அதற்கான ஒப்புதலைப் பெறுவதற்காக ஜூலை மாதம் முதல் விண்ணப்பிக்கலாம் என்று அறிவித்துள்ளது.
- கோபால்ட், தாமிரம், நிக்கல் மற்றும் மாங்கனீசு போன்ற முக்கிய மின்கலப் பயன்பாட்டிற்கானப் கனிமங்களைப் பிரித்தெடுப்பதற்காக என்று ஆழ்கடல் சுரங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.
- இவை "பல்கனிம முடிச்சுகள்" என்று அழைக்கப்படும் உருளைக்கிழங்கு அளவிலான பாறைகள் வடிவில் இருக்கும்.
- இவை ஆழ்கடலில் 4 கிலோமீட்டர் முதல் 6 கிலோமீட்டர் (சுமார் 2.5 மைல் முதல் 3.7 மைல்) ஆழத்தில் காணப் படுகின்றன.
- ஜமைக்காவில் அமைந்துள்ள சர்வதேசக் கடல்சார் நிலப்பரப்பு ஆணையமானது கடல் சார் சட்டம் மீதான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கையின் கீழ் நிறுவப்பட்டது.

- அதன் 167 உறுப்பினர் நாடுகளின் பிரத்தியேகப் பொருளாதார மண்டலங்களுக்கு அப்பாற் பட்ட கடல் பரப்புகளின் மீதான அதிகாரத்தினைப் பெற்றுள்ளது.

## IPCC குழுவின் தொகுப்பு அறிக்கை





- பருவநிலை மாற்றத்திற்கான அரசுகளுக்கிடையேயான குழு (IPCC) ஆனது ஆறாவது மதிப்பீட்டு அறிக்கையின் (AR6) தொகுப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- உலகளாவிய வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸ் என்ற ஒரு வரம்பைத் தாண்டுவதைத் தடுப்பதற்கான ஒரு அவசரத் தேவையை இது எடுத்துரைக்கிறது.
- 1901 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் உலகளாவியச் சராசரி கடல் மட்டம் ஆனது 0.20 மீட்டர் அதிகரித்துள்ளது.
- மனித நடவடிக்கைகளின் தாக்கமானது 1950 ஆம் ஆண்டுகளில் இருந்து, பல்வேறு தீவிர நிகழ்வுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பினை அதிகரித்துள்ளது.
- அடுத்தடுத்த வெப்ப அலைகள் மற்றும் வறட்சிகள் ஆகியவை மீண்டும் மீண்டும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிப்பதும் இதில் அடங்கும்.
- ஏறத்தாழ 3.3 - 3.6 பில்லியன் மக்கள் பருவநிலை மாற்றத்தால் மிகவும் பாதிக்கப் படக் கூடிய சூழல்களில் வாழ்கின்றனர்.
- 2010 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், வெள்ளம், வறட்சி மற்றும் புயல்களால் ஏற்படும் மனித உயிரிழப்புகள் ஆனது, மிகவும் குறைவானப் பாதிப்பு உள்ள பகுதிகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் பாதிக்கப் படக்கூடிய பகுதிகளில் 15 மடங்கு அதிகமாக இருந்தது.

## நிலக்கரித் திட்டத்திற்கு நிதி ஆதரவு மறுப்பு

- சர்வதேச நிதியியல் கழகமானது (IFC), அதன் பசுமைப் பங்கீடு சார்ந்த அணுகுமுறை (GEA) கொள்கைக்கான ஒரு புதுப்பிப்பினை வெளியிட்டுள்ளது.
- புதிய நிலக்கரித் திட்டங்களை ஆதரிப்பதற்காக, இனிமேல் நிதி இடைத்தரகர் சார்ந்த வாடிக்கையாளர்களுக்கு அனுமதி வழங்கப்படாது.
- சர்வதேச நிதியியல் கழகம் என்பது உலக வங்கியின் ஒரு தனியார் துறைப் பிரிவாகும்.
- முன்னதாக, பசுமைப் பங்கீடு சார்ந்த ஒரு அணுகுமுறையானது 2025 ஆம் ஆண்டில் வாடிக்கையாளர்கள் தங்கள் நிதி வழங்கீட்டினைப் பாதியாக குறைக்க வேண்டும் என்றும், மேலும் அதனை 2030 ஆம் ஆண்டில் பூஜ்ஜியமாக குறைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியது, ஆனாலும் இது புதிய முதலீடுகளைத் தடுக்கவில்லை.


International Finance Corporation
WORLD BANK GROUP

## ரஷ்யாவில் அதிகம் வர்த்தகம் செய்யப்படும் பணமதிப்பு




- சீனாவின் யுவான் நாணயம், அமெரிக்க டாலருக்குப் பதிலாக ரஷ்யாவில் அதிகம் வர்த்தகம் செய்யப் படும் பணமதிப்பாக மாறியுள்ளது.
- உக்ரைன் படையெடுப்பிற்கு முன்னதாக, ரஷ்யச் சந்தையில் யுவானில் மேற்கொள்ளப் படும் வர்த்தக அளவு மிகக் குறைவாக இருந்தது.
- எல்லாவற்றையும் மீறிய நிலையில் டாலர் பணமதிப்பானது ரஷ்யச் சந்தையில் மிகவும் பிரபலமான நாணயமாக தற்போது வரை உள்ளது.
- யுவான் பணமதிப்பில் உலகளாவிய அந்நியச் செலாவணி கையிருப்பு ஒதுக்கீடானது 2022 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தத் தொகையில் சுமார் 2.7% ஆகும்.

## NATO அமைப்பில் பின்லாந்து




- NATO பாதுகாப்புக் கூட்டணியில் 31வது உறுப்பினராக பின்லாந்து இணைந்துள்ளது.
- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (NATO) என்பது 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்தத்தின் மூலம் (வாஷிங்டன் ஒப்பந்தம்) நிறுவப் பட்ட ஒரு ராணுவக் கூட்டணியாகும்.
- NATO அமைப்பானது, அரசியல் மற்றும் இராணுவ வழிமுறைகள் மூலம் அதன் உறுப்பினர் நாடுகளின் பாதுகாப்பை உறுதி செய்வதை ஒரு நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- NATO அமைப்பின் பாதுகாப்பு உறுதியளிப்பானது அதன் உறுப்பினர்களின் உள் நாட்டுப் போர்கள் அல்லது உள்நாட்டு ஆட்சிக் கவிழ்ப்பு ஆகியற்றிற்காக வழங்கப் பட மாட்டாது.

## SCO அமைப்பின் புதியப் பேச்சுவார்த்தை சார்ந்தப் பங்குதாரர் நாடு

- சவூதி அரேபியா நாடானது, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் (SCO) "பேச்சு வார்த்தை சார்ந்த ஒரு பங்குதாரர் நாடாக" இணைவதற்கான முடிவினை அங்கீகரித்து உள்ளது.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு என்பது சீனா, இந்தியா மற்றும் ரஷ்யா உள்ளிட்ட யூரேசியா முழுவதும் உள்ள நாடுகளின் பாதுகாப்பு மற்றும் அரசியல் சார்ந்த கூட்டணி ஆகும்.

- ❖ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் தற்போது இந்தியா, பாகிஸ்தான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளும் அடங்கும்.
- ❖ ஆப்கானிஸ்தான், பெலாரஸ் மற்றும் மங்கோலியா ஆகிய நாடுகள் பார்வையாளர் அந்தஸ்து கொண்ட நாடுகளாகும்.
- ❖ ஆர்மீனியா, அஜர்பைஜான், கம்போடியா, நேபாளம், இலங்கை மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் தற்போது பேச்சுவார்த்தை சார்ந்தப் பங்குதாரர் நாடுகளாக உள்ளன.




## HIV/AIDS தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் திட்டம்

- ❖ ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருள் தொடர்பான புள்ளியியல் ஆணையம் மற்றும் HIV/AIDS தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டுத் திட்டத்தின் திட்ட ஒருங்கிணைப்பு வாரியம் (UNAIDS) ஆகியவற்றின் ஒரு உறுப்பினராக இந்தியா தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- ❖ இது ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூகச் சபையினால் தேர்ந்து எடுக்கப் பட்டுள்ளது.
- ❖ அவை ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூகச் சபையின் முக்கியமான துணை அமைப்புகளாகும்.
- ❖ புள்ளியியல் ஆணையம் என்பது சர்வதேசப் புள்ளியியல் தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளைக் கையாளுகின்ற ஒரு மிக உயரிய அமைப்பாகும் என்பதோடு புள்ளியியல் துறையில் தரநிலைகளை நிர்ணயிப்பதற்கான ஒரு பொறுப்பினையும் கொண்டுள்ள அமைப்பாகும்.
- ❖ முன்னதாக இந்தியா, 2004 ஆம் ஆண்டில் புள்ளியியல் ஆணையத்தில் உறுப்பினராக இருந்தது.

## கோப் இந்தியா பயிற்சி

- மேற்கு வங்கத்தில் உள்ள கலைகுண்டா விமானப்படை தளத்தில் இந்திய விமானப் படை மற்றும் அமெரிக்கா விமானப்படை இணைந்து கோப் இந்தியா பயிற்சியை நடத்த உள்ளது.
- இது இரு நாட்டு விமானப் படைகளுக்கு இடையேயான இருதரப்புப் பயிற்சியாகும்.
- இதில் ஜப்பான் பார்வையாளர் நாடாக பங்கேற்கிறது.
- இது இரு விமானப் படைகளுக்கிடையேயான செயல்பாட்டுத் திறன் மற்றும் இயங்கு நிலைத் தன்மையை மேலும் மேம்படுத்தும்.




## உளவு நிரலுக்கு எதிரான முதல் பிரகடனம்

- அமெரிக்கா மற்றும் இதர 10 நாடுகள் இணைந்து, உளவு நிரலுக்கு எதிரான முதல் பிரகடனத்தினை வெளியிட்டுள்ளன.
- வணிக ரீதியான உளவு நிரல்களை தவறாகப் பயன்படுத்தச் செய்வதால் ஏற்படும் அச்சுறுத்தலையும், அத்தகையத் தொழில்நுட்பத்தின் பெருக்கம் மற்றும் பயன்பாடு மீதான கடுமையான உள்நாட்டு மற்றும் சர்வதேசக் கட்டுப்பாடுகள் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் இவை அங்கீகரிக்கின்றன.
- சமீபத்தில், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அவர்கள், அமெரிக்க மத்திய அரசானது உளவு நிரலினைப் பயன்படுத்தச் செய்வதனைத் தடை செய்வதற்கான ஒரு நிர்வாக ஆணையை வெளியிட்டார்.



## உலகின் முதல் ஆளில்லா விமானந்தாங்கிக் கப்பல்

- துருக்கி நாடானது, TCG அனடோலு தனது மிகப்பெரியப் போர்க் கப்பலினைப் படையில் இணைத்துள்ளது.
- இது உலகின் முதல் ஆளில்லா போர் விமானம் (UCAV) தாங்கி போர்க் கப்பல் என்று கூறப் படுகிறது.
- இந்தக் கப்பலானது, உலகின் எந்தவொரு பகுதியிலும் இராணுவ மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகுக்கும்.



## கத்தார் மற்றும் பஹ்ரைன் இடையிலான அரசுமுறை உறவு

- கத்தார் மீதான அரபு புறக்கணிப்பு நீக்கப் பட்டதனைத் தொடர்ந்து, இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு கத்தார் மற்றும் பஹ்ரைன் ஆகிய நாடுகள் தங்களது அரசு முறை உறவுகளை மீண்டும் தொடங்குகின்றன.
- 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன் மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் கத்தார் மீதான மூன்றரை ஆண்டுத் தடையை முடிவுக்குக் கொண்டு வந்தன.
- ஆனால் பஹ்ரைனைத் தவிர மற்ற அனைத்து நாடுகளும், ஏற்கனவே 2021 ஆம் ஆண்டில் அந்நாட்டுடன் பயண மற்றும் வர்த்தக இணைப்புகளை மீண்டும் தொடங்கி விட்டன.



## சாபஹார் துறைமுகம் தொடர்பான கூட்டு செயற்குழுக் கூட்டம்

- சாபஹார் துறைமுகம் தொடர்பான இந்திய-மத்திய ஆசிய நாடுகளின் கூட்டுப் செயற் குழுவின் முதல் கூட்டம் ஆனது மும்பையில் நடைபெற்றது.
- இரண்டு நாட்கள் அளவிலான இந்தக் கூட்டத்தில் கஜகஸ்தான், கிர்கிஸ்தான் குடியரசு, தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் பங்கேற்றன.
- UNWFP அமைப்பின் அரசப் பிரதிநிதி, ஈரானின் துணை வெளியுறவு அமைச்சர் மற்றும் ஆப்கானிஸ்தானின் தலைமைத் தூதர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக இதில் கலந்து கொண்டனர்.





## சார்லஸ் மன்னரின் முடிசூட்டுதல் சின்னம்

- பிரிட்டனின் மன்னர் மூன்றாம் சார்லஸின் முடிசூட்டு விழாவானது, 2023 ஆம் ஆண்டு மே 06 ஆம் தேதியன்று திட்டமிடப்பட்டுள்ளது.
- பக்கிங்ஹாம் அரண்மனை நிர்வாகமானது, புதிதாக நியமிக்கப்பட்ட இந்த மன்னரின் அதிகாரப் பூர்வ முடிசூட்டுச் சின்னத்தை வெளியிட்டது.
- ஆப்பிள் நிறுவனத்தின் முன்னாள் தலைமை வடிவமைப்பாளர் ஜோனி ஐவ், மூன்றாம் சார்லஸ் மன்னரின் முடிசூட்டுச் சின்னத்தை வடிவமைத்துள்ளார்.
- வடிவமைப்பாளர், ஜோனி ஐவ், உலகளவில் சுமார் 14,000 காப்புரிமைகளைப் பெற்று உள்ளார்.



## H3N8 பறவைக் காய்ச்சலால் ஏற்பட்ட உலகின் முதல் மனித மரணம்

- சீனப் பெண்மணி ஒருவர் H3N8 வகை பறவைக் காய்ச்சலால் உயிரிழந்த முதல் நபர் ஆகியுள்ளார்.
- பறவைக் காய்ச்சலின் H3N8 என்ற ஒரு துணை வகையினால் பாதிக்கப்பட்ட மூன்றாவது நபர் இவர் ஆவார்.
- கடந்த ஆண்டில் பதிவான முதல் இரண்டு பாதிப்புகள் உட்பட இந்த 3 பாதிப்புகளும் சீனாவில் மட்டுமே பதிவாகியுள்ளன.
- H3N8 பாதிப்பு மனிதர்களில் அரிதாக இருந்தாலும், பறவைகளில் பெருமளவில் ஏற்படும் பாதிப்பான இதில் நோய்க்கான எந்த அறிகுறியும் இருக்காது.
- இது மற்றப் பாலூட்டி இனங்களையும் பாதித்துள்ளது.




## ஒல்கிலூட்டோ 3 அணுஉலை

- ஒல்கிலூட்டோ 3 அணு உலையானது சுமார் 18 ஆண்டுகளுக்குப் பிறகு சமீபத்தில் தனது உற்பத்திச் செயல்முறைகளைத் தொடங்கியது.
- 1600 மெகாவாட் திறன் கொண்ட இந்த உலையானது, 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பின்லாந்தின் தேசிய மின்னாற்றல் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டது.

- ஒல்கிலுாட்டோ 3 உலையின் கட்டுமானப் பணிகளானது, 2005 ஆம் ஆண்டில் தொடங்கி, நான்கு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது.
- 15 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கு ஐரோப்பாவின் புதிய தலைமுறை தொழில்நுட்பம் சார்ந்த முதல் உலையாக ஒல்கிலுாட்டோ 3 உள்ளது.
- இது முதல் புதிய தலைமுறை தொழில்நுட்பம் சார்ந்த EPR அல்லது ஐரோப்பிய அழுத்த உலை ஆகும்.
- இது பிரான்சு நாட்டின் அரேவா மற்றும் ஜெர்மனி நாட்டின் சீமென்ஸ் ஆகிய நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்டது.




## ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் வெளிநாட்டு அலுவலகம்

- ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியானது (AIIB) தனது முதல் வெளிநாட்டு வங்கி அலுவலகத்தினை அபுதாபியில் தொடங்க உள்ளது.
- ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிறுவன உறுப்பினராக விளங்கும் ஐக்கிய அரபு அமீரகமானது, அந்த வங்கியின் சிறந்த நிர்வாகத்திற்காகவும் விரைவானப் பெரு வளர்ச்சிக்காகவும் பெருமளவில் பங்களிக்கிறது.
- அபுதாபி மேம்பாட்டு நிதி அமைப்பானது அந்த வங்கியின் வாரியத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும்.



- 33 உறுப்பினர் நாடுகளில் மேற்கொள்ளப்பட உள்ள 40 பில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகமான மதிப்பினைக் கொண்ட 212 திட்டங்களுக்கு ஆசிய உள் கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

## கியூபாவின் புதிய அதிபர்

- கியூபாவின் தேசிய காங்கிரசானது, கியூபா அதிபர் மிகுவல் டயஸ்-கேனலின் பதவிக் காலத்தினை மேலும் ஐந்தாண்டுக்கு நீட்டித்துள்ளது.
- ரௌல் காஸ்ட்ரோவினையடுத்து 2018 ஆம் ஆண்டில் கியூபா கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராகவும், 2021 ஆம் ஆண்டில் அக்கட்சியின் முதல் செயலாளராகவும் டயஸ்-கேனல் பதவியேற்றார்.
- 1959 ஆம் ஆண்டு புரட்சிக்குப் பிறகு பிறந்து, இந்த இரண்டு முக்கியப் பதவிகளையும் வகித்த முதல் காஸ்ட்ரோ வழி சாராத நபர் இவரே ஆவார்.
- சமீபத்திய ஆண்டுகளில், கியூபாவின் பொருளாதாரம் சரிந்துள்ளதோடு, தொற்றுநோய் தாக்குதலுக்குப் பிறகு 2020 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 11% அளவிற்கு வீழ்ச்சியடைந்துள்ளது.
- கடந்த ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் வரையிலான பணவீக்கம் அதிகாரப்பூர்வ விகிதத்தில் 40% ஆக இருந்தது.



## ஓரியன் - பலதரப்புப் பயிற்சி

- பிரான்சின் மோன்ட்-டி-மார்சானில் நடைபெற்ற ஒரு பலதரப்புப் பயிற்சியான ஓரியன் பயிற்சியில் முதன்முறையாக, நான்கு இந்திய ரஃபேல் போர் விமானங்கள் பங்கேற்றன.
- வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் நாடுகள் உட்பட சுமார் 12,000 படை வீரர்களை உள்ளடக்கிய மிகப்பெரியப் பயிற்சிகளில் ஒன்றான ஓரியன் பயிற்சியானது பிரான்சு நாட்டினால் நடத்தப் படுகின்றது.
- இந்தியா மற்றும் பிரான்சு ஆகியவற்றோடு, ஜெர்மனி, கிரீஸ், இத்தாலி, நெதர்லாந்து, ஸ்பெயின், ஐக்கியப் பேரரசு மற்றும் அமெரிக்கா ஆகிய பல நாடுகளின் விமானப் படைகளும் இந்தப் பலதரப்புப் பயிற்சியின் ஒரு பகுதியாக இடம் பெற்றன.




## ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் மலேரியா தடுப்பூசி

- ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் ஒரு புதிய மலேரியா தடுப்பு மருந்திற்கு ஒப்புதல் அளித்த உலகின் முதல் நாடாக கானா மாறியுள்ளது.
- R21/Matrix-M என்ற இந்தத் தடுப்பு மருந்தானது, உலக சுகாதார அமைப்பின் 75% செயல் திறன் என்ற இலக்கினையும் விஞ்சியுள்ளது.
- கானாவின் உணவு மற்றும் மருந்து ஆணையமானது, இதனை 5 முதல் 36 மாதங்கள் வரையிலான குழந்தைகளுக்குப் பயன்படுத்த அனுமதி வழங்கியுள்ளது.
- அந்த நாட்டில் மலேரியப் பாதிப்பினால் அதிகம் உயிரிழப்பிற்கு உள்ளாகக் கூடிய ஒரு அபாயம் அதிகம் உள்ள ஒரு குழுவாக இவர்கள் உள்ளனர்.
- கானாவில், இந்த நோய் அதிகளவில் பரவியும், நீண்ட காலமாகவும் காணப்படுகின்ற ஒன்றாகும் என்பதோடு, 5.3 மில்லியன் பாதிப்புகள் மற்றும் 12,500 இறப்புகள் அந்நாட்டில் பதிவு செய்யப் பட்டுள்ளன.



## புனித வெள்ளி ஒப்பந்தத்தின் 25வது ஆண்டு நிறைவு

- புனித வெள்ளி ஒப்பந்தமானது 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் தேதியன்று கையெழுத்து ஆனது.
- இது வடக்கு அயர்லாந்தின் ஒரு பிரிவிற்கும் பிரிட்டன் மற்றும் அயர்லாந்து ஆகிய நாட்டின் அரசாங்கங்களுக்கும் இடையே கையெழுத்தானது.
- வடக்கு அயர்லாந்தில், ஐக்கியப் பேரரசுடன் இணைய விரும்பும் நாடுகள் மற்றும் அயர்லாந்துடன் சேர விரும்பும் நாடுகளுக்கிடையே பல தசாப்தங்களாக நடைபெற்று வந்த வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவதை இது நோக்கமாகக் கொண்டது.




## காவேரி நடவடிக்கை

- உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட சூடான் நாட்டினுள் சிக்கித் தவிக்கும் இந்தியர்களை வெளியேற்றச் செய்வதற்காக வேண்டி இந்திய அரசு "காவேரி" என்ற நடவடிக்கையினைத் தொடங்கியுள்ளது.
- சுமார் 3,000 பொதுமக்களை வெளியே கொண்டு வருவதற்காக, சூடானில் அறிவிக்கப் பட்டுள்ள 72 மணி நேர போர் நிறுத்தத்தினைத் தற்போது இந்திய அரசாங்கம் நன்கு பயன்படுத்தி வருகிறது.
- இந்திய விமானப்படை மற்றும் இந்தியக் கடற்படையை உள்ளடக்கிய இந்த முக்கிய நடவடிக்கையின் ஒருங்கிணைப்புப் பணிகளானது இந்திய வெளியுறவு அமைச்சகம் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.



## INIOCOS-23 பயிற்சி

- INIOCOS-23 பயிற்சி எனப்படும் பன்னாட்டு விமானப் படைப் பயிற்சியினை ஹெலனிக் விமானப் படை (கிரீஸ் நாடு) நடத்தியது.
- இந்திய விமானப்படை நான்கு Su-30 MKI மற்றும் இரண்டு C-17 விமானங்களுடன் இந்தப் பயிற்சியில் பங்கேற்றது.
- இப்பயிற்சியில் பங்கேற்கும் விமானப் படைகளுக்கு இடையே சர்வதேச ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் இயங்குநிலைமையை மேம்படுத்துவதே இந்தப் பயிற்சியின் முக்கிய நோக்கமாகும்.



## இணையச் சங்கேதப் பணம் சார்ந்த சொத்துக்களின் சந்தைகள் (MiCA)

- ஐரோப்பியப் பாராளுமன்றமானது, உலகின் முதல் விரிவான விதிகளின் தொகுப்பிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது பெருமளவில் ஒழுங்குபடுத்தப்படாத இணையச் சங்கேதப் பணம் சார்ந்த நிதிச் சந்தைகளை அரசாங்க அதிகாரிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றமானது, 27 நாடுகள் அங்கம் வகிக்கின்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்டமியற்றும் அமைப்பாகும்.
- இந்த ஒழுங்குமுறை விதிகளானது இணையச் சங்கேதப் பணம் சார்ந்த சொத்துக்களின் சந்தைகள் (MiCA) எனப்படும்.
- உறுப்பினர் நாடுகளின் முறையான ஒப்புதலுக்குப் பிறகு இது நடைமுறைக்கு வரும்.
- உலகின் இணையச் சங்கேதப் பணம் சார்ந்த தொழில்துறையில் சுமார் 22% ஆனது மத்திய, வடக்கு மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் செறிந்து காணப்படுகின்றன.
- இவை 1.3 டிரில்லியன் டாலர் அளவு மதிப்புள்ள இணையச் சங்கேதப் பணம் சார்ந்தச் சொத்துக்களைப் பெற்றுள்ளன.
- MiCA அமைப்பானது, "எந்தவொரு வகையான இணையச் சங்கேதப் பணம் சார்ந்த சொத்துக்களையும் பொது மக்கள் மத்தியில் வெளியிடப் படுகின்றச் சட்டப்பூர்வ நிறுவனங்கள்" என வரையறுக்கப் படுகின்ற, இணையச் சங்கேதப் பணம் சார்ந்தச் சொத்துக்களை வழங்கும் நிறுவனங்களுக்கு இணக்க விதிமுறைகளை விதிக்கும்.

- ❖ இந்த விதிகள், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டச் சேவைகளை வழங்கும் இணையச் சங்கேதப் பணம் சார்ந்தச் சொத்துச் சேவை வழங்குநர்களுக்கும் (CASPs) பொருந்தும்.




## உலகின் மிகப்பெரிய 'சட்டவிரோதமான போதைப் பொருள் வர்த்தகத்தினைச் சார்ந்திருக்கும் நாடு'

- ❖ சிரியா, உலகின் மிகப்பெரிய சட்டவிரோதமான போதைப் பொருள் வர்த்தகத்தினைச் சார்ந்திருக்கும் ('நார்கோ-ஸ்டேட்') நாடாக மாறியுள்ளது.
- ❖ அதன் பொருளாதார வாழ்வானது கேப்டகனின் உற்பத்தி மற்றும் அதன் ஏற்றுமதியைப் பெரிதும் சார்ந்துள்ளது.
- ❖ கேப்டகன் என்பது பொதுவாக "விருந்தளிப்பு மாத்திரைகள் மற்றும் "ஏழைகளின் கொக்கைன்" என்று அழைக்கப் படுகிறது.
- ❖ இது ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருள் மற்றும் குற்ற UNODC (2021) அலுவலகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட, தடை செய்யப்பட்ட ஒரு சட்டவிரோத போதைப் பொருள் ஆகும்.
- ❖ இது ஆம்பெடமைன் மற்றும் காஃபின் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு செயற்கை நரம்பியல் செயல்முறை தூண்டு பொருளாகும்.
- ❖ "நார்கோ-ஸ்டேட்" என்பது ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் குறிப்பிட்டப் பிரிவானது சட்ட விரோதப் போதை மருந்துகளின் வர்த்தகத்தைச் சார்ந்திருக்கும் ஒரு தேசம் என்பதாகும்.



## மங்கோலியாவின் முதல் சுத்திகரிப்பு நிலையம்

- இந்திய நாட்டினால் நிதியளிக்கப்பட்டுக் கட்டமைக்கப்பட்டு வரும் மங்கோலியாவின் முதல் எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையமானது 2025 ஆம் ஆண்டிற்குள் கட்டி முடிக்கப் படும்.
- தற்பொழுது மங்கோலியா, அதன் எரிசக்தி இறக்குமதிக்காக முற்றிலும் ரஷ்யாவைச் சார்ந்துள்ளது.
- மங்கோலியா தனது உள்நாட்டு உற்பத்தி மூலமாக, அதன் எண்ணெய்த் தேவையில் 70 சதவீதத்தினைப் பூர்த்தி செய்வதற்கு இந்தச் சுத்திகரிப்பு நிலையம் உதவும்.
- மங்கோலியாவில் கற்கரி, தாமிரம், தங்கம், யுரேனியம் மற்றும் அருமண் தனிமங்கள் ஆகியவை நிறைந்துள்ளன.




## வங்க தேசத்தின் புதிய அதிபர்

- வங்க தேசத்தின் 22வது குடியரசுத் தலைவராக முகமது சஹாபுதீன் பதவியேற்றார்.
- அவர் 1966 ஆம் ஆண்டில் 6-அம்ச இயக்கம், 1967 ஆம் ஆண்டில் பூட்டா (சோளம்) இயக்கம், 1969 ஆம் ஆண்டில் வெகுஜன எழுச்சிகள், 1970 ஆம் ஆண்டுத் தேர்தல் மற்றும் 1971 ஆம் ஆண்டில் விடுதலைப் போர் ஆகியவற்றில் தீவிரமாகப் பங்கேற்றார்.
- 1975 ஆம் ஆண்டில் பங்கபந்து ஷேக் முஜிபுர்ரஹ்மானின் கொடூரமான ஒரு கொலைக்கு எதிராக ஒரு போராட்டத்திற்கு அவர் தலைமை தாங்கினார்.
- அதற்காக அவர் தனது குடும்ப உறுப்பினர்களுடன் மூன்று ஆண்டுகள் சிறையில் அடைக்கப் பட்டார்.

## பிராந்திய உறவுகளை ஆழப்படுத்தும் புதிய முத்தரப்பு ஒப்பந்தம்

- இந்தியா, ஆர்மீனியா மற்றும் ஈரான் வெளியுறவு அமைச்சர்களுக்கு இடையேயான முதல் முத்தரப்பு ஆலோசனை ஆர்மீனியாவின் தலைநகரான யெரெவனில் நடந்தது.
- இங்கு அவர்கள் சர்வதேச வடக்கு-தெற்குப் போக்குவரத்து வழித்தடம் (INSTC) குறித்து விவாதம் நடத்தினர்.
- இது இந்தியா, ஈரான் மற்றும் ரஷ்யாவை இணைக்கும் சரக்கு வழித் தடமாகும்.

- INSTCயின் முக்கியக் குறிக்கோள் மும்பையிலிருந்து மாஸ்கோவிற்குச் சரக்குகளை எடுத்துச் செல்வதற்கான நேரத்தையும் செலவையும் குறைப்பது ஆகும்.
- INSTC ஒப்பந்தம் முதலில் ரஷ்யா, ஈரான் மற்றும் இந்தியா ஆகியவற்றால் 2002 ஆம் ஆண்டில் கையெழுத்தாகி, பின்னர் அது விரிவாக்கப்பட்டது.




## ஆசியாவின் உலகளாவிய சுற்றுச்சூழலுக்கான பாதுகாப்பு




- உலகளாவிய சுற்றுச்சூழலுக்கான ஆசியா முழுவதுமான பாதுகாப்பு (SAFE) என்பது ஐக்கிய நாடுகளின் திட்டமாகும்.
- இது ஆசிய இறைச்சிச் சந்தைகள் மற்றும் அதிக ஆபத்தை ஏற்படுத்தும் விலங்குகள் ஆகியோரிடமிருந்து மனிதர்களுக்கு நோய் பரவும் பல வாய்ப்புகளை ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சீனா, தாய்லாந்து, வியட்நாம் மற்றும் லாவோஸ் ஆகிய நான்கு ஆசிய நாடுகள் முதலில் ஆய்விற்காக தேர்ந்தெடுக்கப்பட்டன.
- இப்போது இந்தத் திட்டத்தில் சீனா இன்னமும் பங்கேற்கவில்லை என்ற நிலையில் வியட்நாம் மற்றும் லாவோஸ் ஆய்வுகளை நடத்த இன்னும் அனுமதி அளிக்கவில்லை.

# பொருளாதாரச் செய்திகள்

## பெருநிறுவனக் கடன் சந்தை மேம்பாட்டு நிதி

- 3,000 கோடி ஆரம்ப நிதியுடன் மாற்று முதலீட்டு நிதி (AIF) வடிவிலான பெருநிறுவனக் கடன் சந்தை மேம்பாட்டு நிதியினை உருவாக்க இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் முடிவு செய்துள்ளது.
- இது நெருக்கடியின் போது முதலீட்டு தர பெருநிறுவனக் கடன் பத்திரங்களை வாங்கச் செய்வதற்கான குறுகிய கால கடன் வசதியாக செயல்படும்.
- இந்த நடவடிக்கையானது, பெருநிறுவனக் கடன் பத்திரச் சந்தையின் பங்கேற்பாளர் நபர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவதையும் பொதுவாக இரண்டாம் நிலை சந்தையின் பணப்புழக்கத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.




## இந்திய ஏற்றுமதியில் உயர்வு

- இந்தியச் சரக்குகள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியானது, முதன்முறையாக 750 பில்லியன் அமெரிக்க டாலர்களைத் தாண்டியுள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில், நாட்டின் சரக்குகள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி ஆகியவை முறையே 422 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மற்றும் 254 பில்லியன் டாலர்கள் என்ற அளவில் வரலாற்றில் இல்லாத அளவுக்கு உயர்ந்தது.
- 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஏற்றுமதியானது 8.8 சதவீதம் குறைந்து 33.88 பில்லியன் டாலர்களாக இருந்த நிலையில், இது கடந்த ஆண்டின் இதே மாதத்தில் 37.15 பில்லியன் டாலர்களாக இருந்தது.

- ஒரு வருடத்திற்கு முன்பிருந்த 55.9 பில்லியன் டாலர்கள் என்ற இறக்குமதி மதிப்புடன் ஒப்பிடுகையில், மூன்றாவது மாதமாக குறைந்து வரும் இறக்குமதியானது இந்த ஆண்டின் பிப்ரவரி மாதத்தில் 8.21 சதவீதம் குறைந்து, 51.31 பில்லியன் அமெரிக்க டாலர்களாகக் குறைந்துள்ளது.




## வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை 2023

- ஒன்றிய வர்த்தக அமைச்சகம் ஆனது, 2023 ஆம் ஆண்டு புதிய வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையினை அறிவித்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் டாலர் சரக்கு ஏற்றுமதி மற்றும் 1 டிரில்லியன் டாலர் சேவைகள் ஏற்றுமதி என்ற ஒரு இலக்கை அடைவதற்கான துறை சார்ந்த சில இலக்குகளை அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.
- இந்தப் புதியக் கொள்கையின்படி, ஃபரிதாபாத், மொராதாபாத், மிர்சாபூர் மற்றும் வாரணாசி ஆகியவை முறையே ஆடைகள், கைவினைப்பொருட்கள், கைவினைக் கம்பளம் மற்றும் தரைவிரிப்புகள் மற்றும் கைத்தறி மற்றும் கைவினைப் பொருள்களுக்கான சிறந்த ஏற்றுமதி நகரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- இந்த வகையின் கீழ் தற்போதுள்ள 39 நகரங்களுடன் கூடுதலாக இவை அறிவிக்கப் பட்டுள்ளன.
- இந்தப் புதியக் கொள்கையின் கீழ், பால் சார்ந்தத் தொழில்துறைக்கு, சராசரி ஏற்றுமதி விதிமுறையினைப் பின்பற்றுவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டளவில் 200-300 பில்லியன் டாலர்களாக உயரும் என்று எதிர்பார்க்கப் படுகிற நிலையில் இது இணைய வர்த்தக ஏற்றுமதியை ஊக்குவிக்கும் என்றும் நம்பப் படுகிறது.
- இதன்படி கிடங்கு வசதியுடன் கூடிய ஒரு பிரத்தியேக மண்டலம் உருவாக்கப்படும்.
- இது சிறப்பு இரசாயனங்கள், உயிரினங்கள், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய SCOMET என்ற ஒரு கொள்கையை நெறிமுறைப் படுத்தச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## பலதரப்பு மேம்பாட்டு வங்கிகளை வலுப்படுத்துவதற்கான குழு

- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழ், பலதரப்பு மேம்பாட்டு வங்கிகளை (MDBs) வலுப்படுத்தச் செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக 11 பேர் கொண்ட நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
- ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் சிறப்பு நிலைத் தலைவரான பேராசிரியர் லாரன்ஸ் சம்மர்ஸ் மற்றும் N.K. சிங் ஆகியோர் G20 நிபுணர் குழுவின் இணை-அமைப்பாளர்கள் ஆவர்.
- 21 ஆம் நூற்றாண்டிற்கான புதுப்பிக்கப்பட்ட பலதரப்பு மேம்பாட்டு வங்கி சார்ந்த சூழல் அமைப்பிற்கான ஒரு செயல்திட்டத்தினை உருவாக்கச் செய்யும் பணியில் இந்தக் குழு ஈடுபடும்.
- உலகளாவிய மேம்பாடு மற்றும் பிற சவால்களை மிகவும் திறம்பட்ட முறையில் எதிர் கொள்தல் மற்றும் அவற்றிற்காக நிதியளித்தல் தொடர்பாக பலதரப்பு மேம்பாட்டு வங்கிகளுக்கு இடையே ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளை இது உருவாக்கும்.




## இந்தியா மற்றும் மலேசியா இடையே ரூபாய் மதிப்பில் வர்த்தகம்

- இந்திய ரூபாய் மதிப்பில் வர்த்தகம் செய்வதற்கு இந்தியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன.
- இந்தியா தனது சர்வதேச வர்த்தகத்தினை டாலர் மதிப்பிலிருந்து இந்திய ரூபாய் மதிப்பில் மாற்றுவதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுக்க தயாராக உள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் இந்த முயற்சியானது உலகளாவிய வர்த்தகத்தின் மீதான வளர்ச்சியை எளிதாக்குவதையும், இந்திய ரூபாய் மதிப்பில் வர்த்தகம் மேற்கொள்ளச் செய்வதில் உலக நாடுகளின் நலன்களை கருத்தில் கொள்வதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இன்டர்நேஷனல் பேங்க் ஆஃப் மலேசியா ஆனது, யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா மூலம் ஒரு சிறப்பு ரூபாய் வோஸ்ட்ரோ வகை கணக்கைத் திறப்பதன் மூலம் இந்த வழி முறையைச் செயல்படுத்தியுள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் இந்தியா-மலேசியா இடையிலான இருதரப்பு வர்த்தகம் ஆனது 19.4 பில்லியன் டாலர் மதிப்பினை எட்டியது.
- சிங்கப்பூர் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக ஆசியான் பிராந்தியத்தில் இந்தியாவின் மூன்றாவது பெரிய வர்த்தகப் பங்குதாரர் நாடாக மலேசியா திகழ்கிறது.




## இந்திய ரிசர்வ் வங்கியில் உள்ள உரிமைக் கோரப்படாத வைப்புத் தொகைகள்

- பொதுத்துறை வங்கிகள் ஆனது, ரூ.35,012 கோடி மதிப்பிலான உரிமைக் கோரப்படாத வைப்புத் தொகைகளை (பிப்ரவரி 2023 வரை) இந்திய ரிசர்வ் வங்கி கணக்கிற்கு மாற்றி உள்ளன.
- 8,086 கோடி ரூபாய் மதிப்பிலான உரிமைக் கோரப் படாத வைப்புத் தொகையுடன் பாரத் ஸ்டேட் வங்கி முதலிடத்தில் உள்ளது.
- பஞ்சாப் நேஷனல் வங்கி ரூ.5,340 கோடியையும், கனரா வங்கி ரூ.4,558 கோடியையும் இந்திய ரிசர்வ் வங்கிக் கணக்கிற்கு மாற்றியுள்ளன.



PILING UP

Unclaimed deposits with public sector banks (till Feb'23)

| Lender | Number of accounts | Unclaimed amount (₹cr) |
|---|---|---|
| Bank of Baroda | 8,930,915 | 3,904 |
| Bank of India | 9,256,380 | 2,557 |
| Bank of Maharashtra | 1,863,192 | 838 |
| Canara Bank | 15,622,262 | 4,558 |
| Central Bank of India | 3,084,349 | 1,240 |
| Indian Bank | 8,521,423 | 2,445 |
| Indian Overseas Bank | 4,617,573 | 1,790 |
| Punjab & Sind Bank | 1,256,602 | 494 |
| Punjab National Bank | 15,048,156 | 5,340 |
| State Bank of India | 21,780,757 | 8,086 |
| UCO Bank | 1,478,743 | 583 |
| Union Bank of India | 10,940,247 | 3,177 |

Accounts 102,400,599
Amount 35,102 (₹cr)

## இந்திய-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பு பேச்சுவார்த்தைச் சுற்று

- செழுமைக்கான இந்திய-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பு (IPEF) குறித்த பேச்சு வார்த்தையின் இரண்டாவது சுற்று ஆனது இந்தோனேசியா நாட்டின் பாலி நகரில் நடைபெற்றது.
- பாலி பேச்சுவார்த்தைச் சுற்றில் இந்தியா மற்றும் 13 நாடுகளைச் சேர்ந்த பேச்சு வார்த்தை அதிகாரிகள் பங்கேற்றனர்.




- பாலி பேச்சுவார்த்தைச் சுற்றின் போது, விவாதங்கள் இந்திய-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பின் நான்கு தூணாக உள்ள அம்சங்கள் குறித்தும் விவாதிக்கப் பட்டது.

- ○ தூண் I - வர்த்தகம்
- ○ தூண் II - விநியோகச் சங்கிலிகள்
- ○ தூண் III - தூய்மைப் பொருளாதாரம்
- ○ தூண் IV - நேர்மை மிக்கப் பொருளாதாரம் (வரி மற்றும் ஊழல் எதிர்ப்பு)

❖ II முதல் IV வரையிலான தூண்கள் குறித்த விவாதங்களில் இந்தியா பங்கேற்றது.

## 2023 ஆம் நிதியாண்டிற்கான அந்நியத் தொகுப்பு முதலீட்டு இலக்கு நாடுகள்

❖ வரி ஏய்ப்புப் புகலிட நாடான மொரீசியஸிலிருந்து இந்திய மூலதனச் சந்தைகளுக்குள் செய்யப்படும் வெளிநாட்டு முதலீடுகள் கடுமையான சரிவைக் கண்டன.

❖ நார்வே மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் 2022-23 ஆம் ஆண்டில் சாதகமான ஒரு சூழலைக் கண்டன.

❖ மொரீசியஸ் நாட்டில் பாதுகாவலர் மேலாண்மையின் கீழ் உள்ள மொத்த சொத்துக்கள் (AUC) ஆனது 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் இறுதியில் கிட்டத்தட்ட 42 சதவீதம் குறைந்து ரூ.6.66 டிரில்லியன் ஆக உள்ளது.

❖ இது ஒரு வருடத்திற்கு முன்பு ரூ.10.88 டிரில்லியனாக இருந்தது.

❖ நார்வே மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உள்ள பாதுகாவலர் மேலாண்மையின் கீழ் உள்ள மொத்தச் சொத்துக்களில் முறையே 13 சதவீதம் மற்றும் 5 சதவீதம் அளவிற்கு அதிகரித்துள்ளன.

**SOURCE OF MONEY**

Overall, FPI AUC fell 4.44% in FY23 partly due to asset price depreciation and parlty due to capital outflows

| | Total AUC (₹trillion) | | Share (%) | | YoY chg (%) | |
|---|---|---|---|---|---|---|
| | Mar '22 | Mar '23 | Mar '22 | Mar '23 | AUC | Share |
| • US | 18.61 | 19.19 | 36.50 | 39.40 | 3.14 | 2.89 |
| • Singapore | 4.33 | 4.56 | 8.50 | 9.37 | 5.28 | 0.86 |
| • Luxembourg | 3.91 | 3.64 | 7.66 | 7.47 | -6.92 | -0.20 |
| • Mauritius | 5.55 | 3.25 | 10.88 | 6.66 | -41.50 | -4.22 |
| • UK | 2.67 | 2.55 | 5.23 | 5.24 | -4.24 | 0.01 |
| • Ireland | 2.43 | 2.38 | 4.76 | 4.89 | -1.80 | 0.13 |
| • Canada | 1.64 | 1.55 | 3.21 | 3.18 | -5.39 | -0.03 |
| • Norway | 1.30 | 1.47 | 2.56 | 3.02 | 12.85 | 0.46 |
| Total | 50.97 | 48.71 | 100 | 100 | -4.44 | 0 |

Note: Total includes other jurisdictions; AUC: Assests under custody Source: NSDL

## இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்குதாரர் நாடு

❖ 2023 ஆம் நிதியாண்டில், 128.55 பில்லியன் டாலர் வர்த்தக மதிப்புடன் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்குதாரர் நாடாக அமெரிக்கா உருவெடுத்துள்ளது.

- 2022-23 ஆம் நிதியாண்டில் இந்தியா மற்றும் அமெரிக்கா இடையேயான இருதரப்பு வர்த்தகம் 7.65% அதிகரித்துள்ளது.
- இது 2020-21 ஆம் நிதியாண்டில் 80.51 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.



US emerges as India's biggest trading partner in FY23 at USD 128.55 bn.

## SECI நிறுவனத்திற்கு மினிரத்னா வகை-I அந்தஸ்து

- அரசுக்குச் சொந்தமான இந்திய சூரியசக்திக் கழகமானது (SECI) மினிரத்னா வகை-I மத்தியப் பொதுத்துறை நிறுவனம் என்ற அந்தஸ்தினைப் பெற்றுள்ளது.
- இது 2011 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது.
- SECI என்பது புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் புதுப்பிக்கத் தக்க எரிசக்தித் திட்டங்களுக்கான ஒரு முதன்மை அமலாக்க நிறுவனமாகும்.
- மினிரத்னா- I அந்தஸ்தினைப் பெறுவதற்கான அளவுருக்கள்
  - ஒரு மத்திய பொதுத்துறை நிறுவனம் கடந்த மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து இலாபம் ஈட்டியிருக்க வேண்டும்
  - மூன்று ஆண்டுகளில் குறைந்தது ஓர் ஆண்டிலாவது, வரி செலுத்துவதற்கு முந்தைய நிலையிலான இலாபம் 30 கோடி அல்லது அதற்கும் அதிகமாக இருக்க வேண்டும்
  - மேலும் அது நேர்மறையான நிகர மதிப்பினைக் கொண்டிருக்க வேண்டும்.

## SEBI அமைப்பின் புதிய இலச்சினை


- இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியமானது அதன் புதிய இலச்சினையை வெளியிட்டுள்ளது.
- இது அதன் 35வது ஸ்தாபன தினத்தின் போது வெளியிடப்பட்டது.
- புதிய இலட்சினை என்பது, மூலதன உருவாக்கம் மூலம் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தச் செய்வதற்கான இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் உறுதிப்பாட்டினை பிரதிபலிக்கிறது.
- இது கொள்கை உருவாக்கத்தில் தொழில்நுட்பம் மற்றும் தரவுகளின் ஆற்றலையும் ஒருங்கிணைக்கிறது.

- 1992 ஆம் ஆண்டில் இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்திற்கு சட்டப் பூர்வ அதிகாரங்கள் வழங்கப்பட்டன.




## இந்தியாவின் முதல் REIT மற்றும் InvIT குறியீடு

- தேசியப் பங்குச் சந்தை (NSE) ஆனது, இந்தியாவின் முதல் மனை விற்பனைத் தொழில் துறை முதலீட்டு அறக்கட்டளைகள் (Reits) மற்றும் உள்கட்டமைப்புத் தொழில் துறை முதலீட்டு அறக்கட்டளைகள் (InvITs) குறியீட்டினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- தேசியப் பங்குச் சந்தையில், பொதுப் பட்டியலில் பட்டியலிடப்பட்டு வர்த்தகம் செய்யப் படும் Reits மற்றும் InvIT ஆகியவற்றின் செயல்திறனை கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டு இவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- பணத்தை உருவாக்கும் உள்கட்டமைப்பு மற்றும் மனை விற்பனைத் தொழில் சார் திட்டங்களுக்கு மாறாக, நிதி திரட்டுவதற்கான ஒரு வலுவான மாற்று நிதிக் கருவிகளாக இவை இரண்டும் அங்கீகரிக்கப் பட்டுள்ளன.



## தகவல் தொழில்நுட்ப இறக்குமதி மீதான சுங்க வரி விதிப்பு குறித்த சர்ச்சை


- சில தகவல் மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்பப் பொருட்கள் மீது அதிக இறக்குமதி வரிகளை விதிப்பதன் மூலம் இந்தியா வர்த்தக விதிகளை மீறியதாக உலக வர்த்தக அமைப்பு தீர்ப்பளித்தது.
- ஜெனீவாவில் அமைந்துள்ள இந்த பலதரப்பு அமைப்பின் தீர்ப்பினை எதிர்த்து இந்தியா மேல்முறையீடு செய்ய உள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் கைபேசிகள் மற்றும் வேறு சில தொழில்நுட்பப் பொருட்கள் மீது 10 சதவீதச் சுங்க வரியை இந்தியா விதித்தது தொடர்பான ஒரு சர்ச்சையை உலக வர்த்தக அமைப்பு விசாரித்து வந்தது.
- இந்தியா பின்னர் சுங்க வரியை 10 முதல் 20 சதவீதமாக உயர்த்திய நிலையில், இது அமெரிக்கா, சீனா, தைவான், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுடனான வர்த்தகத்தினை நிலை குலைத்தது.
- இந்தியா இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்காகவும், உள்நாட்டுத் தொழில்நுட்பப் பொருட்களின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகவும் 2017 ஆம் ஆண்டு முடிவு மேற் கொள்ளப்பட்டதாக வாதிட்டு வருகிறது.
- மேலும், இந்தத் தொழில்நுட்பத் தயாரிப்புகள் 1996 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இல்லை என்று கூறியது.




## இந்தியாவிற்கு அதிகளவில் எண்ணெய் விநியோகம் செய்யும் நாடு

- பிப்ரவரி மாதத்தில், ஒரு பீப்பாய்க்கு 60 டாலர் என்ற மேற்கத்திய நாடுகளின் விலை வரம்பு விதிக்கப்பட்டிருந்த போதிலும், மதிப்பின் அடிப்படையில் இந்தியாவிற்கு அதிக அளவில் கச்சா எண்ணெயை ஏற்றுமதி செய்யும் நாடாக ரஷ்யா திகழ்கிறது.
- பிப்ரவரி மாதத்தில் ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் மதிப்பு 3.35 பில்லியன் டாலராக இருந்தது.

- அதைத் தொடர்ந்து 2.30 பில்லியன் டாலர் மதிப்புடன் சவுதி அரேபியா மற்றும் 2.03 பில்லியன் டாலர் மதிப்புடன் ஈராக் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- ஏப்ரல் முதல் பிப்ரவரி மாதம் வரையிலான காலகட்டத்தில் ரஷ்ய நாட்டின் எண்ணெய் இறக்குமதியானது 27 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.
- 2023 ஆம் நிதியாண்டில், இந்தியாவிற்கு அதிக அளவில் கச்சா எண்ணெயினை ஏற்றுமதி செய்யும் இரண்டாவது பெரிய நாடாக ரஷ்யா மாறியது.




## 100 பில்லியன் டாலர் அளவினை எட்டிய இந்தியாவின் வருடாந்திர பண வரவு

- வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் வருடாந்திர பண வரவானது 100 பில்லியன் டாலர்கள் அளவினைக் கடந்த, உலகின் முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.
- உலக வங்கியின் கூற்றுப்படி, இந்தியாவில் உள்ள உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு தனிப்பட்ட முறையில் அனுப்பப்படும் பணம் அல்லது வெளிநாடு வாழ் இந்தியர்களால் அனுப்பப்படும் பண வரவானது 2022 ஆம் ஆண்டில், ஆண்டிற்கு 12% என்ற வளர்ச்சியுடன் ஒரு உய்ய நிலையைக் கடந்தது.
- 2021 ஆம் நிதியாண்டில், சீனாவைப் பின்னுக்குத் தள்ளிய இந்தியா, 2023 ஆம் நிதி ஆண்டிலும் பண வரவினை அதிகம் பெறும் நாடு என்ற அந்தஸ்தினைத் தக்க வைத்துக் கொள்ள வாய்ப்புள்ளது.
- குறைந்த வருமானம் மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு அனுப்பப் படும் பண மதிப்பானது ஆண்டிற்கு 5% அதிகரிப்புடன், 2022 ஆம் ஆண்டில் 630 பில்லியன் டாலர்களை எட்டியது.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## படியெடுத்தல் முறையில் உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் கிர் ரக பெண் பசுங்கன்று

- அரியானாவின் கர்னால் என்னுமிடத்தில் அமைந்துள்ளத் தேசியப் பால் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒரு திட்டத்தின் கீழ், கிர் மற்றும் சாஹிவால் போன்ற உள்நாட்டு மாடு இனங்களை மரபணுப் படியெடுத்தல் முறையில் மறு உருவாக்கம் செய்வதற்கான ஒரு (குளோனிங்) பணியில் ஈடுபட்டுள்ளன.
- தேசியப் பால் ஆராய்ச்சி நிறுவனமானது, மரபணுப் படியெடுத்தல் என்ற முறையில் உருவாக்கப் பட்ட இந்தியாவின் முதல் கிர் ரக பெண் பசுங்கன்றினை உருவாக்கி உள்ளது.
- இந்த குளோனிங் செய்யப்பட்ட கிர் ரக பெண் பசுங்கன்றுக்கு 'கங்கா' என்று பெயரிடப் பட்டது.
- இந்த இனம் ஒரு நாளைக்கு 15 லிட்டருக்கு மேல் பால் தரக் கூடியது.





## பால் கலப்படத்தைக் கண்டறியும் சாதனம்

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழக ஆராய்ச்சியாளர்கள் பாலில் உள்ள கலப்படத்தினை 30 வினாடிகளுக்குள் கண்டறியக் கூடிய வகையில் ஒரு முப்பரிமாண காகித அடிப்படையிலான ஒரு கையடக்கச் சாதனத்தை உருவாக்கி உள்ளனர்.
- இந்தச் சோதனையை வீட்டிலேயே கூட மேற்கொள்ள முடியும்.
- யூரியா, சலவைத்தூள், சலவைக்கட்டி, மாவுப்பொருள், ஹைட்ரஜன் பெராக்சைடு, சோடியம்-ஹைட்ரஜன்-கார்பனேட் மற்றும் உப்பு உள்ளிட்ட பொதுவான கலப்படக் காரணிகளாகப் பயன்படுத்தப்படும் பல பொருட்களை இதன் மூலம் கண்டறிய முடியும்.
- இந்தப் புதிய தொழில்நுட்பமானது மலிவு விலையிலானதாகும் என்பதோடு, தண்ணீர், பழச்சாறுகள் மற்றும் பால் கூழ்மங்கள் போன்ற பிற திரவப் பொருட்களில் உள்ள கலப்படத்தினைக் கண்டறியவும் இதனைப் பயன்படுத்தலாம்.




## அதிநுண்ணிய மீ மின்தேக்கிகள்

- பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் சிறிய அளவு அல்லது 'அதிநுண்ணிய' அளவில் ஒரு புதிய வகை அதிநுண்ணிய மீ மின் தேக்கியினை உருவாக்கியுள்ளனர்.
- இது அதிகளவு ஆற்றலைச் சேமிக்கும் திறன் கொண்டது.
- எனவே, சிறிய மின்னணுச் சாதனங்களில் இதனைப் பயன்படுத்த எளிதானது என்பதோடு இது மின்கலங்களின் அவசியத் தேவையை நீக்குவதோடு, ஒரு சாதனம் நீண்ட நேரம் மின்னேற்றத்துடன் இருக்கவும் செய்கிறது.
- பொதுவான மின்கலங்கள், காலப்போக்கில் மின்னாற்றலினைச் சேமிக்கும் திறனை இழக்கின்றன, எனவே ஒரு இவற்றிற்கென வரையறுக்கப்பட்ட காலாவதி தேதி உள்ளது.
- ஆனால் மின்தேக்கிகள், அவற்றின் வடிவமைப்பின் மூலம் மின்னூட்டத்தினை அதிக நேரம் சேமிக்கக் கூடியவை ஆகும்.
- மீ மின்தேக்கிகள் மின்கலங்கள் மற்றும் மின்தேக்கிகள் ஆகிய இரண்டையும் ஒருங்கே கொண்டு அமைந்தவை.
- இவை அதிக அளவு ஆற்றலைச் சேமித்து வழங்கக் கூடியவை, எனவே அடுத்தத் தலைமுறைத் தொழில்நுட்பம் சார்ந்த மின்னணுச் சாதனங்களில் இவற்றைப் பயன் படுத்துவதற்கான ஒரு விருப்பத் தேர்வாக இவை அதிகம் விரும்பப் படுகின்றன.




## 2 ஆண் எலிகளின் செல்களிலிருந்து உருவாக்கப்பட்ட எலிகள்

- அறிவியலாளர்கள், முதன்முறையாக இரண்டு 2 ஆண் எலிகளின் செல்களிலிருந்து எலிக் குஞ்சுகளை உருவாக்கியுள்ளனர்.
- அவர்கள் ஆண் எலிகளின் வால்களில் உள்ள தோல் செல்களை எடுத்து "தூண்டப்பட்ட பல் திறன் கொண்ட குருத்தணு செல்களாக" மாற்றினர்.
- பின்னர், அவர்கள் ஆண் எலிகளின் குருத்தணு செல்களைப் பெண் செல்களாக மாற்றி இயக்கத்தில் உள்ள கருமுட்டைச் செல்களை உருவாக்கினர்.
- இறுதியாக, அவர்கள் அந்த முட்டைகளைச் செயற்கையாக கருத்தரிக்கச் செய்து, அந்தக் கருக்களை பெண் எலிகளின் உடலினுள் பொருத்தினர்.
- சுமார் 1% கருக்கள் - 630 கருக்களில் 7 கருக்கள் மட்டுமே உயிருள்ள எலிக் குஞ்சுகளாக வளர்ச்சி பெற்றன.
- எனவே, மனிதர்களில் இந்த நுட்பத்தினைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக் கூறு மிகவும் நிச்சயமற்றதாகும்.




## சக்தி வாய்ந்த 'X-வகை' சூரியக் காந்தப் புயல்

- சூரியன், மார்ச் 29 ஆம் தேதியன்று காலை 8.03 மணிக்கு உச்ச அளவினை எட்டிய நிலையில் ஒரு சக்தி வாய்ந்த 'X-வகை' சூரியக் காந்தப் புயலினை வெளியேற்றியது.
- இந்த காந்தப் புயல் ஆனது X1.2 காந்தப் புயல் என வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- இந்தக் காந்தப் புயலானது, நாசாவின் சூரிய இயக்கவியல் ஆய்வகம் என்பதன் மூலம் கண்டறியப் பட்டது.
- இது நமது சூரிய மண்டலத்தின் மைய நட்சத்திரமான AR3256 என்ற சூரியப் புள்ளி (அதிக காந்த சக்தி) பகுதியிலிருந்து வெளியேறியது.
- சூரியப் புயல்களில் B, C, M மற்றும் X என நான்கு வகைகள் உள்ளன.
- C-வகை காந்தப் புயல் ஆனது, B வகை வகைகயை விட 10 மடங்கு சக்தி வாய்ந்ததாகும் என்ற நிலையில், இதே அளவில் அடுத்ததடுத்த வகையும் சக்தி வாய்ந்தவை ஆகும்.
- ஒவ்வொரு வகையும் ஒன்பது உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.
- X- என்பது காந்தப் புயலின் வலிமையைக் குறிக்கிறது.
- X என்ற எழுத்தினைத் தொடர்ந்து இடம் பெறும் எண் அவற்றின் வலிமையைச் சரியான அளவில் குறிப்பிடுகிறது.



## SNAP-10A


- SNAP-10A ஆனது 1965 ஆம் ஆண்டு ஏப்ரல் 03 ஆம் தேதியன்று அட்லஸ்-அஜெனா D என்ற விண்கலம் மூலமாக விண்ணில் ஏவப்பட்டது.
- SNAP-10A என்பது விண்வெளியில் செயல்பட்டு வரும் உலகின் முதலாவது அணு உலை ஆகும்.
- இதன் நோக்கம், ஓராண்டு அல்லது அதற்கும் மேலான காலத்தில் குறைந்தது 500 வாட்ஸ் மின்சாரத்தினை உற்பத்தி செய்வதாகும்.
- இது 43 நாட்களுக்கு மட்டுமே செயல்பட்டது, எனினும் இது இன்னும் சுற்றுப்பாதையில் உள்ளது.




## அதிவிரைவான ரேடியோ அலைப் பரவலுக்கான மூல ஆதாரம்

- பல ஆண்டுகளாக, வானியலாளர்கள் ஒரு சிறப்பு வகையான ரேடியோ சமிக்ஞை-அதி விரைவான ரேடியோ அலைப்பரவல் (வெடிப்புகள்) குறித்தும், அதன் மூலம் எது என்பது குறித்தும் குழப்பமடைந்து வந்தனர்.
- ஆனால் தற்போது அறிவியலாளர்கள் இதற்கு என்ன காரணம் என்று (நியூட்ரான் நட்சத்திரங்கள் மோதி கருந்துளைகளாக மாறுதல்) கண்டுபிடித்துள்ளனர்.

- அதிவிரைவான ரேடியோ அலைப்பரவல் என்பது தீவிரமான ஆனால் சில மில்லி விநாடிகள் மட்டுமே நீடிக்கக் கூடிய குறுகிய ரேடியோ சமிக்ஞைகள் ஆகும்.
- சமீபத்தில், வானியலாளர்கள் ஈர்ப்பு அலைகளின் பரவலை உருவாக்குகிற வகையில் இரண்டு நியூட்ரான் நட்சத்திரங்கள் மோதி ஒரு கருந்துளையாக மாறுவதை ஆய்வு செய்தனர்.
- இந்த நிகழ்வுக்குப் பிறகு, ஒரு அதிவிரைவான ரேடியோ அலைப்பரவலை இது உருவாக்கியதாகத் தெரிகிறது.
- எனவே, இது போன்ற இரண்டு நியூட்ரான் நட்சத்திரங்கள் ஒன்றிணைவது சில விசித்திரமான ரேடியோ அலைகளை ஏற்படுத்தியிருக்கலாம்.
- ஆனால் இது உண்மையில் அதிவிரைவான ரேடியோ அலைப்பரவலுக்கு (FRB 20190520B) மட்டுமே பொருந்தும்.





## மறுபயன்பாட்டு ஏவுகல வாகனத்தின் சோதனை

- இஸ்ரோ நிறுவனமானது, இந்திய விமானப் படை மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து மறுபயன்பாட்டு ஏவுகல வாகனத்தின் தானியங்குத் தரையிறக்கச் சோதனையினை (RLV LEX) கர்நாடகாவின் சித்ரதுர்காவில் வெற்றிகரமாக நடத்தியது.
- இந்தச் சோதனையானது, மீண்டும் பயன்படுத்தக் கூடிய ஏவுகலங்கள் அல்லது விண்கலங்கள்/விண்வெளிப் பெட்டகங்களை உருவாக்குவதற்கான இஸ்ரோவின் முயற்சிகளின் ஒரு பகுதியான ஐந்து சோதனைகளில் இரண்டாவது சோதனையாகும்.
- இவை புவித் தாழ்மட்டச் சுற்றுப்பாதைகளுக்குச் சென்று விண்வெளிப் பொருட்களை நிலை நிறுத்திய பிறகு, மீண்டும் பயன்படுத்தப்படும் வகையில் பூமிக்குத் திரும்பக் கூடியவையாகும்.
- RLV-TD (HEX1) ஏவுகலத்தின் முதல் சோதனையில், ஏவு வாகனம் ஆனது வங்காள விரிகுடாவில் ஒரு தற்காலிக ஓடுபாதையில் தரையிறங்கியது.
- 2வது LEX பரிசோதனையில், ஏவு வாகனமானது ஒரு துல்லியமான ஓடுபாதையில் தரையிறக்கப் பட்டது.
- இன்னும் ஏவு வாகனம் புவிக்குத் திரும்புதல் குறித்தப் பரிசோதனை (REX), இயக்கத்தின் போது விண்வெளிப் பயண நிலை குறித்தப் பரிசோதனை மற்றும் ஸ்க்ராம்ஜெட் உந்து விசைப் பரிசோதனை (SPEX) ஆகிய மூன்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.




## மாபெரும் அளவிலான கருந்துளை



- அண்டத்தில் உள்ள மிகப்பெரிய கருந்துளைகளில் ஒன்றை வானியலாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.
- இந்த மாபெரும் கருந்துளையின் நிறை 30 பில்லியன் சூரியன்களுக்கு இணையாகும்.
- இது நமது சூரிய குடும்பத்தில் உள்ளதைப் போன்ற பில்லியன் கணக்கான சூரியன்களை உட்கிரகிக்கக் கூடிய அளவிலானது.
- இந்தக் கருந்துளையானது, ஏபெல் 1201 என்ற அண்டத் திரளில் உள்ள அண்டங்களில் ஒன்றினுள் அமைந்துள்ளது.
- இது பூமியிலிருந்து நூற்றுக்கணக்கான மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- இது முதல் முறையாக ஈர்ப்பியல் வளைவுரு முறை மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.
- ஈர்ப்பியல் வளைவுரு என்பது ஒரு முன்னிருக்கும் அண்டமானது, மிகவும் தொலை தூரப் பொருளிலிருந்து வரும் ஒளியை வளைத்து அதைப் பெரிதாக்கிக் காட்டுதல் என்பதாகும்.
- ஒரு நட்சத்திரமானது அதன் வாழ்நாளின் முடிவில் தகர்ந்து, ஒரு கருந்துளையினை உருவாக்குகிறது.


## மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் பாதுகாப்பு செயற்கருவி- கோபைலட்

- மைக்ரோசாப்ட் நிறுவனமானது, மைக்ரோசாஃப்ட் பாதுகாப்பு கோபைலட் எனப் படுகின்ற அதன் சமீபத்திய இணையவெளிப் பாதுகாப்பு சார்ந்த ஒரு புத்தாக்க அம்சத்தினை வெளியிட்டது.
- இந்தச் செயற்கருவியானது, அடுத்த தலைமுறைத் தொழில்நுட்பம் சார்ந்த செயற்கை நுண்ணறிவு ஒருங்கிணைப்பின் மூலம், பல்வேறு அச்சுறுத்தல்களை விரைவாகக் கண்டறிந்து அதற்கு எதிராக செயலாற்றப் பாதுகாப்பு வல்லுநர்களுக்கு உதவுகிறது.
- இது ஒட்டுமொத்த அச்சுறுத்தல் அமைப்பினைப் பற்றிய ஒரு சிறந்தப் புரிதலையும் வழங்குகிறது.
- மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் மிகப்பெரிய அச்சுறுத்தல் சார்ந்த நுண்ணறிவு மற்றும் Chat GPT-4 மென்பொருளின் ஆற்றலை இணைப்பதன் மூலம் கோபைலட் செயற்கருவி, பாதுகாப்பு வல்லுநர்களுக்கு பயன்படுத்தக் கூடிய எளிதான செயற்கை நுண்ணறிவு சார்ந்த உதவி அமைப்பாக செயல்படுகிறது.




## வெள்ளிக் கிரகத்தில் எரிமலை

- ஒரு புதியப் பகுப்பாய்வு ஆனது, வெள்ளிக் கோளின் மேற்பரப்பில் எரிமலை சார்ந்த நிகழ்வுகள் சமீபத்தில் நிகழ்ந்ததற்கான சில நேரடிப் புவியியல் ஆதாரங்களை முதல் முறையாகக் கண்டறிந்துள்ளது.



- ஒரு எரிமலைப் புழையானது, சுமார் எட்டு மாதங்களாக அதன் வடிவத்தை மாற்றி அளவில் பெரிதாகி வருவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த நிலப்பரப்பு மாற்றங்கள் ஆனது, மாகெல்லன் என்ற ஆய்வுப் பயணத்தின் போது வெள்ளிக் கோளில் உள்ள எரிமலையில் காணப்பட்டன.
- 1990 முதல் 1992 ஆம் ஆண்டு வரை, மாகெல்லன் விண்கலம் (17) ஆனது புவி மேற் பரப்பினைத் துல்லியமாகப் படம் பிடிக்கும் ரேடாரினை (SAR) பயன்படுத்தி வெள்ளிக் கோளின் மேற்பரப்பைப் படம் பிடித்தது.

## உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்பட்ட நான்கு கால்கள் கொண்ட எந்திரம்

- ஹைதராபாத்தில் அமைந்துள்ள ஸ்வயா ரோபோடிக்ஸ் நிறுவனமானது, இந்தியாவில் முதல் முறையாக உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்பட்ட நான்கு கால்கள் கொண்ட ஒரு எந்திரம் மற்றும் முதுகில் அணியக்கூடிய ஆயுதத் தொகுப்பினை உருவாக்கியுள்ளது.
- இந்த நான்கு கால்கள் கொண்ட எந்திரங்கள், சீரற்ற மற்றும் கரடுமுரடான நிலப் பரப்பில் நடக்க அல்லது ஓடக்கூடிய நான்கு கால்கள் கொண்ட எந்திரங்கள் ஆகும்.
- இந்த எந்திரங்கள் 25 கிலோ எடையைச் சுமந்து கொண்டு, ஓர் இராணுவ வீரருடன் இணைந்து அவருக்கு இணையாக நடக்கக் கூடியது.
- முதுகில் அணியக் கூடிய ஒரு புற ஆயுதத் தொகுப்பினை அணிவதன் மூலம், வீரர்கள் அதிக முயற்சி இல்லாமல் அதிக சுமைகளைச் சுமக்க முடியும்.



## MATSYA-6000

- தேசியக் கடல்சார் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, மூன்று நபர்களை கடலின் 6000 மீட்டர் ஆழத்திற்கு அனுப்புவதற்கான 'சமுத்ராயன்' என்ற திட்டத்தின் பணிகளை மேற்கொண்டு வருகிறது.
- இது ஆழ்கடல் ஆய்விற்காக 'மத்ஸ்யா 6000' என்ற வாகனத்தைப் பயன்படுத்த உள்ளது.
- இந்தியாவின் இந்த உள்நாட்டுப் பணியானது, இந்த அளவு ஆழத்திற்கு மனிதர்களை கொண்டுச் செல்லும் நீர்மூழ்கிக் கப்பல்களை வெற்றிகரமாகச் சோதனை செய்த ஐந்து நாடுகளின் குழுவினுள் இந்தியா இணைவதற்கு வழி வகுக்கும்.

- நிக்கல், மாங்கனீசு, கோபால்ட் மற்றும் பிற அருமண் தனிமங்கள் நிறைந்த ஆழ்கடல் கனிம வளங்களை ஆய்வு செய்வதில் அறிவியல் பணியாளர்களுக்கு 'மத்ஸ்யா 6000' உதவும்.





## இந்தியாவின் முதல் பாக்சைட் சான்றளிக்கப்பட்ட மேற்கோள் பொருள் (CRM)

- தேசிய அலுமினியம் கம்பெனி லிமிடெட் (NALCO) என்ற நிறுவனமானது, பாபா அணு ஆராய்ச்சி மையத்துடன் (BARC) இணைந்து, பாக்சைட் சான்றளிக்கப்பட்ட மேற்கோள் பொருளினை (CRM) வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது.
- இதற்கு BARC B1201 என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இதுவே இந்தியாவின் முதலாவது மற்றும் உலகளவில் ஐந்தாவது சான்றளிக்கப்பட்ட மேற்கோள் பொருளாகும்.
- ஒரு சான்றளிக்கப்பட்ட மேற்கோள் பொருள் என்பது ஒரு குறிப்பிட்ட வகையிலான அளவீட்டுத் தரமாகும்.
- சோதனை ஆய்வகங்கள், அளவீட்டுக் கருவிகளை அளவீடு செய்யவும், சோதனை நடைமுறைகளை மதிப்பீடு செய்யவும் மற்றும் தரக் கட்டுப்பாட்டு நோக்கங்களுக்காக சான்றளிக்கப்பட்ட குறிப்புப் பொருட்களைப் பயன்படுத்தவும் செய்கின்றன.




## தகைவுமின் விளைவு

- திரவங்களில் தகைவுமின் விளைவு இருப்பதற்கான ஆதாரங்களை அறிவியலாளர்கள் முதன்முறையாகக் கண்டறிந்துள்ளனர்.
- இந்த விளைவானது கடந்த 143 ஆண்டுகளாக நன்கு அறியப்பட்ட ஒன்றாக இருந்தது ஆனாலும் அது திடப் பொருட்களில் மட்டுமே காணப்படுவதாக அறியப்பட்டது.
- இந்த விளைவானது,
  - தூய 1-பியூட்டைல்-3-மெத்தில் இமிடாசோலியம் பிஸ் (ட்ரைஃப்ளுரோமெத்தில்-சல்போனைல்) இமைட் மற்றும்
  - 1-ஹெக்சைல்-3-மெத்தில் இமிடாசோலியம் பிஸ் (ட்ரைஃப்ளுரோமெதில் சல்போனைல்) இமைடு ஆகியவற்றில் கண்டறியப் பட்டது.
- இந்த இரண்டும் அறை வெப்பநிலையில் அயனித் திரவங்கள் (மூலக்கூறுகளுக்குப் பதிலாக அயனிகளால் ஆன திரவங்கள்) ஆக உள்ளன.
- தகைவுமின் விளைவில், ஒரு அமைப்பானது அழுத்தத்திற்கு உட்படுத்தப்படும் போது மின்சாரம் உருவாகிறது.
- குவார்ட்ஸ் ஆனது நன்கு அறியப்பட்ட தகைவுமின் படிகமாகும்.





## ஆசியாவின் மிகப்பெரிய 4 மீட்டர் சர்வதேச திரவ ஆடி தொலைநோக்கி



- ஆசியாவின் மிகப்பெரிய 4-மீட்டர் சர்வதேச திரவ ஆடி தொலைநோக்கி (ILMT) ஆனது உத்தரகாண்டில் திறக்கப்பட்டது.
- இந்தத் தொலைநோக்கியானது 2,450 மீட்டர் உயரத்தில், ஆர்யபட்டா ஆய்வு அறிவியல் ஆய்வுக் கழகத்தின் தேவஸ்தால் ஆய்வு வளாகத்தில் அமைந்துள்ளது.
- இந்த ஆய்வகம் தொலைதூர வான்வெளியினை ஆய்வு செய்யும் என்பதோடு குறுங் கோள்கள் முதல் மீயொளிர் விண்மீன் வெடிப்பு மற்றும் விண்வெளிக் குப்பைகள் வரையிலான பல்வேறு பொருட்களையும் வெவ்வேறாக வகைப்படுத்தும்.

## மனிதர்களில் தாவரப் பூஞ்சைகளின் தாக்கம்


- கொல்கத்தாவைச் சேர்ந்த 61 வயது முதியவர் ஒரு ஆட்கொல்லி வகை தாவரப் பூஞ்சையால் பாதிக்கப் பட்டுள்ளார்.
- இந்த அரிய வகை நோய்க் கிருமியால் தொற்று ஏற்படுவது உலகில் இதுவே முதல் முறையாகும்.
- மனிதர்களில் பூஞ்சை நோய்கள் ஏற்படுவது மிக அரிதானவை அல்ல.
- அறியப்பட்ட மில்லியன் கணக்கான பூஞ்சை உயிரினங்களில், சில நூறு இனங்கள் மட்டுமே மனிதர்களில் அதிக தீங்கு விளைவிக்கும் திறன் கொண்டவையாக உள்ளன.
- படர்தாமரை, சேற்றுப் புண் மற்றும் வாய்ப்புண் ஆகியவை பொதுவாக நம் சருமத்தின் ஈரமான பகுதிகளில் உருவாகி சரும எரிச்சலை உருவாக்கும்.
- பொதுவாக அழுகும் தாவரங்களை உண்ணும் அஸ்பெர்கிலஸ் போன்றப் பூஞ்சை இனங்கள், நம் உடலின் தோல் பகுதிகளைப் பாதிக்கக் கூடியவையாகும்.




## 'The hat': 50 ஆண்டுகால வடிவியல் மர்மம்

- நான்கு அறிவியலாளர்கள் கொண்ட குழு ஒன்று, 13 பக்கங்களைக் கொண்ட முற்றிலும் புதிய வடிவம் ஒன்றினைக் கண்டுபிடித்து அதற்கு "'The hat" என்று பெயரிட்டுள்ளனர்.
- புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்ட முதல் 'ஐன்ஸ்டீன்' வில்லை இதுவாகும்.
- இது ஒரு தளத்தினை ஒன்றோடு ஒன்று இணைக்காமல், இடைவெளிகள் விடாமல் அல்லது மீண்டும் மீண்டும் ஒரே மாதிரியான வடிவங்கள் இல்லாமல் காணப்படும் ஒரு வடிவமாகும்.
- எட்டுப் பட்டங்களின் விளிம்புகள் இணைந்து இதனை உருவாக்குகின்ற நிலையில் இதன் வடிவம் பாலிகைட் (பன்முக பட்ட வடிவம்) ஆகும்.

- ஒரு தளம் முழுவதும் பரவியுள்ளவாறான ஒற்றைச் சீரற்ற வடிவ வில்லை ஒன்று கண்டு பிடிக்கப் படுவது இது முதல் முறையாகும்.
- 1960 ஆம் ஆண்டுகளில் 20,000 வடிவங்களைக் கொண்ட முதல் வில்லைகள் உருவாக்கப் பட்டதில் இருந்து பல ஆண்டுகளாகக் குறைந்த எண்ணிக்கையிலான சீரற்ற வடிவ வில்லைகளே கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.



## விண்வெளியில் இருந்து எடுக்கப்பட்ட புவியின் படங்கள்



- புவிக் கண்காணிப்பு செயற்கைக்கோளின் (ஓஷன்சாட்-3) பெருங்கடல் வண்ண மாற்ற கண்காணிப்புக் கருவி மூலம் எடுக்கப்பட்ட புவியின் புதிய வியத்தகுப் படங்களை இஸ்ரோ பகிர்ந்துள்ளது.
- இந்தப் படங்களானது விண்கலம் மூலம் பெறப்பட்ட சில தரவுகளிலிருந்துத் தேசியத் தொலை உணர்வு மையத்தினால் (NRSC) உருவாக்கப்பட்ட நிறத் திட்டு ஆகும்.
- அவை உலகளாவிய நிலம் மற்றும் கடல் சார்ந்த பரப்புகளில் உள்ள தாவரப் பரவல் பற்றியத் தகவல்களை வழங்குகின்றன.
- ஓஷன்சாட்-3 என்பது 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் PSLV-C54 ஆய்வுப் பணித் திட்டத்தின் ஒரு பகுதியாக இஸ்ரோ நிறுவனத்தினால் விண்ணில் ஏவப் பட்ட ஒரு நுண்ணியச் செயற்கைக்கோள் ஆகும்.

## அமோகா III - ஏவுகணை




- ❖ பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் தனது 'அமோகா-III' ஏவுகணையின் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.
- ❖ இது சமீபத்திய 3வது தலைமுறைத் தொழில்நுட்பம் சார்ந்த மனிதனால் சுமந்துச் செல்லக் கூடிய பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் ஏவுகணை (ATGM) ஆகும்.
- ❖ இது ஏவப்பட்ட பிறகு எந்தவொருக் கண்காணிப்பு நடவடிக்கையும் தேவைப்படாத தொழில்நுட்பத்தினைக் கொண்டுள்ளதோடு, அது ஏவப்பட்ட பிறகு இதற்காக எந்த ஒரு வெளிப்புற நடவடிக்கைகளும் தேவையில்லை.
- ❖ இந்த ஏவுகணையின் வரம்புத் தொலைவு 200 முதல் 2500 மீட்டர் ஆகும்.

## தவான் II எஞ்ஜின்




- ❖ தனியார் விண்கலத் தயாரிப்பு நிறுவனமான ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ், முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட தனது தவான் II எந்திரத்தினைப் பரிசோதனை செய்துள்ளது.
- ❖ இந்த நிறுவனமானது, விக்ரம் II எனப்படும் அதன் கனரக விண்கலத்திற்காக இந்த க்ரையோஜெனிக் எந்திரத்தினை உருவாக்கியுள்ளது.

- ஸ்கைரூட் நிறுவனமானது, தனது எந்திரத்தின் முதல் துணை சுற்றுப்பாதை (கிடை மட்ட திசைவேகம் எய்தா நிலை) சோதனையினை 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மேற்கொண்டது.
- இதற்காக விக்ரம் S எனப்படும் ஒற்றைநிலைத் திட எரிபொருள் விண்கலம் ஒன்று பயன்படுத்தப் பட்டது.

## புவிக்கு மிக அருகில் உள்ள கருந்துளைகள்

- ஐரோப்பிய விண்வெளி முகமையானது இயல்பில் மிகவும் தனித்துவமாக விளங்கும் கருந்துளைகளின் புதிய குடும்பத்தினைக் கண்டுபிடித்துள்ளது.
- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்த இரண்டு கருந்துளைகள் பூமிக்கு மிக அருகில் அமைந்துள்ளன.
- கயையா BH1 என்ற ஒரு கருந்துளையானது பூமியிலிருந்து சுமார் 1560 ஒளியாண்டுகள் தொலைவில், ஒபியுச்சஸ் விண்மீன் திரளின் திசையில் அமைந்துள்ளது.
- கயையா BH2 என்ற கருந்துளை ஆனது, 3800 ஒளி ஆண்டுகள் தொலைவில் சென்டாரஸ் விண்மீன் திரளில் அமைந்துள்ளது.




## அரிய வகை தனிமம் (REEs) படிவு




- ஹைதராபாத்தில் உள்ள தேசியப் புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவன அறிவியல் நிபுணர்கள் ஆந்திரப் பிரதேசத்தின் அனந்தப்பூர் மாவட்டத்தில் அரிய வகை தனிமப் படிவுகளை (REE) கண்டுபிடித்துள்ளனர்.
- இந்தத் தனிமங்கள் பல மின்னணுச் சாதனங்களின் முக்கிய கூறுகளாகவும் மற்றும் படமிடல், விண்வெளி மற்றும் பாதுகாப்பு போன்ற தொழில்துறைத் துறைகளிலும் பயன்படுத்தப் படுகிறது.
- அரிய வகை தனிமம் என்பது ஸ்காண்டியம் மற்றும் யட்ரியம் ஆகியவற்றுடன் தனிம வரிசை அட்டவணையில் குறிப்பிட்டுள்ள லாந்தனைடு மற்றும் ஆக்டினைடு போன்ற வரிசையில் உள்ள 15 தனிமங்களையும் குறிக்கிறது.

## செயற்கை நுண்ணறிவு மாதிரி DAGGER

- DAGGER எனப்படும் செயற்கை நுண்ணறிவில் இயங்கும் புதிய கணினி மாதிரியானது, சூரியக்கதிர் புயல்கள் எப்போது, எங்கு பூமியைத் தாக்கும் என்பதைத் துல்லியமாகக் கணிப்பதற்காக பிரத்தியேகமாகப் பயிற்சியளிக்கப்பட்டுள்ள ஒரு மாதிரியாகும்.
- நாசாவின் விண்கலத்தினால் மேற்கொள்ளப்படும் சூரியக் காற்று குறித்தக் கண்காணிப்புத் தரவுகளை ஆய்வு செய்வதற்கும், பூமியில் சூரியப் புயல் தாக்க உள்ள இடத்தை முன் கூட்டியே அறிவிக்கச் செய்வதற்கும் இந்தச் செயற்கை நுண்ணறிவு மாதிரி உதவும்.
- இது நிகழ்வதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னதாக ஏற்படும் புவிக் காந்த இடர்பாடுகளை தற்போது இதன் மூலம் கணிக்க முடியும்.

## கருப்பை அகப்படலம்




- எண்டோமெட்ரியோசிஸ் நிலையினை மிகவும் நம்பகமான முறையில் கண்டறியச் செய்வதற்கான ஒரு இரத்தப் பரிசோதனை முறையினை டாட்லேப் என்ற அமெரிக்க நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.
- எண்டோமெட்ரியோசிஸ் (கருப்பை அகப்படலம்) என்பது உலகளவில் 10% அளவிலான பெண்களைப் பாதிக்கும் ஒரு உடல் பலவீன நிலையாகும்.
- எண்டோமெட்ரியோசிஸ் என்பது ஒரு வலி மிகுந்த நாள்பட்ட நோயாகும் என்பதோடு, இதில் கருப்பையின் அகணி அல்லது எண்டோமெட்ரியம் போன்ற பல திசுக்கள் கருப்பைக்கு வெளியே வளரும்.

- இதுவரையில், இதற்கான நோயறிதலுக்காக என்று மக்கள் சராசரியாக 6.7 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.
- எண்டோமெட்ரியோசிஸ் நிலைப் பாதிப்பு உள்ளவர்களின் எண்ணிக்கை உலகளவில் 190 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியாவில் மட்டும் சுமார் 42 மில்லியன் பேர் எண்டோமெட்ரியோசிஸ் நிலையினால் பாதிக்கப் பட்டுள்ளனர்.


## உளவுச் சாதனமாக செயல்படும் மருத்துவச் சாதனங்கள்



- மருத்துவத் தொழில்நுட்பச் சாதனங்கள் உளவு மென்பொருள் மற்றும் தீம்பொருளாக மாற்றப் படச் செய்யலாம் என்பதோடு இது பல்வேறு தரவுகளைக் கூட கைப்பற்றக் கூடியதாகவும் மாற்றப் படலாம்.
- மருத்துவச் சாதனங்களில் மென்பொருளாக செயல்படும் மருத்துவச் சாதனம் (SaMD) மற்றும் மென்பொருளினைக் கொண்ட மருத்துவச் சாதனங்கள் (SiMD) ஆகிய பல்வேறு வகைகள் உள்ள நிலையில், அவை பொதுவாக இணையம், கைபேசிகள், சேவையகங்கள் மற்றும் மேகக் கணிமை ஆகியவற்றுடன் இணைக்கப் பட்டுள்ளது.
- இதில் ஆக்சிஜன் அளவிகள், செவிப்புலன் கருவிகள், குளுக்கோஸ் அளவிகள், மருத்துவ கண்காணிப்பு அம்சம் கொண்ட கடிகாரங்கள் மற்றும் இதயவேக முடுக்கிகள் மற்றும் உட்செலுத்தக் கூடிய இதய வேகம் மற்றும் துடிப்புப் பதிவுக் கருவிகள் போன்ற உடலினுள் செலுத்தக் கூடிய உபகரணங்கள் ஆகியவையும் அடங்கும்.
- உலகின் 20 முன்னணி மருத்துவச் சாதன சந்தைகளில் இந்தியாவும் ஒன்று என்பதோடு ஆசியாவிலேயே நான்காவது பெரியச் சந்தையாகவும் இந்தியா உள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டில் 44,708 கோடி (5.59 பில்லியன் டாலர்) ரூபாயாக இருந்த மருத்துவச் சாதன இறக்குமதியானது 2021-22 ஆம் ஆண்டில் 41% அளவிற்கு அதிகரித்து 63,200 கோடி ரூபாயாக (7.91 பில்லியன் டாலர்) உயர்ந்துள்ளது.
- இந்தியாவில் மருத்துவச் சாதனங்கள் துறையின் பங்கு எனபது 2025 ஆம் ஆண்டில் 50 பில்லியன் டாலரை எட்டும் என்று கணிக்கப் பட்டுள்ளது.


## யுரேனியம்-241

- ஜப்பானில் உள்ள இயற்பியலாளர்கள் இதுவரையில் முன்னர் அறியப்படாத யுரேனிய ஐசோடோப்பைக் கண்டுபிடித்துள்ளனர்.
- யுரேனியம்-241 எனப்படும் இந்தப் புதிய ஐசோடோப்பு ஆனது 92 புரோட்டான்களையும் 149 நியூட்ரான்களையும் கொண்டுள்ளது.
- இந்தப் புதிய நியூட்ரான் நிறைந்த யுரேனியம் ஐசோடோப்பின் இந்தக் கண்டுபிடிப்பு ஆனது 1979 ஆம் ஆண்டிற்கு பிறகு மேற்கொள்ளப் பட்டுள்ள இவ்வகையில் முதலாவது கண்டுபிடிப்பாகும்.
- கோட்பாட்டுக் கணக்கீடுகள் இது 40 நிமிடங்கள் என்ற அரை ஆயுட்காலத்தினைக் கொண்டிருக்கலாம் என்று கூறுகின்றன.
- யுரேனியம், தனிம வரிசை அட்டவணையில் உள்ள "ஆக்டினைடுகள்" எனப்படும் தனிமங்களின் வகுப்பில் உள்ளது.
- அனைத்து ஆக்டினைடுகளும் கதிரியக்கத்தன்மை கொண்டவை, ஆனால் யுரேனியம் ஆனது அதிக கதிரியக்கத் தன்மை கொண்ட நான்கு தனிமங்களில் ஒன்றாகும்.




## வியாழன் கோளின் பனி நிறைந்த துணைக் கோள்களின் ஆய்வுக் கலம் – Juice

- ஐரோப்பிய விண்வெளி நிறுவனமானது (ESA) வியாழன் கோளின் பனி நிறைந்த துணைக் கோள்களின் ஒரு ஆய்வுக் கலம் அல்லது ஜூஸ் ஆய்வுப் பணி கலத்தினை விண்ணில் ஏவியுள்ளது.
- இது சூரியக் குடும்பத்தின் மிகப்பெரிய கிரகம் மற்றும் உயிர்கள் வாழ்வதற்கான சூழல்களைக் கொண்டுள்ள அதன் பனி நிறைந்த துணைக் கோள்கள் பற்றிய விரிவான ஆய்வுகளை மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இரண்டு விண்கலங்கள் மட்டுமே இதுவரை வியாழன் கோளினை ஆய்வு செய்துள்ளன.
- 1995 மற்றும் 2003 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இந்த இராட்சத வாயுக் கோளினை கலிலியோ ஆய்வுக் கலம் சுற்றி வந்தது.
- ஜூனோ ஆய்வுக் கலம் 2016 ஆம் ஆண்டு முதல் இந்தக் கிரகத்தைச் சுற்றி வருகிறது.




## ஆர்ட்சென்ஸ் சாதனம்

- ❖ சென்னையின் இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் இருதய நோய்களைக் கண்டறிய உடலினுள் செலுத்தத் தேவைப்படாத வகையிலான ஒரு சாதனத்தினை உருவாக்கியுள்ளனர்.
- ❖ ஆர்ட்சென்ஸ் எனப்படும் இந்தச் சாதனத்தினை வழக்கமான மருத்துவப் பரிசோதனை ஆய்வுகளுக்காக நிபுணர்கள் அல்லாதவர்கள் கூட இதனைப் பயன்படுத்தப்படலாம்.
- ❖ மருத்துவ மற்றும் மருத்துவம் சாராத அமைப்புகளில், அதிக நபர்களுக்கு இந்த சாதனம் பயனுள்ளதாக இருக்கும்.




## CL-Flam

- ❖ இந்தூரின் இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் கழகம், நாசா-கால்டெக் மற்றும் ஸ்வீடனின் கோதன்பர்க் பல்கலைக் கழகம் ஆகியவை இணைந்து CL-Flam எனப்படும் குறைந்த விலை ஒளிப்படக் கருவி அமைப்பை உருவாக்கியுள்ளன.
- ❖ இது ஒற்றை DSLR ரக ஒளிப்படக் கருவியினைப் பயன்படுத்தி ஒரு சுடரில் உள்ள நான்கு இரசாயன வகைகளின் பல் நிறமாலைப் படத்தினை வழங்கக் கூடியது.
- ❖ முன்னதாக அறிவியல் சார்ந்த படத்தினைப் பெறுவதற்கு நான்கு ஒளிப்படக் கருவிகள் கொண்ட சிக்கலான அமைப்பு தேவைப்பட்டது.




## கைகை அடிப்படையிலான உயிரியளவியல் பதிவு அமைப்பு

- இந்தியத் தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) மற்றும் மும்பையின் இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் கழகம் ஆகியவை, ஓர் உறுதி மிக்க கைகை அடிப்படையிலான உயிரியல் அளவியல் பதிவு முறையை உருவாக்கச் செய்வதற்காக ஒன்றிணைந்து செயல்படுகின்றன.
- பதிவு அமைப்புடன் ஒருங்கிணைந்த வகையிலான ஒரு இயக்க மாதிரியுடன், எளிதில் சுமந்து செல்லும் வகையிலான கைரேகைப் பதிவு அமைப்பை உருவாக்க அந்த இரு அமைப்புகளும் ஒரு கூட்டு ஆராய்ச்சியை மேற்கொள்ள உள்ளன.
- இது முக அங்கீகாரத்தைப் போன்றே, கைரேகை அங்கீகாரத்தையும் வீட்டில் இருந்தே மேற்கொள்வதற்கு வழிவகை செய்யும்.





## மிகை மாறுநிலை கார்பன் டை ஆக்சைடு

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் புதிய ஆராய்ச்சியானது, கையிருப்பு மட்டம் குறைந்து வரும் எண்ணெய் மற்றும் எரிவாயுத் தேக்கங்களில் இருந்து


எண்ணெயை வெளியேற்ற மிகை மாறுநிலை கார்பன் டை ஆக்சைடைப் பயன்படுத்துவதற்குப் பரிந்துரைத்துள்ளது.

- அது ஒரு குறிப்பிட்ட வெப்பநிலை மற்றும் அழுத்தத்திற்கு மேல், கார்பன் டை ஆக்சைடு வாயுவிற்கும் திரவத்திற்கும் இடையிலான பண்புகளைப் பெறுகிறது.
- இது மிகை மாறுநிலை என்று அழைக்கப் படுகின்ற அடர்த்தியான மற்றும் வெளியேற்ற எளிதான நிலையை அடைகிறது.
- கார்பன் டை ஆக்சைடின் ஒரு திரவ நிலையான இதில் கார்பன் டை ஆக்சைடு அதன் மாறுநிலை வெப்பநிலை (31◦C) மற்றும் மாறுநிலை அழுத்தம் (73 atm) அல்லது அதற்கு மேலான நிலையில் வைக்கப் படுகிறது.




## முழுமையான மனித மரபணுத் தொகுப்பு


- மனித மரபணுத் திட்டம் ஆனது 2003 ஆம் ஆண்டில் முதல் முறையாக முழு மனித மரபணுத் தொகுப்பினை நிறைவு செய்ததாக அறிவித்துள்ளது.
- முதன்முறையாக, மனித உயிரினத்தின் DNA உருவ வரைபடமும் வெளியிடப்பட்டது.
- ஆனால் அவர்களால் உண்மையில் மரபணுவில் உள்ள அனைத்து மரபணுத் தகவல்களையும் ஒன்றாக இணைக்க முடியவில்லை.



- இதில் இடைவெளிகள் இருந்தன: அவை நிரப்பப்படாத, அடிக்கடி மீண்டும் மீண்டும் வரக் கூடிய தொடர் பகுதிகள் ஒன்றாக இணைக்க முடியாத அளவுக்கு குழப்பமாக இருந்தன.
- இந்தத் தொடர்களை கையாளக் கூடிய அளவிலான தொழில்நுட்பத்தில் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டதன் மூலம், அறிவியலாளர்கள் இறுதியாக 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில் அந்த இடைவெளிகளை நிரப்பினர்.
- முதலாவது மனித மரபணுவானது, 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியன்று அதிகாரப் பூர்வமாக வெளியிடப்பட்டது.
- இந்த ஆண்டு, முதன்முறையாக, லியோன் பெஷ்கின் என்ற ஒரு தனி மனிதனின் முழு மரபணு வெளியிடப்பட உள்ளது.

## வியாழன் கோளின் குறுங்கோள்கள்

- நாசாவின் லூசி விண்கலம் ஆனது, வியாழனின் குறுங்கோள்களை முதன்முறையாகக் கண்டறிந்துள்ளது.
- நாசாவின் ஆய்வுக் கருவி மூலம் ட்ரோஜான்கள் எனப்படும் நான்கு குறுங்கோள்களின் தொலை தூர விண்வெளிப் படங்களைப் பதிவு செய்ய முடிந்தது.
- மார்ச் 25 முதல் 27 ஆம் தேதி வரை நான்கு ட்ரோஜன் குறுங்கோள்கள் படம் பிடிக்கப் பட்டன.
- முதன்முறையாகப் படம் பிடிக்கப்பட்ட இந்த நான்கு குறுங்கோள்கள் யூரிபேட்ஸ், பாலிமெல், லியூகஸ் மற்றும் ஓரஸ் என்று அழைக்கப் படுகின்றன.
- அவை அனைத்தும் சூரியனைச் சுற்றியுள்ள வியாழனின் சுற்றுப் பாதையைப் பின்பற்றி சுற்றி வரும் இரண்டு பெரிய குழுமங்களின் ஒரு பகுதியாகும்.
- இந்தப் படங்களை எடுப்பதற்காக, லூசி விண்கலமானது L'LORRI என்ற கருவியினை (லூசி தொலைதூர வரம்புடைய ஆய்வுப் படக் கருவி - Lucy Long Range Reconnaissance Imager) பயன்படுத்தியது.
- லூசி வியாழனின் குறுங்கோள்களிலிருந்து 530 மில்லியன் கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.
- 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் விண்ணில் ஏவப்பட்ட இந்த விண்கலம் ஆனது, 2027 மற்றும் 2028 ஆம் ஆண்டுகளில் அதன் இலக்குகளான குறுங்கோள்களைச் சென்று அடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.




## உலகின் முதல் திறன்மிகு துப்பாக்கி

- ❖ உயிரியல் அளவியல் அடையாளங்களைப் பயன்படுத்தும் வகையிலான 'திறன்மிகு துப்பாக்கிகளை' விற்பனை செய்ய உள்ளதாக அமெரிக்காவின் பயோஃபயர் நிறுவனம் அறிவித்துள்ளது.
- ❖ இது உயிரியல் அளவியல் அடையாளங்களைப் பயன்படுத்துவதனால், அங்கீகரிக்கப் பட்ட நபர்கள் மட்டுமே இந்தத் துப்பாக்கியினைப் பயன்படுத்த முடியும்.
- ❖ இது கைரேகை மற்றும் முக அடையாளம் காணல் ஆகிய சில அங்கீகார முறைகளைப் பயன்படுத்தச் செய்வதோடு, இது துப்பாக்கிச் சுடுதல் நெறிமுறையுடன் ஒரு தடையற்ற வகையில் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது.




## நிங்கலூ கிரகணம்




- ❖ இந்தக் கிரகணத்தின் போது சூரியனுக்கும் பூமிக்கும் இடையே நிலவானது கடந்து செல்லும்.

- நிலவின் நிழல் விழுந்த இருண்ட பகுதியில் உள்ள பூமியின் பகுதிகளில் முழு சூரிய கிரகணம் ஏற்படும்.
- ஆனால் சில நேரங்களில், நிலவானது சூரியனின் ஒளியினை முழுவதுமாக மறைக்க முடியாத அளவுக்கு சூரியனிலிருந்து வெகு தொலைவில் இருக்கும்.
- இத்தகைய நிகழ்வானது வளைய கிரகணம் எனப்படும்.
- பூமியின் மேற்பரப்பு வளைந்திருப்பதால், இந்த வளைய கிரகணமானது ஒரு முழு கிரகணமாகவும் மற்றும் மாறி மாறியும் நிகழக் கூடும்.
- இது கலப்பு கிரகணம் அல்லது நிங்கலூ கிரகணம் எனப்படும்.
- இந்தக் கலப்பு சூரிய கிரகணம் ஆனது இந்தியாவில் புலப்படவில்லை.

## எதிரிணை நியூட்ரினோ துகள்கள் கண்டுபிடிப்பு





- அறிவியலாளர்கள், முதன்முறையாக ஒரு செயல்முறையில் சுத்தமான தண்ணீரைப் பயன்படுத்தி எதிரிணை நியூட்ரினோ துகள்களை (ஆன்டிநியூட்ரினோ) தற்செயலாக கண்டுபிடித்துள்ளனர்.
- அவை 240 கிலோமீட்டர் (150 மைல்) தொலைவில் உள்ள அணு உலையிலிருந்து தோன்றியவையாகும்.
- இந்தக் கண்டுபிடிப்பானது, நியூட்ரினோ பரிசோதனைகள் மற்றும் மலிவான, எளிதில் பெறக் கூடிய மற்றும் பாதுகாப்பானப் பொருட்களைப் பயன்படுத்தும் கண்காணிப்பு தொழில்நுட்பத்திற்கான உறுதியளிப்பினை வழங்குகிறது.
- எதிரிணை நியூட்ரினோக்கள் நியூட்ரினோக்களின் எதிர்பருப்பொருளாகும்.
- அவை சாதாரணப் பருப்பொருளினை விட எதிர்மறையான நிறை கொண்டு மற்றும் மின்னூட்டத்தைக் கொண்டுள்ளதோடு, அவை மற்ற துகள்களுடன் தொடர்பு கொள்வது அரிதாகவே இருக்கும்.

- இதனால் அவற்றைக் கண்டறிவது பெரும்பாலும் கடினமாகிறது.
- அணு உலைகளில் நியூட்ரான்கள் புரோட்டான்களாகவும் எலக்ட்ரான்களாகவும் பிரியும் போது அவை துணைப் பொருளாக உற்பத்தியாகின்றன.


## காந்த எதிர்ப்புத் திறன்

- ஐக்கியப் பேரரசின் ஆராய்ச்சியாளர்கள், சமீபத்தில் கிராபினின் மற்றொரு பண்பைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இது தேன்கூடு வடிவத்தில் பிணைக்கப் பட்ட கார்பன் அணுக்களின் ஒற்றை-அணு-கொண்ட தடிமனான ஒரு அடுக்காக உள்ளதோடு, இது இந்த 'அதிசய' பொருளை மேலும் வேறுபடுத்திக் காட்டுகிறது.
- அறை வெப்பநிலையில் கிராபின் ஒரு முரண்பாடான மாபெரும் காந்த எதிர்ப்புத் திறன் தன்மையை (GMR) வெளிப்படுத்துகிறது.
- போரான் நைட்ரைட்டின் இரண்டு அடுக்குகளுக்கு இடையில் வைக்கப்பட்ட, 27° C வெப்ப நிலையில் உள்ள ஒற்றையடுக்கு கிராபினின் காந்த எதிர்ப்புத் திறனானது 0.1 டெஸ்லா புலத்தின் கீழ் 110% அதிகரித்துள்ளது.
- ஒரு ஒப்பீட்டுச் செயல்முறையில், சாதாரண உலோகங்களில் இந்த நிலைகளில் காந்த எதிர்ப்புத் திறன் 1 சதவீத்திற்கும் குறைவாகவே அதிகரிக்கிறது.
- மாபெரும் காந்த எதிர்ப்புத் திறன் என்பது ஒரு கடத்தியின் மின்னியல் எதிர்ப்புத் திறனானது அருகிலுள்ள பொருட்களில் உள்ள காந்தப்புலங்களால் பாதிக்கப்படும்.
- இது கணினிகளில் உள்ள வன்தட்டு மற்றும் காந்த எதிர்ப்பு RAM சாதனங்கள், உயிரி உணர்விகள், வாகன உணர்திறன் கருவிகள், நுண்மின்னிய இயந்திர அமைப்புகள் மற்றும் மருத்துவ ஆய்வுப்படக் கருவிகள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகிறது.



## PSLV-C55/TeLEOS-2 ஆய்வுத் திட்டம்

- இஸ்ரோ தனது PSLV-C55/TeLEOS-2 திட்டம் மூலமாக சிங்கப்பூரில் தயாரிக்கப்பட்ட இரண்டு செயற்கைக் கோள்களைக் கொண்ட ஒரு ஏவுகலத்தினை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
- இந்த இரண்டு செயற்கைக் கோள்களில், TeLEOS-2 முதன்மையானதாகவும், Lumelite-4, 'இணை செயற்கைக் கோளாகவும்' அனுப்பப் பட்டன.
- இந்த விண்வெளிப் பயணமானது, துருவநிலைச் செயற்கைக்கோள் ஏவு வாகனத்தின் (PSLV) 57வது விண்வெளிப் பயணத்தினையும் குறிக்கிறது.




## GRX-810 உலோகக் கலவை

- நாசாவின் ஆராய்ச்சியாளர்கள் GRX-810 எனப்படும் அதிக வலிமை கொண்ட, அதிக வெப்பநிலை எதிர்ப்புத் திறன் கொண்ட ஒரு புதிய உலோகக் கலவையை உருவாக்கி உள்ளனர்.
- GRX-810 உலோகக் கலவையானது முதன்மையாக நிக்கல், கோபால்ட் மற்றும் குரோமியம் ஆகியவற்றால் ஆனது.

- தற்போதைய இந்த அதிநவீன, முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட அதி உலோகக் கலவையின் வெப்பநிலை எதிர்ப்புத் திறன் ஆனது 1,093 டிகிரி செல்சியஸ் வரை உள்ளது.
- இது சாதாரண உலோகக் கலவைகளை விட 1,000 மடங்கு அதிகம் நீடித்து உழைக்கக் கூடியது.
- இது விமானம் மற்றும் விண்வெளி ஆய்வுகளில் பயன்படுத்தப்படும் கூறுகள் மற்றும் பாகங்களின் வலிமை மற்றும் கடினத் தன்மையை அதிகரிக்கச் செய்ய உதவும்.





## SuperBIT ஆய்வுக் கருவி

- அதி அழுத்த ஊதற்பை வழி (பலூன்) ஆய்வுத் தொலைநோக்கியானது (SuperBIT), நாசாவின் ஹீலியம் நிரப்பப்பட்ட அறிவியல்சார்ந்த பலூன் மூலம் விண்வெளியின் விளிம்புப் பகுதி வரை சென்றது.
- இது படை மண்டல ஆய்வுக் கருவியின் முதல் செயல்பாட்டுச் சோதனையாகும்.
- இது இந்த ஆய்வுப் பயணத்தில் "டரான்டுலா நெபுலா" எனப்படும் நமது பால்வெளி அண்டத்திற்கு அருகிலுள்ள ஓர் அண்டத்தின் ஒரு பிரகாசமான வாயு மற்றும் தூசிப் படலத் திரளினைக் காட்டும் தனது முதல் படங்களைப் பதிவு செய்தது.
- இது "ஆன்டெனா" என்று அழைக்கப்படும் NGC 4038 மற்றும் NGC 4039 ஆகிய இரண்டு அண்டங்களுக்கு இடையிலான மோதலையும் படம் பிடித்தது.




## மய்லின் நரம்புறை

- மய்லின் நரம்புறையின் முக்கியப் புரதக் கூறுகளான தூய மய்லின் என்ற அடிப்படைப் புரதத்தின் (MBP) ஒற்றையடுக்குகளை அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- தண்டுவட மரப்பு நோய் (MS) போன்ற நோய்கள் குறித்து ஆய்வு செய்வதற்கான ஒரு முக்கிய மாதிரிப் புரதமாகச் செயல்படுகிற இது நரம்பணுக்களின் நரம்பிழையைச் சுற்றிக் காணப் படும் ஒரு பாதுகாப்புச் சவ்வு ஆகும்.
- மய்லின் என்ற அடிப்படைப் புரதமானது மய்லின் உறையை ஒரு சிறு கட்டமைப்பாக்க உதவுகிறது.
- வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இந்த ஒற்றையடுக்குகள், பல்லடுக்கு மய்லின் உறை அமைப்பை உருவாக்குவதில் மய்லின் அடிப்படை புரதத்தின் பங்கினைப் பற்றிய ஆழ்ந்த புரிதலை வழங்கும்.




## மின்காந்த அயனி சைக்ளோட்ரான் அலைகள்

- இந்திய அண்டார்டிக் ஆய்வு நிலையமான மைத்ரியில், பிளாஸ்மா அலைகளின் ஒரு வடிவமான மின்காந்த அயனி சைக்ளோட்ரான் (EMIC) அலைகள் பெருமளவில் காணப் படுவதை அறிவியலாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- இந்த அலைகள் சேதம் விளைவிக்கும் (கொலையாளி) எலக்ட்ரான்களின் பொழிவில் ஒரு முக்கியப் பங்கு வகிக்கின்றன.
- சேதம் விளைவிக்கும் எலக்ட்ரான்கள் என்பது பூமியின் கதிர்வீச்சு மண்டலத்தினை உருவாக்குகின்ற, ஒளியின் வேகத்திற்கு அருகிலான ஒரு பெரும் வேகத்தைக் கொண்ட எலக்ட்ரான்கள் ஆகும்.
- கதிர்வீச்சு மண்டலங்களில் உள்ள தாழ்மட்டச் சுற்றுப்பாதையில் இயங்கும் செயற்கைக் கோள்களின் மீது இந்த ஆற்றல்மிக்க துகள்களின் தாக்கத்தைப் பற்றி புரிந்து கொள்ள இந்த ஆய்வு உதவும்.
- மின்காந்த அயனி சைக்ளோட்ரான் (EMIC) என்பது பூமியின் காந்த மண்டலத்தில் காணப் படும் பிளாஸ்மா அலைகள் ஆகும்.




## நாகாஸ்திரா-1


- இந்திய இராணுவமானது 450க்கும் மேற்பட்ட, முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப் பட்ட இலக்கினை மட்டும் குறி வைத்து தாக்கும் வகையிலான ஒரு முக்கிய ஆயுதமான நாகாஸ்திரா-1 எனப்படுகின்ற ஆளில்லா விமானங்களை வாங்கச் செய்வதற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டுள்ளது.
- இந்த நாகாஸ்திரா-1 ஆயுதம் இடை நிறுத்தம், மீட்சி மற்றும் மறுபயன்பாடு போன்ற பல மேம்பட்ட அம்சங்களைக் கொண்டுள்ளது.
- இது தொழில்நுட்ப ரீதியாக முன்னேறிய நாடுகளால் உருவாக்கப்பட்ட இதனை ஒத்த பிற ஆயுத அமைப்புகளை விட மேம்பட்டதாகும்.



## கடல் சார் உள்வளிமண்டல இடைமறிப்பு ஏவுகணை

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் இந்தியக் கடற்படை ஆகியவை இணைந்து, கடல் சார் இயக்கத்திற்கான ஒரு உள் வளிமண்டல இடைமறிப்பு ஏவுகணையின் முதல் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டன.
- எதிரிநாட்டு உந்துவிசை ஏவுகணை அச்சுறுத்தலை எதிர்கொண்டு வீழ்த்துவதே இந்தச் சோதனையின் நோக்கமாகும்.
- இந்தச் சோதனையின் வெற்றியானது, கடல்சார் உந்துவிசை ஏவுகணைப் பாதுகாப்பு திறன் கொண்ட நாடுகளின் உயர்நிலைக் குழுவில் ஒன்றாக இந்திய நாட்டினைத் தரம் உயர்த்தியது.

- இதற்கு முன், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது எதிரிகளிடமிருந்து வரும் ஏவுகணை அச்சுறுத்தல்களை நடுநிலையாக்கும் ஒரு திறன் கொண்ட நிலம் சார்ந்த உந்து விசை ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்பின் ஒரு செயல் விளக்கத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்தது.




## விண்வெளியில் விதைகள்


- கடந்த ஆண்டு, சர்வதேச அணுசக்தி முகமை (IAEA) மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) ஆகியவை இணைந்து விதைகளை விண்வெளிக்கு அனுப்பியது.
- புவி வெப்பமடைந்து வருவதால், போதுமான உணவை வழங்க உதவும் மீள் திறன் கொண்ட பயிர்களை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தாவர மரபணுக்கள் மற்றும் உயிரியலில் காஸ்மிக் கதிர்வீச்சு, நுண் புவியீர்ப்பு மற்றும் அதிதீவிர வெப்பநிலை ஆகியவற்றின் விளைவைக் கண்டறிவதற்காக வேண்டி இந்த அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் முதல் சாத்தியக்கூறு ஆய்வு இதுவாகும்.
- அராபிடோப்சிஸ் மற்றும் சோளம் ஆகியவற்றின் விதைகள் விண்வெளிக்கு அனுப்பப் பட்டு சுமார் 5 மாதங்கள் சர்வதேச விண்வெளி நிலையத்தில் அவை ஆய்வு செய்யப் பட்டன.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலக ஆற்றல் மாற்றக் கண்ணோட்டம் 2023

- ஆற்றல் மாற்றம் சார்ந்த தொழில்நுட்பங்களில் மேற்கொள்ளப்படும் உலக நாடுகளின் முதலீடு ஆனது 2022 ஆம் ஆண்டில் 1.3 டிரில்லியன் டாலர் என்ற புதியச் சாதனையை எட்டியுள்ளது.
- இது சர்வதேசப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மையத்தால் வெளியிடப் பட்டுள்ளது.
- ஆனால், 2022 ஆம் ஆண்டில் உலகளாவியப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீடுகளில் வளர்ந்து வரும் நாடுகளில் 15 சதவீதத்தினை மட்டுமே பெற்றுள்ளன.
- குறைவான வளர்ச்சியடைந்த நாடுகளில் 2013 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் சராசரியாக மொத்தப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீடுகளில் 0.84 சதவீதத்தினை மட்டுமே பெற்றுள்ளன.
- இந்த முதலீடுகளில் பெரும்பகுதியினை பிரேசில், சிலி மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் பெற்றுள்ளன.
- 2017 ஆம் ஆண்டில் 27 சதவீதமாக இருந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான மொத்த முதலீடானது 2020 ஆம் ஆண்டில் 15 சதவீதமாக குறைந்துள்ளன.
- தெற்காசியாவில், தனிநபர் முதலீடுகள் 2015 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 26 சதவீதம் குறைந்துள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 2021 மற்றும் 2030 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் உலக நாடுகளுக்குச் சராசரியாக 5.7 டிரில்லியன் டாலர் வருடாந்திர முதலீடுகள் தேவைப் படும்.
- இந்த இலக்கை அடைவதற்கு 2031 மற்றும் 2050 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 3.7 டிரில்லியன் டாலர் தேவைப் படுகிறது.




## இறக்குமதி செய்யப்பட்ட CO2 புதைவிடம்

- டென்மார்க், வடக்கு கடலுக்கு அடியில் 1,800 மீட்டர் ஆழத்தில் கார்பன் டை ஆக்சைடை சேமிக்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கார்பன் டை ஆக்சைடை கடலுக்கு அடியில் புதைக்கும் உலகின் முதல் நாடு இதுவாகும்.

- "கிரீன்சாண்ட்" திட்டம் ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் ஆண்டிற்கு எட்டு மில்லியன் டன்கள் வரையிலான கார்பன் டை ஆக்சைடைக் கடலுக்கு அடியில் சேமிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.




## உயிரி எரிபொருள் கூட்டணி

- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழ், உலகளாவிய உயிரி எரி பொருள் கூட்டணி தொடங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தியா தலைமையிலான இந்த முயற்சியில் அமெரிக்கா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் இணைந்துள்ளன.
- இந்தக் கூட்டணியின் நோக்கமானது, ஒத்துழைப்பை ஊக்குவிப்பதும், போக்குவரத்துத் தொழில்துறை உட்பட பல்வேறு துறைகளில் நிலையான உயிரி எரிபொருட்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதும் ஆகும்.
- உயிரி எரிபொருள் உற்பத்தியில் அமெரிக்கா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் முதல் 2 இடங்களில் உள்ளன.
- அவை உயிரி டீசல் மற்றும் எத்தனால் உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றன.
- இவை இரண்டும் சேர்த்து உலகின் எத்தனால் உற்பத்தியில் 84% மற்றும் உலகின் உயிரி டீசல் உற்பத்தியில் 26% பங்கினைக் கொண்டுள்ளன.
- இந்தியா, பிரேசில் மற்றும் அமெரிக்கா ஆகியவை உலகின் முன்னணி உயிரி எரி பொருள் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் நாடுகளாகும்.




## புலிகள் காப்பகங்களில் பெண் புலிகள் விடுவிப்பு

- ராஜஸ்தானில் உள்ள கோட்டாவின் முகுந்த்ரா குன்றுகள் புலிகள் காப்பகம் மற்றும் பன்டி எனுமிடத்தில் உள்ள ராம்கர் விஷ்தாரி புலிகள் காப்பகம் ஆகியவற்றினுள் தலா ஒரு பெண் புலி விடுவிக்கப் பட உள்ளன.
- இந்த இரண்டு புலிகள் தவிர, காட்டெருது மற்றும் காட்டு நாய்கள் மற்றும் வேறு சில வன விலங்குகளும் இந்தக் காப்பகப் பகுதியில் விடப்படும்.
- இந்தப் பகுதியில் புலிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகவும், அப்பகுதியின் சுற்றுச்சூழல் சமநிலையை மேம்படுத்துவதற்காகவும் வேண்டி இந்த முடிவு எடுக்கப் பட்டு உள்ளது.




## தியானியா இண்டிகா


- கேரளப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், மேற்குத் தொடர்ச்சி மலையில் புதிய சிலந்தி இனம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்த இனத்தினைச் சேர்ந்த ஆண் சிலந்திகளும், பெண் சிலந்திகளும் செம்பழுப்பு நிற மேலோட்டினைக் கொண்டிருந்தன.
- இந்தியாவில் தியானியா பாமோயென்சிஸ் என்ற இனத்தைச் சேர்ந்த ஒரே ஒரு இனம் மட்டுமே முன்னர் பதிவு செய்யப் பட்டுள்ளது.

- இந்தக் குறிப்பிட்ட இனமானது சீனா, மியான்மர், தாய்லாந்து, லாவோஸ் மற்றும் இந்தோனேசியா முழுவதும் பரவிக் காணப்படுகின்றன.



## உலகளாவியப் பசுமை இல்ல வாயுக் கண்காணிப்பு உள்கட்டமைப்பு

- ஐக்கிய நாடுகள் சபையின் உலக வானிலை அமைப்பானது ஒரு புதிய உலகளாவியப் பசுமை இல்ல வாயுக் கண்காணிப்பு உள்கட்டமைப்பினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது புவியை வெப்பமாக்கும் மாசுபாடுகளை அளவிடுவதற்கான சிறந்த வழிகளை வழங்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளதோடு, மேலும், சரியான கொள்கைத் தேர்வுகளை அறிவிப்பதற்கும் உதவுகிறது.
- இது விண்வெளியில் அமைந்த மற்றும் நிலப்பரப்பில் அமைந்தக் கண்காணிப்பு அமைப்புகளை ஒருங்கிணைக்கும்.
- மூன்று முக்கியப் பசுமை இல்ல வாயுக்கள் கார்பன் டை ஆக்சைடு, மீத்தேன் மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு ஆகியவை ஆகும்.
- அவற்றில், பருவநிலை மீது 66% என்ற வெப்பமயமாதலின் அதிக அளவிலான ஒரு விளைவினை வழங்கும் வாயு $CO_2$ ஆகும்.
- 2020 முதல் 2021 ஆம் ஆண்டு வரை பதிவான $CO_2$ அளவுகளின் உயர்வானது, கடந்தப் பத்தாண்டுகளில் பதிவான சராசரி உயர்வு விகிதத்தை விட அதிகமாக உள்ளது.



## ஸ்பைரந்தெஸ் ஹச்சிஜோன்சிஸ்

- மென்மையான, கண்ணாடி போன்ற பூக்கள் கொண்ட புதிய வண்ணமலர் (ஆர்க்கிட்) வகைச் செடியானது ஜப்பானிய அறிவியலாளர்களால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இதற்கு "ஸ்பைரந்தெஸ் ஹச்சிஜோன்சிஸ்" என்று பெயரிடப் பட்டுள்ளது.
- ஜப்பானின் பூங்காக்கள் மற்றும் தோட்டங்களில் இவை காணப்பட்டப் போதிலும், இவற்றின் செடிகள் அறியப்படாத இனம் என்பதை உறுதிப்படுத்த பத்தாண்டுக் காலம் ஆனது.
- ஸ்பைரந்தெஸ் என்பது பொதுவாக லேடீஸ் ட்ரெஸ்ஸ் என்று அழைக்கப்படுகின்ற ஆர்ச்சிடோய்டே என்ற துணைக் குடும்பத்தில் உள்ள ஒரு வண்ணமலர்ச் செடி இனம் ஆகும்.
- இது அமெரிக்கா, யூரேசியா மற்றும் ஆஸ்திரேலியாவின் வெப்பமண்டல மற்றும் மித வெப்ப மண்டலப் பகுதிகளில் பெரும் பரவலாக காணப்படும் சுமார் 50 இனங்களை உள்ளடக்கியது.



## தேசியப் பூங்காவில் படர்ச்செடியினங்களின் பேணகச் சாலை

- கேரளாவின் எரவிகுளம் தேசியப் பூங்காவானது (ENP) தனது பூங்காவிற்குள் ஒரு படர்ச் செடியினங்களின் பேணகச் சாலையினை (ஃபெர்னாரியம்) அமைத்துள்ளது.
- ஒரு மலைப்பகுதியில் இது போன்ற படர்ச்செடியினங்களின் வகைகள் நிறுவப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- 104 ரகங்களில், 52 வகையான படர்ச் செடியினங்கள் இந்தப் புதிய பேணகச்சாலையில் ஏற்கனவே நடவு செய்யப் பட்டுள்ளன.
- படர்ச்செடியினங்கள் தொற்றுத் தாவரக் குடும்பத்தின் ஒரு பகுதியாகும்.
- இவை மண்ணற்ற நிலையிலும் இயற்கையாக வளரும் திறன் கொண்டவை ஆகும்.
- இவ்வகைத் தாவரங்கள் மரங்களிலிருந்து ஊடுருவல் மூலமாக தண்ணீர் மற்றும் ஊட்டச் சத்துகளைப் பெறுகின்றன.
- எரவிகுளம் தேசியப் பூங்காவானது மூணாறு அருகே அமைந்துள்ள நீலகிரி வரையாடுகளின் இயற்கையான வாழ்விடமாகும்.



## சிர்டோபோடியன் விந்தியா

- குஜராத்தில் உள்ள தாஹோட் மற்றும் பஞ்சமஹால்ஸ் மாவட்டங்களில் ஒரு புதிய வகையினைச் சேர்ந்த புறத்தோலற்ற - கால் கொண்ட பல்லி (சிர்டோபோடியன்) இனம் என்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இது விந்திய மலையின் பெயரால் 'சிர்டோபோடியன் விந்தியா' எனப் பெயரிடப் பட்டது.
- இது கடந்தப் பதினைந்து ஆண்டுகளில் குஜராத் மாநிலத்தில் கண்டறியப்பட்ட ஐந்தாவது ஊர்வன இனமாகும்.
- இந்த கெக்கோனிட் வகை பல்லிகள் வட ஆப்பிரிக்கா, அரேபியா மற்றும் மத்திய ஆசியாவின் வறண்டப் பகுதிகள் முதல் வடமேற்கு இந்தியா வரை பரவிக் காணப் படுகின்றன.
- பல்லியினக் குடும்பத்தைச் சேர்ந்த சைர்டோபோடியன் பேரினத்தில் 23 அறியப்பட்ட பல்லி இனங்கள் உள்ளன.
- அதில் இது இருபத்து நான்காவது இனமாகும்.



## பந்திப்பூர் புலிகள் காப்பகத்தின் 50 ஆண்டுகள் நிறைவு

- கர்நாடாகாவில் உள்ள பந்திப்பூர் சரணாலயம், புலிகள் வளங்காப்புத் திட்டத்தின் கீழான புலிகள் காப்பகமாக இடம் பெற்றதன் 50 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.
- 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று அன்றையப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், பெரும் பூனை இனங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதைக் கட்டுப் படுத்தச் செய்வதற்காக வேண்டி முதன்மையான புலிகள் வளங்காப்புத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- புலிகள் வளங்காப்புத் திட்டம் தொடங்கப் பட்டபோது பந்திப்பூரில் 12 புலிகள் மட்டுமே இருந்தன.


- இன்று, இந்தப் பூங்காவில் உள்ள புலிகளின் எண்ணிக்கை 173 ஆகும்.
- இந்த முதன்மைத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட முதல் ஒன்பது காப்பகங்களில் பந்திப்பூர் புலிகள் காப்பகமும் ஒன்றாகும்.
- பந்திப்பூர் புலிகள் காப்பகமானது, நாட்டின் முதல் உயிர்க்கோளக் காப்பகமான நீலகிரி உயிர்க் கோளக் காப்பகத்தின் ஒரு முக்கிய அங்கமாகும்.




## டிரிக்ரைசிஸ் போசிடோனியா

- தென்னிந்தியாவில் இருந்து ஒரு புதிய வகை குக்கூ (கொள்ளையடிக்கும்) என்ற குளவி இனத்தினை ஆராய்ச்சிக் குழு கண்டுபிடித்துள்ளது.
- குக்கூ குளவியின் இந்தப் புதிய இனத்திற்கு டிரிக்ரைசிஸ் போசிடோனியா என்று பெயரிடப் பட்டுள்ளது.
- அதன் மாதிரிகள் தமிழ்நாடு மற்றும் கண்ணூரில் உள்ள மடைப்பாறை ஆகிய இடங்களில் இருந்து சேகரிக்கப்பட்டன.
- மற்றொரு மாதிரி ஆனது நேபாளத்தில் இருந்து பெறப்பட்டது.
- இந்தப் பெயர் போஸிடான் எனப்படும் கிரேக்கச் சமுத்திரக் கடவுளின் பெயரிலிருந்து பெறப்பட்டது.
- இந்த குளவிகள் க்ரைசிடிடே குடும்பத்தைச் சேர்ந்தவை ஆகும்.
- குயில் பறவையைப் போன்றே மற்ற குளவிகள் மற்றும் தேனீக்களிடமிருந்து க்ளெப்டோபராசிடிக் (மற்ற இனங்களிடமிருந்து உணவைத் திருடிப் பெறுதல்) என்ற நடவடிக்கையின் மூலம் உணவைப் பெறுவதால் இவை குக்கூ குளவிகள் என்றும் அழைக்கப் படுகின்றன.
- க்ரைசிடிடே குடும்பத்தினைச் சேர்ந்த இனங்கள் சூடான பகுதிகளில் அதிக அளவில் சுறுசுறுப்பாக இயங்கக் கூடியவை என்பதோடு அவை சூரிய ஒளி நாட்டம் அதிகம் கொண்டவையாகவும் (சூரிய ஒளியில் மிகவும் சுறுசுறுப்பாக) இருக்கும்.

- மடைப்பாறையின் துருக்கல் மண்ணால் ஆன பீடபூமி அதன் வளமான பல்லுயிரியலுக்கு நன்கு புகழ்பெற்றதாகும் என்பதோடு, இது இந்தக் குளவிகள் நன்கு வாழ்வதற்கு ஏற்ற ஒரு பகுதியுமாகும்.




## எக்ஸோஸ்டோமா த்ரிதியே

- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள இந்திய விலங்கியல் ஆய்வு மையத்தின் (ZSI) அறிவியலாளர்கள் ஒரு புதிய கெளுத்தி மீன் இனத்தினைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்திய விலங்கியல் ஆய்வு மையத்தின் முதல் பெண் இயக்குநரான த்ரிதி பானர்ஜியின் நினைவாக இந்தப் புதிய மீன் இனத்திற்கு 'எக்ஸோஸ்டோமா த்ரிதியே' என்று பெயரிடப்பட்டுள்ளது.
- உயர்மட்ட சியாங் மாவட்டத்தில் உள்ள சியாங் ஆற்றின் கிளை நதியான சிகிங் ஓடையில் இந்தப் புதிய மீன் இனம் ஆனது கண்டறியப்பட்டது.
- இந்த மீன் இனமானது, இந்த மலைகளில் உள்ள ஓடைகளில் காணப்படும் ஒரு சிறிய மீன் ஆகும் என்பதோடு இது உள்ளூர்ப் பழங்குடியினரால் 'ங்கோராங்' என்ற பெயரில் அழைக்கப் படுகிறது.



## நீண்ட வால் கொண்ட மற்றும் மீன் உண்ணும் ஐரோப்பிய வாத்துகள்


- அரிய நீண்ட வால் கொண்ட வாத்து இனமானது, காஷ்மீரில் உள்ள வுலார் ஏரியில் 84 ஆண்டுகளுக்குப் பிறகு கண்டறியப்பட்டுள்ளது.
- இந்த வாத்துகள் கடைசியாக 1939 ஆம் ஆண்டில் F லுட்லோ என்பவரால் ஹோகர்சர் எனுமிடத்தில் கண்டறியப் பட்டன.
- இவை மெல்லிய, நீண்ட வால் கொண்ட வண்ணமயமான கடல் வாத்து இனங்கள் ஆகும்.

- ❖ இவை அடிக்கடி நெருக்கமான திரள் கூட்டங்களை உருவாக்கி விரைவாகவும் தாழ்வாகவும் மாறி மாறி பறக்கக் கூடியவை ஆகும்.
- ❖ நீண்ட வால் கொண்ட இந்த வாத்துகள் அலாஸ்கா மற்றும் ரஷ்யாவிலிருந்து மேற்கு நோக்கி செல்லும் வழியில் பிரிட்டிஷ் கொலம்பியாவிற்கு வந்து போகின்றன.
- ❖ ஸ்மியூ (மார்கெல்லஸ் அல்பெல்லஸ்) என்பது அனாடிடே என்ற குடும்பத்தைச் சேர்ந்த ஒரு நடுத்தர அளவிலான வாத்துகளாகும்.
- ❖ ஸ்மியூ என்பது யூரேசியா மற்றும் ஐரோப்பா ஆகிய இரண்டு பகுதிகளிலும் காணப் படும் ஓர் இனமாகும்.
- ❖ இவை இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு மிகவும் அரிதாகவே வருகின்றன.



## அகில இந்தியப் புலிகள் கணக்கெடுப்பின் ஐந்தாவது சுற்று – 2022

- ❖ இந்தப் புலிகள் கணக்கெடுப்பானது இந்தியாவின் 20 மாநிலங்களில் உள்ள வன வாழிடங்களில் மேற்கொள்ளப் பட்டது.
- ❖ 2022 ஆம் ஆண்டில் இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை 3,167 ஆக இருந்தது.
- ❖ இது 2018 ஆம் ஆண்டில் 2,967 ஆக இருந்த அளவிலிருந்து அதிகரித்துள்ளது.




- ❖ இருப்பினும் 2014-2018 ஆம் ஆண்டுகளில் 33 சதவீதமாக இருந்த அதிகரிப்பு வீதமானது, அடுத்த இந்த நான்கு ஆண்டுகளில் 6.7 சதவீதமாக குறைந்துள்ளது.

- 2022 ஆம் ஆண்டில் மத்திய இந்திய மலைப்பகுதிகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் ஆகிய பகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான (1,161) புலிகள் ஒளிப்படக் கருவியில் பதிவு செய்யப் பட்டன.
- ஜார்க்கண்ட், ஒடிசா, சத்தீஸ்கர் மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் புலிகள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.
- மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் புலிகள் நடமாட்டம் 824 ஆகக் குறைந்துள்ளது.

## மிக ஆழமான பகுதியில் தென்பட்ட மீன்

- சமீபத்தில் நீருக்கடியில் சுமார் 8 கிலோமீட்டர் ஆழத்தில் மீன்கள் நீந்தியக் காட்சிகளை அறிவியலாளர்கள் படம் பிடித்துள்ளனர்.
- இது இதுவரையில் பதிவு செய்யப்படாத மிக ஆழமான பகுதியில் தென்பட்ட மீன் என்ற புதிய ஒரு சாதனையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இது சூடோலிபாரிஸ் இனத்தைச் சேர்ந்த, இதுவரை அறியப்படாத நத்தை மீன் இனம் ஆகும்.
- இது ஜப்பானின் தென்கிழக்கில் உள்ள இசு-ஒகசவாரா என்ற அகழியில் 8,336 மீட்டர் ஆழத்தில் படம் பிடிக்கப் பட்டது.
- ஜப்பான் அகழியில் 8,022 மீட்டர் ஆழத்தில், சூடோலிபாரிஸ் பெல்யாவி இனத்தைச் சேர்ந்த மற்ற இரண்டு நத்தை மீன்களையும் அறிவியலாளர்கள் படம் பிடித்தனர்.
- நீருக்கடியில் 8,000 மீட்டர் ஆழத்தில், அழுத்தமானது கடல் மேற்பரப்பில் உள்ளதை விட 800 மடங்கு அதிகமாக இருக்கும்.



## அமோலோப்ஸ் சிஜு

- சமீபத்தில், ஆராய்ச்சியாளர்கள் மேகாலயாவின் தெற்கு காரோ மலைப் பகுதி மாவட்டத்தில் உள்ள சிஜு குகையில் இருந்து ஒரு புதிய வகை தவளை இனத்தை கண்டுபிடித்துள்ளனர்.
- இவை பொதுவாக ஒரு அடுக்கைச் சுற்றி காணப்படுகிறது, ஆனால் இந்த வகைத் தவளைகள் குழு ஒரு அசாதாரண வாழ்விடத்தில் வாழ்கிறது.
- மார்மோரடஸ் குழுவின் வகையினைச் சேர்ந்த இது குகை சுற்றுச்சூழலில் வாழும் ஒரு புதிய இனமாகும்.

- நாட்டில் குகைக்குள் இருந்து தவளைகள் கண்டுபிடிக்கப் படுவது இது இரண்டாவது முறையாகும்.
- 2014 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள ஒரு குகையில் இருந்து Micrixalus spelunca என்ற தவளை இனம் கண்டுபிடிக்கப் பட்டது.



## ஆசிய ராஜாளிக் கழுகு இனப் பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க மையம்




- உலகின் முதல் ஆசிய ராஜாளிக் கழுகுகளுக்கானப் பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க மையம் உத்தரப் பிரதேச மாநிலம் மகாராஜ்கஞ்ச் மாவட்டத்தில் திறக்கப்பட உள்ளது.
- இதற்கு ஜடாயு பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க மையம் (JCBC) எனப் பெயர் சூட்டப்பட உள்ளது.
- 15 வருட திட்டக் காலம் கொண்ட இது கழுகுகளின் எண்ணிக்கையைக் குறைந்தபட்சம் 40 ஆக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதில் பிடிக்கப்பட்ட இந்தக் கழுகுகளை இனப்பெருக்கம் அடைய செய்து அவற்றைக் காடுகளுக்குள் விடுவிக்கச் செய்வதன் மூலம் இந்த உயிரினங்களின் ஒரு நிலையான எண்ணிக்கையைப் பராமரிப்பதே இதன் நோக்கமாக உள்ளது.
- வட இந்தியாவில் செந்தலைக் கழுகுகள் (Sarcogyps calvus) உள்ளூர் மயமாகியுள்ளன.


- 2004 ஆம் ஆண்டில், IUCN ஆல் குறைந்தபட்ச கவனம் தேவைப்படும் இனம் என்ற நிலையிலிருந்து 'அச்சுறு நிலையில் உள்ளவை' எனும் நிலைக்கு இவ்வினங்கள் மாற்றப் பட்டது.
- 2007 ஆம் ஆண்டில், இது IUCN அமைப்பின் சிவப்புப் பட்டியலில் 'ஆபத்தான நிலையில் உள்ளவை' எனப் பட்டியலிடப்பட்டுள்ளது.

## கேரளாவில் புதிய வண்ணத்துப் பூச்சி இனம்

- சமீபத்தில் ஆராய்ச்சியாளர்கள் கேரளாவில் உள்ள அக்குளம் மற்றும் வேம்பநாடு ஏரிகளுக்கு அருகில் கால்டோரிஸ் புரோமஸ் சதாசிவா எனும் வண்ணத்துப்பூச்சியை கண்டுபிடித்துள்ளனர்.
- இது ப்ரோமஸ் ஸ்விப்ட் (Caltoris bromus) இனத்தின் முதல் பதிவு ஆகும்.
- இது மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் தீபகற்ப இந்தியாவில் காணப்படுகிறது.
- இது லெபிடோப்டெரா குடும்பத்தின் ஹெஸ்பெரிடே (அந்துப்பூச்சிகள் மற்றும் பட்டாம் பூச்சிகள்) வகையைச் சேர்ந்தது.
- இந்தப் பட்டாம்பூச்சி முதன்முதலில் 2005 ஆம் ஆண்டில் அக்குளம் ஏரியிலும் பின்னர் 2009 ஆம் ஆண்டில் வேம்பநாட்டிலும் டாக்டர் சதாசிவன் என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டது.




## சுஹெல்வா வனவிலங்குச் சரணாலயத்தில் புலிகள்



- உத்தரப் பிரதேச மாநிலத்தின் சுஹெல்வா வனவிலங்குச் சரணாலயத்தில் புலிகள் இருப்பதற்கான புகைப்பட ஆதாரம் முதன்முறையாக பெறப் பட்டுள்ளது.
- 1988 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தச் சரணாலயம் உத்தரப் பிரதேசத்தின் ஷ்ரவஸ்தி, பல்ராம்பூர் மற்றும் கோண்டா மாவட்டங்களில் பரவி அமைந்துள்ளது.
- இது பாபர்-தாராய் சுற்றுச்சூழல் அமைப்பு மண்டலத்தில் குறிப்பிடத்தக்க பகுதியாகும்.

## பருவநிலை சார்ந்த ஒழுங்கற்ற நிலை தொடர்பான நிதி வழங்கீடு பற்றிய அறிக்கை

- 2016 ஆம் ஆண்டு பாரீஸ் ஒப்பந்தம் கையெழுத்தானதில் இருந்து உலகின் 60 பெரிய வங்கிகள் 5.5 டிரில்லியன் டாலர் அல்லது 4,49,36,265 கோடி ருபாயினைப் புதைபடிவ எரிபொருள் சார்ந்தத் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காக செலவிட்டுள்ளன.
- 2022 ஆம் ஆண்டில் புதைபடிவ எரிபொருள் துறைக்கான மொத்த நிதியுதவியில் 28% வழங்கிய அமெரிக்கா, புதைபடிவ எரிபொருட்கள் துறைக்கான ஒரு முதன்மை நிதி வழங்குநராக இருந்தது.
- 2022 ஆம் ஆண்டில் மட்டும், புதைபடிவ எரிபொருள் சார்ந்தத் திட்ட நிதிக்காக 673 பில்லியன் டாலர்கள் செலவிடப் பட்டுள்ளன.
- கனடா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் 2020-2022 ஆகிய ஆண்டுகளில் புதைபடிவ எரிபொருள் துறைக்கான முன்னணி நிதியளிப்பாளர்களாக இருந்தன.
- G7 அமைப்பின் உறுப்பினர் நாடுகள் 2020-2022 ஆகிய ஆண்டுகளில் புதைபடிவ எரி பொருள் துறைக்காக தனது பொது நிதியில் 73 பில்லியன் டாலர் நிதியினை வழங்கி உள்ளன.





## சதுப்புநில வாழ் பிட்டா பறவைகள் கணக்கெடுப்பு

- ஒடிசாவின் கேந்திரப் பாரா மற்றும் ஜகத்சிங்பூர் மாவட்டங்களில் முதன்முதலாக சதுப்பு நில வாழ் பிட்டா பறவைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.
- இந்தக் கணக்கெடுப்பின் போது 179 பறவைகள் காணப்பட்டன.
- பித்ரகனிகா தேசியப் பூங்காவின் வழியே பாயும் மஹிபுரா ஆற்றின் முகத்துவாரத்திற்கு அருகில் உள்ள சதுப்புநிலங்களில் இந்தப் பறவைகள் அதிக எண்ணிக்கையில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

- சதுப்புநில பிட்டா பறவைகள் கிழக்கு இந்தியாவின் சில பகுதிகளில் காணப்படுகின்ற அச்சுறுத்தலுக்கு உள்ளாகக் கூடிய நிலையில் உள்ள இனமாகும்.
- இந்தப் பகுதிகளில் ஒடிசாவின் பித்ரகனிகா மற்றும் மேற்கு வங்காளத்தின் சுந்தரவனக் காடுகளும் அடங்கும்.



## கடலோர நகரங்களின் கூட்டணி




- டெல்லியில் அமைந்துள்ள அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CSE) எனப்படும் ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பானது, இந்தியா முழுவதிலும் கடல்பகுதியில் காணப் படும் குப்பை மாசுபாட்டினைக் குறைப்பதற்காக வேண்டி கடலோர நகரங்களின் ஒரு கூட்டணியைத் தொடங்கியுள்ளது.
- இந்தியா 7,000 கிலோமீட்டருக்கும் அதிகமான அளவு கடற்கரைப் பரப்பினைக் கொண்டு உள்ளதால், இந்த ஆபத்தைக் கட்டுப்படுத்துவதில் ஒரு முக்கியப் பங்கினை வகிக்கிறது.
- சுமார் 80 சதவீத கடல் குப்பைகள், திடக்கழிவுகள் நிலம் சார்ந்த கழிவகற்ற முறைகளில் தவறான முறையில் கையாளப்படுவதால், நிலத்திலிருந்துக் கடலினுள் பாயும் பல்வேறு கூறுகள் மூலமாக கடல் பரப்பினை அடைகின்றன.
- மீதமுள்ள 20 சதவீதக் குப்பைகள் கடலோரக் குடியேற்றங்களால் உருவாக்கப் படச் செய்கின்றன.
- கடல்சார் சுற்றுச்சூழலில் சேரும் கழிவுகளில் 90 சதவீதம் நெகிழிக் குப்பைகள் ஆகும்.

## ஹெலோபெல்டிஸ் தீவோரா

- தேயிலை கொசுப் பூச்சி (Helopeltis Theivora) அல்லது நாவாய்ப் பூச்சி தென்னிந்தியாவில் உள்ள தாழ்மட்ட மற்றும் உயர்மட்ட நிலங்களில் அமைந்தத் தோட்டப் பயிர்நிலங்களில் வேகமாக பரவி தேயிலை உற்பத்தியைப் பாதித்து வருகிறது.
- இது பெரும்பாலான தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில் தேயிலைச் சாற்றினை உறிஞ்சி அவற்றை அழிக்கும் ஒரு முக்கியப் பூச்சி வகையாகும்.
- தேயிலை கொசுப் பூச்சியின் இளம் பூச்சிகள் /லார்வாக்கள் மற்றும் வளர்ந்த பூச்சிகள் மென்மையான இலைகள், மொட்டுகள் மற்றும் இளம் தளிர்கள் ஆகியவற்றிலிருந்துச் சாற்றை உறிஞ்சுவதால், அதிகப் பயிர் இழப்பு ஏற்படுகிறது.
- 6.37 இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்புடன், உலகிலேயே அதிகளவிலான தேயிலை பயிரிடும் நிலப்பரவலைக் கொண்ட இரண்டாவது பெரிய நாடாக இந்தியா உள்ளது.
- வட இந்தியாவில் தேயிலைப் பயிரிடல் பரப்பளவு என்பது 5.36 லட்சம் ஹெக்டேர் என்ற நிலையில் தென் இந்தியாவில் இது 1.01 லட்சம் ஹெக்டேர் பரப்பளவாகும்.



## சட்கோசியா வனவிலங்குச் சரணாலயத்தில் இந்திய மீன் கொத்திகள்

- ஒடிசாவின் சட்கோசியா வனவிலங்குச் சரணாலயத்தில் முதன்முறையாக இந்திய மீன் கொத்தி வகை (நீர் கிழிப்பான்) பறவைகளின் இனப்பெருக்கம் மேற்கொள்ளப் படச் செய்வதற்கான தடயங்கள் கண்டறியப் பட்டுள்ளன.
- இவை வழக்கமாக நவம்பர் மாதத்தில் சட்கோசியாவிற்கு வந்து பின்பு மார்ச் மாதத்தின் இரண்டாவது வாரத்தில் அங்கு இருந்து வெளியேறுகின்றன.
- இவை இந்தியா, வங்காளதேசம், மியான்மர், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளைப் பூர்வீகமாகக் கொண்டவையாகும்.
- முன்னதாக இந்தியாவில் இவற்றின் இனப்பெருக்கம் கடைசியாக பல ஆண்டுகளுக்கு முன் மகாநதி ஆற்றுப் பகுதியின் முண்டுலி பகுதியில் பதிவு செய்யப் பட்டது.
- வங்காளதேசம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் காணப்படும் மீன் கொத்திகளின் எண்ணிக்கையானது முறையே 3,000 முதல் 3,500 வரை உள்ளதாக சமீபத்தியப் பல்வேறு ஆய்வுகளில் மதிப்பிடப்பட்டுள்ளது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## மும்மைய அச்சுறுத்தல் அறிக்கை

- UNICEF அமைப்பின் "மும்மைய அச்சுறுத்தல்" அறிக்கையானது, பற்றாக்குறையானத் தண்ணீர், துப்புரவு மற்றும் சுகாதாரம் (WASH) போன்ற தண்ணீர் தொடர்பான மூன்று அச்சுறுத்தல்களைப் பற்றி விவாதிக்கிறது.
- உலகளவில், 600 மில்லியன் குழந்தைகளுக்கு இன்னும் பாதுகாப்பான முறையில் வழங்கப் படும் குடிநீர் கிடைக்கப் பெறவில்லை.
- 1.1 பில்லியன் மக்களுக்குப் பாதுகாப்பான முறையில் வழங்கப்படும் துப்புரவு சேவை கிடைக்கப் பெறவில்லை என்பதோடு, 689 மில்லியன் மக்களுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் கிடைக்கப் பெறவில்லை.
- 149 மில்லியன் குழந்தைகள் இன்னும் திறந்த வெளியில் மலம் கழித்தல் மற்றும் பாதுகாப்பற்ற குடிநீர் குடித்தல் போன்ற அவலநிலையினை எதிர்கொள்கின்றனர்.
- 190 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகளைக் கொண்ட பத்து நாடுகள் மற்றும் ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியில் உள்ள நாடுகள் இந்த மும்மை சுமையை எதிர்கொள்கின்றன.
- பாதுகாப்பற்றத் தண்ணீர், துப்புரவு மற்றும் சுகாதார நிலையினால் ஏற்படும் 5 இறப்புகளில் 2 இறப்புகள் இந்த நாடுகளில் பதிவாகியுள்ளன.
- உலகளவில், 2000 ஆம் ஆண்டில் 82 சதவீதமாக இருந்த, அடிப்படைக் குடிநீர் வசதியினை அணுகக் கூடிய வகையில் உள்ள குடும்பங்களின் சதவீதமானது 2020 ஆம் ஆண்டில் 90% ஆக உயர்ந்துள்ளது.

- உலகளவில், 2000 ஆம் ஆண்டில் 56% ஆக இருந்த அடிப்படை சுகாதார வசதிகளுக்கான அணுகலைக் கொண்ட வீடுகளானது 2020 ஆம் ஆண்டில் 78% ஆக உயர்ந்துள்ளது.




Figure 1: Countries with the highest triple burden

## ஹுருன் அமைப்பின் உலகளாவியப் பணக்காரர்கள் பட்டியல்





- ஹுருன் அமைப்பானது, 12வது M3M ஹுருன் உலகளாவியப் பணக்காரர்களின் (2023) பட்டியலினை வெளியிட்டுள்ளது.
- M3M இந்தியா அமைப்புடன் இணைந்து இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.
- உலகின் முதல் 10 கோடீஸ்வரர்கள் பட்டியலில் இடம் பெற்ற ஒரே இந்தியர் என்ற ஒரு பெருமையை முகேஷ் அம்பானி பெற்றார்.
- இந்தியக் கோடீஸ்வரர்கள் பட்டியலில் அம்பானி முதலிடத்திலும், கௌதம் அதானி இரண்டாவது இடத்திலும் உள்ளனர்.

- சைரஸ் பூனவல்லா 28 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்.
- ஷிவ் நாடார் மற்றும் அவரது குடும்பத்தினர் 27 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் நான்காவது இடத்திலும், லட்சுமி மிட்டல் 20 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

## உலக வெப்பமயமாதலுக்கான பங்களிப்பில் முன்னணியில் உள்ள 10 நாடுகள்

- உலக வெப்பமயமாதலுக்கானப் பங்களிப்பில் முன்னணியில் உள்ள 10 நாடுகளில் இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளது.
- 1850 ஆம் ஆண்டு முதல் பதிவான முக்கியப் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தின் காரணமாக அமெரிக்கா மிகப்பெரிய பங்களிப்பாளராக உள்ளது.
- அமெரிக்காவைத் தொடர்ந்து சீனா, ரஷ்யா, பிரேசில் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் உள்ளன.
- இந்தோனேசியா, ஜெர்மனி, இங்கிலாந்து, ஜப்பான், கனடா ஆகிய நாடுகள் அடுத்த 5 இடங்களில் உள்ளன.
- 1850 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் 0.08 டிகிரி செல்சியஸ் வெப்பமயமாதலுக்கு இந்தியாவே காரணமாக உள்ளது.
- கார்பன் டை ஆக்சைடு ($CO_2$), மீத்தேன் ($CH_4$) மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு ($N_2O$) ஆகிய மூன்று பசுமை இல்ல வாயுக்களின் (GHG) உமிழ்வின் விளைவாக புவி வெப்பமடைதல் ஏற்படுகிறது.
- இந்த மூன்று வாயுக்களில், உலக நாடுகளின் கார்பன் டை ஆக்சைடு வாயு உமிழ்வுகளே வெப்பமயமாதலுக்கு அதிகப் பங்கினைக் கொண்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு வரை, உலகளாவிய $CO_2$ உமிழ்வு மூலம் ஏற்பட்ட வெப்பமயமாதல் 1.11°C ஆகவும், $CH_4$ உமிழ்வு மூலம் ஏற்பட்ட வெப்பமயமாதல் 0.41°C ஆகவும், N2O உமிழ்வு மூலம் ஏற்பட்ட வெப்பமயமாதல் 0.08°C ஆகவும் இருந்தது.
- 1992 ஆம் ஆண்டில் 17% ஆக இருந்த பிரேசில், தென்னாப்பிரிக்கா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் வெப்பமயமாதலுக்கான ஒருங்கிணைந்தப் பங்களிப்பு என்பது 2021 ஆம் ஆண்டில் 23% ஆக உயர்ந்தது.



## கடவுச்சீட்டுக் குறியீடு 2023


- ஆர்டன் கேபிட்டல் என்ற அமைப்பானது 2023 ஆம் ஆண்டிற்கான கடவுச் சீட்டுக் குறியீட்டினை வெளியிட்டுள்ளது.
- இது 199 நாடுகளின் கடவுச் சீட்டுகளைத் தர வரிசைப் படுத்துகிறது.
- முன்னதாக இதில் 138வது இடத்தில் இருந்த இந்தியா 6 இடங்கள் சரிந்து 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்திரக் கடவுச் சீட்டுக் குறியீட்டில் 144வது இடத்தினைப் பெற்றது.
- அதன் தற்போதைய தரவரிசைப்படி, இந்தியர்கள் 21 நாடுகளுக்கு நுழைவு இசைவுச் சீட்டு இல்லாமல் பயணம் செய்யவும், 128 நாடுகளுக்கு நுழைவு இசைவுச் சீட்டு அனுமதியுடனும் பயணம் செய்யலாம் என்பதோடு, 47 நாடுகளில் வருகைக்குப் பிறகு நுழைவு இசைவுச் சீட்டு பெறும் ஒரு வாய்ப்பினையும் பெறலாம்.
- இந்த ஆண்டு, ஐக்கிய அரபு அமீரகமானது (UAE) அதிக இடம் பெயர்வு மதிப்பினைப் பெற்று, முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து ஸ்வீடன், ஜெர்மனி, பின்லாந்து, லக்ஸம்பர்க், ஸ்பெயின், பிரான்சு, இத்தாலி, நெதர்லாந்து மற்றும் ஆஸ்திரியா ஆகிய நாடுகள் உள்ளன.
- ஆசியாவில், தென் கொரியா அதிக மதிப்பெண் பெற்று இப்பட்டியலில் 12வது இடத்தில் உள்ளது.
- அதை தொடர்ந்து ஜப்பான் இடம் பெற்றுள்ளது.




## 2022 ஆம் ஆண்டு உலக நாடுகளின் பள்ளிகளின் உணவு வழங்கீட்டுத் திட்டங்களின் நிலை

- குறைந்த வருமானம் உள்ள நாடுகளில், பள்ளிகளின் உணவு வழங்கீட்டுத் திட்டங்களின் பரவலானது பெருந்தொற்றுக் காலத்திற்கு முந்தைய நிலைகளை விட நான்கு சதவீதம் குறைவாகவே உள்ளது.
- ஆப்பிரிக்க நாடுகளில் மிக அதிக அளவிலான சரிவு பதிவாகியுள்ளது.
- உயர் வருமானம், மேல்நிலையில் உள்ள நடுத்தர வருமானம் கொண்ட மற்றும் தாழ் நிலை நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் ஆகிய நாடுகளில் முறையே 4 சதவீதம், 4 சதவீதம் மற்றும் 12 சதவீதம் என்ற சீரான, மிதமான அதிகரிப்பானது பதிவாகி உள்ளன.
- குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் ஆனது 2020 ஆம் ஆண்டில் 30 சதவீதமாக இருந்த பள்ளி உணவு வழங்கீட்டுத் திட்டத்திற்கான உள்நாட்டு நிதியை 2022 ஆம் ஆண்டில் 45 சதவீதமாக உயர்த்தியுள்ளன.


- பள்ளிகளின் உணவு வழங்கீட்டுத் திட்டங்களின் மூலம் உணவைப் பெறும் ஒவ்வொரு 100,000 குழந்தைகளுக்கும் உணவளிக்கும் அதே சமயத்தில் அது 1,000-2,000 வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுகளையும் கொண்டுள்ளது.
- 2020 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பள்ளிகளின் உணவு வழங்கீட்டுத் திட்டங்களின் மூலம் உணவைப் பெறும் குழந்தைகளின் எண்ணிக்கையில் 30 மில்லியன் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
- இதில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய ஐந்து நாடுகள் மட்டும் 19 மில்லியன் குழந்தைகளுக்கு உணவளிக்கின்றன.
- 176 நாடுகளிலிருந்துச் சேகரிக்கப்பட்ட மாதிரியை அடிப்படையாகக் கொண்டு இந்த பகுப்பாய்வானது மேற்கொள்ளப்படுகிற நிலையில் 2020 ஆம் ஆண்டில் 163 நாடுகளில் இந்த மதிப்பீடு செய்யப்பட்டது.





## உலக வங்கியின் அறிக்கை

- 'தூய்மையான காற்றிற்கான ஒரு போராட்டம்: தெற்கு ஆசியாவில் காற்று மாசுபாடு மற்றும் பொதுச் சுகாதாரம்' என்ற தலைப்பிலான அறிக்கையானது சமீபத்தில் உலக வங்கியால் வெளியிடப்பட்டுள்ளது.
- உலகின் மிக மோசமான காற்று மாசுபாடு உள்ள 10 நகரங்களில் ஒன்பது நகரங்கள் தெற்காசியப் பகுதியில் அமைந்துள்ளன.
- உலகளவில் மோசமான காற்று தரம் உள்ள நகரங்களின் பட்டியலில் டாக்கா ஏழாவது இடத்தில் உள்ளது.
- வங்காளதேசத்தில் ஏற்படும் மொத்த அகால மரணங்களில் சுமார் 20 சதவீதம் காற்று மாசுபாடு காரணமாக ஏற்படுபவையாகும்.
- தெற்காசியாவில், ஏறக்குறைய 60% மக்கள் தொகையானது PM2.5 செறிவுகள் குறித்த வருடாந்திரச் சராசரியான 35 μg/m3 (உலக சுகாதார அமைப்பு பரிந்துரைக்கும் அளவு 5 μg/m3) என்ற அளவினை விட அதிகமாக இருக்கும் பகுதிகளில் வாழ்கின்றனர்.
- மக்கள்தொகை அடர்த்தி அதிகமாக உள்ள இந்திய-கங்கைச் சமவெளியில், இது உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்த அளவை விட 20 மடங்கு அதிகமாக உள்ளது.
- இந்த அறிக்கையானது, தெற்காசியாவில் உள்ள ஆறு முக்கியக் காற்றுப் படுகைகளை அடையாளம் கண்டுள்ள நிலையில் அங்கு நிலவும் காற்றின் தரத்தில் ஒரு இடஞ்சார்ந்த சார்பு நிலை அதிகமாக உள்ளது.

Figure 3.4. Modeled mean population exposure to fine particulate matter in selected regions in 2018 and 2030




## உலக ஆற்றல் மாற்றங்கள்: கண்ணோட்ட அறிக்கை 2023





- சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமையானது சமீபத்தில் இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, உலகளாவிய ஒரு ஆற்றல் மாற்றமானது இன்னும் "சரியான பாதையில் மேற்கொள்ளப் படவில்லை" என்பதோடு மேலும் 1.5 டிகிரி செல்சியஸ் என்ற இலக்கினை எட்டும் பாதையில் சற்று பின்தங்கியே உள்ளது என்றும் கூறப்பட்டு உள்ளது.

- 1.5°C என்ற ஒரு இலக்கினை மெய்யாக்க, இன்று 3,000 ஜிகாவாட் (GW) ஆக உள்ள ஆற்றல் திறன் நிறுவல்களின் திறன் அளவுகள் ஆனது ஆண்டிற்குச் சராசரியாக 1,000 GW என்ற அளவில் 2030 ஆம் ஆண்டில் 10,000 GW ஆக உயர்த்தப்பட வேண்டும்.
- சீனா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் 2022 ஆம் ஆண்டில் ஒட்டு மொத்த நிறுவல்களில் மூன்றில் இரண்டு பங்கினைக் கொண்டுள்ளன.
- 2022 ஆம் ஆண்டில், உலகளாவியப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீட்டில் 85 சதவீதம் ஆனது உலக மக்கள்தொகையில் 50 சதவீதத்திற்கும் குறைவான மக்களுக்கேப் பயன் அளித்தது.
- 2022 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கூடுதல் திறனில் ஆப்பிரிக்கா 1 சதவீதத்தினை மட்டுமே கொண்டுள்ளது.

## உலகளாவிய வர்த்தகக் கண்ணோட்டம் மற்றும் புள்ளிவிவரங்கள்

- புதிய "உலகளாவிய வர்த்தகக் கண்ணோட்டம் மற்றும் புள்ளி விவரங்கள்" அறிக்கை என்பது 2023 ஆம் ஆண்டிற்கான சந்தை மாற்று விகிதங்களில் உண்மையான உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தி மேம்பாட்டினை 2.4% ஆக மதிப்பிடுகிறது.
- இது உலக வர்த்தக நிறுவனத்தினால் வெளியிடப் பட்டது.
- 2022 ஆம் ஆண்டில் உலக வணிகப் பொருட்களின் மதிப்பு 12% உயர்ந்து 25.3 டிரில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது.
- உலக வர்த்தகச் சேவை வர்த்தகத்தின் மதிப்பு 2022 ஆம் ஆண்டில் 15% அதிகரித்து 6.8 டிரில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது.
- வர்த்தகம் மற்றும் உற்பத்தி மேம்பாடு ஆகிய இரண்டின் மதிப்பீடுகளும் கடந்த 12 ஆண்டுகளில் முறையே 2.6% மற்றும் 2.7% என்ற அளவில் சராசரியை விடக் குறைவாக உள்ளன.



- பொருட்களின் ஏற்றுமதியில் இந்தியா 18வது இடத்தினைப் பெற்றுள்ள நிலையில், இந்தியா உலக நாடுகளின் வணிகப் பொருட்களின் உலகளவிலான வர்த்தகத்தில் 9வது இறக்குமதியாளராகவும் உள்ளது.
- வர்த்தகம் சார்ந்த சேவை ஏற்றுமதியைப் பொறுத்த வரையில், இந்தியா 313 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடன் அல்லது உலகளவில் 4.4 சதவீதத்துடன் 7வது இடத்தைப் பெற்றது.
- இந்திய இறக்குமதிகளின் மதிப்பானது, 263 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அல்லது உலகளவில் இறக்குமதி செய்யப்படும் அனைத்து வகை வணிகச் சேவைகளில் 4 சதவீதத்தினைக் கொண்டுள்ளது.

## முதல் பத்து பரபரப்பான விமான நிலையம்

**BUZZING WITH ACTIVITY**


| Airport | Passengers in 2022 (in cr) | 2022 rank | 2021 rank | 2019 rank |
|---|---|---|---|---|
| Atlanta | 9.4 | 1 | 1 | 1 |
| Dallas Fort Worth | 7.3 | 2 | 2 | 10 |
| Denver | 6.9 | 3 | 3 | 16 |
| Chicago | 6.8 | 4 | 4 | 6 |
| Dubai | 6.6 | 5 | 27 | 4 |
| Los Angeles | 6.5 | 6 | 5 | 3 |
| Istanbul | 6.4 | 7 | 14 | 28 |
| London Heathrow | 6.2 | 8 | 54 | 7 |
| Delhi IGIA | 5.9 | 9 | 13 | 17 |
| Paris CDG | 5.7 | 10 | 31 | 9 |

(Source: Airports Council International; passengers are domestic+international)

- 2022 ஆம் ஆண்டிற்கான உலகின் ஒன்பதாவது பரபரப்பான விமான நிலையமாக டெல்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் தரவரிசைப் படுத்தப் பட்டு உள்ளது.
- இந்த விமான நிலையம் ஆண்டுக்கு 59.5 மில்லியன் பயணிகளைக் கையாளுகிறது.
- இந்த அறிக்கையை சர்வதேச விமானக் கழகம் வெளியிட்டுள்ளது.
- இது விமான நிலையங்களின் தரநிலைகளை அளவிடும் மற்றும் மதிப்பிடும் ஒரு உலகளாவிய அமைப்பாகும்.
- கடந்த ஆண்டு முதல் 10 விமான நிலையங்களில், ஐந்து விமான நிலையங்கள் அமெரிக்காவிலும் வளைகுடாப் பகுதி, இங்கிலாந்து, ஐரோப்பா, தெற்கு மற்றும் மேற்கு ஆசியாவில் தலா ஒரு விமான நிலையமும் உள்ளன.
- இந்தப் பட்டியலில் இடம் பெற்ற ஒரே ஆசிய மையமாக டெல்லி உள்ளது.

## குழந்தையின்மை நிலவர மதிப்பீடுகள் 1990–2021 அறிக்கை


- 1990 முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான அனைத்துத் தொடர்புடைய மற்றும் சார்பு ஆய்வுகளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் குழந்தையின்மையின் உலகளாவிய மற்றும் பிராந்திய நிலவரம் பற்றிய மதிப்பீடுகளை வழங்குவதே இந்த அறிக்கையின் நோக்கமாகும்.
- உலகளாவிய அளவில் வயது வந்தோர் பிரிவினரில் சுமார் 17.5 சதவீதம் பேர் குழந்தை இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- உலகளவில் ஏறத்தாழ ஆறில் ஒருவர், தங்கள் வாழ்நாளில் ஏதாவது ஒரு கட்டத்தில் குழந்தையின்மை நிலையினை எதிர்கொண்டுள்ளனர்.
- வாழ்நாள் முழுவதுமான கருவுறாமைப் பாதிப்பு ஆனது, உலக சுகாதார அமைப்பின் மேற்கு பசிபிக் பிராந்தியத்தில் (23.2%) அதிகமாகவும் மற்றும் உலக சுகாதார அமைப்பின் கிழக்கு மத்திய தரைக்கடல் பிராந்தியத்தில் (10.7%) குறைவாகவும் இருப்பதாக தற்போதுள்ள தரவுகள் குறிப்பிடுகின்றன.
- மதிப்பிடப்பட்ட காலகட்டம் சார்ந்த  கருவுறாமைப் பாதிப்பு ஆனது, உலக சுகாதார அமைப்பின் ஆப்பிரிக்கப் பிராந்தியத்தில் (16.4%) அதிகமாகவும், கிழக்கு மத்தியத் தரைக் கடல் பகுதியில் குறைவாகவும் (10.0%) உள்ளது.





## அரசின் போக்குகள் பற்றிய அறிக்கை

- டெலாய்ட் அரசாங்கத் தகவல் நுண்ணறிவு மையத்தால், 'அரசின் போக்குகள்' என்ற ஒரு அறிக்கையானது வெளியிடப்பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்த அறிக்கையின் ஒருங்கிணைந்தக் கருத்துரு, 'dissolving boundaries' என்பதாகும்.
- சாமானியக் குடிமகனுக்கானத் தீர்வுகளை அரசாங்கங்கள் எவ்வாறு வழங்குகின்றன என்பதை மாற்றியமைக்கச் செய்கின்ற ஒன்பதுப் போக்குகளை இந்த அறிக்கை எடுத்து உரைக்கிறது.

- கோவிட்-19 பெருந்தொற்றானது, பல்வேறுத் துறைகள் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்கள் இடையேயான ஒத்துழைப்பை அதிகரிப்பதில் ஒரு முக்கிய ஊக்கியாக இருந்தது.
- இந்த ஒன்பதுப் போக்குகளில், ஐந்து போக்குகள் மாற்றம் உண்டாக்கக் கூடியவை, அதாவது முக்கியத் துறைகளில் உள்ள தடைகளை அகற்ற அரசாங்கங்கள் தீவிரமாகச் செயல்படுகின்றன.
- மீதமுள்ள நான்குப் போக்குகள் குறிப்பிட்டத் துறை சார்ந்த கவனம் செலுத்தக் கூடியப் போக்குகளாக உள்ளன.




## ஃப்ரீடம் ஹவுஸ் குறியீடு




- 'ஃப்ரீடம் ஹவுஸ்' எனப்படுகின்ற, அமெரிக்க அரசாங்கத்தின் நிதியுதவியினைப் பெறும் லாப நோக்கற்ற அமைப்பானது 'உலக நாடுகளின் சுதந்திரம் 2023' என்ற தலைப்பிலான தனது வருடாந்திர அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

- இதில் இந்தியா தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக "ஓரளவுச் சுதந்திரமான" ஒரு நாடாக தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இந்தியாவில் ஜனநாயகம் ஆனது தனது "அடித்தளத்தினை இழந்து வருகிறது" என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் பற்றியக் குறியீடுகளைத் தரவரிசைப் படுத்தச் செய்வதற்காக இது ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வுகளைப் பயன்படுத்துகிறது.
- திபெத், தெற்கு சூடான் மற்றும் சிரியா ஆகியவை இந்தக் குறியீட்டில் உலகிலேயே குறைவான சுதந்திரம் கொண்ட நாடாக தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளன.

## உலகிலேயே 'அதிகக் குற்றங்கள் நிறைந்த நாடுகள்' தரவரிசை

- உலகப் புள்ளிவிவரங்கள் என்ற அமைப்பானது, உலகிலேயே 'அதிகக் குற்றங்கள் நிறைந்த நாடுகள்' என்ற தரவரிசையைப் பகிர்ந்துள்ளன.
- இந்தப் பட்டியலில், வெனிசுலா முதலிடத்திலும், பப்புவா நியூ கினியா (2), ஆப்கானிஸ்தான் (3), தென்னாப்பிரிக்கா (4), ஹோண்டுராஸ் (5) ஆகிய நாடுகள் முறையே அடுத்தடுத்த இடங்களையும் பெற்றுள்ளன.
- குற்றவியல் தரவரிசையில் இந்தியாவை விட அமெரிக்கா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகியவை முன்னணியில் உள்ள நிலையில் இந்தியா இதில் 77வது இடத்தினைப் பெற்று உள்ளது.
- உலகப் புள்ளிவிவரங்கள் அமைப்பின் தகவலின் படி, அமெரிக்கா 55வது இடத்திலும், ஐக்கியப் பேரரசு 65வது இடத்திலும் உள்ளன.
- 92வது, 100வது மற்றும் 135வது ஆகிய இடங்களில் உள்ள துருக்கி, ஜெர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முறையே குறைவான குற்றங்கள் பதிவான சில நாடுகளாக உள்ளன.



## உலக யூனிகார்ன் நிறுவனங்கள் குறியீடு 2023

- ஹூருன் அமைப்பின் 2023 ஆம் ஆண்டிற்கான உலக யூனிகார்ன் நிறுவனங்கள் என்ற குறியீட்டின் படி இந்தியா 68 புதிய யூனிகார்ன் நிறுவனங்களுடன் இதில் மூன்றாவது இடத்தினைப் பெற்றுள்ளது.
- 666 யூனிகார்ன் நிறுவனங்கள் கொண்ட அமெரிக்கா மற்றும் 316 யூனிகார்ன் நிறுவனங்கள் கொண்ட சீனா ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- இருப்பினும், இந்தியப் புத்தொழில் நிறுவனங்கள் எதுவும் இந்தப் பட்டியலின் முதல் 10 இடங்களில் இடம் பெறவில்லை.
- 22 பில்லியன் டாலர் மதிப்புள்ள இயங்கலை கல்வி வழங்கீட்டு நிறுவனமான BYJU'S இந்தியாவின் ஒரு முன்னணி யூனிகார்ன் நிறுவனமாகும்.
- அதைத் தொடர்ந்து உணவு விநியோகத் தளமான ஸ்விகி மற்றும் கற்பனையான ஒரு விளையாட்டுத் தளமான ட்ரீம்11 ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- இந்தியா அதிக எண்ணிக்கையிலான கேசல் நிலை நிறுவனங்களை (20% விற்பனை அதிகரிப்பினைக் கொண்ட நிறுவனங்கள்) கொண்ட மூன்றாவது நாடாக உள்ளது என்றாலும் ஹூருன் அமைப்பின் 500 உலக நிறுவனங்களின் பட்டியலில் ஐந்தாவது இடத்தினைப் பெற்றது.
- சான் பிரான்சிஸ்கோ, ஷாங்காய், பெய்ஜிங் மற்றும் ஷென்சென் ஆகிய நகரங்களை உள்ளடக்கிய அதிகப் புத்தொழில் நிறுவனங்களைக் கொண்ட ஐந்து நகரங்களின் பட்டியலில் பெங்களூரு நகரும் ஒன்றாகும்.
- இவை அடுத்த 5 ஆண்டுகளுக்குள் ஹூருன் அமைப்பின் 500 உலக நிறுவனங்களின் பட்டியலில் இடம் பெறுவதற்கு அதிக வாய்ப்புள்ளது.




HURUN'S GLOBAL UNICORN INDEX 2023

| RANK | COUNTRY | NO. OF UNICORNS |
|---|---|---|
| 1 | USA | 666 |
| 2 | CHINA | 316 |
| 3 | INDIA | 68 |
| 4 | UK | 49 |
| 5 | GERMANY | 36 |
| 6 | ISRAEL | 24 |
| 7 | FRANCE | 24 |
| 8 | CANADA | 3 |
| 9 | SOUTH KOREA | 8 |
| 10 | BRAZIL | 7 |

## தால்ஸ் தரவு அச்சுறுத்தல் அறிக்கை 2023

- இது இணையவெளிப் பாதுகாப்புப் போக்குகள் மற்றும் அச்சுறுத்தல்கள் பற்றிய ஒரு விரிவானப் பகுப்பாய்வு ஆகும்.


- இந்தியாவில், பாதிக்கும் மேற்பட்ட (52%) தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் கடந்த ஒரு வருடத்தில் பணய தீநிரல் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.
- இது உலக அளவிலான பணய தீநிரல் தாக்குதல்களான 48 சதவீதத்தை விட அதிகம் ஆகும்.
- இந்தியாவில் இந்த மதிப்பாய்வில் பங்கேற்ற 53% பேர், தங்கள் இணைய உலக இணைப்பு சாதனங்கள் தான் இந்தத் தாக்குதல்களுக்கான மிகப்பெரிய இலக்கு என்று கூறியுள்ளனர்.
- அதைத் தொடர்ந்து மேகக் கணிமம் அடிப்படையிலான சேமிப்பகம் (41%) மற்றும் மேகக் கணிமம் சார்ந்த சேவை பெற்ற செயலிகள் (SaaS) (40%) ஆகியவை இலக்காக உள்ளன.
- இந்தியாவில் இந்த மதிப்பாய்வில் பங்கேற்ற 82 சதவீதம் பேர் பல்வேறு பணய தீநிரல் தாக்குதல்களால் தரவு இழப்பினைச் சந்தித்து உள்ளதாகத் தெரிவித்துள்ள நிலையில், இது உலகளவில் 67 சதவீதமாக உள்ளது.




## உலக உணவுக் கொள்கை அறிக்கை

- சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் (IFPRI) ஆனது, 2023 ஆம் ஆண்டு உலக உணவுக் கொள்கை அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- கோவிட்-19 பெருந்தொற்று, பருவநிலை மாற்றம், இயற்கைப் பேரிடர்கள் மற்றும் உள்நாட்டு அமைதியின்மை மற்றும் அரசியல் ரீதியான உறுதியற்றத் தன்மை போன்ற பல நெருக்கடிகள் காரணமாக 2020-2022 ஆம் ஆண்டில் உணவுப் பாதுகாப்பின்மை அதிகரித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் 45 நாடுகளில் உள்ள 205 மில்லியன் மக்கள் நெருக்கடி நிலை அளவிலான கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை அல்லது மோசமான நிலையை எதிர் கொண்டனர்.
- ஆப்பிரிக்காவின் மக்கள் தொகையில் 20% பேர் உணவுப் பாதுகாப்பின்மை நிலையிலும், ஊட்டச் சத்துக் குறைபாடு உடையவர்களாகவும் உள்ளனர்.

- பருவநிலை மாற்றத்தின் தாக்கம் காரணமாக, 2050 ஆம் ஆண்டிற்குள் மேலும் 72 மில்லியன் மக்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டு நிலையினால் பாதிக்கப் படுவார்கள்.
- உலக மக்கள்தொகையில் பாதி பேர் அல்லது உலகளவில் சுமார் 3.83 பில்லியன் மக்கள் விவசாய உணவுமுறைகள் சார்ந்த வாழ்வாதாரங்களை நம்பியிருக்கும் குடும்பங்களில் வாழ்கின்றனர்.




## 2023 ஆம் ஆண்டில் உலகின் முதல் 10 பணக்கார நகரங்கள்

- ஹென்லி மற்றும் பார்ட்னர்ஸ் என்ற ஆலோசனை வழங்கீட்டு நிறுவனமானது, உலகில் ஒவ்வொரு நகரத்திலும் வசிக்கும் மில்லியனர்களின் எண்ணிக்கையை வைத்து பல நகரங்களை தரவரிசைப் படுத்தியுள்ளது.
- நியூயார்க் நகரம், டோக்கியோ, சான் பிரான்சிஸ்கோ விரிகுடா பகுதி, லண்டன் மற்றும் சிங்கப்பூர் ஆகியவை முதல் 5 இடங்களில் இடம் பெற்றுள்ளன.
- இந்தப் பட்டியலில் சீனா மற்றும் அமெரிக்காவில் உள்ள நகரங்கள் அதிக இடங்களைப் பெற்றுள்ளன.
- ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாக பெங்களூரு நகரம் தனித்துவமாக குறிப்பிடப்பட்டுள்ளது.


**Wealthiest Cities in the World**

NYC had the most millionaires in 2022, but Bay Area had more billionaires

| City/Area | Millionaires | Billionaires | HNWI Change (2012-2022) |
|---|---|---|---|
| New York City | 340,000 | 58 | +40% ▲ |
| Tokyo | 290,300 | 14 | -5 ▼ |
| Bay Area | 285,000 | 63 | +68 ▲ |
| London | 258,000 | 36 | -15 ▼ |
| Singapore | 240,100 | 27 | +40 ▲ |
| Los Angeles | 205,400 | 42 | +35 ▲ |
| Hong Kong | 129,500 | 32 | -27 ▼ |
| Beijing | 128,200 | 43 | +70 ▲ |
| Shanghai | 127,200 | 40 | +72 ▲ |
| Sydney | 126,900 | 15 | +35 ▲ |

## உலக குழந்தைகள் 2023 - அறிக்கை

- யுனிசெஃப் இந்தியா அமைப்பானது, "உலகக் குழந்தைகளின் நிலை 2023: ஒவ்வொரு குழந்தைக்கும், நோய்த் தடுப்பினை வழங்குதல்" என்ற தலைப்பிலான அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- உலகிலேயே தடுப்பூசி வழங்கீட்டில் அதிக நம்பிக்கைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக இந்தியா இருப்பதாக இந்த அறிக்கை எடுத்துரைக்கிறது.
- ஒடிசாவில், 90.5 சதவீத குழந்தைகள் நோய்த் தடுப்பு மருந்தின் முழுத் தவணைகளையும் பெற்றுள்ளனர் என்ற நிலையில் இது 76.4 சதவீதம் என்ற அளவில் தேசிய சராசரியை விட அதிகமாக உள்ளது.
- இந்த மதிப்பீட்டில் இடம் பெற்ற 55 நாடுகளில் சீனா, இந்தியா மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகளில் மட்டுமே குழந்தைகளுக்கான தடுப்பூசிகளின் முக்கியத்துவம் உறுதியான முறையில் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த மதிப்பீட்டில் இடம் பெற்ற மூன்றில் ஒரு பங்கு நாடுகளில் (கொரியக் குடியரசு, பப்புவா நியூ கினியா, கானா, செனேகல் மற்றும் ஜப்பான்) பெருந்தொற்று தொடங்கிய பிறகு, தடுப்பூசி மீதான நம்பிக்கை இழப்பு பதிவாகியுள்ளது.
- 2019 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் மொத்தம் 67 மில்லியன் குழந்தைகளுக்குத் தடுப்பூசிகள் வழங்கப் படவில்லை.




- 112 நாடுகளில் தடுப்பூசி வழங்கீட்டுப் பரவலின் அளவுகள் குறைந்து வருகின்றன.
- 2022 ஆம் ஆண்டில், தட்டம்மை நோய்ப் பாதிப்புகளின் எண்ணிக்கையானது, முந்தைய ஆண்டை விட இரண்டு மடங்கு அதிகமாக இருந்தது.
- 2022 ஆம் ஆண்டில், போலியோ பாதிப்பினால் முடக்கு வாதம் ஏற்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையானது ஆண்டிற்கு ஆண்டு என்ற வீதத்தில் 16 சதவீதம் அதிகரித்துள்ளது.
- 2019 முதல் 2021 வரையிலான காலக்கட்டத்தினை முந்தைய மூன்றாண்டு காலத்துடன் ஒப்பிடும் போது, போலியோ பாதிப்பினால் முடக்கு வாதம் ஏற்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையானது எட்டு மடங்கு அதிகரித்துள்ளது.
- ஏழ்மை மிக்க குடும்பங்கள் பிரிவில், 5 குழந்தைகளில் 1 குழந்தை என்ற அளவிற்கு ஒரு தவணைத் தடுப்பூசியினைக் கூட பெறாதவர்களாக உள்ள நிலையில், பணக்காரர்கள் பிரிவில் இது 20 குழந்தைகளில் 1 குழந்தை என்ற அளவில் உள்ளது.

- குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் இந்தச் சவால்கள் அதிகமாக நிலவுகின்ற நிலையில், இந்த நாடுகளில் உள்ள நகர்ப்புறங்களில் வாழும் 10 குழந்தைகளில் 1 குழந்தை என்ற அளவில் ஒரு தவணை தடுப்பூசியினைக் கூட பெறாத நபர்களாக உள்ளதோடு, இது கிராமப்புறங்களில் 6 குழந்தைகளுக்கு 1 குழந்தை என்ற அளவிலேயே உள்ளது.

## உலகப் பருவநிலை 2022 அறிக்கை

- உலக வானிலை அமைப்பு (WMO) ஆனது, 2022 ஆம் ஆண்டு உலகப் பருவநிலை குறித்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 173 வருடங்களாக வெளியிடப் பட்டு வரும் இந்த முக்கியப் பதிவில், 2015 முதல் 2022 வரையிலான ஆண்டுகள் மிகவும் வெப்பமான எட்டு ஆண்டுகளாகும்.
- தெற்காசியா மற்றும் இந்தியத் துணைக் கண்டப் பகுதிகள் பருவநிலை மாற்றங்களால் அதிகமாகப் பாதிக்கப் படக் கூடியப் பகுதிகளாக அறியப் படுகிறது.
- 2022 ஆம் ஆண்டில் பதிவான உலகளாவியச் சராசரி வெப்பநிலையானது, 1850-1900 ஆண்டு காலச் சராசரியை விட 1.15 ° C [1.02–1.28] அதிகமாக இருந்தது.
- 2022 ஆம் ஆண்டில் இந்தியப் பருவமழையானது இயல்பை விட முன்னதாகத் தொடங்கி தாமதமாக முடிவடைந்தது.




- கோடைப் பருவ மழையினைப் பெறும் மேற்கு இந்தியப் பகுதிகளில் பதிவான மொத்த மழைப் பொழிவானது, நீண்ட கால (1951–2000) சராசரியை விட அதிகமாக இருந்தது.
- முதலாவது பத்தாண்டுகளில் பதிவான செயற்கைக் கோள் பதிவின் (1993-2002) படி, உலகச் சராசரி கடல் மட்ட உயர்வு விகிதம் ஆனது ஆண்டிற்கு 2.27 மி.மீ. ஆக உள்ளது.
- இது 2013-2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஆண்டிற்கு 4.62 மி.மீ. என இரட்டிப்பாகியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 25 ஆம் தேதியன்று, அண்டார்டிக் கடலின் பனிப்பரவலானது, 1.92 மில்லியன் சதுர கிலோமீட்டர் என்று இது வரை இருந்த அளவை விட குறைவான அளவினை எட்டியது.

- இது நீண்ட கால (1991-2020) சராசரியை விட கிட்டத்தட்ட 1 மில்லியன் சதுர கி.மீ. குறைவாக உள்ளது.
- வறட்சி காரணமாக சோமாலியாவில் கிட்டத்தட்ட 1.2 மில்லியன் மக்கள் உள் நாட்டிலேயே இடம் பெயர்ந்துள்ள நிலையில், அதே காலகட்டத்தில் 60,000க்கும் மேற்பட்ட மக்கள் எத்தியோப்பியா மற்றும் கென்யா ஆகிய நாடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.


## வேளாண் உணவு உற்பத்தி முறைகளில் பெண்களின் நிலை

- உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) ஆனது சமீபத்தில் இந்த அறிக்கையினை வெளியிட்டது.
- இது வேளாண்மையில் நிலவும் பாலின வேறுபாடுகள் மற்றும் உலகப் பொருளாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றில் அதன் தாக்கம் குறித்து விளக்குகிறது.
- தற்போது, 345 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் மிகவும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டு வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- ஆண்கள் மற்றும் பெண்கள் நிர்வகிக்கும் ஒரே அளவிலான வேளாண் நிலங்களின் உற்பத்தித் திறனில் 24% பாலின இடைவெளி உள்ளது.
- வேளாண்மையில் கூலி வேலையில் ஈடுபடும் ஆண்கள் சம்பாதிக்கும் ஒவ்வொரு டாலர் மதிப்பில் பெண்கள் 82 சென்ட் சம்பாதிக்கிறார்கள் என்ற நிலையில் இது பாலின ஊதிய இடைவெளியைக் குறிக்கிறது.
- ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகளில், 66% அளவில் பெண்களின் வேலை வாய்ப்பு வேளாண் உணவு உற்பத்தி முறைகளைச் சார்ந்துள்ள நிலையில், அதே சமயம் தெற்கு ஆசியாவில், இது 71% என்ற அளவாகும்.

## தளவாட செயல்திறன் குறியீடு (LPI) 2023

- உலக வங்கியின் 2023 ஆம் ஆண்டு தளவாட செயல்திறன் குறியீட்டில் (LPI) இந்தியா ஆறு இடங்கள் முன்னேறியுள்ளது.
- இப்போது இந்தக் குறியீட்டில் இடம் பெற்றுள்ள 139 நாடுகளில் இந்தியா 38வது இடத்தில் உள்ளது.
- 2018 ஆம் ஆண்டு இந்தக் குறியீட்டில் 44வது இடத்தில் இருந்த இந்தியா, தற்போது 2023 ஆம் ஆண்டு பட்டியலில் 38வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- இந்தியாவின் செயல்திறனானது 2014 ஆம் ஆண்டில் இந்தக் குறியீட்டில் 54வது இடத்தில் இருந்த நிலையில் இருந்து தற்போது வெகுவாக மேம்பட்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் 52வது இடத்திலிருந்த இந்தியாவின் தரவரிசையானது, தற்போது உள் கட்டமைப்பு மதிப்பில் ஐந்து இடங்கள் முன்னேறி 2023 ஆம் ஆண்டில் 47வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- இது 2018 ஆம் ஆண்டில் சர்வதேச ஏற்றுமதிகளில் 44வது இடத்திலிருந்த இந்தியா 2023 ஆம் ஆண்டில் 22வது இடத்திற்கு முன்னேறியுள்ளதோடு, தற்போது தளவாடத் திறன் மற்றும் சமத்துவத்தில் நான்கு இடங்கள் முன்னேறி 48வது இடத்திற்கு முன்னேறியது.
- இந்த அறிக்கையின்படி, 2022 ஆம் ஆண்டு மே மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையில் இந்தியா மற்றும் சிங்கப்பூர் இடையிலான வர்த்தக கொள்கலன்களின் சராசரி நிலுவை நேரம் மூன்று நாட்களாகும்.

- அமெரிக்காவிற்கான நிலுவை நேரம் ஏழு நாட்கள் மற்றும் ஜெர்மனிக்கான நிலுவை நேரம் 10 நாட்கள் ஆகும்.




## உலக இராணுவச் செலவின அறிக்கை

- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனமானது (SIPRI) இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் உலகிலேயே அதிகளவில் இராணுவச் செலவினங்கள் செய்த நான்காவது பெரிய நாடாக இந்தியா உள்ளது.
- இது அமெரிக்கா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு அடுத்த இடத்தில் இருந்தது.
- இதில் சவுதி அரேபியா ஐந்தாவது இடத்தில் இருந்தது.
- இந்த ஐந்து நாடுகள், உலக நாடுகளின் இராணுவச் செலவில் சுமார் 63 சதவீதத்தினைக் கொண்டுள்ளன.
- இந்தியாவின் இராணுவச் செலவினமான 81.4 பில்லியன் டாலர்கள் என்பது உலகிலேயே நான்காவது மிக அதிகமாக இருந்தது.
- இது 2021 ஆம் ஆண்டினை விட 6% அதிகமாகவும், 2013 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 47% அதிகமாகவும் இருந்தது.
- 2022 ஆம் ஆண்டில் உலக நாடுகளின் மொத்த இராணுவச் செலவு 3.7% அதிகரித்து, 2,240 பில்லியன் டாலர் என்ற புதிய உச்சத்தைத் தொட்டது.
- மேலும், உலக நாடுகளின் ஆயுத இறக்குமதியில் இந்தியாவின் பங்கானது கடந்த ஐந்து ஆண்டுகளில் அதிகபட்சமாக 11% ஆக இருந்தது.
- அதைத் தொடர்ந்து சவுதி அரேபியா (9.6%), கத்தார் (6.4%), ஆஸ்திரேலியா (4.7%) மற்றும் சீனா (4.7%) ஆகிய நாடுகள் உள்ளன.

countries with the highest military expenditure in 2022

| Rank | | | Spending ($ b.), | Change (%) | | Spending as a share of GDP (%)[b] | | World share (%), |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2022 | 2021[d] | Country | 2022 | 2021-22 | 2013-22 | 2022 | 2013 | 2022 |
| 1 | 1 | United States | 877 | 0.7 | 2.7 | 3.5 | 4.0 | 39 |
| 2 | 2 | China | [292] | 4.2 | 63 | [1.6] | [1.7] | [13] |
| 3 | 5 | Russia | [86.4] | 9.2 | 15 | [4.1] | [3.9] | [3.9] |
| 4 | 3 | India | 81.4 | 6.0 | 47 | 2.4 | 2.5 | 3.6 |
| 5 | 8 | Saudi Arabia | [75.0] | 16 | -2.7 | [7.4] | [9.0] | [3.3] |
| Subtotal top 5 | | | 1412 | .. | .. | .. | .. | 63 |
| 6 | 4 | United Kingdom | 68.5 | 3.7 | 9.7 | 2.2 | 2.3 | 3.1 |
| 7 | 7 | Germany | 55.8 | 2.3 | 33 | 1.4 | 1.2 | 2.5 |
| 8 | 6 | France | 53.6 | 0.6 | 15 | 1.9 | 1.8 | 2.4 |
| 9 | 10 | South Korea | 46.4 | -2.5 | 37 | 2.7 | 2.1 | 2.1 |
| 10 | 9 | Japan | 46.0 | 5.9 | 18 | 1.1 | 0.9 | 2.1 |

# மாநிலச் செய்திகள்

## AFSPA சட்டத்தின் கீழ் ‘அமைதியற்றப் பகுதிகள்’ நிலை


- நாகாலாந்து, அசாம் மற்றும் மணிப்பூர் ஆகிய சில மாநிலங்களில் 1958 ஆம் ஆண்டு ஆயுதப்படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தின் (AFSPA) கீழ் அறிவிக்கப்பட்ட "அமைதி அற்றப் பகுதிகள்" என்ற அதிகார வரம்பினை ஏப்ரல் மாதத்திலிருந்துக் குறைப்பதற்கு மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- கடந்த ஆறு மாதங்களாக, அசாமின் எட்டு மாவட்டங்கள் மற்றும் ஒரு துணைப் பிரிவு மற்றும் மணிப்பூரின் பெரும்பாலான பகுதிகளில் AFSPA சட்டம் அமலில் உள்ளது.
- மணிப்பூரில் (இம்பால் நகராட்சிப் பகுதி தவிர) "அமைதியற்ற பகுதிகளுக்கான" அறிவிப்பானது 2004 ஆம் ஆண்டு முதல் அமலில் உள்ளது.
- AFSPA சட்டமானது முன்னதாக 1995 ஆம் ஆண்டு முதல் நாகாலாந்தின் ஒன்பது மாவட்டங்களிலும் நடைமுறையில் இருந்த நிலையில் இது தற்போது 8 மாவட்டங்கள் என்ற அளவாக குறைக்கப் பட்டுள்ளது.
- "அமைதியற்றப் பகுதிகளுக்கான" அறிவிப்பானது அசாம் மாநிலம் முழுவதும் 1990 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை அமலில் இருந்தது.

- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் இது ஒன்பது மாவட்டங்களுக்கும் மற்றொரு மாவட்டத்தின் ஒரு துணைப் பிரிவுக்கும் மட்டும் என அறிவிக்கப்பட்டது.
- இந்த ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல், இது எட்டு மாவட்டங்களாக குறைக்கப்பட்டது.




## கந்தமர்தன் மலைத்தொடர் பல்லுயிர்ப் பாரம்பரியத் தளம்

- ஒடிசா அரசானது, பர்கர் மற்றும் பலங்கிர் மாவட்டத்தில் உள்ள கந்தமர்தன் மலைத் தொடரைப் பல்லுயிர்ப் பாரம்பரியத் தளமாக (BHS) அறிவித்துள்ளது.
- கந்தமால் மாவட்டத்தில் உள்ள மண்டசுரு பள்ளத்தாக்கு மற்றும் கஜபதி மாவட்டத்தில் உள்ள மகேந்திரகிரி மலைத்தொடருக்கு அடுத்ததாக இது ஒடிசாவின் மூன்றாவது பல்லுயிர்ப் பாரம்பரியத் தளம் ஆகும்.
- ஃபிகஸ் கான்கினா வார் டாசிகார்பா எனப்படும் ஒரு விதையுறைத் தாவரம் மற்றும் பியூசெட்டியா ஹரிசங்கரென்சிஸ் என்ற ஒரு சிலந்தி இனம் ஆகியவை இந்தப் பகுதி மலையில் மட்டுமே காணப் படுகின்றன.
- இந்த மலையின் வடக்குச் சரிவில் அமைந்துள்ள நருசிங்கநாத் கோயில் மற்றும் மலை அடிவாரத்தின் தெற்குச் சரிவில் அமைந்துள்ள ஹரிசங்கர் கோயில் போன்ற இரண்டு வரலாற்று நினைவுச் சின்னங்கள் இங்கு அமைந்துள்ளன.



## ஐரோப்பிய ஒன்றியத்தின் புவிசார் குறியீடு

- ஐரோப்பிய ஒன்றியம் (EU) ஆனது இமாச்சலப் பிரதேசத்தின் காங்க்ரா தேயிலைக்குப் புவிசார் குறியீட்டினை (GI) வழங்கியுள்ளது.
- ஐரோப்பிய நாடுகளில், காங்க்ரா தேயிலை உற்பத்தி விவசாயிகள் தங்கள் விளை பொருட்களுக்கு நல்ல விலையினைப் பெறுவதற்கு இது உதவும்.
- காங்க்ரா தேயிலை 2005 ஆம் ஆண்டில் இந்தியப் புவிசார் குறியீட்டினைப் பெற்றது, ஆனாலும் ஐரோப்பிய ஒன்றியத்தினால் இது அங்கீகரிக்கப்படவில்லை.
- காங்க்ரா தேயிலைகளில் கால்சியம், துத்தநாகம், ஃபோலிக் அமிலங்கள், வைட்டமின் பி1, வைட்டமின் பி2 மற்றும் வைட்டமின் பி6 ஆகியவை உள்ளன.

## 100 சதவீத இரயில் தட மின்மயமாக்கம் - ஹரியானா

- ஹரியானா மாநிலத்தில் உள்ள இரயில் தட வலையமைப்பின் மின்மயமாக்கல் பணியினை முழுவதுமாக நிறைவு செய்ததன் மூலம் இந்திய இரயில்வே நிர்வாகம் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- ஹரியானாவில் தற்போதுள்ள 1,701 கிலோமீட்டர் நீளமுள்ள அகல இரயில்பாதையும் தற்போது முழுவதுமாக மின்மயமாக்கப் பட்டுள்ளது.
- ஹரியானா மாநிலத்தின் பிராந்தியமானது வடக்கு, வட மத்திய மற்றும் வடமேற்கு இரயில்வே நிர்வாகத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது.




## நாக்ரி துப்ராஜ் அரிசி

- சத்தீஸ்கரின் சிறப்பு நறுமண மிகு நாக்ரி துப்ராஜ் அரிசிக்குப் புவிசார் குறியீடு வழங்கப் பட்டுள்ளது.
- இது இந்த அரிசிக்குத் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான ஒரு புதிய அடையாளத்தை வழங்கும்.

- சத்தீஸ்கரின் பாஸ்மதி என்று பிரபலமாக அறியப்படும் நாக்ரி துப்ராஜ் அரிசி, அந்த மாநிலத்தின் பாரம்பரியமான, நறுமணம் கொண்ட அரிசி வகையாகும்.
- 2019 ஆம் ஆண்டில் சுர்குஜா மாவட்டத்தின் "ஜிராபூல்" அரிசிக்குப் புவிசார் குறியீடு வழங்கப் பட்டதற்குப் பிறகு, தற்போது நாக்ரி துப்ராஜ் அரிசிக்குப் புவிசார் குறியீடு வழங்கப் பட்டுள்ளது.
- நாக்ரி துப்ராஜ் அரிசிக்குப் புவிசார் குறியீடானது, பெண்கள் சுய உதவிக் குழுவான 'மா துர்கா ஸ்வயம் சஹாயதா' என்ற குழுவிடம் வழங்கப்பட்டது.


## பருவம் சாரா மழைப்பொழிவு - இயற்கைப் பேரிடர்

- மகாராஷ்டிர மாநிலத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கச் செய்வதற்காக, பருவம் சாரா மழைப் பொழிவினை ஓர் இயற்கைப் பேரிடராக கருத மகாராஷ்டிர அரசு முடிவு செய்துள்ளது.
- இந்த நடவடிக்கையானது, பருவம் சாராத மழைப் பொழிவினால் பயிர்கள் சேதம் அடைந்த நிலங்களின் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நிர்வாகத்திற்கு உதவும்.
- இதற்கென ஒரு தனிப் பிரிவு உருவாக்கப்பட்டது.
- பருவம் சாரா மழைப்பொழிவினை ஓர் இயற்கைப் பேரிடராகக் கருதும் நாட்டின் முதல் மாநிலம் இதுவாகும்.




## இந்தியாவின் முதல் குளிர்வூட்டல் கூரை அமைப்புக் கொள்கை

- ஹைதராபாத் மாநகராட்சி நிர்வாகம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ஆகியவை இணைந்து 2023-2028 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் முதல் குளிர்வூட்டல் கூரை அமைப்புக் கொள்கையினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தக் கொள்கையானது, சூரிய ஒளிப் பிரதிபலிப்பினை ஏற்படுத்தும் வண்ணப் பூச்சுகள், ஓடுகள் அல்லது தாள்கள் போன்ற குளிர்வூட்டும் கூரைப் அமைப்புகளை நிறுவுவதைக் கட்டாயமாக்குவதன் மூலம், மாநிலம் முழுவதும் குளிர்வூட்டல் சார்ந்தக் கூரை அமைப்புகளை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 300 சதுர கிலோமீட்டர் கூரைப் பரப்பில் (முக்கியமாக - 200 சதுர கிமீ), தூய்மையான ஒரு கூரை அமைப்புத் தொழில்நுட்பத்தைச் செயல்படுத்தும் ஒரு இலக்கை அடையச் செய்வதற்காக இந்தக் கொள்கையானது திட்டமிடப்பட்டுள்ளது.




## மின்னணு முறை கொள்முதல் செய்வதில் சிறந்த மாநிலம்

- வடகிழக்கு மாநிலங்களில் மின்னணு முறை கொள்முதல் நடைமுறைகளை மேற் கொள்வதில் சிறந்த மாநிலத்திற்கான விருதை திரிபுரா பெற்றுள்ளது.
- அரசின் வெளிப்படைத் தன்மையைப் பேணச் செய்வதற்காக என்று ரூ.25,000க்கும் அதிகமான மதிப்பைக் கொண்ட எந்தவொரு கொள்முதல் அல்லது ஒப்பந்தத்தையும் மின்னணு முறையில் கொள்முதல் செய்வதை அரசு கட்டாயமாக்கியுள்ளது.
- மின்னணு முறை கொள்முதல் மற்றும் அரசு மின்னணுச் சந்தைத் தளம் (GeM) மூலம் செலுத்தப் பட்ட மொத்த மதிப்பு 2020-21 ஆம் ஆண்டில் ரூ.4,451 கோடியிலிருந்து 2021-22 ஆம் ஆண்டில் ரூ.7441 கோடியாக அதிகரித்துள்ளது.



## இந்தியாவின் விசில் கிராமம்

- மாநிலங்களவை உறுப்பினர் ராகேஷ் சின்ஹா, மேகாலயாவில் உள்ள கோங்தாங் கிராமம் குறித்த தனது மேம்பாட்டு அறிக்கையினை தாக்கல் செய்துள்ளார்.
- கோங்தாங், மேகாலயாவில் உள்ள கிழக்கு காசி மலையில் அமைந்துள்ளது.
- 'ஜிங்ர்வாய் லாபே' என்ற தனித்துவமானப் பாரம்பரியத்தின் காரணமாக இது 'விசில் கிராமம்' என்று பிரபலமாக அழைக்கப்படுகிறது.
- ஒரு குழந்தை பிறந்தவுடன், அதனுடைய தாய் அந்தக் குழந்தைக்கென ஒரு தனித்துவமான ராகத்தினை உருவாக்குகிறார்.
- அந்த ராகமானது அக்குழந்தையின் பெயராகச் சூட்டப்படுகிறது.
- இந்த தனித்துவமானப் பெயர்களைத் தாய்மார்கள் மட்டுமே தங்கள் குழந்தைகளுக்கு வைக்க முடியும்.
- காங்தாங் கிராம மக்களான செங் என்பவர் காசி பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள் என்பதோடு அவர்கள் காசி மொழியினைப் பேசுகின்றனர்.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்தக் கிராமத்தின் மக்கள் தொகை 567 ஆகும்.
- இந்த 567 பேரில், 275 ஆண்கள் மற்றும் 275 பெண்கள் ஆவர் என்பதோடு, அந்தக் கிராமத்தின் கல்வியறிவு விகிதம் 55% ஆகும்.




## இந்தியாவின் முதல் சூரிய சக்தியில் இயங்கும் சுற்றுலாப் படகு

- இந்தியாவின் சூரிய சக்தியில் இயங்கும் முதல் சுற்றுலாக் கப்பலான சூரியம்ஷூவை கேரளா கப்பல் போக்குவரத்து மற்றும் உள்நாட்டுப் போக்குவரத்து நிறுவனம் (KSINC) அறிமுகப் படுத்தியுள்ளது .
- இந்த கப்பலில் 100 பேர் வரை பயணிக்க முடியும்.
- இது மரைன் டிரைவ் முதல் கடமக்குடி வழித்தடம் வரை இயக்கப்படுவதோடு, இது மேலும் கடலுக்குள் 10 கி.மீ தூரம் வரை செல்லும்.



## முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட இந்தியாவின் முதல் தபால் நிலையம்

- முப்பரிமாண முறையில் அச்சிடல் தொழில்நுட்பத்திலான இந்தியாவின் முதல் தபால் அலுவலகம் விரைவில் பெங்களூருவில் அமைக்கப்பட உள்ளது.
- 1,000 சதுர அடி அளவிலான இந்தக் கட்டிடத்தினை அமைக்க 25 லட்சம் ரூபாய் செலவு ஆகும் என்பதால், இதன் மூலம் மொத்தச் செலவில் 25% குறையும்.
- இது சாதாரணத் தபால் நிலையங்களைப் போலவே செயல்படும்.



## மத்தியப் பிரதேசத் தயாரிப்புகளுக்கான புதிய புவிசார் குறியீடு




- மத்தியப் பிரதேசத்தின் தயாரிப்புகளான கோண்ட் ஓவியம் மற்றும் சர்பதி கோதுமை ஆகியவை புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளன.
- கோண்ட் ஓவியம் ஆனது மத்தியப் பிரதேசத்தில் கோண்ட் என்ற பழங்குடியினரால் மேற் கொள்ளப் படும் ஒரு பாரம்பரியக் கலையாகும்.
- திண்டோரி மாவட்டத்தின் பதாங்கர் கிராமம் கோண்ட் ஓவியங்களுக்கு புகழ் பெற்றது.
- ஷபர்தி கோதுமை என்பது செஹோர் மற்றும் விதிஷா மாவட்டங்களில் விளையும் ஒரு பிராந்திய வகை கோதுமை ஆகும்.
- இது உடலில் இன்சுலின் மற்றும் குளுக்கோஸ் ஆகியவற்றினைப் பயன்படுத்தச் செய்வதற்கான செயல்முறையில் 300க்கும் மேற்பட்ட நொதிகளுக்கு உதவுகிறது.

## முதலாவது தண்ணீர் வளம் சார்ந்த மதிப்பீட்டு அறிக்கை

- தண்ணீர் வளம் சார்ந்த மதிப்பீட்டு அறிக்கையினைத் தாக்கல் செய்த முதல் மாநிலம் கேரளாவாகும்.
- அங்குள்ள சில பகுதிகளில் நிலவும் தண்ணீர்ப் பற்றாக்குறைக்கு இது ஒரு தீர்வைக் கொண்டு வந்துள்ளது.
- வளங்களை முறையாகப் பயன்படுத்துவதற்கும், அவை வீணாவதைத் தடுப்பதற்கும் தண்ணீர் வளம் சார்ந்த மதிப்பீட்டு அறிக்கை உதவிகரமாக இருக்கும்.
- இந்தத் திட்டத்தின் முதல் கட்டமானது, 94 கிராமப் பஞ்சாயத்துகள் மற்றும் 15 தொகுதிப் பஞ்சாயத்துகளை உள்ளடக்கியதாகும்.
- தண்ணீர் வளம் சார்ந்த மதிப்பீட்டு அறிக்கையின் ஒரு பகுதியாக ஒவ்வொரு ஊராட்சிக்கும் குறிப்பிட்ட பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன

Where is Earth's Water?




## நகராட்சிச் சட்டம் ரத்து

- நாகாலாந்து அரசாங்கமானது 2001 ஆம் ஆண்டின் நாகாலாந்து நகராட்சிச் சட்டத்தினை சமீபத்தில் ரத்து செய்தது.
- இது நாகாலாந்தின் 39 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் (ULBs) பெண்களுக்கென 33% இடங்களை ஒதுக்கி தேர்தல் நடத்த வேண்டுமென்ற மாநில தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பினை ரத்து செய்ய வழி வகுத்தது.

- இந்திய அரசியலமைப்பின் 74வது சட்டத் திருத்தத்தின் IVவது சட்டப் பிரிவின் படி, உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படாத ஒரே மாநிலம் நாகாலாந்து ஆகும்.
- அங்குள்ள பெரும்பாலான பாரம்பரியப் பழங்குடியினர் மற்றும் பல்வேறு நகர்ப்புற அமைப்புகள் பெண்களுக்கான 33% இட ஒதுக்கீட்டை எதிர்க்கின்றன.
- அத்தகைய இடஒதுக்கீடுகளானது, அரசியலமைப்பின் 371A என்ற சட்டப் பிரிவானது நாகலாந்து மாநிலத்திற்கு வழங்கிய சிறப்பு விதிகளை மீறுவதாக அவர்கள் வாதிடச் செய்தனர்.
- நாகா இனத்தவரின் சமயம் அல்லது சமூக நடைமுறைகள், நாகா மரபுச் சட்டம் மற்றும் செயல்முறை, நாகா மரபுச் சட்டத்தின்படி முடிவெடுக்கும் குடிமை மற்றும் குற்றவியல் நீதி நிர்வாகம், நிலம் மற்றும் அதன் வளங்களின் உரிமை மற்றும் பரிமாற்றம் ஆகியவற்றுக்கு நாடாளுமன்றத்தின் எந்தச் சட்டமும் பொருந்தாது என்று இந்தச் சட்டப் பிரிவு கூறுகிறது.
- நாகாலாந்து மாநிலத்தின் முதல் மற்றும் ஒரே உள்ளாட்சித் தேர்தல் ஆனது, 2004 ஆம் ஆண்டில் பெண்களுக்கன இட ஒதுக்கீடு இல்லாமல் நடைபெற்றது.
- பின் அப்போதைய அம்மாநில அரசானது, 2001 ஆம் ஆண்டு மாநகராட்சிச் சட்டத்தில் 2006 ஆம் ஆண்டில் திருத்தம் ஒன்றை செய்து 74வது சட்டத் திருத்தத்திற்கு இணங்கப் பெண்களுக்கான 33% இட ஒதுக்கீட்டினைச் சேர்த்தது.
- 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், பெண்களுக்கான இட ஒதுக்கீடு தொடர்பான, அரசியலமைப்பின் 243T என்ற சட்டப் பிரிவிலிருந்து நாகாலாந்து மாநிலத்திற்கு விலக்கு அளிக்கும் தீர்மானத்தினை அம்மாநிலச் சட்டமன்றம் நிறைவேற்றியது.




## இந்தியாவின் முதல் சுற்றுச்சூழல் சார் பொது வாக்கெடுப்பின் 10 ஆண்டுகள் நிறைவு

- பத்து ஆண்டுகளுக்கு முன்பு, 2013 ஆம் ஆண்டில் ஏப்ரல் 18 ஆம் தேதியன்று, ஒடிசாவில் உள்ள ராயகடாவைச் சேர்ந்த டோங்கோரியா கோண்ட், என்ற எளிதில் பாதிக்கப் படக் கூடிய பழங்குடியினர் குழுவினர் (PVTG) ஒரு சட்ட ரீதியிலான போராட்டத்தில் வெற்றி பெற்றனர்.
- ஒரிசா சுரங்கத் தொழில் கழகத்திற்கு எதிராக சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் தொடர்ந்த வழக்கில், வேதாந்தா நிறுவனம் பாக்சைட்டுக்காக நியாம்கிரி மலைகளில் சுரங்கப் பணி மேற்கொள்ள விடுத்த கோரிக்கையை ரத்து செய்து நியாம்கிரி மலை மீதான

இந்த இனத்தவரின் கலாச்சார, மத மற்றும் ஆன்மீக உரிமைகளை உச்ச நீதி மன்றம் அங்கீகரித்தது.

- உச்ச நீதிமன்றமானது இந்தச் சமூகத்திடம் இருந்து திட்டத்திற்கு ஒப்புதல் பெறுவதற்குப் பாதிக்கப்பட்ட கிராமச் சபைகள் மத்தியில் ஒரு பொது வாக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது.
- இந்தப் பொது வாக்கெடுப்பில், அந்தத் திட்டத்திற்கான ஒப்புதல் வழங்கீட்டிற்கு எதிராக அனைவரும் ஒருமனதாக வாக்களித்தனர்.




## தொடர்ந்து 4வது ஆண்டாக அதிக மனித உழைப்பு நாட்கள் உருவாக்கம்

PDs generation Status

| Sl. No. | State | 2022-23 | 2021-22 | Progress |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | RAJASTHAN | 34,87,05,653 | 42,42,89,686 | -17.81 |
| 2 | TAMIL NADU | 32,74,45,475 | 34,57,25,793 | -5.29 |
| 3 | UTTAR PRADESH | 30,70,68,005 | 32,56,41,088 | -5.70 |
| 4 | ANDHRA PRADESH | 23,88,99,978 | 24,17,25,517 | -1.17 |
| 5 | BIHAR | 23,11,91,401 | 18,08,23,428 | 27.85 |
| 6 | MADHYA PRADESH | 22,57,26,978 | 29,98,98,130 | -24.73 |
| 7 | ODISHA | 18,26,54,080 | 19,77,62,682 | -7.64 |
| 8 | CHHATTISGARH | 12,87,95,160 | 16,92,26,462 | -23.89 |
| 9 | KARNATAKA | 12,56,06,266 | 16,32,11,145 | -23.04 |
| 10 | TELANGANA | 11,85,80,875 | 14,57,92,686 | -18.66 |
| 11 | KERALA | 9,59,01,922 | 10,59,65,999 | -9.50 |
| 12 | JHARKHAND | 9,05,25,835 | 11,32,20,183 | -20.04 |
| 13 | MAHARASHTRA | 7,79,62,213 | 8,25,32,444 | -5.54 |
| 14 | ASSAM | 7,76,18,371 | 9,15,85,078 | -15.25 |
| 15 | GUJARAT | 4,64,64,332 | 5,68,01,298 | -18.20 |
| | Total | 2,90,93,06,921 | 3,63,19,42,687 | -19.90 |

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழான மனித உழைப்பு நாட்கள் உருவாக்கத்தில் ராஜஸ்தான் முதலிடத்தில் உள்ளது.
- ராஜஸ்தான் மாநிலத்திற்கு இது தொடர்ந்து நான்காவது ஆண்டாகும்.

- 2022-23 ஆம் ஆண்டில், இந்தத் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.10,175 கோடி செலவில் ராஜஸ்தான் மாநிலம் 35.61 கோடி மனித உழைப்பு நாட்களை உருவாக்கியுள்ளது.
- இதன் அடிப்படையில் ராஜஸ்தானைத் தொடர்ந்து தமிழ்நாடு (33.45 கோடி), உத்தரப் பிரதேசம் (31.18 கோடி), ஆந்திரப் பிரதேசம் (23.96 கோடி) மற்றும் பீகார் (23.69 கோடி) ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.

## ஹன்-தாடு கலாச்சாரத் திருவிழா

- மணிப்பூரின் காங்போக்பி மாவட்டத்தில் 5வது ஹன்-தாடு கலாச்சாரத் திருவிழா (2023) நடைபெற்றது.
- ஹன் திருவிழா என்பது மணிப்பூரின் தாடு என்ற சமூகத்தினரால் கொண்டாடப்படும் வருடாந்திரக் கலாச்சார விழா மற்றும் சமூகமயமாதல் நடவடிக்கையாகும்.
- இது தாடு சமூகத்தின் படி, புத்தாண்டுத் தொடக்கத்தின் போது கொண்டாடப் படுகிறது.




## ஃபசல் பீமா யோஜனா திட்டத்திற்கு தேசிய விருது

- நாட்டிலேயே பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா (PMFBY) திட்டத்தினைச் சிறப்பாக செயல்படுத்தியதற்காக வேண்டி கர்நாடகா மாநிலம் முதன்முறையாக இதில் தேசிய விருதைப் பெற்றுள்ளது.
- இம்மாநிலத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் பதிவான விவசாயிகளின் எண்ணிக்கை 47.74% அதிகரித்துள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பகுதிகளின் அளவு 41.80% அதிகரித்துள்ளது.
- பசல் பீமா யோஜனா திட்டத்தின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை மிக வெற்றிகரமாகச் செயல்படுத்தியதற்காக, புதுச்சேரி சிறிய மாநிலங்கள் பிரிவில் முதலிடத்தைப் பெற்று உள்ளது.



## வடகிழக்கு இந்தியாவின் மிகப்பெரிய பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம்

- மேகாலாயாவின் ஷில்லாங்கில் போலோ மைதானத்தில் உள்ள உள்விளையாட்டு அரங்கமானது ஒட்டு மொத்த வடகிழக்குப் பிராந்தியத்தின் மிகப்பெரியப் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கமாக விளங்கும்.
- JN விளையாட்டு வளாகத்தின் தரம் உயர்த்துதல், புதுப்பித்துதல் மற்றும் மேம்படுத்துதல் செயல்முறை நடந்து வருகிறது.
- புதுப்பிக்கப்பட்ட இந்த மைதானத்தில் இயற்கையான புல் தரையுடன் கூடிய கால்பந்து மைதானம் மற்றும் தடம் மற்றும் களம் சார்ந்தப் போட்டிகளை நடத்துவதற்கான அதி நவீன வசதியையும் கொண்டிருக்கும்.

## அடையாளம் தெரியாத உடல்களுக்கான DNA தரவுத் தளம்

- அடையாளம் தெரியாத உடல்களின் DNA தரவுத் தளத்தினை உருவாக்கிய "முதல் மாநிலமாக" இமாச்சலப் பிரதேசம் மாறியுள்ளது.
- கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இதற்கான செயல்முறைகள் தொடங்கப்பட்ட நிலையில் இது வரையில் அடையாளம் தெரியாத உடல்களின் 150 DNA மாதிரிகளின் பதிவுகள் இந்த தரவுத் தளத்தில் சேமிக்கப்பட்டுள்ளன.
- இதில் உடல்களை அடையாளம் காண்பது மற்றும் இறந்தவர்களுக்கான இறுதிச் சடங்குகள் போன்றவற்றைச் செய்வதற்கான ஒரு வாய்ப்பு குடும்ப உறுப்பினர்களுக்குக் கிடைக்கப் பெற உதவும்.
- மேலும், கொலை மற்றும் மரணத்திற்கு வழி வகுத்த பல்வேறு வழக்குகளில் உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கவும் இது உதவும்.



## மேற்கு வங்காளத்தின் புதிய பல்லுயிர் மையங்கள்

- மேற்கு வங்காளத்தில் நான்கு புதிய பல்லுயிர்ப் பாரம்பரியத் தளங்களை அந்த மாநில அரசு அறிவித்துள்ளது.
- இதன் மூலம், தற்போது மேற்கு வங்காளமானது நாட்டிலேயே அதிக அளவில் பல்லுயிர்ப் பாரம்பரியத் தளங்கள் உள்ள ஒரு மாநிலமாக உள்ளது.
- அந்த நான்கு புதிய தளங்கள்

- சார் பாலிடங்கா- நாடியா,
- மாநில தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலைய வளாகம் - நாடியா,
- டார்ஜிலிங்கில் உள்ள நாம்திங் போகர் மற்றும்
- பிர்பூமில் உள்ள ஆம்கோய் புதைபடிவப் பூங்கா.

❖ நாம்திங் போகரி என்பது இமயமலை சாலமண்டர் இனங்களின் தாயகமாகும்.

❖ ஆம்கோய் புதைபடிவப் பூங்காவானது மேற்கு வங்காளத்தில் உள்ள முதல் மரங்களின் புதைபடிவப் பூங்கா ஆகும்.

❖ மேற்கு வங்காளத்தில் தற்போதுள்ள அந்த நான்கு பல்லுயிர்ப் பாரம்பரியத் தளங்கள் : ஜார்கிராமில் உள்ள சில்கிகர் கனக் துர்கா, கூச் பெஹாரில் உள்ள பானேஸ்வர் ஷிவ் டிகி, டார்ஜீலிங்கில் உள்ள டோங்லு மற்றும் தோத்ரே ஆகியனவாகும்.

**Table 1.** The four biodiversity hotspots in India

| Biodiversity hotspots | Indian area |
|---|---|
| Himalaya | Eastern Himalaya – West Bengal, Sikkim, Assam, Arunachal Pradesh |
| | Western Himalaya – Kashmir |
| Western Ghats | Maharashtra, Goa, Karnataka, Kerala and Tamil Nadu |
| Indo-Burma | Andaman Islands and Meghalaya |
| Sundaland | Nicobar Island |

## இந்தியாவின் முதல் கனரகப் பளுதூக்கும் ஆளில்லா விமானம்



❖ மாநிலத்தின் இவ்வகையிலான முதலாவது தளவாடங்களுக்கான கனரகப் பளுதூக்கும் ஆளில்லா விமானத்தினை ஒடிசா மாநில முதல்வர் அறிமுகம் செய்தார்.

❖ இது ஒடிசாவில் நிறுவப் பட்டுள்ள 'BonV ஏரோ' எனப்படுகின்ற ஒரு புத்தொழில் நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டது.

❖ இது 50 கிலோ எடையினை 10 கி.மீ. தொலைவு வரை சுமந்து செல்லும் திறன் கொண்டது.

- இந்தப் புத்தொழில் நிறுவனமானது அதன் அடுத்த கட்ட மேம்பாட்டில், 200 கிலோகிராம் சரக்குகளை 40 கிலோமீட்டருக்கு மேலான தொலைவு வரை கொண்டு செல்லும் திறன் கொண்ட 'RM002' எனப்படும் அதன் முதன்மை வாகனத்தினை உருவாக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## அசாம்-அருணாச்சலப் பிரதேச எல்லைப் பிரச்சனை தொடர்பான ஒப்பந்தம்




- அசாம் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு இடையேயான 51 ஆண்டு கால எல்லைப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரச் செய்வதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) இரு மாநிலங்களும் கையெழுத்திட்டுள்ளன.
- அருணாச்சலப் பிரதேசத்தின் 12 மாவட்டங்களிலும், அசாமின் 8 மாவட்டங்களிலும் பரவி உள்ள 123 கிராமங்கள் தொடர்பாக இரு மாநிலங்களுக்கு இடையிலும் சர்ச்சை நிலவி வந்தது.
- 1972 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வந்த இந்த சர்ச்சை நிரந்தரமாக தீர்க்கப்பட்டது.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ், சர்ச்சைக்குரிய இந்த 123 கிராமங்கள் தொடர்பாக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த ஒப்பந்தம் இறுதியானது என்று இந்த இரு மாநிலங்களும் ஒப்புக் கொண்டுள்ளன.
- மேலும், எதிர்காலத்தில் எந்த ஒரு பகுதி அல்லது கிராமம் தொடர்பான புதிய உரிமைக் கோரல்களை இரு மாநிலங்களும் மேற்கொள்ளாது எனவும் ஒப்புக் கொண்டுள்ளன.
- அசாம் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் 804.1 கி.மீ. நீளம் கொண்ட ஒரு எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன.

## கொச்சி நீர்வழி மெட்ரோ

- இது மெட்ரோ ரயில் வலையமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்ட இந்தியாவின் முதல் பொதுப் படகுச் சேவை ஆகும்.
- இந்தத் திட்டத்தை கொச்சி மெட்ரோ ரயில் கழக நிறுவனம் (KMRL) செயல்படுத்துகிறது.
- இது மலபார் கடற்கரையினைச் சுற்றியுள்ள உள்ள 10 நகரத் தீவுகளை இணைக்கிறது.
- இந்தத் திட்டம் மொத்தம் 78 மின்சாரப் படகுகளுடன் 38 முனையங்களைக் கொண்டு உள்ளது.




## கேரளாவின் முதல் வந்தே பாரத் விரைவு ரயில்

- கேரளாவின் முதல் வந்தே பாரத் விரைவு ரயிலைத் திருவனந்தபுரத்தில் பிரதமர் கொடி அசைத்துத் தொடங்கி வைத்தார்.
- இது திருவனந்தபுரத்திலிருந்து வடக்கே காசர்கோடு மாவட்டம் வரை இணைக்கிறது.
- இது எட்டு மணி நேரத்தில் 586 கிமீ தூரத்தைக் கடக்கும்.



## நிழலற்ற நாள்

- ஏப்ரல் 25 அன்று பெங்களூரு நகரம் முழுவதும் நிழலற்ற நாளைக் கண்ணுற்றது.
- நிழலற்ற நாள் என்பது பூமியின் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நேரங்களில் நிகழும் ஒரு அரிய மற்றும் தனித்துவமான நிகழ்வு ஆகும்.
- இந்தக் குறுகிய காலத்தில் சூரியன் எந்தச் சாய்வும் இல்லாமல், நண்பகல் வேளையில் துல்லியமாக மேலே இருக்கும்.
- இது பெங்களூரு போன்ற கடகரேகைக்கும் மற்றும் மகரரேகைக்கும் இடைப்பட்ட இடங்களில் வருடத்திற்கு இரண்டு முறை நிகழும்.
- இதே போன்ற அடுத்த நிகழ்வு பெங்களூருவில் ஆகஸ்ட் 18 அன்று தெரியும்.




## இந்தூர் மாதிரி கழிவுச் சுத்திகரிப்பு

- இது இந்தூர் நகராட்சிக் கழகத்தால் (IMC) செயல்படுத்தப்பட்ட பரவலான, அங்கீகரிக்கப் பட்ட மற்றும் வெற்றிகரமான ஒரு கழிவு மேலாண்மை மாதிரியாகும்.
- நீடித்த முறையிலும் குறைந்தச் செலவிலும் ஈரமான கழிவுகளைச் சுத்திகரிக்கும் இது தூய்மையான ஆற்றலையும் உற்பத்தி செய்யும்.
- ஈரமான கரிமக் கழிவுகளை உயிரி முறையில் மெத்தனாலாக்கம் மூலம் சுத்திகரிக்கும் இது துணை விளைபொருளாக உயிரி அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயுவை உற்பத்தி செய்கிறது.



# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## இரும்பு மனிதர் கிருஷ்ண பிரகாஷ்

- 'நீரில் மூழ்குவதைத் தடுக்கும் விழிப்புணர்வு' பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, இந்தியக் காவல்பணி அதிகாரி கிருஷ்ண பிரகாஷ், மும்பையில் உள்ள இந்தியாவின் நுழைவு வாயில் (கேட்வே) முதல் எலிபெண்டா குகை பகுதி வரையிலான தொலைவினை நீந்தி கடந்தார்.
- இந்த 16.20 கிலோமீட்டர் தூரத்தை வெறும் 5 மணி 26 நிமிடங்களில் நிறைவு செய்து வரலாற்றில் இவ்வாறு செய்த முதல் நபர் என்ற சாதனையைப் படைத்தார்.
- 2017 ஆம் ஆண்டில், அவர் உலகின் மிகவும் சவாலான விளையாட்டு நிகழ்வுகளில் ஒன்றான அயர்ன்மேன் டிரையத்லானை நிறைவு செய்தார்.
- இந்தச் சாதனையானது பிரகாஷுக்கு 'இரும்பு மனிதன்' என்ற பட்டத்தையும் உலகச் சாதனைப் புத்தகத்தில் இடம் பெறும் வாய்ப்பினையும் பெற்றுத் தந்தது.
- இந்தப் பட்டத்தைப் பெற்ற முதல் இந்திய அரசுப் பணியாளர், குடிமைப் பணியாளர் மற்றும் சீருடைப் பணி அதிகாரி இவரே ஆவார்.




## கிளாட் லோரியஸ் - பருவநிலை அறிவியலின் முன்னோடி

- பனிப்பாறையியலின் ஒரு முன்னோடியான கிளாட் லோரியஸ் சமீபத்தில் காலம் ஆனார்.
- பருவநிலை மாற்றம் குறித்த ஆராய்ச்சிக்காக அவர் மிகவும் பிரபலமாக அறியப் பட்டவர் ஆவார்.
- 1956 ஆம் ஆண்டில், அவர் அண்டார்டிகாவிற்கான ஒரு ஆய்வுப் பயணத்தில் இணையச் செய்தார்.
- அண்டார்டிகாவில் அவர் மேற்கொண்ட ஆய்வுப் பணியானது புவி வெப்பமடைதலுக்கு மனிதர்களே ஒரு முக்கியக் காரணம் என்பதை நிரூபிக்க உதவியது.
- பனிக்கட்டியில் சிக்கிய காற்று குமிழ்கள் பற்றிய அவரது ஆராய்ச்சி அறிக்கையானது 1987 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- 2002 ஆம் ஆண்டில், அவரது சக ஊழியரான ஜீன் ஜோசெல் என்பவரோடுச் சேர்த்து அவருக்கு CNRS தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.
- புளூ பிளானட் பரிசைப் பெற்ற முதல் பிரெஞ்சு நாட்டுக் குடிமகன் இவரே ஆவார்.



## இன்டெல் நிறுவனத்தின் இணை நிறுவனர் கோர்டன் மூர்

- இன்டெல் நிறுவனத்தின் இணை நிறுவனர் கோர்டன் மூர் சமீபத்தில் காலமானார்.
- 1968 ஆம் ஆண்டில், அவரும் அவரதுப் பங்குதாரரான ராபர்ட் நொய்ஸ் (1990 ஆம் ஆண்டில் காலமானார்) ஆகியோரும் இணைந்து இன்டெல் கார்ப் நிறுவனத்தை நிறுவினார்.
- இவர் மூர்ஸ் விதி என்று அறியப்பட்ட விதியினை 1965 ஆம் ஆண்டில் முன்மொழிந்தார்.
- இவர் 1990 ஆம் ஆண்டில் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்திற்கான தேசியப் பதக்கத்தினைப் பெற்றார்.
- இவர் 2001 ஆம் ஆண்டில் வேதியியல் மற்றும் அறிவியலில் முன்னேற்றத்திற்கான அவரின் சிறந்தப் பங்களிப்புகளுக்காக ஒத்மெர் தங்கப் பதக்கத்தினை வென்றார்.
- 2009 ஆம் ஆண்டில், இவர் தேசியக் கண்டுபிடிப்பாளர்களுக்கான புகழ் மன்றத்தில் சேர்க்கப் பட்டார்.




## WSIS விருது 2023

- தகவல் சமூகம் குறித்த உலக உச்சி மாநாடு (WSIS) என்பது யுனெஸ்கோ, UNDP மற்றும் UNCTAD ஆகியவற்றுடன் இணைந்து சர்வதேசத் தொலைத்தொடர்பு ஒன்றியத்தால் ஒருங்கிணைக்கப் படும் ஒரு வருடாந்திர விருது வழங்கீட்டு நிகழ்வாகும்.

- இந்த நிகழ்வின் கருத்துரு, 'மீண்டும் எழுச்சிப் பெறுவதற்கான WSIS செயல் விதிகள் மற்றும் நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDGs) அடைவதைத் துரிதப்படுத்துதல்' என்பதாகும்.
- பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் (MoPR) மற்றும் தேசியத் தகவல் மையம் (NIC) ஆகியவை, அதன் இயங்கலைத் தணிக்கை மென்பொருள் திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டு WSIS மன்றத்தில் விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டுள்ளது.
- செயல்விதிகள் தகவல்தொடர்பு தொழில்நுட்பப் பயன்பாடுகள் பிரிவில் அதிக வாக்குகளைப் பெற்ற திட்டம் எனும் அடிப்படையிலான மின்னாளுகைப் பிரிவின் கீழ் இயங்கலைத் தணிக்கை முறைக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.
- இந்த மென்பொருள் பஞ்சாயத்து அமைப்புகளின் மூன்று நிலைகளிலும் உள்ள கணக்குகளின் நிதித் தணிக்கையை மேற்கொள்வதனை எளிதாக்குகிறது.




## நகர்ப்புறப் பருவநிலைத் திரைப்பட விழா

- தேசிய நகர்ப்புற விவகார நிறுவனம் (NIUA) ஆனது, U20 ஈடுபாட்டு நிகழ்வுகளின் கீழான, CITIIS திட்டத்தின் மூலம் முதலாவது நகர்ப்புறப் பருவநிலைத் திரை விழாவை ஏற்பாடு செய்கிறது.
- 9 நாடுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 11 திரைப்படங்கள் இந்த விழாவில் காட்சிப் படுத்தப் பட்டுள்ளன.
- தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தப் படங்கள் புது டெல்லி, மும்பை, பெங்களூரு, கொல்கத்தா மற்றும் அகமதாபாத் ஆகிய இடங்களில் அடுத்தடுத்த மாதங்களில் நடைபெறும் விழாக்களில் திரையிடப் படும்.
- இவை நகரங்களில் பருவநிலை மாற்றத்தின் தாக்கம் பற்றிய பரந்த விழிப்புணர்வை உருவாக்குவதையும், நிலையான நகர்ப்புற மேம்பாடு குறித்த பேச்சுவார்த்தையில் பொதுமக்களை ஈடுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.


## இரண்டாவது EMPOWER சந்திப்பு

- இரண்டாவது அதிகாரமளிப்பு (EMPOWER) சந்திப்பானது கேரளாவின் திருவனந்தபுரம் நகரில் நடைபெற்றது.
- இந்த சந்திப்பின் மீதான கருத்துரு, "பெண்களுக்கு அதிகாரமளித்தல்: சமபங்கு மற்றும் பொருளாதாரத்திற்கான சாதகமான சூழல்" என்பதாகும்.
- G20 அமைப்பின் அதிகாரமளிப்புச் சந்திப்பின் தொடக்கக் கூட்டம் ஆனது உத்தரப் பிரதேச மாநிலம் ஆக்ரா நகரில் நடைபெற்றது.
- EMPOWER என்பது பெண்களின் பொருளாதாரப் பிரதிநிதித்துவத்திற்கான அதிகாரம் அளித்தல் மற்றும் முன்னேற்றம் என்பதனைக் குறிக்கிறது.




## 2024 ஆம் ஆண்டு கேங்வான் ஒலிம்பிக் போட்டிகளுக்கான பதக்க வடிவமைப்பு

- 2024 ஆம் ஆண்டு கேங்வான் குளிர்கால இளையோர் ஒலிம்பிக் போட்டிகள் ஆனது தென் கொரியாவில் நடைபெறவுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு கேங்வான் ஒலிம்பிக் போட்டிகளுக்கான பதக்கங்களின் மீதான வடிவமைப்பு ஒரு பரந்த அளவிலான போட்டியின் மூலம் உருவாக்கப்பட்டது.
- பிரேசிலியக் கலைஞரான அகிரா உவை என்பவரின் 'A Sparkling Future' எனப்படும் ஒரு படைப்பானது நடுவர்கள் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டது.



## தண்ணீர் மற்றும் பாரம்பரியக் கேடயம்

- அரிசோனாவில் உள்ள புனித ஹோப்பி தளத்திற்கு ICOMOS அமைப்பின் தண்ணீர் மற்றும் பாரம்பரியக் கேடயம் (Water and Heritage Shield) ஆனது வழங்கப் பட்டுள்ளது.
- சிபாபு என்பது சுண்ணாம்புக் கல்லால் ஆன பாறைகளாலான முகடு மற்றும் லிட்டில் கொலராடோ ஆற்றில் அமைந்துள்ள ஒரு நீரூற்று ஆகும்.
- ஹோப்பி, நவாஜோ மற்றும் ஜூனி பழங்குடியினருக்கு இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.
- நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்களுக்கான ஒரு சர்வதேசக் குழுவின் சர்வதேச அறிவியல் குழுவால் இது வழங்கப்பட்டது.
- உலகெங்கிலும் உள்ள தண்ணீர் சார்ந்த மற்றும் பூர்வீகப் புனிதத் தலங்களின் முக்கியத்துவம், கலாச்சாரம் மற்றும் வரலாற்று நினைவுச் சேமிப்பு ஆகியவை தொடர்பான உரிமையை பொதுமக்கள் அறிந்து கொள்ள உதவுவதே இந்தக் கேடயம் வழங்கப் படுவதன் ஒரு நோக்கமாகும்.




## MCC வாழ்நாள் கௌரவ உறுப்பினர் அந்தஸ்து


- மரில்போன் கிரிக்கெட் குழுமமானது, சமீபத்தில் தனது கௌரவ வாழ்நாள் உறுப்பினர் அந்தஸ்துகளை வழங்கிய நபர்களின் பெயர்களை வெளியிட்டது.
- விளையாட்டுத் துறைக்காகப் பங்களித்தச் சிறந்த ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க குழுமம் கௌரவ உறுப்பினர் அந்தஸ்துகளை வழங்கச் செய்கிறது.

❖ இந்த உறுப்பினர்கள் பட்டியலில் இந்தியாவினைச் சேர்ந்த ஐந்து நபர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

❖ மகேந்திர சிங் தோனி, யுவராஜ் சிங், சுரேஷ் ரெய்னா, மிதாலி ராஜ் மற்றும் ஜூலன் கோஸ்வாமி ஆகியோர் இதில் இடம் பெற்றுள்ள வீரர்கள் ஆவர்.




## நாசாவின் நான்கு புதிய விண்வெளி வீரர்கள்





❖ 50 ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு, ஆர்ட்டெமிஸ்-2 என்பதன் மூலம் மனித குலத்தை மீண்டும் நிலவுக்கு அழைத்துச் செல்ல உள்ள நான்கு விண்வெளி வீரர்களின் பெயர்களை நாசா வெளியிட்டுள்ளது.

- கிறிஸ்டினா கோச் இந்தச் சந்திரப் பயணத்திற்கு நியமிக்கப் பட்டுள்ள முதல் பெண் விண்வெளி வீராங்கனை ஆவார்.
- இதில் விக்டர் க்ளோவர் முதல் கருப்பின விண்வெளி வீரர் ஆவார்.
- இதில் மற்ற இரண்டு விண்வெளி வீரர்கள் ரீட் வைஸ்மேன் மற்றும் ஜெர்மி ஹேன்சன் ஆகியோர் ஆவர்.

## நரேஷ் குப்தா

- முன்னாள் இந்திய ஆட்சிப் பணி அதிகாரி நரேஷ் குப்தா அவர்கள் சமீபத்தில் காலம் ஆனார்.
- இவர் 1998 மற்றும் 2000 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் தமிழ்நாட்டின் தலைமைத் தேர்தல் அதிகாரியாக (CEO) பணியாற்றினார்.
- இவர் 2001-02 ஆம் ஆண்டுகளில் உள்துறைச் செயலாளராக ஓராண்டு காலம் பணி ஆற்றினார்.
- 2002-05 ஆகிய ஆண்டுகளின் போது இவர் தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர் செயலாளராகவும் பணியாற்றினார்.
- இவர் மீண்டும் 2005 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் தலைமைத் தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.
- இவர் 2006 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் மற்றும் 2009 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்களின் போது இந்தப் பதவியினை வகித்தார்.



## அமெரிக்க நிதித்துறையில் மிகவும் செல்வாக்கு மிக்க 100 பெண்கள்

- அமெரிக்க நிதித்துறையில் மிகவும் செல்வாக்கு மிக்க 100 பெண்களின் பட்டியலில் ஐந்து இந்திய-அமெரிக்கப் பெண்கள் இடம் பிடித்துள்ளனர்.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த J.P. மோர்கன் நிறுவனத்தின் அனு அய்யங்கார், ஏரியல் இன்வெஸ்ட்மென்ட் நிறுவனத்தின் ரூபல் J. பன்சாலி, பிராங்க்ளின் டெம்பிள்டன் நிறுவனத்தின் சோனல் தேசாய், கோல்ட்மேன் சாச் நிறுவனத்தின் மீனா ஃப்ளைன் மற்றும் பாங்க் ஆஃப் அமெரிக்கா நிறுவனத்தின் சவிதா சுப்ரமணியன் ஆகியோர் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.



## கேசுப் மஹிந்திரா


- மஹிந்திரா குழுமத்தின் முன்னாள் தலைவர் கேசுப் மஹிந்திரா சமீபத்தில் காலம் ஆனார்.
- அவர் தலைவராக இருந்த காலத்தில், மஹிந்திரா குழுமம் வாகன உற்பத்தி நிறுவனம் எனும் நிலையிலிருந்து நிறுவனங்களின் ஒரு கூட்டமைப்பாக வளர்ந்தது.
- அவர் 1964 ஆம் ஆண்டில் இந்திய வாகன உற்பத்தியாளர்கள் சங்கத்தின் (SIAM) தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1984 ஆம் ஆண்டில் போபால் விஷவாயு விபத்து நடந்தபோது யூனியன் கார்பைடு இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாகத்தில் அல்லாத தலைவராகவும் பணியாற்றி உள்ளார்.



## இந்தியாவின் செல்வம் மிக்க முதல்வர்

- ஆந்திரப் பிரதேச முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி மொத்தம் 510 கோடி ரூபாய் சொத்து மதிப்புகளுடன் நாட்டின் பணக்கார (செல்வம் மிக்க) முதல்வர் ஆவார்.
- மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜியின் மொத்த சொத்து மதிப்பு சுமார் ரூ.15 லட்சம் ஆகும்.
- மிகக் குறைந்த சொத்துக்களைக் கொண்ட மூன்று முதல்வர்கள் - மேற்கு வங்காளத்தின் மம்தா பானர்ஜி (சுமார் ரூ. 15 லட்சம்), கேரளாவின் பினராயி விஜயன் (சுமார் ரூ. 1 கோடி) மற்றும் ஹரியானாவின் மனோகர் லால் (சுமார் ரூ. 1 கோடி) ஆகியோர் ஆவர்.

- இந்தியாவில் 28 மாநில முதல்வர்கள் உள்ளதோடு, டெல்லி மற்றும் புதுச்சேரி ஆகிய இரண்டு ஒன்றியப் பிரதேசங்களும் முதல்வர்களைக் கொண்டுள்ளன.
- ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தில் தற்போது முதல்வர் இல்லை.




## ஃபெமினா மிஸ் இந்தியா அழகிப் பட்டம் 2023

- 59வது ஃபெமினா மிஸ் இந்தியா அழகிப் போட்டியானது முதன்முறையாக மணிப்பூரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ராஜஸ்தான் மாநிலத்தினைச் சேர்ந்த நந்தினி குப்தா 2023 ஆம் ஆண்டு ஃபெமினா மிஸ் இந்தியா அழகிப் பட்டத்தினை வென்றார்.
- தற்போது, அவர் உலக அழகிப் போட்டியில் இந்தியா சார்பாக பங்கேற்க உள்ளார்.
- டெல்லியைச் சேர்ந்த ஸ்ரேயா பூஞ்சா இரண்டாமிடத்தினைப் பெற்றார்.
- மணிப்பூர் மாநிலத்தினைச் சேர்ந்த தூணோஜம் ஸ்ட்ரெலா லுவாங் என்பவர் இதில் மூன்றாவது இடத்தினைப் பெற்றார்.
- 71வது உலக அழகிப் போட்டியானது, இந்த ஆண்டு ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற உள்ளது.



## ராணி ரமாதேவி

- சமீபத்தில் ராணி ரமாதேவி தொண்டைமான் காலமானார்.
- இவரைப் புதுக்கோட்டை சமஸ்தானத்தின் 'ராஜமாதா' என்றும் அழைப்பர்.

- மறைந்த ராணி ரமாதேவி ராதாகிருஷ்ண தொண்டைமானின் மனைவி ஆவார்.
- இவர் புதுக்கோட்டை சமஸ்தானத்தின் கடைசி மன்னராக இருந்த ராஜ ராஜகோபால தொண்டைமானின் சகோதரர் ஆவார்.
- புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பல கோவில்களில் கும்பாபிஷேகம் நடத்தும் பல குழுக்களுக்கு ராணி தலைமை தாங்கி உள்ளார் .
- இவர் தமிழ்நாடு நீச்சல் சங்கத்தின் தலைவராகவும், கைப்பந்து சங்கத்தின் துணைத் தலைவராகவும், எல்ஜசி இயக்குநர் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.


## தேசியப் பஞ்சாயத்து விருதுகள் 2023

- கிராமப் புறங்களுக்கான மேம்பாட்டிற்கு ஒரு மாநில அரசின் முன்னெடுப்புகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் வழங்கப் படுகின்ற 2023 ஆம் ஆண்டு தேசியப் பஞ்சாயத்து விருதுகளின் பல்வேறு பிரிவுகளின் கீழ், தெலுங்கானா 13 விருதுகளைப் பெற்றது.
- இந்த 13 விருதுகளில், 2021-2022 ஆம் ஆண்டிற்கான தீன் தயாள் உபாத்யாய் பஞ்சாயத்து சதத் விகாஸ் புரஸ்கார் (DDUPSVP) கீழ், தெலுங்கானா எட்டு விருதுகளை வென்றுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு நானாஜி தேஷ்முக் சர்வோத்தம் பஞ்சாயத்து சதத் விகாஸ் புரஸ்கார் (NDSPSVP) விருதின் கீழ் தெலுங்கானா மாநிலத்திற்கு ஐந்து விருதுகள் வழங்கப் பட்டு உள்ளன.
- DDUPSVP என்பது தனிப்பட்ட கருத்துரு வாரியான செயல்திறனுக்கானது மற்றும் NDSPSVP என்பது அனைத்துக் கருத்துருவின் கீழான ஒட்டு மொத்தச் செயல்திறனுக்கானதாகும்.
- தேசியப் பஞ்சாயத்து விருதுகள் ஆனது நாடு முழுவதும் உள்ள சிறப்பாகச் செயல்படும் பஞ்சாயத்துகளுக்கு (உள்ளாட்சி அமைப்புகள்) விருது வழங்கி கௌரவிக்கின்றன.
- இந்த விருதுகள் முதன்முதலில் 2011 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு, அதன் பிறகு ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகின்றன.
- முந்தைய ஆண்டுகளில், இந்த விருதுகளில் ஒன்றியப் பிரதேசங்களுக்கென ஒரு சிறப்பு ஒதுக்கீடு இருந்தது.
- எனினும், இந்த ஆண்டு, ஒன்றியப் பிரதேசங்களுக்கென தனி ஒதுக்கீடு எதுவும் இல்லை.



## புள்ளியியல் துறைக்கான சர்வதேசப் பரிசு 2023

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரபலப் புள்ளியியல் நிபுணர் கலியம்புடி ராதா கிருஷ்ண ராவ் அவர்களுக்கு, 2023 ஆம் ஆண்டிற்கான புள்ளியியல் துறைக்கான சர்வ தேசப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- இது பெரும்பாலும் புள்ளியியல் துறையின் நோபல் பரிசு என்று குறிப்பிடப்படுகிறது.
- இந்தப் பரிசானது, ஐந்து முன்னணி சர்வதேசப் புள்ளியியல் நிறுவனங்களுக்கு இடையே உள்ள கூட்டமைப்பினால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை என்று வழங்கப் படுகிறது.
- கொல்கத்தாவில் உள்ள இந்தியப் புள்ளியியல் நிறுவனத்தின் கட்டமைப்பாளர்களில் ராவ் ஒருவர் ஆவார்.
- இவருக்கு 1968 ஆம் ஆண்டில் பத்ம பூசன் மற்றும் 2001 ஆம் ஆண்டில் பத்ம விபூஷன் ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன.
- ராவ் 1963 ஆம் ஆண்டில், S.S. பட்நாகர் பரிசினைப் பெற்றதோடு, இவர் 1967 ஆம் ஆண்டில் ராயல் சொசைட்டியின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



## சிறந்த சமூகத் தாக்கத்திற்கான விருது

- வாரணாசியில் அமைந்துள்ள பெக்கர்ஸ் கார்ப்பரேஷன் எனும் புத்தொழில் நிறுவனமானது, இன்னோபிரீனர்ஸ் உலகப் புத்தொழில் நிறுவனங்கள் போட்டியில் சிறந்த சமூகத் தாக்கத்திற்கான விருதினைப் பெற்றது.
- இந்தியாவில் நிலவும் இரவல் நிலை (பிச்சைத் தொழில்) சார்ந்த பிரச்சனையைத் தீர்க்கச் செய்வதற்கான அதன் புதுமை மிக்க வழிக்காக வேண்டி இந்தப் புத்தொழில் நிறுவனத்திற்கு இந்த அங்கீகாரமானது வழங்கப்பட்டுள்ளது.
- பெகர்ஸ் கார்ப்பரேஷன் என்ற நிறுவனமானது, இந்த நன்கொடைப் பணத்தைப் பயன்படுத்தி, இரவல் தொழில் செய்யும் நபர்களை வேலைவாய்ப்பினை உருவாக்கச் செய்பவர்களாக மாற்றி, அவர்களின் பல்வேறு செயல்திறன்களைப் புத்தொழில் நிறுவனங்களுக்காக உதவும் வகையில் மேம்படுத்த உள்ளது.
- அதிகபட்சமாக மேற்கு வங்காளத்தில் 85,000 பிச்சைக்காரர்கள் உள்ள நிலையில், அதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசத்தில் 65,835 பிச்சைக்காரர்கள் உள்ளனர்.
- பல்வேறு தரவுகளின்படி, இந்தியாவில் உள்ள 413,670 பிச்சைக்காரர்களுக்கு இந்தியர்கள் ஆண்டுதோறும் 34,242 கோடி ரூபாயினை நன்கொடையாக வழங்குகிறார்கள்.




## 2023 ஆம் ஆண்டின் மிகவும் செல்வாக்கு மிக்க 100 நபர்கள்

- 2023 ஆம் ஆண்டிற்கான TIME100 மதிப்பீட்டில், உலகின் மிகவும் செல்வாக்கு மிக்க நபர்களின் பட்டியலில் ஷாருக்கான் முதலிடம் பெற்றுள்ளார்.
- இரண்டாவது இடத்தில் தங்களது உரிமைகளுக்காகப் போராடும் ஈரானியப் பெண்கள் இடம் பெற்றுள்ளனர்.
- மூன்றாவது இடத்தில், 2020 ஆம் ஆண்டு முதல் பெருந்தொற்று காலங்களில் முன்களப் பணியாற்றி வரும் சுகாதாரப் பணியாளர்கள் இடம் பெற்றுள்ளனர்.
- இதில் இளவரசர் ஹாரி மற்றும் மேகன் மார்க்லே நான்காவது இடத்தினைப் பெற்று உள்ளனர்.
- இதில் லியோனல் மெஸ்ஸி ஐந்தாவது இடத்தினைப் பெற்றுள்ளார்.
- இந்திய நாட்டினைச் சேர்ந்த S.S. ராஜமௌலி, ஆலியா பட் மற்றும் தீபிகா படுகோனே ஆகியோரும் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.



## சந்தோக்பா மனிதநேய விருது

- லடாக்கின் மாணவர்கள் கல்வி மற்றும் கலாச்சார இயக்கத்தின் (SECMOL) நிறுவனர் மற்றும் இயக்குனர் சோனம் வாங்சுக்கிற்கு பெருமதிப்புமிக்க சாந்தோக்பா மனிதநேய விருதானது வழங்கப்பட்டுள்ளது.

- இவர் ஒரு புகழ்பெற்ற பொறியாளர், கண்டுபிடிப்பாளர், கல்வியாளர் மற்றும் நிலையான மேம்பாடு குறித்தச் சீர்திருத்தவாதி ஆவார்.
- இந்த விருதானது, ஒரு முன்னணி வைர கைவினை மற்றும் ஏற்றுமதி நிறுவனமான ஸ்ரீ ராம்கிருஷ்ணா எக்ஸ்போர்ட்ஸ் (SRK) மற்றும் அதன் தொண்டு நிறுவனப் பிரிவான ஸ்ரீ ராமகிருஷ்ணா அறிவுசார் அறக்கட்டளை (SRKKF) ஆகியவற்றின் முன்னெடுப்பாகும்.

## சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் கௌரவ நுழைவாயில்

- சச்சின் டெண்டுல்கரைக் கௌரவிக்கும் வகையில், ஆஸ்திரேலியாவில் உள்ள புகழ் மிக்க சிட்னி கிரிக்கெட் மைதானம் (SCG) அவரது பெயரில் ஒரு நுழைவாயிலை திறந்து உள்ளது.
- சிட்னி கிரிக்கெட் மைதான நிர்வாகமானது, மற்றொரு கிரிக்கெட் ஜாம்பவான் ஆன பிரையன் லாராவின் பெயரையும் இணைத்து இதில் இட்டுள்ளது.
- சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த நுழைவாயில்கள் முறையே டெண்டுல்கரின் 50வது பிறந்தநாளையும் லாரா, 277 என்ற அதிகபட்ச ஸ்கோரை அடித்ததன் 30வது ஆண்டு நிறைவையும் குறிக்கும் வகையில் திறக்கப் பட்டன.
- இந்தப் புதிய கௌரவத்தின் மூலம் இருவரும் புகழ்மிக்க டொனால்ட் பிராட்மேன், ஆலன் டேவிட்சன் மற்றும் ஆர்தர் மோரீஸ் ஆகியோர் அடங்கிய இந்தக் குழுவில் இணைய உள்ளனர்.




## வீரதீர விருது பெற்ற முதல் பெண் விமானப் படை அதிகாரி

- இந்திய விமானப்படையானது (IAF), அதன் விமானப் படைத் தலைமைப் பணியாளரான தீபிகா மிஸ்ராவுக்கு வாயு சேனா என்ற பதக்கத்தினை வழங்கியுள்ளது.
- இதன் மூலம், இந்த வீரதீர விருதினைப் பெற்ற முதல் பெண் விமானப்படை அதிகாரி என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- மத்தியப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் மேற்கொள்ளப் பட்ட வெள்ள நிவாரண நடவடிக்கைகளின் போது அவர் ஆற்றிய "மகத்தான பல்வேறு துணிவு மிக்க நடவடிக்கைகளுக்காக" இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.

- புது டெல்லியில் நடைபெற்ற விழாவில் வீரதீர விருது பெற்ற 58 பணியாளர்களில் இவரும் ஒருவர் ஆவார்.



## கோல்ட்மேன் சுற்றுச்சூழல் பரிசு

- 39 வயதான அலெஸாண்ட்ரா கோரப் முண்டுருகு என்பவருக்கு இந்த ஆண்டிற்கான கோல்ட்மேன் (தங்க மகன்) பரிசு வழங்கப் பட்டுள்ளது.
- இந்தப் பரிசு அடித்தளச் சமூக ஆர்வல இயக்கத்தினை அங்கீகரிக்கிறது.
- பிரேசிலின் பழங்குடியினமான முண்டுருகு என்ற ஒரு சமூகத்தைச் சேர்ந்த இந்தத் தலைவருக்கு அங்குள்ள அமேசான் மழைக்காடுகளில் சுரங்கப் பணிகள் மேற் கொள்வதற்கு எதிராக மேற்கொண்ட வெற்றிகரமான போராட்டத்தினை அங்கீகரித்து இந்த விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- இவ்வருடம் கோல்ட்மேன் சுற்றுச்சூழல் பரிசு பெற்ற மற்ற நபர்கள்:
    - பின்லாந்தைச் சேர்ந்த டெரோ மஸ்டோனென்,
    - இந்தோனேசியாவின் வடக்கு சுமத்ராவைச் சேர்ந்த படாக் இனப் பெண் டெலிமா சிலாலாஹி
    - ஜாம்பியாவின் சமூக ஆர்வலர் சிலேக்வா மும்பா
    - துருக்கியைச் சேர்ந்த ஜாஃபர் கிசில்காயா
    - அமெரிக்க இறால் படகுப் பிரிவுத் தலைவர் டயான் வில்சன்.



### மால்கம் ஆதிசேஷய்யா விருது 2023

- ❖ 2023 ஆம் ஆண்டின் மால்கம் ஆதிசேஷய்யா என்ற விருதுக்குப் பிரபலப் பொருளாதார நிபுணரான உத்சா பட்நாயக் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ❖ இந்த விருது ஒவ்வொரு ஆண்டும் மால்கம் & எலிசபெத் ஆதிசேஷய்யா என்ற அறக் கட்டளையால் வழங்கப்படுகிறது.
- ❖ தேசிய அளவிலான சிறந்தச் சமூக நல அறிஞர் மற்றும் விஞ்ஞானிகளுக்கு இந்த விருது வழங்கப் படுகிறது.



## விளையாட்டுச் செய்திகள்

### உலக மகளிர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி 2023

- ❖ புது டெல்லியில் நடைபெற்ற சர்வதேசக் குத்துச்சண்டைக் கூட்டமைப்பின் 13வது உலக மகளிர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் (2023) இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.
- ❖ நான்கு இந்திய மகளிர் குத்துச்சண்டை வீராங்கனைகள் வெவ்வேறு எடைப் பிரிவுகளில் தங்கப் பதக்கங்களைப் பெற்றதுடன் இந்தப் போட்டி நிறைவடைந்தது.
- ❖ இது சர்வதேசக் குத்துச்சண்டைக் கூட்டமைப்பினால் (IBA) ஏற்பாடு செய்யப்பட்டது.

| Event | Gold | Silver |
|---|---|---|
| Minimum weight | Nitu Ghanghas - India | Lutsaikhany Altantsetseg- Mongolia |
| Light flyweight | Nikhat Zareen - India | Nguyễn Thị Tâm - Vietnam |
| Flyweight | Wu Yu - China | Sirine Charaabi - Italy |
| Bantam weight | Huang Hsiao-wen - Chinese Taipei | Yeni Arias- Colombia |
| Feather weight | Irma Testa - Italy | Karina Ibragimova - Kazakhstan |
| Light weight | Beatriz Ferreira - Brazil | Angie Valdés - Colombia |
| Light welter weight | Yang Chengyu - China | Nataliya Sychugova - Russia |
| Welter weight | Yang Liu - China | Janjaem Suwannapheng - Thailand |
| Light middle weight | Anastasiia Demurchian - Russia | Kaye Scott - Australia |
| Middle weight | Lovlina Borgohain- India | Caitlin Parker- Australia |
| Light heavy weight | Saweety Boora - India | Wang Lina - China |
| Heavy weight | Khadija El-Mardi | Lazzat Kungeibayeva |

## 4வது ஆசிய கோ-கோ போட்டி

- 4வது ஆசிய கோ-கோ சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் ஆனது பட்டங்களை வென்றன.
- இதன் இறுதிப் போட்டியில், இந்திய ஆடவர் அணி நேபாள அணியினை வீழ்த்தியது.
- மகளிருக்கான அரையிறுதிப் போட்டியில் இந்திய அணி வங்காளதேச அணியினை வீழ்த்தியது.
- ஆடவர் மற்றும் மகளிர் ஆகிய இரு பிரிவுகளிலும், மூன்றாவது இடத்தினை வங்காள தேசம் மற்றும் இலங்கை ஆகிய அணிகள் பகிர்ந்து கொண்டன.
- இந்திய கோ-கோ கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போட்டியினை அசாம் கோ-கோ சங்கம் நடத்தியது.

## ISSF உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டி

- இந்தியத் துப்பாக்கி சுடுதல் வீரர்கள் எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்ற போட்டியில் 4 தங்கம் மற்றும் 3 வெண்கலம் ஆகியவற்றுடன் கத்தாரின் தோஹாவில் நடைபெற்ற போட்டியில் ஒரு வெண்கலப் பதக்கத்தினையும் வென்றுள்ளனர்.
- போபாலில் நடைபெற்ற ஒரு போட்டியில் இந்திய அணி 1 தங்கம், 1 வெள்ளி மற்றும் 5 வெண்கலப் பதக்கங்களை வென்றது.
- இதன் மூலம், 2023 ஆம் ஆண்டு ISSF துப்பாக்கி சுடுதல் உலகக் கோப்பைப் போட்டியில் இந்திய வீரர்கள் பெற்ற ஒட்டுமொத்தப் பதக்கங்களின் எண்ணிக்கை 15 என்ற அளவில் உயர்ந்துள்ளது.

| Shooter(s) | Event | Medal |
|---|---|---|
| Sarabjot Singh | Men's 10m Air Pistol | Gold |
| Rhythm Sangwan & Varun Tomar | Mixed Team 10m Air Pistol | Silver |
| Varun Tomar | Men's 10m Air Pistol | Bronze |
| Narmada Raju & Rudrankksh Patil | Mixed Team 10m Air Rifle | Bronze |
| Rudrankksh Patil | Men's 10m Air Rifle | Bronze |
| Manu Bhaker | Women's 25m Pistol | Bronze |
| Sift Kaur Samra | Women's 50m Rifle 3 Positions | Bronze |

## உலக மகளிர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி

- இந்திய மகளிர் குத்துச்சண்டை வீராங்கனைகள், IBA உலக மகளிர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் நான்கு தங்கப் பதக்கங்களை வென்று மீண்டும் வரலாறு படைத்துள்ளனர்.
- நிது கங்காஸ் (48 கிலோ எடைப் பிரிவு), நிகத் ஜரீன் (50 கிலோ எடைப்பிரிவு), லோவ்லினா போர்கோஹைன் (75 கிலோ எடைப் பிரிவு), சவீதி பூரா (81 கிலோ எடைப் பிரிவு) ஆகியோர் தங்கம் வென்றனர்.
- சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கப் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் இடம் பெற்றது.

- உலக மகளிர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா நான்கு தங்கப் பதக்கங்களை வென்றது வரலாற்றில் இது இரண்டாவது முறையாகும்.
- 2006 ஆம் ஆண்டில் மேரி கோம், சரிதா தேவி, ஜென்னி லால்ரெம்லியானி மற்றும் K.C. லேகா ஆகியோர் தங்கம் வென்றனர்.



## FIFA உலகக் கோப்பை நடத்தும் நாடுகள்



- 17 வயதிற்குட்பட்டோருக்கான 2023 ஆம் ஆண்டு FIFA உலகக் கோப்பை போட்டியினை நடத்துவதற்காக பெருவிற்கு வழங்கப்பட்ட உரிமையை FIFA திரும்பப் பெற்றுள்ளது.
- இந்த ஆண்டின் இறுதியில் அந்தப் போட்டியை நடத்த அந்நாடு தயாராக இல்லை.
- இந்தப் போட்டிகள் 2023 ஆம் ஆண்டு நவம்பர் 10 முதல் டிசம்பர் 02 ஆம் தேதி வரை நடை பெற உள்ளன.
- முன்னதாக, 20 வயதிற்குட்பட்டோருக்கான 2023 ஆம் ஆண்டு FIFA உலகக் கோப்பைப் போட்டியினை நடத்துவதற்கான இந்தோனேசியாவின் உரிமத்தினையும் FIFA ரத்து செய்தது.
- இஸ்ரேல் இந்தப் போட்டியில் பங்கேற்பதற்கு இந்தோனேசிய அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவித்ததே இதற்குக் காரணமாகும்.
- மே 20 முதல் ஜூன் 11 ஆம் தேதி வரை மொத்தம் 24 அணிகள் இப்போட்டியில் பங்கு பெறத் திட்டமிடப் பட்டது.
- இப்போட்டியில் பங்கு பெற இஸ்ரேல் முதல் முறையாகத் தகுதி பெற்றுள்ளது.

- FIFA அமைப்பானது 2021 ஆம் ஆண்டுகளுக்குரியப் போட்டிகளை நடத்துவதற்குப் பெரு மற்றும் இந்தோனேஷியா ஆகிய இரண்டு நாடுகளையும் 2019 ஆம் ஆண்டில் தேர்ந்து எடுத்தது.
- கொரோனா வைரஸ் பெருந்தொற்று காரணமாக இரண்டு நாடுகளும் போட்டிகளை நடத்துவதைத் தாமதமாக்கியுள்ளன.

## ஆசிய மல்யுத்தச் சாம்பியன்ஷிப் போட்டி

- கஜகஸ்தானின் அஸ்தானாவில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டு ஆசிய மல்யுத்தச் சாம்பியன்ஷிப் போட்டி 36வது ஒருங்கிணைந்த ஆசிய மல்யுத்தச் சாம்பியன்ஷிப் போட்டியாகும்.
- இந்திய வீரர்கள் 1 தங்கம், 3 வெள்ளி மற்றும் 10 வெண்கலப் பதக்கங்களுடன் இந்தப் போட்டியில் தங்களது பங்கேற்பினை நிறைவு செய்தனர்.

| Name | Category | Medal |
|---|---|---|
| **Aman Sehrawat** | Men's 57kg freestyle | Gold |
| **Rupin** | Greco-Roman 55kg | Silver |
| **Antim Panghal** | women's 53kg freestyle | Silver |
| **Nisha Dahiya** | women's 68 kg freestyle | Silver |
| **Neeraj Chikara** | Greco-Roman 63kg | Bronze |
| **Sunil Kumar** | Greco-Roman 87kg | Bronze |
| **Anirudh Kumar** | Men's 125kg freestyle | Bronze |
| **Deepak** | Men's 79kg freestyle | Bronze |
| **Vikas** | Greco-Roman 72kg | Bronze |
| **Anshu Malik** | Women's 57kg freestyle | Bronze |
| **Sonam Malik** | Women's 62kg freestyle | Bronze |
| **Manisha** | Women's 65kg freestyle | Bronze |
| **Reetika Hooda** | Women's 72kg freestyle | Bronze |
| **Priya** | Women's 76kg freestyle | Bronze |

## ஹீரோ இன்டர்காண்டினென்டல் கோப்பை 2023

- ஹீரோ இன்டர்காண்டினென்டல் கோப்பை - 2023 கால்பந்துப் போட்டியானது, ஜூன் மாதத்தில் புவனேஸ்வர் நகரில் நடைபெற உள்ளது.
- இந்தப் போட்டியில் இந்திய அணி லெபனான், மங்கோலியா மற்றும் வனுவாட்டு ஆகிய அணிகளுடன் போட்டியிட உள்ளது.
- இந்திய தேசிய ஆடவர் அணியானது, இதற்கு முன்பு மங்கோலியா மற்றும் வனுவாட்டு ஆகிய அணிகளுக்கு எதிராகப் போட்டியிட்டதில்லை.
- ஆனால் லெபனான் அணிக்கு எதிராக இந்தியா ஆறு போட்டிகளில் பங்கேற்றுள்ளது.
- இது இந்தியாவில் நடைபெறும் மூன்றாவது ஹீரோ இன்டர்காண்டினென்டல் கோப்பை போட்டியாகும்.
- இதன் முந்தைய இரண்டு போட்டிகள் மும்பை (2018) மற்றும் அகமதாபாத் (2019) ஆகிய இடங்களில் நடைபெற்றன.




.

## விஸ்டன் அல்மனாக் பதிவேட்டில் இடம் பெற்ற கிரிக்கெட் வீரர்கள்

- ❖ கிரிக்கெட் உலகின் வேதாகமமாக கருதப்படும் விஸ்டன் அல்மனாக் பதிவேட்டின் முன்னணி T20I கிரிக்கெட் வீரர் என்ற பெருமையை சூர்யகுமார் பெற்றார்.
- ❖ இந்த ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர் என்ற பட்டத்தினை வென்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையை ஹர்மன்பிரீத் கௌர் பெற்றார்.
- ❖ 2023 ஆம் ஆண்டு விஸ்டன் கிரிக்கெட் வீரர்களுக்கான அல்மனாக் பதிவேட்டில் இடம் பெற்ற ஆண்டின் சிறந்த ஐந்து கிரிக்கெட் வீரர்களில் இவரும் ஒருவர் ஆவார்.



## இலண்டன் மாரத்தான்

- ❖ கென்ய நாட்டினைச் சேர்ந்த கெல்வின் கிப்டம், வரலாற்றிலேயே இரண்டாவது அதிவேக நேரம் என்ற ஒரு சாதனையினைக் கடந்து இலண்டன் மராத்தான் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.
- ❖ கெல்வின் 2 மணி நேரம், 1 நிமிடம், 25 வினாடிகள் என்ற நேரத்தில் கடந்து பெரும் சாதனையினைப் படைத்துள்ளார்.
- ❖ எலியுட் கிப்சோஜ் படைத்த உலகச் சாதனையை முறியடிக்கும் வாய்ப்பினை அவர் 16 வினாடிகள் வித்தியாசத்தில் தவறவிட்டார்.

- இதில் பெண்களுக்கான பந்தயத்தில் சிஃபான் ஹசன் வெற்றி பெற்றார்.
- ஹாசன், 2021 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் 5,000 மீ மற்றும் 10,000 மீ பந்தயங்களில் வெற்றி பெற்றுள்ளார்.




# முக்கிய தினங்கள்

## உலகளாவிய ஏற்புத் தினம் - மார்ச் 28

- இந்த ஆண்டு உலக ஏற்புத் தினமானது முதன் முறையாக உலகம் முழுவதும் கொண்டாடப் படுகிறது.
- உலக ஏற்பு (UA) என்பது எழுத்து வடிவம், மொழி அல்லது எழுத்து நீளத்தைப் பொருட் படுத்தாமல் அனைத்துத் தகுதிகளையும் பெற்ற ஊடகப் பெயர்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரிகளை உறுதி செய்யும் ஒரு தொழில்நுட்ப அம்சமாகும்.
- இதனை அனைத்து இணையம் மூலம் இயக்கப்படும் செயலிகள், சாதனங்கள் மற்றும் அமைப்புகளால் பொதுவாகப் பயன்படுத்த முடியும்.
- UA குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதற்காகவும், முக்கியப் பங்குதாரர்கள் மத்தியில் UA ஏற்பினை ஊக்குவிப்பதற்காகவும் உள்நாட்டு, பிராந்திய மற்றும் உலகளாவியச் சமூகங்கள் மற்றும் நிறுவனங்களை ஒன்று திரட்டுவதற்கான வாய்ப்பை இந்த தினம் வழங்குகிறது.

## ராஜஸ்தான் தினம் - மார்ச் 30

- 1949 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் தேதியன்று ஜோத்பூர், ஜெய்ப்பூர், ஜெய்சால்மர் மற்றும் பிகானிர் ஆகிய சில சமஸ்தானங்கள் ஒன்றிணைக்கப்பட்டு 'மாபெரும் ராஜஸ்தான் ஒன்றியம்' ஆக மாறியது.
- 1949 ஆம் ஆண்டு மே 15 ஆம் தேதியன்று மத்ஸ்ய ஒன்றியமானது மாபெரும் ராஜஸ்தான் ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டு ஒற்றை மற்றும் ஒருங்கிணைந்த ராஜஸ்தான் மாநிலத்தினை உருவாக்கியது.
- 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று மாநில மறுசீரமைப்புச் சட்டமானது ராஜஸ்தான் மாநிலத்தில் ஒரு சில சிறிய மாற்றங்களைக் கொண்டு வந்தது.




## இந்திய ரிசர்வ் வங்கியின் நிறுவன தினம் - ஏப்ரல் 01




- இந்திய ரிசர்வ் வங்கியானது 1935 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று நிறுவப் பட்டது.
- இந்திய மத்திய வங்கியானது 1934 ஆம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் படி நிறுவப் பட்டது.
- இது நாட்டின் பணவியல் கொள்கையை ஒழுங்குபடுத்துவதற்கும், நாட்டின் நாணயம் மற்றும் கடன்முறையை வெகுவாக நிர்வகிப்பதற்குமான பொறுப்பினைக் கொண்ட ஒரு நிறுவனம் ஆகும்.

- இந்திய ரிசர்வ் வங்கியானது அரசாங்கத்தின் வங்கியாளராகச் செயல்படுவதோடு, அது பணத் தாள்களை வெளியிடுதல், அந்நியச் செலாவணி இருப்புக்களை மேலாண்மை செய்தல் மற்றும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்தல் போன்றப் பல்வேறு பணிகளையும் செய்கிறது.
- ஒரு நிதியமைப்பின் உறுதித் தன்மையைப் பராமரிக்கச் செய்வதிலும் பொருளாதார மேம்பாட்டினை ஊக்குவிப்பதிலும் இது முக்கியப் பங்கு வகிக்கிறது.


## ஒடிசா மாநில நிறுவன தினம் - ஏப்ரல் 01

- 1936 ஆம் ஆண்டில், மொழிவாரி அடிப்படையில் உருவாக்கப்பட்ட முதல் மாநிலம் இது ஆகும்.
- சர் ஜான் ஹப்பக் என்பவர் இந்த மாநிலத்தின் முதல் ஆளுநராக இருந்தார்.
- முன்னதாக, இது பீகாரின் ஒரு பகுதியாக இருந்தது.
- 1936 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று ஒடிசா மாநிலம் தனி மாகாணமாக மாறியது.
- இந்த மாநிலம் முதலில் ஒரிசா என்று அழைக்கப்பட்டது.
- பாராளுமன்றமானது 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒரிசா மசோதா மற்றும் 96வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் ஆகியவற்றினை இயற்றி, இதன் பெயரினை ஒடிசா என மாற்றியது.




## சர்வதேசக் குழந்தைகள் புத்தக தினம் - ஏப்ரல் 02

- 1967 ஆம் ஆண்டு முதல், குழந்தைகள் மத்தியில் வாசிக்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கச் செய்யவும், குழந்தைகளுக்கான புத்தகங்கள் மீதான ஒரு கவனத்தினை ஈர்க்கச் செய்யவும் வேண்டி இத்தினமானது கொண்டாடப் படுகிறது.
- ஏப்ரல் 02 ஆம் தேதியானது, செவ்வியல் குழந்தைகள் புத்தக ஆசிரியர் ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சனின் பிறந்த நாள் ஆகும்.
- ஒவ்வோர் ஆண்டும் இந்தத் தினத்தினை ஏற்று நடத்தும் நாடுகள் சுழற்சி முறையில் மாறும்.
- 2023 ஆம் ஆண்டு சர்வதேசக் குழந்தைகள் புத்தகத் தினத்தினை கிரீஸ் நாடு ஏற்று நடத்துகிறது.




## உலக மதியிறுக்கக் குறைபாடு குறித்த விழிப்புணர்வு தினம் - ஏப்ரல் 02

- மதியிறுக்கக் குறைபாடு கொண்ட நபர்களை ஆதரிக்கச் செய்வதன் ஒரு முக்கியத் துவத்தை வலியுறுத்தவும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டானது பதினாறாவது வருடாந்திர உலக மதியிறுக்கக் குறைபாடு குறித்த விழிப்புணர்வுத் தினமாகும்.
- மதியிறுக்கக் குறைபாடு என்பது தொடர் நடத்தைகள், வார்த்தைகளற்ற உரையாடல் மற்றும் சமூகம் சார்ந்த திறன் போன்ற பல்வேறு சவால்கள் நிறைந்ததாக வகைப் படுத்தப் படும் ஒரு பரந்த அளவிலான நிலைமைகளைக் குறிக்கிறது.
- "Light It Up Blue" என்பது இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துருவாகும்.

## பார்வைத் திறனிழப்புத் தடுப்பு வாரம் 2023 - ஏப்ரல் 01/07

- இந்திய அரசானது, பார்வைத் திறனிழப்பிற்கான காரணங்கள் மற்றும் தடுப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 01 முதல் 07 ஆம் தேதி வரை பார்வைத் திறனிழப்புத் தடுப்பு வாரத்தினை அனுசரிக்கிறது.
- இந்த வருடாந்திர நிகழ்வானது, பார்வைக் குறைபாடுகள் உள்ள நபர்களுக்கு ஆதரவு அளித்தல் மற்றும் கண் பராமரிப்பு நலச் சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்தச் செய்தல் ஆகியவற்றினை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பண்டிட் ஜவஹர்லால் நேரு மற்றும் இந்தியாவின் முதல் சுகாதார அமைச்சரான ராஜ் குமாரி அம்ரித் கவுர் ஆகியோர் தேசியப் பார்வைத் திறனிழப்புத் தடுப்பு சங்கத்தினை நிறுவினர்.
- ஒரு வார கால அளவிலான இந்த அனுசரிப்பு நிகழ்வானது 1960 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.




## கண்ணி வெடிகள் குறித்த விழிப்புணர்விற்கான சர்வதேச தினம் - ஏப்ரல் 04

- இது வெடிக்கும் அபாயங்கள் உள்ள கண்ணி வெடிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் அவற்றை ஒழிப்பதற்கான உதவிகளை ஒன்று திரட்டுதல் ஆகியவற்றினை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கண்ணி வெடிகள் நடவடிக்கைச் சமூகம் ஆனது கண்ணி வெடிகளுக்கு எதிராக நிர்ணயிக்கப் பட்ட இலக்குகளை அடைவதில் குறிப்பிடத்தக்கப் பங்கை வகிக்கிறது.
- இது ஐக்கிய நாடுகளின் கண்ணி வெடிகளுக்கு எதிரான நடவடிக்கைச் சேவை (UNMAS) தலைமையில் வழி நடத்தப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Mine Action Cannot Wait" என்பதாகும்.
- 1997 ஆம் ஆண்டில், மனிதர்களுக்கு எதிரான கண்ணி வெடிகள் தடைச் சட்டம் நிறுவப் பட்டது.
- இது கண்ணி வெடிகளுக்கு எதிரான முதல் பிரச்சாரத்தினை முன்வைத்தது.
- மேலும், அதைத் தொடர்ந்து 164 நாடுகள் அதனை அங்கீகரித்துள்ளன.

## தேசியக் கடல்சார் தினம் - ஏப்ரல் 05

- இந்தத் தினமானது, SS லாயல்டி எனப்படும் முதலாவது இந்திய வணிகக் கப்பலின் பயணத்தை நினைவு கூரும் வகையில் அனுசரிக்கப் படுகிறது.
- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம் ஆனது 1964 ஆம் ஆண்டில் இந்தத் தினத்தினை அனுசரிக்கத் தொடங்கியது.
- இந்த ஆண்டு 60வது தேசியக் கடல்சார் தினம் கொண்டாடப்படுகிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான தேசியக் கடல்சார் வாரத்தின் கருத்துரு என்பது, 'கப்பல் போக்குவரத்தில் அமிர்த காலம்' ஆகும்.

## சர்வதேச மனசாட்சி தினம் - ஏப்ரல் 05

- மனசாட்சி என்பது ஒரு நபரின் எது சரி மற்றும் எது தவறு என்பதை வேறுபடுத்தி அறியும் திறன் ஆகும்.
- இது நியூயார்க் நகரில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையில் 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 05 ஆம் தேதியன்று, உலக அமைதி மற்றும் அன்பு கூட்டமைப்பினால் (FOWPAL) தொடங்கப் பட்டது.
- பஹ்ரைன் நாடானது "அன்பு மற்றும் மனசாட்சியுடனான அமைதிக் கலாச்சாரத்தை மேம்படுத்துதல்" என்ற தலைப்பில் ஒரு வரைவுத் தீர்மானத்தைச் சமர்ப்பித்தது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'அமைதிக் கலாச்சாரத்தைக் கட்டி எழுப்புதல்' என்பதாகும்.




## மேம்பாடு மற்றும் அமைதிக்கான சர்வதேச விளையாட்டுத் தினம் - ஏப்ரல் 06

- இந்தத் தினமானது 1896 ஆம் ஆண்டில் ஏதென்ஸ் நகரில் முதலாவது நவீன கால ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கப் பட்டதனைக் குறிக்கிறது.
- சமூக மாற்றத்தைக் கொண்டு வருவதற்கும் அமைதி மற்றும் புரிதலை வளர்ப்பதற்கும் ஒரு செயற்கருவியாக விளையாட்டுகளைக் கொண்டாடுவதனை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Scoring for People and the Planet' என்பது ஆகும்.




## உலக சுகாதார தினம் - ஏப்ரல் 07

- 1948 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பு நிறுவப்பட்டதை இந்தத் தினம் நினைவு கூருகிறது.
- இந்த ஆண்டு உலக சுகாதார அமைப்பு தனது 75வது ஆண்டு நிறைவைக் கொண்டாடச் செய்கிறது.
- 1945 ஏப்ரல் மாதத்தில், ஐக்கிய நாடுகள் சபையை நிறுவுவதற்காக உலகெங்கிலும் உள்ள அரசியல்வாதிகள் சான் பிரான்சிஸ்கோ நகரில் ஒன்று கூடினர்.
- இந்தக் கூட்டத்தில், பிரேசில் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் தலைவர்கள் உலக நாடுகளின் சுகாதார நலனுக்காக வேண்டிப் பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப்பட்ட ஓர் உலகளாவிய அமைப்பினை உருவாக்க வேண்டும் என்று பரிந்துரைத்தனர்.
- இந்த அமைப்பின் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் அமைந்துள்ளது.
- இது உலகம் முழுவதும் ஆறு பிராந்திய மற்றும் 150 நாடு சார்ந்த அலுவலகங்களைக் கொண்டுள்ளது.
- இது 75வது ஆண்டு விழா என்பதால், "அனைவருக்குமான சுகாதார நலம்" என்ற ஒரு கருத்துருவினை உலக சுகாதார அமைப்பானது தேர்ந்தெடுத்துள்ளது.




## உலக ஹோமியோபதி தினம் - ஏப்ரல் 10





- இந்த நாள் ஹோமியோபதி மற்றும் மருத்துவ உலகில் அதன் பங்களிப்பிற்காகப் பாராட்டு செலுத்துகிறது.

- ❖ மருத்துவத்தின் ஒரு வடிவமாக உள்ள ஹோமியோபதியைப் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதையும், அதன் வெற்றி விகிதத்தை மிகவும் மேம்படுத்தச் செய்வதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்த நாள் ஜெர்மன் நாட்டு மருத்துவர் கிறிஸ்டியன் ஃபிரெட்ரிக் சாமுவேல் ஹானிமன் என்பவரின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- ❖ இவர் ஹோமியோபதியை நிறுவியவராக கருதப் படுகிறார்.
- ❖ 2023 ஆம் ஆண்டின் கருத்துரு : "ஒரு ஆரோக்கியம், ஒரு குடும்பம்" என்பதாகும்.

## 1994 ஆம் ஆண்டு ருவாண்டா இனப்படுகொலையின் சர்வதேசப் பிரதிபலிப்பு தினம் - ஏப்ரல் 07

- ❖ 2003 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் இந்தத் தினமானது நிறுவப் பட்டது.
- ❖ ஏப்ரல் 07 ஆம் தேதியானது 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற ஹூட்டுஸ் இனத்தவர் மேற் கொண்ட இனப் படுகொலையின் தொடக்கத்தைக் குறிக்கிறது.
- ❖ இது 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை 100 நாட்கள் நீடித்தது.
- ❖ இந்த 100 நாட்களில் ருவாண்டாவில் சுமார் 800,000 டுட்சி இனத்தவர் படுகொலை செய்யப் பட்டனர்.




## சர்வதேச ரோமானிய தினம் - ஏப்ரல் 08

- இது ரோமானியக் கலாச்சாரம், வரலாறு மற்றும் மொழி ஆகியவற்றைக் கொண்டாடச் செய்வதையும், ரோமானிய மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 1971 ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் இலண்டன் அருகே உள்ள ஓர்பிங்டன் என்னும் இடத்தில் நடைபெற்ற முதல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உலக ரோமானிய மாநாட்டினை நினைவு கூருகிறது.
- இது உலகத் தேவாலயச் சபை மற்றும் இந்திய அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டது.

## மத்திய சேமக் காவல் படை வல்லமை தினம் - ஏப்ரல் 09

- மத்திய சேமக் காவல் படை (CRPF) வீரர்களின் வீரம் மற்றும் தன்னலமற்றத் தியாகத்திற்கு இந்தத் தினம் கௌரவம் அளிக்கிறது.
- இது 1965 ஆம் ஆண்டில் மத்திய சேமக் காவல் படை மற்றும் பாகிஸ்தான் படையினருக்கு இடையே நடைபெற்ற ஒரு முக்கியப் போரின் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- மத்திய சேமக் காவல் படையின் சிறிய குழு ஒன்று எதிரிகளுடன் சண்டையிட்டு சுமார் 34 பாகிஸ்தான் வீரர்களைக் கொன்றது.
- 1939 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் தேதியன்று, மத்திய சேமக் காவல் படையானது அரசப் பிரதிநிதியின் காவல்துறையாக நடைமுறைக்கு வந்தது.
- இந்தியச் சுதந்திரத்திற்குப் பிறகு, 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் தேதியன்று, மத்திய சேமக் காவல் படைச் சட்டம் இயற்றப்பட்டதன் மூலம் இது மத்திய சேமக் காவல் படையாக மாறியது.




## தேசிய பாதுகாப்பான தாய்மை தினம் - ஏப்ரல் 11

- இந்த நாள் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் மனைவியான கஸ்தூர்பா காந்தியின் பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் கொண்டாடப் படுகிறது.
- இது தாய்வழி ஆரோக்கியத்தை மேம்படுத்தச் செய்வதையும் மற்றும் நாட்டில்

தாய்மார்களின் இறப்பு விகிதங்களைக் குறைப்பதையும் கொண்டாடுகிறது.

- இந்த நாள் இந்திய வெள்ளை ரிப்பன் கூட்டணியால் (WRAI) தொடங்கப்பட்டது.
- இது 2003 ஆம் ஆண்டில் இந்திய அரசால் அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு "தாய்மை என்பது கடவுளின் ஆசீர்வாதம்" என்பதாகும்.

## சர்வதேச மனித விண்வெளிப் பயண தினம் - ஏப்ரல் 12




- இந்தத் தினமானது விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பங்களிப்பைக் கொண்டாடச் செய்வதோடு, இது அமைதியான நோக்கங்களுக்காக விண்வெளியை பாதுகாப்பதையும் உறுதி செய்கிறது.
- 1961 ஆம் ஆண்டு இதே நாளில் தான், ஒரு ரஷ்ய விண்வெளி வீரர் விண்வெளிக்கு பயணம் செய்த முதல் மனிதர் என்ற பெருமையினைப் பெற்றார்.
- ரஷ்ய விண்வெளி வீரர் யூரி காகரின், பூமியைச் சுற்றி வந்த முதல் மனிதர் என்ற ஒரு பெருமையினைப் பெற்றார்.
- ஐக்கிய நாடுகள் சபை இந்தச் சாதனையின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, 2011 ஆம் ஆண்டில் இந்தத் தினத்தினை அறிவித்தது.

## உலக நடுக்குவாத நோய் தினம் - ஏப்ரல் 11

- இந்த நோயைப் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக நோயாளிகள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் இணைந்து செயல்படுவதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்தினமானது, நடுக்குவாத நோயை ஒரு மருத்துவக் குறைபாட்டு நிலையாகக் கண்டு அறிந்த டாக்டர் ஜேம்ஸ் பார்கின்சனின் பிறந்தநாளைக் குறிக்கிறது.

- இவர் 1817 ஆம் ஆண்டில், 'நடுக்கு வாத நோய் பற்றியக் கட்டுரை' என்ற கட்டுரையை வெளியிட்டார்.
- பார்கின்சன் (நடுக்கு வாத நோய்) ஆனது, நரம்பியல் அமைப்பைப் பாதிக்கின்ற ஒரு நரம்பியக் கடத்தல் ( நியூரான் சிதைவு) நோயாகும்.





## தெருக்களில் வசிக்கும் குழந்தைகளுக்கான சர்வதேச தினம் - ஏப்ரல் 12

- புள்ளி விபரங்களில் இருந்து அடிக்கடி விடுபடும் குழந்தைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- சிறந்த வாழ்க்கைத் தரத்தினைப் பெறுவதற்கான மருத்துவம், கல்வி மற்றும் திறன் பயிற்சிகளை அவர்களுக்கு வழங்குவதற்காக இந்தத் தினம் முயல்கிறது.
- இந்தியாவின் தெருக்களில் 2,02,765 குழந்தைகள் வாழ்கின்றனர்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு "தெருவோர வாழ்விடங்களோடு இணைக்கப் பட்ட குழந்தைகளைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்" என்பதாகும்.



## உலக சாகாஸ் நோய் தினம் - ஏப்ரல் 14

- ஒவ்வோர் ஆண்டும் மில்லியன் கணக்கான மக்களை, குறிப்பாக ஏழை மக்கள் மற்றும் லத்தீன் அமெரிக்காவில் உள்ள மக்களைப் பாதிக்கும் இந்த அதிகம் அறியப்படாத நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற 72வது உலக சுகாதாரச் சபையானது இந்நாளை இந்த நோய்க்கான தினமாக அர்ப்பணித்தது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "சாகாஸ் நோயை ஆரம்பச் சுகாதார நலனுடன் ஒருங்கிணைப்பதற்கான நேரம்" என்பதாகும்.
- சாகாஸ் நோயானது, அமெரிக்கன் டிரிபனோசோமியாசிஸ் என்றும் அழைக்கப் படச் செய்கிறது.
- 1909 ஆம் ஆண்டில், பிரேசிலிய நாட்டினைச் சேர்ந்தக் குழந்தைக்கு இந்த நோய் ஏற்பட்டு உள்ளதை முதன்முதலில் கண்டறிந்த மருத்துவர் கார்லோஸ் சாகாஸ் என்பவரின் பெயரால் இந்த நோய்க்குப் பெயரிடப்பட்டது.
- ஒரு தொற்றக் கூடிய ஒட்டுண்ணி நோயான இது 6-7 மில்லியன் மக்களைப் பாதித்து உள்ளதோடு, உலகம் முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 12,000 உயிர்களைப் பறித்தும் உள்ளது.
- இது டிரிபனோசோமா க்ரூஸி என்ற ஒட்டுண்ணி புரோட்டோசோவினால் ஏற்படுகிறது.
- சாகாஸ் நோய்க்கான தடுப்பூசிகள் தற்போது வரையில் கண்டறியப்படவில்லை.



## தேசியத் தீயணைப்புச் சேவை தினம் - ஏப்ரல் 14

- இந்தத் தினமானது, தங்கள் கடமைகளைச் செய்யும் போது உயிர் இழந்த துணிச்சல் மிக்க தீயணைப்பு வீரர்களுக்கு மரியாதை ( அஞ்சலி) செலுத்துகிறது.
- 1944 ஆம் ஆண்டில் இதே நாளில்தான், தீயணைப்பு நடவடிக்கையின் போது, மும்பை தீயணைப்புப் பிரிவினைச் சேர்ந்த 66 தீயணைப்பு வீரர்கள் உயிரிழந்தனர்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "தீ பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கற்றுக் கொண்டு, செயல்திறனை அதிகரித்தல்" என்பதாகும்.
- ஏப்ரல் 14 முதல் 21 ஆம் தேதி வரை 'தீ பாதுகாப்பு வாரமாக' அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான தீ பாதுகாப்பு வாரத்திற்கான கருத்துரு, 'தேசிய உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான தீ பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு (AGNI)' என்பதாகும்.




## உலகளாவியக் கலாச்சாரத் தினம் - ஏப்ரல் 15

- கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த கலைப்பொருட்கள் மற்றும் கலைப் படைப்புகள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான ஒரு சட்டப்பூர்வ அங்கீகாரத்தினை அங்கீகரிக்கச் செய்வதற்கான ஒரு சர்வதேச ஒப்பந்தத்தின் விளைவாக இந்தத் தினம் அனுசரிக்கப் படுகிறது.
- அமெரிக்கா 1935 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதியன்று முதன்முதலாக அதற்கு அங்கீகாரம் அளித்தது.
- இந்தத் தினமானது, அனைத்து நாடுகள் மற்றும் சமூகங்களின் கலாச்சாரங்களைப் பாதுகாக்க முயல்கிறது.

## திருநங்கையர் தினம் - ஏப்ரல் 15

- தமிழக அரசு ஏப்ரல் 15 ஆம் தேதியைத் திருநங்கையர் தினமாக அனுசரிக்கிறது.
- நாட்டில் முதல் முறையாக திருநங்கையர் நல வாரியத்தை 2008 ஆம் ஆண்டில் இதே நாளில் தமிழ்நாடு அரசு நிறுவியது.

- 2006 ஆம் ஆண்டில், 'அரவாணி' என்னும் வார்த்தைக்கு மாற்றாக மிகவும் கண்ணியமாக 'திருநங்கை' என்ற ஒரு பதத்தை முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி மாற்றினார்.
- இந்தப் பெயரிலேயே சமூக நலத்துறையின் கீழ் ஒரு நல வாரியம் அமைக்கப் பட்டு உள்ளது.
- இந்த ஆண்டு நிகழ்வின் போது மாநில அளவிலான 'சிறந்த திருநங்கையருக்கான' விருதை வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கையான பி.ஐஸ்வர்யாவுக்கு முதல்வர் வழங்கினார்.
- இவர் கடந்த 22 ஆண்டுகளாக திருநங்கையர் சமூகத்திற்குச் சேவை செய்து வருகிறார் என்பதோடு, நாட்டுப்புறவியல் மற்றும் நாடகம் மூலம் அவர்களைப் பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்தி வருகிறார்.
- கிரேஸ் பானு மற்றும் மர்லிமா முரளிதரன் ஆகியோர் இந்த விருதினை முறையே 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் பெற்றனர்.




## இமாச்சலப் பிரதேச மாநிலத்தின் 75வது ஸ்தாபன தினம் - ஏப்ரல் 15



- இமாச்சலப் பிரதேசம் மாகாணமானது 1948 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதியன்று தலைமை ஆணையர் மாகாணமாக உருவாக்கப்பட்டது.
- இந்தச் சமயத்தில் மாகாண அளவிலான செயல்பாடுகள் பழங்குடியினர் பகுதியான லாஹூல்-ஸ்பிதி மாவட்டத்தில் உள்ள காசாவில் மேற்கொள்ளப்படும்.
- பின்னர், 1950 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதியன்று இமாச்சலம் ஒரு 'C' பிரிவு மாநிலமாக மாற்றப்பட்டது.
- 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று இமாச்சலப் பிரதேசம் ஒன்றியப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டது.
- 1966 ஆம் ஆண்டில், பஞ்சாபின் மலைப்பகுதிகள் இமாச்சலப் பிரதேசத்தில் சேர்க்கப் பட்டன.
- 1970 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதியன்று, நாடாளுமன்றம் இமாச்சலப் பிரதேச சட்டத்தை நிறைவேற்றியது.
- 1971 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதியன்று, இமாச்சலப் பிரதேசம் முழு அளவிலான மாநிலமாகவும் நாட்டின் 18வது மாநிலமாகவும் உருவாக்கப்பட்டது.

## உலகச் சித்திர தினம் - ஏப்ரல் 15





- ஓவியர்களின் பங்களிப்பைக் கௌரவிப்பதும், நமது வாழ்வில் சித்திரக் கலையின் ஒரு முக்கியத்துவத்தை மேம்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.
- யுனெஸ்கோ அமைப்பின் ஒரு முக்கியப் பங்குதாரர் அமைப்பான சர்வதேச ஓவியக் கூட்டமைப்பானது, உலகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு ஆக்கப் பூர்வமானச் செயல்பாடுகளை ஊக்குவிப்பதற்காக இந்தத் தினத்தினை உருவாக்கியது.
- இந்தத் தினமானது, வரலாற்றின் சிறந்த ஓவியர்களில் ஒருவராகக் கருதப்படுகின்ற, புகழ்பெற்ற லியோனார்டோ டா வின்சி அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- முதல் சித்திரத் தினம் ஆனது 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்டது.

## யானைகள் பாதுகாப்புத் தினம் - ஏப்ரல் 16

- யானைகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துதல் மற்றும் இந்த கம்பீரமான மிகப்பெரிய விலங்குகளைப் பாதுகாப்பதற்கான பல்வேறு முயற்சிகளை ஊக்குவித்தல் ஆகியவை இத்தினத்தின் நோக்கமாகும்.
- ஆப்பிரிக்க புதர்ச்செடிகள் பகுதி வாழ் யானைகள் மற்றும் ஆசிய யானைகள் ஆகிய இரண்டும் சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தினால் (IUCN) அருகி வரும் உயிரினங்களாக பட்டியலிடப் பட்டுள்ளன.
- ஆப்பிரிக்க வன யானைகள் மிகவும் அருகி வரும் உயிரினமாக வகைப்படுத்தப் பட்டு உள்ளன.

## உலக இரத்த உறையாமை நோய் தினம் – ஏப்ரல் 17

- இந்தத் தினமானது ஃபிராங்க் ஷ்னாபல் என்பவரின் பிறந்தநாளை நினைவு கூருகிறது.
- இவர் உலக இரத்த உறையாமை நோய் (ஹீமோபிலியா) கூட்டமைப்பை நிறுவியவர் ஆவார்.
- இரத்த உறையாமை நோய் மற்றும் பிற இரத்தப் போக்குக் கோளாறுகள் பற்றிய விழிப்பு உணர்வினை அதிகரிக்கவும் அது குறித்த கல்வியை வழங்கவும் இந்தத் தினமானது ஒரு தளமாகச் செயல்படுகிறது.
- ஒரு அரிய நோயான இரத்த உறையாமை நோய் என்ற இந்த நோயில் சில குறிப்பிட்ட உறைதல் காரணிகளின் குறைபாட்டின் காரணமாக இரத்தம் சரியாக உறைவதில்லை.
- சில சந்தர்ப்பங்களில் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் ஒரு நீண்ட நேர இரத்தப் போக்கு ஏற்படுகிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "அனைவருக்குமான அணுகல்: கூட்டாண்மை. கொள்கை. முன்னேற்றம். அரசாங்கத்தினை ஈடுபடுத்துதல், மரபுவழி இரத்தப் போக்கு கோளாறுகளைத் தேசியக் கொள்கையில் ஒருங்கிணைத்தல்" என்பது ஆகும்.




## சர்வதேச நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்கள் தினம் / உலகப் பாரம்பரியத் தினம் – ஏப்ரல் 18

- சர்வதேச நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்கள் சபையானது (ICOMOS), 1982 ஆம் ஆண்டில் இந்த நாளைக் கொண்டாடுவதற்கான ஒரு முடிவினை மேற்கொண்டது.
- இது உலகப் பாரம்பரிய தினம் என்று பிரபலமாக அறியப் படுகிறது.

- 1983 ஆம் ஆண்டில் நடைபெற்ற UNESCO அமைப்பின் 22வது பொது மாநாட்டின் போது இதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- இந்தத் தினமானது உலகின் கலாச்சாரம் மற்றும் இயற்கைப் பாரம்பரியத்தைக் கொண்டாடுவது மற்றும் எதிர்காலச் சந்ததியினருக்காக இந்த விலை மதிப்பற்ற அரும் பெரும் தளங்களை வளங்காத்து அதனைப் பாதுகாப்பது போன்றவற்றின் ஒரு பெரும் முக்கியத்துவம் பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "பாரம்பரிய மாற்றங்கள்" என்பதாகும்.

## உலக கல்லீரல் தினம் – ஏப்ரல் 19

- கல்லீரல் ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவது மற்றும் ஆரோக்கியமான கல்லீரலை எவ்வாறு பேணுவது என்பது குறித்து மக்களுக்குக் கற்பிப்பதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- உலக சுகாதார அமைப்பின் மதிப்பீட்டின்படி, 1990 முதல் 2017 ஆம் ஆண்டு வரையில், புதிய கல்லீரல் புற்றுநோய்ப் பாதிப்புகளானது 100% அதிகரித்துள்ளது.
- இந்தியாவில் கல்லீரல் சார்ந்த கோளாறுகள் என்பவை இறப்புக்கான பொதுவான காரணங்களில் 10வது இடத்தில் உள்ளது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'விழிப்புணர்வுடன் இருத்தல், வழக்கமான கல்லீரல் பரிசோதனை மேற்கொள்தல், கொழுப்பு மிக்க கல்லீரல் நிலை யாரை வேண்டுமானாலும் பாதிக்கக் கூடியது' என்பதாகும்.
- கல்லீரல் நமது உடலின் இரண்டாவது மிக முக்கியமான உறுப்பாகும்.
- இது வளர்சிதை மாற்றம், நோய் எதிர்ப்புச் சக்தி, கழிவகற்றம் மற்றும் உறிஞ்சப்பட்ட ஊட்டச் சத்துக்களின் சேமிப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய ஐநூறுக்கும் மேற்பட்ட செயல்பாடுகளுக்கு உதவுகிறது.

## ஐக்கிய நாடுகள் சபையின் சீன மொழி தினம் – ஏப்ரல் 20

- ஐக்கிய நாடுகள் சபையானது கலாச்சாரப் பன்முகத் தன்மை மற்றும் பன்மொழித்துவம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து சீன மொழி தினத்தினைக் கொண்டாடுகிறது.
- காங்ஜி என்பவருக்கு பெரும் கௌரவமளிக்கும் விதமாகப் பாரம்பரிய கிழக்கு ஆசிய நாட்காட்டிகளில் உள்ள 24 சூரியன் சார்ந்த சொற்கூறுகளில் ஆறாவதாக இடம் பெற்று உள்ள குயு என்ற சொற்கூறிலிருந்து ("சிறுதானியப் பொழிவு") சீன நாளுக்கான தேதி தேர்ந்தெடுக்கப் பட்டது.
- காங்ஜி என்பவர் பண்டைய சீனாவில் வாழ்ந்த மிக முக்கியமான நபர் ஆவார்.
- 1946 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரப்பூர்வ மொழியாக சீன மொழி நிறுவப் பட்டது.

## தேசியக் குடிமைப் பணிகள் தினம் – ஏப்ரல் 21

- இந்தத் தினமானது, குடிமைப் பணியாளர்களின் மகத்தான ஒரு பணியை நினைவு கூரும் வகையிலும், அவர்களின் சாதனைகளைப் பாராட்டும் வகையிலும் அனுசரிக்கப் படச் செய்கிறது.

- ஏப்ரல் 21 ஆம் தேதியன்று, சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் 1947 ஆம் ஆண்டில் குடிமைப் பணி பயிற்சி அதிகாரிகள் முன் உரையாற்றிய அந்தத் தினத்தினை நினைவு கூருகின்றது.
- தனது உரையில், படேல் இந்திய நாட்டின் குடிமைப் பணியாளர்களை "இந்தியாவின் எஃகுச் சட்டகம்" என்று வர்ணித்தார்.

## சர்வதேச அன்னைப் பூமி தினம் – ஏப்ரல் 22

- இந்தத் தினமானது, சுற்றுச்சூழல் சார்ந்தப் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது, 2009 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலம் இந்த நாளினை நிர்ணயித்தது.
- 2008 ஆம் ஆண்டானது, சர்வதேசப் புவிக் கோள் ஆண்டாக அறிவிக்கப்பட்டது.

## உலகப் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க தினம் - ஏப்ரல் 21

- இந்தத் தினமானது, மனித வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத்தின் முக்கியத்துவத்துவம் குறித்த விழிப்புணர்வினை மேம்படுத்துகிறது.
- முதல் முறையாக 2002 ஆம் ஆண்டில் கனடாவில் கொண்டாடப்பட்ட இந்தத் தினத்திற்கு 2005 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை இந்தத் தினத்திற்கு அங்கீகாரமளித்தது.
- ஏப்ரல் 21 ஆம் தேதியானது, இத்தாலியின் சிறந்தக் கலைஞரும் கண்டுபிடிப்பாளருமான லியோனார்டோ டா வின்சி அவர்களின் பிறந்த நாளாகும்.




## உலகப் புத்தக தினம் - ஏப்ரல் 23


- வாசித்தல், எழுதுதல், பதிப்பித்தல் மற்றும் பதிப்புரிமை ஆகியவற்றின் மீதான ஆர்வத்தினை ஊக்குவிக்கச் செய்யும்ம் வகையில் இந்தத் தினம் உலக அளவில் அனுசரிக்கப் படுகிறது.

- இது உலகப் புத்தகம் மற்றும் பதிப்புரிமைத் தினம் அல்லது சர்வதேசப் புத்தக தினம் என்றும் அழைக்கப் படுகிறது.
- ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பானது 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் தேதியன்று முதலாவது உலகப் புத்தகத் தினக் கொண்டாட்டத்தினை ஏற்பாடு செய்தது.
- வில்லியம் ஷேக்ஸ்பியர், கார்சிலாசோ டி லா வேகா மற்றும் மிகுவல் டி செர்வாண்டஸ் உட்பட பல சிறந்த எழுத்தாளர்களின் பிறந்த நாள் மற்றும் மறைவு நாள் ஆண்டு நிறைவானது இந்த நாளில் அனுசரிக்கப்படுகின்றது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'சுதேச (உள்நாட்டு) மொழிகள்' என்பது ஆகும்.

## ஐக்கிய நாடுகள் சபையின் ஆங்கில மொழி தினம் - ஏப்ரல் 23

- இந்தத் தினமானது, ஆங்கில நாடக ஆசிரியரும் கவிஞருமான வில்லியம் ஷேக்ஸ்பியரின் பிறந்த நாள் மற்றும் மறைவு நாளினை நினைவு கூருகிறது.
- இது பன்மொழி மற்றும் கலாச்சாரப் பன்முகத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் உலகில் ஆங்கில மொழியின் முக்கியத்துவத்தைக் கொண்டாடுதல் ஆகியவற்றை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்தினமானது முதல் முறையாக 2010 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பினால் (யுனெஸ்கோ) நிறுவப்பட்டது.

## தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினம் – ஏப்ரல் 24




- இந்தியாவில் முதல் முறையாக பஞ்சாயத்து ராஜ் அமைப்பு 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- நவீன இந்தியாவில், பஞ்சாயத்து ராஜ் அமைப்பு முதன்முதலில் 1959 ஆம் ஆண்டில் ராஜஸ்தானில் ஜவஹர்லால் நேரு தலைமையிலான அரசாங்கத்தினால் அறிமுகப் படுத்தப் பட்டது.

- 1993 ஆம் ஆண்டில், இந்திய அரசியலமைப்பின் 73வது சட்டத் திருத்தத்தின் மூலம் இந்த அமைப்பிற்கு அரசியலமைப்பு அந்தஸ்து வழங்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு 'நிலையான பஞ்சாயத்து: வளமான, போதுமான அளவு தண்ணீர் வசதி கொண்ட, ஒரு தூய்மையான மற்றும் பசுமையான கிராமங்களை உருவாக்குதல்' என்பதாகும்.

## உலக ஆய்வக விலங்குகள் தினம் – ஏப்ரல் 24

- உலகெங்கிலும் உள்ள ஆய்வகங்களில் விலங்குகள் எதிர்கொள்ளும் துயரங்கள் மற்றும் அவை கொல்லப் படுதல் குறித்து உலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதே இந்த நாளின் நோக்கமாகும்.
- இந்தத் தினமானது, 40 ஆண்டுகளுக்கு முன்பு அறிவியல் ஆய்வுக்காக உயிருள்ள விலங்குகளைப் பயன்படுத்துதலுக்கு எதிரான தேசிய சங்கத்தின் நோக்கத்தினை மேம் படுத்துவதற்காக நிறுவப்பட்டது.
- இந்தச் சங்கமானது 1979 ஆம் ஆண்டில், லார்ட் ஹக் டௌடிங் என்பவரின் பிறந்த நாளன்று இந்த நாளை உருவாக்கியது.

## உலக மலேரியா தினம் – ஏப்ரல் 25




- இந்த நோயைப் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதையும், நோய்ப் பாதிப்பினை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக என்று உலக நாடுகள் மேற்கொள்ளும் பல்வேறு முன்னெடுப்புகளை முன்னிலைப் படுத்துவதற்காக வேண்டி உலகளாவிய மலேரியா சமூகங்களை ஒன்றிணைப்பதையும் இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2007 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பின் 60வது அமர்வில் இந்தத் தினமானது நிறுவப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு – "சுழிய அளவு மலேரியா பாதிப்பு சூழலை வழங்குவதற்கான நேரம்: முதலீடு, புத்தாக்கம், செயலாக்கம்" என்பதாகும்.

- மலேரியா என்பது பிளாஸ்மோடியம் ஒட்டுண்ணியால் ஏற்படும் ஒருவகை நோயாகும்.
- இது தொற்று ஏற்பட்ட பெண் அனோபிலிஸ் கொசுக்கள் கடிப்பதன் மூலம் மக்கள் மத்தியில் பரவுகிறது.

## மணிப்பூரின் கோங்ஜோம் தினம் - ஏப்ரல் 23

- 1891 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆங்கிலேய - மணிப்பூரி மக்கள் ஆகியோருக்கு இடையேயான போரினை நினைவு கூரும் விதமாக கோங்ஜோம் தினம் கொண்டாடப் படுகிறது.
- மணிப்பூரின் உள் விவகாரங்களில் ஆங்கிலேயர் தலையிட்டதால் மணிப்பூரி மக்கள் மிகவும் வெறுப்படைந்தனர்.
- இது ஆங்கிலேயர்களுக்கு எதிராக போரிட்ட மணிப்பூரி வீரர்களை, குறிப்பாக மேஜர் பவோனா பிரஜாபாஷி அவர்களை நினைவு கூரும் விதமாக அனுசரிக்கப் படுகின்றது.




## சர்வதேச அமைதிக்கான பன்முகத் தன்மை மற்றும் அரசுமுறை உறவுகள் தினம் - ஏப்ரல் 24

- இந்தத் தினமானது, நாடுகளுக்கிடையேயான மோதல்களை அமைதியான வழிகளில் தீர்க்கும் ஐக்கிய நாடுகள் சாசனம் மற்றும் கொள்கைகளை மீண்டும் உறுதிப்படுத்த முயல்கிறது.
- நாடுகளுக்கிடையேயான மோதல்களுக்கு அமைதியான முறையில் பல தீர்வுகளை அடைவதில், பலதரப்பு சார்ந்த ஒரு முடிவினை மேற்கொள்தல் மற்றும் அரசுமுறை நடவடிக்கைகள் ஆகியவற்றின் பயன்பாட்டினை இது அங்கீகரிக்கிறது.
- பன்முகத் தன்மை என்பது ஆலோசனை, உள்ளடக்கம் மற்றும் ஒற்றுமை போன்ற அடிப்படைக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது.
- இத்தினமானது 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- மேலும் இந்தத் தினமானது முதன் முதலில் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் தேதியன்று அனுசரிக்கப் பட்டது.

## உலக நோய்த் தடுப்பு வாரம் 2023 - ஏப்ரல் 24 முதல் 30 ஆம் தேதி வரை

- தடுப்பூசி மூலம் தடுக்கக் கூடிய வகையிலான நோய்களிலிருந்து மக்களைப் வெகுவாக பாதுகாப்பதற்குத் தேவையான கூட்டு நடவடிக்கைகளை முன்னிலைப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது நோய்த்தடுப்பு மருந்துகளின் நன்மைகள் பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்தி, தங்களது தடுப்பூசித் தவணைகளைப் பெற அவர்களை ஊக்குவிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'The Big Catch-Up' என்பதாகும்.

## உலக அறிவுசார் சொத்து தினம் - ஏப்ரல் 26

- அறிவுசார் சொத்துரிமைகளானது, புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றலை எவ்வாறு ஊக்குவிக்கின்றன என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக இந்தத் தினம் கொண்டாடப் படுகிறது.
- இது உலக அறிவுசார் சொத்து அலுவலகத்தினால் (WIPO) நிறுவப்பட்டது.
- இது புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றலைத் தூண்டச் செய்வதில் அறிவுசார் சொத்துகள் ஆற்றும் பங்கினை ஊக்குவிக்கிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'பெண்கள் மற்றும் அறிவுசார்பு: புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றலைத் துரிதப் படுத்துதல்' என்பதாகும்.




## உலக எழுதுபொருட்கள் தினம் - ஏப்ரல் 26

- இது ஒவ்வோர் ஆண்டின் ஏப்ரல் மாதத்தின் கடைசி புதன்கிழமையன்று அனுசரிக்கப் படும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.
- முதன்முதலில் 2012 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்ட இது பின்னர் இது உலகளாவிய நிகழ்வாக அனுசரிக்கப்படத் தொடங்கியது.
- இது எழுதப்பட்ட சொற்களைக் கொண்டாடவும், மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் எழுதுபொருட்களைப் பயன்படுத்த ஊக்குவிப்பதற்காகவும் உருவாக்கப்பட்டது.
- எழுத்துக்களின் முக்கியத்துவம் மற்றும் தகவல் தொடர்பு, கல்வி மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றில் அதன் பங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்குமான ஒரு வாய்ப்பாகவும் இந்தத் தினம் அனுசரிக்கப் படுகின்றது.

## பணியிடங்களில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கான உலக தினம் - ஏப்ரல் 28

- உலகெங்கிலும் ஏற்படும் விபத்துகள் மற்றும் தொழில்துறை சார்ந்த நோய்களைத் தடுத்தல் மற்றும் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக வேண்டி இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- உயிரிழந்த மற்றும் காயமடைந்தத் தொழிலாளர்களுக்கான சர்வதேச நினைவு தினம் அல்லது சர்வதேசத் தொழிலாளர்களின் நினைவு தினம் என்றும் இது அழைக்கப் படுகிறது.
- இந்தத் தினமானது 2003 ஆம் ஆண்டில் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் மூலம் தொடங்கப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: "ஒரு பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணிச்சூழல் ஒரு அடிப்படைக் கொள்கை மற்றும் வேலையில் நமது உரிமை" என்பதாகும்.

## சர்வதேசப் பிரதிநிதி தினம் – ஏப்ரல் 25

- ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர் நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் அதன் பேராளர்களின் பங்கு பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 50 நாடுகளைச் சேர்ந்தப் பிரதிநிதிகள் 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் தேதியன்று சான் பிரான்சிஸ்கோ நகரில் ஒன்று கூடினர்.
- முதல் கூட்டத்திற்கு இரண்டு மாதங்களுக்குப் பிறகு, 1945 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் தேதியன்று, அந்த 50 நாடுகளும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உருவாக்க சாசனத்தில் கையெழுத்திட்டன.
- 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 02 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை இந்த நாளினை நிர்ணயித்தது.



## சர்வதேச வானியல் தினம் – ஏப்ரல் 29


WHEN IS ASTRONOMY DAY?

Spring / Autumn

| YEAR | ASTRONOMY DAY | 1ST QUARTER MOON |
|---|---|---|
| 2022 | May 7 | May 8 |
| | October 1 | October 2 |
| 2023 | April 29 | April 27 |
| | September 23 | September 22 |

- ❖ சர்வதேச வானியல் தினமானது, ஆண்டிற்கு இரண்டு முறை அனுசரிக்கப்படுகிறது.
- ❖ இதில் ஒன்று வசந்த காலத்திலும் மற்றொன்று இலையுதிர் காலத்திலும் கொண்டாடப் படுகிறது.
- ❖ வசந்த கால வானியல் தினமானது 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் தேதியன்று நிகழச் செய்கிறது.
- ❖ முதலாவது வானியல் தினமானது, 1973 ஆம் ஆண்டில் வடக்குக் கலிபோர்னியாவின் வானியல் சங்கத்தினால் கொண்டாடப்பட்டது.

## சர்வதேச சிற்ப தினம் – ஏப்ரல் 29

- ❖ இந்தத் தினமானது, ஒவ்வோர் ஆண்டின் ஏப்ரல் மாதத்தின் கடைசி சனிக்கிழமையன்று அனுசரிக்கப்படுகிறது.
- ❖ இது சர்வதேசச் சிற்ப மையத்தால் நிறுவப் பட்டது.
- ❖ உலகெங்கிலும் உள்ள பல்வேறு சமூகங்களில் சிற்பக்கலை பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், அதற்கானப் பாராட்டினை வழங்குதல் மற்றும் அதன் கட்புலன் சார்ந்தப் பலன்களை அடைதல் ஆகியவற்றினை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத் துறையில் ஈடுபடும் பெண்களுக்கான சர்வதேச தினம் 2023 - ஏப்ரல் 27

- ❖ இது ஆண்டுதோறும் ஏப்ரல் மாதத்தின் நான்காவது வியாழன் அன்று கொண்டாடப் படும் ஒரு தினமாகும்.
- ❖ தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத் துறையில் (ICT) ஆய்வு மேற்கொள்வதற்கும், தொழிலில் ஈடுபடுவதற்கும் வேண்டி பெண்கள் மற்றும் இளம் பெண்களை ஊக்குவித்து, அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்த நாள் 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் 8 அன்று சர்வதேசத் தொலைத் தொடர்பு ஒன்றியத்தால் (ITU) அறிவிக்கப் பட்டது.
- ❖ இந்த ஆண்டிற்கான கருத்துரு "வாழ்க்கைக்கான டிஜிட்டல் திறன்கள்" என்பதாகும்.




## சர்வதேச செர்னோபில் பேரிடர் நினைவு தினம் 2023 – ஏப்ரல் 26

- செர்னோபில் பேரழிவின் நினைவாக 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 08 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் இந்தத் தினம் நிறுவப்பட்டது.
- இந்தப் பேரழிவில் உயிர் இழந்தவர்களின் நினைவாகவும் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாகவும் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- செர்னோபில் பேரழிவு 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் தேதியன்று முன்னாள் சோவியத் ஒன்றியத்தில் உள்ள உக்ரைன் நாட்டில் அமைந்த செர்னோபில் அணுமின் நிலையத்தில் நிகழ்ந்தது.
- இந்த அணு உலையின் வழக்கமானப் பாதுகாப்புச் சோதனையின் போது இந்த விபத்து நடந்தது.

## உலக கால்நடை தினம் 2023 – ஏப்ரல் 30

- இந்த வருடாந்திரக் கொண்டாட்டமானது, ஏப்ரல் மாதத்தின் கடைசி சனிக்கிழமை அன்று கொண்டாடப் படுகிறது.
- இது கால்நடை மருத்துவர்களின் முக்கியத்துவம் மற்றும் விலங்குகளின் ஆரோக்கியம், நலன் மற்றும் பொது சுகாதாரத்தில் அவர்களின் பங்களிப்புகள் பற்றி ஒரு விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, கால்நடை மருத்துவத் தொழிலில் பன்முகத் தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கத் தன்மை ஆகியவற்றினை ஊக்குவித்தல் என்பதாகும்.
- உலகக் கால்நடை தினமானது, முதலில் 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்டது.
- இது உலக கால்நடை மருத்துவச் சங்கத்தின் (WVA) ஒரு முன்னெடுப்பாகும்.



## ஆயுஷ்மான் பாரத் திவாஸ் 2023 – ஏப்ரல் 30

- ஆயுஷ்மான் பாரத் திவாஸ் ஆனது, ஆயுஷ்மான் பாரத் யோஜனாவின் கொள்கைகளை மேம்படுத்துவதற்காக அனுசரிக்கப்படுகிறது.
- ஆயுஷ்மான் பாரத் யோஜ்னா 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டத்தின் கீழ், ஒரு குடும்பத்திற்கு ஆண்டிற்கு 5 லட்சம் ரூபாய் மதிப்பிலான மருத்துவ உதவி வழங்கப்படுகிறது.
- முறையான மருத்துவ வசதிகளைப் பெற முடியாத அனைத்து இந்தியர்களுக்கும் சுகாதார நலன்களை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்திய மக்கள் தொகையில் 40% பேருக்கு மருத்துவமனைச் செலவுகள் உட்பட இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவ செலவுகளுக்கானக் காப்பீட்டுத் தொகையை வழங்கியுள்ளது.

# இதரச் செய்திகள்

## வெளிநாட்டு வழக்கறிஞர்கள் இந்தியாவில் பணியாற்றுதல்

- இந்தியாவில் உள்ள வெளிநாட்டு வழக்கறிஞர்கள் மற்றும் வெளிநாட்டுச் சட்ட நிறுவனங்களின் பதிவு மற்றும் ஒழுங்குமுறைக்கான விதிகளை இந்திய வழக்குரைஞர் சங்கம் அறிவித்துள்ளது.
- தற்போது, வெளிநாட்டு வழக்கறிஞர்கள் மற்றும் சட்ட நிறுவனங்கள் ஆனது வெளிநாட்டுச் சட்டம், சர்வதேசச் சட்டம், சர்வதேச நடுவம், கூட்டு முயற்சிகள், இணைப்புகள் மற்றும் கையகப் படுத்துதல், அறிவுசார் சொத்து விடயங்கள் போன்றவற்றைச் சரிநிகர் அடிப்படையில் நடைமுறைப் படுத்துகின்றன.
- மேலும், எந்தவொரு வெளிநாட்டு வழக்கறிஞர் அல்லது சட்ட நிறுவனத்தையும் பதிவு செய்ய மறுப்பதற்கு இந்திய வழக்குரைஞர் சங்கத்திற்கு உரிமை உண்டு.
- 2018 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் தேதியன்று, நீதிபதிகள் அடங்கிய பிரிவு அமர்வு ஆனது, வெளிநாட்டுச் சட்ட நிறுவனங்களோ அல்லது வெளிநாட்டு வழக்கறிஞர்களோ இந்தியாவில் வழக்காடல் சார்ந்த அல்லது வழக்காடல் சாராதப் பணிகளை ஆற்ற முடியாது என்று தீர்ப்பளித்தது.
- இருப்பினும், வெளிநாட்டுச் சட்ட நிறுவனங்கள் அல்லது வெளிநாட்டு வழக்கறிஞர்கள், தங்கள் வாடிக்கையாளர்களுக்கு சட்ட ஆலோசனை வழங்குவதற்கு தற்காலிகமாக இந்தியாவிற்கு வருவதற்கு எந்தத் தடையும் இல்லை என்று நீதிமன்றம் கூறியது.
- இந்திய வழக்குரைஞர் சங்கம் என்பது இந்தியாவில் வழக்காடல் நடைமுறையை நிர்வகிக்கின்ற ஒரு சட்டப்பூர்வ அமைப்பு ஆகும்.




## அல்-மொஹத்-அல் ஹிந்தி - 23 பயிற்சி

- இந்தியக் கடற்படை மற்றும் சவுதி அரசின் கடற்படை இணைந்து 'அல்-மொஹத்-அல் ஹிந்தி-23' என்ற கூட்டுக் கடற்படைப் பயிற்சியில் பங்கேற்க உள்ளன.
- இரு நாடுகளுக்கும் இடையே நடைபெறும் இரண்டாவது பயிற்சி இதுவாகும்.
- இதில் முதல் கூட்டுக் கடற்படைப் பயிற்சியானது 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்றது.



## கொங்கன் 2023 பயிற்சி

- இந்தியக் கடற்படை மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய நாடுகளின் கடற்படையானது கொங்கன் 2023 எனப்படும் இருதரப்புக் கடல்சார் பயிற்சியினை அரபிக் கடலில் மேற் கொண்டன.

- பல்வேறு கடல்சார் பயிற்சிகள் மூலம் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் சிறந்த நடைமுறைகளைக் கற்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதில் வான்வெளி, நிலம் மற்றும் நிலத்தடிப் பகுதி ஆகிய அனைத்துக் கடல்சார் செயல்பாட்டுக் களங்கள் தொடர்பான பயிற்சியானது மேற்கொள்ளப்பட்டது.



## வாயு பிரஹார் பயிற்சி


- இந்தியத் தரைப்படை மற்றும் விமானப் படை ஆகியவை இணைந்து, கிழக்குப் பிரிவில் 'வாயு பிரஹார்' எனப்படும் 96 மணி நேர பல்-பிரிவு வான்வழி மற்றும் நிலம் சார் பயிற்சியினை மேற்கொண்டன.
- பல்பிரிவு சார்ந்த நடவடிக்கைகளில் ஒரு கூட்டுப் பணிக்கு வழிவகுக்கும் திட்டங்களை வகுப்பதே இதன் முக்கிய ஒரு நோக்கமாகும்.
- பல்வேறு அமைப்புகளிடையே விரைவான இயக்கம், போக்குவரத்து மற்றும் படைகளை நிலை நிறுத்துதல் தொடர்பான ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்திகையானது இந்தப் பயிற்சியில் மேற்கொள்ளப்படுகிறது.
- கிழக்கு லடாக்கில் உள்ள மெய்க் கட்டுப்பாட்டு எல்லையின் மேற்குப் பிரிவில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான மோதல் நிலை தற்போது மூன்றாவது ஆண்டாக தொடர்கிறது.



## பிணை மனு குறித்த ChatGPT மென்பொருளின் முடிவு

- கொலைக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரின் பிணை மனு குறித்து முடிவெடுப்பதற்காக ஒரு இந்திய நீதிபதி ChatGPT மென்பொருளினைப் பயன்படுத்தியுள்ளார்.
- இந்தியாவில் ஒரு நீதிமன்றத்தினால் செயற்கை நுண்ணறிவுப் பயன்படுத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றத்தின் நீதிபதி அனூப் சிட்காரா தலைமையிலான ஒரு அமர்வானது ஜஸ்விந்தர் சிங் என்பவரின் பிணை மனுவை விசாரிக்கும் போது செயற்கை நுண்ணறிவு மென்பொருளின் கருத்தை நாடியது.
- அவர் மீது கலவரம், குற்றவியல் சார்ந்த மிரட்டல், குற்றவியல் சதி மற்றும் கொலை ஆகிய குற்றச்சாட்டுகள் உள்ளன.
- "வழக்கின் குறிப்பிட்ட சூழ்நிலைகள்" மற்றும் அதிகார வரம்பின் "சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள்" ஆகியவற்றைப் பொறுத்துப் பிணை வழங்கப்படும் என்று அந்த மென்பொருள் பதிலளித்தது.
- இறுதியாக, சிங் மீது இரண்டு கொலை முயற்சி வழக்குகளின் குற்றவியல் பதிவு பின்னணி இருப்பதால் அவருக்குப் பிணை மறுக்கப்பட்டது.

## சீலாண்டியா கண்டம் - மறுகண்டுபிடிப்பு




- 375 வருட கண்காணிப்பு மற்றும் ஆய்வுகளுக்குப் பிறகு, இறுதியாக சீலாண்டியா எனப்படும் "காணாமல் போன" கண்டம் இன்னும் இருப்பதை அறிவியலாளர்கள் உறுதிப் படுத்தியுள்ளனர்.
- இந்தக் கண்டமானது, சுமார் 1.89 மில்லியன் சதுர மைல் அளவு கொண்டது.
- இது முன்னொரு காலத்தில் கோண்ட்வானா என்ற பண்டையக் கால மாபெரும் கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது.
- இது 500 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு மேற்கு அண்டார்டிகா மற்றும் கிழக்கு ஆஸ்திரேலியாவை உள்ளடக்கியதாக இருந்தது.

- ❖ சுமார் 105 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு கோண்ட்வானாவிலிருந்து சீலாண்டியா "நகரத்" தொடங்கியது.
- ❖ சீலாண்டியா இருப்பது குறித்து முதன்முதலில் 1642 ஆம் ஆண்டில் பதிவு செய்யப் பட்டது.
- ❖ இந்த "புதிய" கண்டத்தின் பெரும்பகுதியானது 6,560 அடி (2 கிமீ) ஆழத்தில் நீருக்கடியில் அமைந்துள்ளது.
- ❖ சீலாண்டியா தற்போது உலகின் எட்டாவது கண்டமாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

## வாடகை மின்சார ஸ்கூட்டர்களுக்குத் தடை

- ❖ மாசுபடுத்துதல் இல்லாத வகையிலான நகர்ப்புறப் போக்குவரத்தினை மேம்படுத்தச் செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் பாரீஸ் நகரில் மின்சார ஸ்கூட்டர்கள் அறிமுகப் படுத்தப் பட்டன.
- ❖ ஆனால் இங்கு இரு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை பெருகியதால் விபத்துகளும் அதிகரித்தன.
- ❖ 2022 ஆம் ஆண்டில், பாரீஸ் நகரில் மின்சார ஸ்கூட்டர் விபத்துகளில் மூன்று பேர் இறந்தனர் மற்றும் 459 பேர் காயமடைந்தனர்.
- ❖ ஜனவரி மாதத்தில் பாரீஸ் நகரத் தெருக்களில் மின்சார ஸ்கூட்டர்களைப் பயன் படுத்துவதற்குத் தடை செய்வது குறித்த பொது வாக்கெடுப்பினை மேயர் அறிவித்தார்.
- ❖ இதன்படி மொத்தம் 89 சதவீத வாக்காளர்கள் முன்மொழியப்பட்ட இந்தத் தடைக்கு ஆதரவாகவும் 11 சதவீதம் பேர் எதிராகவும் வாக்களித்தனர்.
- ❖ 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 ஆம் தேதிக்குள் மின்கலங்களில் இயங்கும் இந்த வாகனங்களின் பயன்பாட்டினைப் பாரீஸ் நகரம் முற்றிலுமாக அகற்ற உள்ளது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★